
அவளும்
அவனும்
நாமக்கல் கவிஞர்

# அவளும் அவனும்

நாமக்கல் கவிஞர்

**வெ. இராமலிங்கம் பிள்ளை**

**பழனியப்பா பிரதர்ஸ்**

**'கோனார் மாளிகை'**

14, *பீட்டர்ஸ் சாலை, சென்னை* - 600 014

***கிளைகள் :***

*திருச்சி* - 620 002 *சேலம்* - 636 001

*மதுரை* - 625 001 *கோயமுத்தூர்* - 641 001

*ஈரோடு* - 638 001.

# தெய்வம்

ஐயம் இல்லை, தெய்வம் உண்டெனப்
பையப் பைய என்னைப் பழக்கி
அன்னை என்னுடைச் சின்ன வயதில்
சொன்னது மட்டும் இன்னும் மறந்திலேன்.
உண்டு என்பதைக் கண்டிலேன் தெளிய.
பண்டை நம் முன்னோர் பகர்ந்ததை யெல்லாம்
படித்துப் பார்த்தேன். பாடமும் கேட்டேன்.
ஒடித்துப் பிரித்து ஊன்றி எண்ணினேன்.
'நீறு பூசினால் நேர்ந்திடும்' என்றார்,
நீறு பூசிஎன் நேரமும் கழித்தேன்.
'கண்டிகை தரித்தால் காணலாம்' என்றார்,
கண்டிகை கனத்தும் கண்டிலேன் பொருளை.
'நாமம் தரித்தால் நாடலாம்' என்றார்,
நாமம் புனைவதில் நாள்பல கழித்தேன்.
'துளசியும் மாலையும் துணைசெயும்' என்றார்.
துளசியும் தொடுத்தேன், மணிகளும் சுமந்தேன்.
'பஜனை செய்தால் பலித்திடும்' என்றார்,
பஜனைக் கோஷ்டியில் பாடினேன் பலநாள்.
'ஊனும் உயிரும் அவனே' என்றார்,
ஊனிலும் காணேன், உயிரிலும் காணேன்.
'கோயிலும் குளமும் குடியிருப்' பென்றார்,
கோயிலில் தேடினேன், குளத்திலும் மூழ்கினேன்.
'வேத நூல்களில் விளங்கிடும்' என்றார்,
வேதமும் கேட்டேன், விளங்கவே இல்லை.

'மந்திரம் கற்றால் வந்திடும்' என்றார்,
மந்திரம் ஜெபித்தேன், தந்திரம் பலித்திலேன்.
'பட்டினி யிருந்தால் பார்க்கலாம்' என்றார்.
பட்டினி விரதம் பழகியும் பார்த்தேன்.
'மூச்சை அடக்கினால் முன்வரும்' என்றார்.
மூச்சைப் பிடித்து முயன்றும் பார்த்தேன்.
கண்டிலேன் அந்தக் கடவுளை; அதனால்,
'பண்டைய வழிகளில் பயனிலை போலும்.
எந்தையர் சொன்ன ஹிந்து மதத்திலே
இந்த ரகசியம் இல்லையோ !' என்று
மதங்கள் என்று மற்றவர் சொன்ன
விதங்களை யெல்லாம் விரித்திடும் நூல்கள்
புத்தகம் பற்பல புரியப் படித்தேன்.
வித்தகர் சொன்ன விளக்கமும் கேட்டேன்.
புதுப்புது வழிகளில் புகுந்து புகுந்து
மதிப்புள எல்லா மார்க்கமும் போனேன்.
செல்லா வழியென எண்ணிநான் சென்ற
எல்லா வழிகளும் என்னைக் கொண்டுபோய்
முன்னே இருந்த மூலையே சேர்த்தன.
என்னே ! தெய்வம் எங்கோ ! எதுவோ !
இருந்த இடத்தில் இல்லையென் றெண்ணித்
திரிந்த இடத்திலும் தெரிந்திட வில்லையே !
இல்லையென் றுரைக்கத் தைரியம் இல்லை.
தொல்லையென் றதனைத் துறக்கவும் துணிவிலை
இல்லையே ஆனால் தொல்லையே இல்லை.
நல்லதே நம்மைக் கேட்பா ரில்லை.
இருப்பது உண்மைதான் எனினு மென்ன ?
பொறுப்பு அவர்க்கே, காத்தருள் புரியும்.

# அவள்

'மான்' என அவளைச் சொன்னால்
மருளுதல் அவளுக் கில்லை.
'மீன்விழி உடையா' ளென்றால்
மீனிலே கருமை இல்லை.
'தேன்மொழிக் குவமை' சொன்னால்
தெவிட்டுதல் தேனுக் குண்டு.
'கூன்பிறை நெற்றி' என்றால்
குறைமுகம் இருண்டு போகும்.

'மயிலெனும் சாய' லென்றால்
தோகைபெண் மயிலுக் கில்லை.
'குயிலெனும் குரலாள்' என்றால்
ஏழிசை குயிலுக் கில்லை.
'வெயிலொளி மேனி' என்றால்
வெயிலிலே வெப்பம் உண்டு.
'அயிலெனும் பார்வை' என்றால்
அழிவின்றி ஆக்க மில்லை.

'சந்திர வதனம்' என்றால்,
சந்திரன் மறுநாள் தேய்வான்.
'அந்தரப் பெண்போல்' என்றால்
அவளைநாம் பார்த்த தில்லை.
'செந்திரு மகள்போல்' என்றால்
திருவினைக் கண்டார் யாரே ?
'சுந்தர வடிவெ'ன் றாலும்
சொல்லிலே வலிமை யில்லை.

'கூந்தலை மேகம்' என்றால்
மேகத்தில் கருமை கொஞ்சம்.
'காந்தளைக் கைபோ' லென்றால்
கேட்டதே கண்ட தில்லை.
'மோந்ததும் வாடிப் போகும்
முல்லைதான் பல்லுக் கீடோ ?'
'ஏந்திழை' என்றிட் டாலும்
இயற்கையின் எழிலைப் போக்கும்.

'விரல்களைப் பவளம்' என்றால்
வீணையை மீட்ட லாமோ ?
'குரல்வளை சங்கம்' என்றால்
சங்கொலி குமுறிக் கூவும்.
'கரமதைக் கமலம்' என்றால்
மாலையில் கமலம் கூம்பும்.
'ஒருமரம் மூங்கில் தோளுக்
குவமை'யென் றுரைக்க லாமோ ?

'குமிழ்என மூக்கைச்' சொன்னால்
கூர்மையும் நேர்மை யில்லை.
'அமிழ்தவள் பாடல்' என்றால்
தேவரே அமுதம் உண்டார்.
'தமிழ்' எனும் இனிமை என்றால்
தனித்தமிழ் இப்போ தில்லை.
'கமழ்மணம் தேகம்' என்றால்
கன்னியின் தாயே காண்பாள்.

'பற்பல உவமை சொல்லிப்
பண்டிதர் களுக்கும் கூடக்
கற்பனை புரிந்தி டாத
கட்டுரை பின்னிக் காட்டும்



சொற்பல அடுக்க வேண்டா
சுருக்கமாய்ச் சொல்லப் போனால
அற்புத அழகு முற்றும்
இயற்கையில் அமைந்த நங்கை.

கண்டவர் மறக்க மாட்டார்.
கேட்டவர் காணப் போவார்.
அண்டையிற் பழகி னோர்கள்
அவளைவிட் டகல மாட்டார்.
பெண்டுகள் வந்து வந்து
பேசுதற் காசை கொள்வார்.
சண்டையும் சலிப்பு மெல்லாம்
சாந்தமாம் அவளைச் சார்ந்தால்.

தன்னிலும் அறிந்தார் முன்னே
தான்தனி **மடமை** தாங்கும்
நன்னயம் இல்லாச் சொல்லைக்
கேட்கவும் **நாணம்** கொள்வாள்.
அன்னியர்க் கேனும் தீமை
ஆற்றிட **அச்சம்** கொள்வாள்.
மன்னவர் தவறி னாலும்
மதித்திடாப் **பயிர்ப்பு** மண்டும்.

தனக்குறும் தந்தை தாயர்
தருக்கிடும் குழந்தை யாக
மனக்குறை ஒன்று மின்றி
மருட்டுவார் எவரு மின்றி
இனக்குறை இல்லா ரோடு
இச்சைபோல் ஓடி யாடி
வனக்கிளி போலக் கொஞ்சி
வளர்ந்தவள் வறுமை யின்றி

இயற்கையின் நலமும், நல்லோர்
இணைப்பினால் நேர்ந்த பண்பும்,
செயற்கையாம் பகுப்பும் மிக்க
செம்மையாய்ச் சேர்ந்த தாலே
மயக்கிலா அறிவும், நல்லோர்
மதித்திடும் பொறுப்பும் வாய்ந்து
வியப்பொடு எவரும் கண்டு
விழிப்புற விளங்கி நின்றாள்.

மிதந்திடும் செல்வ மிக்க
மேட்டிமை சிறிதும் இல்லை.
அதிர்ந்தொரு வார்த்தை பேசும்
அகந்தையும் அறிய மாட்டாள்.
சுதந்தர இயல்பி னோடு
சுதந்தரப் பழக்கம் சேர்ந்து
இதந்தரக் குலவிப் பேசி
எவரையும் சமமாய் எண்ணும்

பள்ளியிற் பெண்கட் கான
பல்கலைக் கழகந் தன்னில்
ஒள்ளிய முறையிற் கற்று
உயர்தரப் பட்டம் பெற்றாள் ;
வெள்ளையர் நாக ரீக
விதங்களும் விரும்பிக் கற்றுக்
கள்ளமும் கபடு மின்றிக்
களையிலாப் பயிர்போல் நின்றாள்.

உடைகளில் சுத்தம் பார்ப்பாள்.
உணவிலே சுத்தம் பார்ப்பாள்.
கடைகளில் வாங்கும் பண்டம்
காய்கறி சுத்தம் பார்ப்பாள்.



நடைமுறை ஒழுக்கம் காப்பாள்.
நாவுரை நலத்தைக் காப்பாள்.
தடையற நொந்த பேரைத்
தாயெனத் தாங்கும் தக்காள்.

குழலொடு வீணை நாதம்
குரலொடு இசையக் கூட்டிப்
பழுதறப் பாடிக் கேட்போர்
பரவசம் அடையச் செய்வாள் ;
விழலுறப் பொழுது போக்கும்
வீண்சுகம் விரும்ப மாட்டாள் ;
எழிலுடைப் பெண்மைக் குற்ற
இருப்பிட மாவாள் என்போம்.

மாதர்கள் சங்கம் கூட்டி
மகளிர்தம் உரிமை காக்க
ஆதரம் தேடும் பேச்சு
அடிக்கடி நடக்கச் செய்வாள்.
தீதுறும் வழக்க மெல்லாம்
தீர்ந்திட வேண்டு மென்று
ஓதரும் ஊக்கத் தோடு
உழைத்திடும் ஒன்றே ஆசை.

"பெண்களை இகழ்ந்து முற்றும்
பேதைகள் என்று பேசிப்
புண்கொள எழுதி வைத்துப்
புரைகொளச் செய்து வாழ்வின்
கண்களில் ஒன்றைக் குத்திக்
கரித்திடச் செய்தா" ரென்று
எண்கொள எண்ணி யெண்ணி
ஏங்குவாள் அதுவே ஏக்கம்,

"மறுமணம் மாதர்க் கில்லை
  மதலையை விதவை யாக்கி
நறுமணப் பூவு மின்றி
  நல்லஓர் துணியும் இன்றி
உறுமணல் தேரைப் போல
  ஒளிந்திருந் தொடுங்கச் செய்யும்
சிறுமனப் பான்மை யேநம்
  தேசத்தின் நாசம்" என்பாள்.

"கற்பெனப் பேசு வார்கள் ;
  கற்பினைப் பெண்ணே காக்கப்
பற்பல பெண்ணை நாடிப்
  பசப்பலாம் ஆண்கள் மட்டும் ;
அற்புதம் ஆன தாகும்
  அநியாயம் இந்த நாட்டின்
நற்பதம் கெடுத்த" தென்று
  நாளெல்லாம் நைவாள் நங்கை.

"நாட்டியம் ஆடச் செய்தும்,
  நாடகம் நடிக்கச் செய்தும்,
பாட்டையும் பாடச் செய்து
  பரத்தையர் குலமும் பண்ணி
ஆட்டிய கதைக ளெல்லாம்
  ஆடவர்க் கான இன்ப
வேட்டையே பெண்கள் என்ற
  விருப்பையே விளக்கும்" என்பாள்.

அவள்பெயர் **கமலம்** ; எல்லாச்
  செல்வமும் அமைந்த வீட்டில்
தவமெனப் பெற்றோ ருக்குத்
  தனியொரு குழந்தை யாவாள்.



நவநவ நாக ரீக
  நடையுடை இருப தாண்டு
யுவதியாய் உலகில் நல்ல
  கவிதைபோல் உயர்ந்து நின்றாள்.

# அவன்

நீண்டன கைகள் ; ஆழ்ந்து
நிமிர்ந்தது அகன்ற மார்பு ;
தீண்டிடக் கல்லைப் போலத்
திரண்டன இரண்டு தோளும் ;
தூண்எனத் தோன்றும் கால்கள்
துணைதர நடக்கும் பாதம் ;
ஆண்தகை முற்றும் தக்க
அளவொடு அமையப் பெற்றோன்.

அறிவொளி வீசும் கண்கள் ;
அறவுரை பேசும் நாக்கு ;
செறிதரும் சிகையை வெட்டித்
திகழ்தரச் சீவி விட்டுச்
சிறிதல பெரிதும் அல்ல
சீரெனும் மூக்கி னோடும்
குறிகளும் நெறிகள் யாவும்
குணமுளான் என்றே கூறும்.

கண்டவர் களிக்கும் தோற்றம் ;
கேட்டவர் மதிக்கும் ஆற்றல் ;
அண்டையில் பழக்க மில்லார்
அடக்கமாய் அணுகு வார்கள்.
சண்டைகள் ஒடுங்கும் கண்டால்
சலிப்புகள் களைப்புக் கொள்ளும்.
தொண்டுசெய் ஏவ லாளர்
துணுக்கொடு வணக்கம் செய்வார்.



படிப்பினில் பட்டம் பெற்றான்.
பந்துகள் கையாற் காலால்
அடிப்பதில் பதக்கம் பெற்றான்.
அரங்கினில் வேஷம் பூண்டு
நடிப்பதில் பரிசு பெற்றான்.
நாடிய எதையும் நன்றாய்
முடிப்பதில் முயற்சி மிக்கான்.
முற்றிலும் விரும்பத் தக்கான்.

செல்வரிற் செல்வ னென்ற
சிறப்புள பிறப்பு வாய்ந்தான்
கல்வியில் ஆசை மிக்கோன்.
கவிதையில் நேசம் மிக்கோன்.
பல்விதக் கலைகள் வேண்டிப்
பயிற்சியும் முயற்சி செய்வான்.
நல்வழி என்னத் தக்க
நடைநொடி யுடைய நண்பன்.

அழகுள எதையும் கண்டு
அளவிலா ஆசை கொள்வான்.
பழகிடும் எதிலும் உள்ள
அழகையே கண்டு பேசும்.
எழுதிடும் எழுத்தி லெல்லாம்
அழகையே ஏற்றிப் போற்றித்
தொழுதிடும் தெய்வ மாக
அழகையே தூக்கி வைப்பான்.

உடைகளில் அழகு பார்ப்பான்.
உண்கலம் அழகு பார்ப்பான்.
குடை தடி படுக்கை மேஜை
குறிச்சியில் அழகு பார்ப்பான்.

கடைகளில் அழகாய்த் தோன்றக்
கண்டதை யெல்லாம் வாங்கி
அடைவுற வீட்டில் எங்கும்
அலங்கரித் தழகு பார்ப்பான்.

காலையின் அழகில் பூத்துக்
காய்கனி நிறைந்து காட்டும்
சோலையின் அழகைச் சொல்வான் ;
சூரியன் சிவந்து தோன்றும்
மாலையின் அழகைப் போற்றி
மலைகளில் படிந்த மேகச்
சீலையின் அழகைப் போற்றிச்
சித்திரக் கோலைத் தீட்டும்.

கைச்சிறு 'காமி ரா'வில்
கண்டதை யெல்லாம் 'போட்டோ'
இச்சைபோல் எடுத்து வந்து
இருட்டறை கழுவிப் பார்த்து
அச்சிறு படத்தி லெல்லாம்
அழகையே பொருளாய்ப் பேசி
மெச்சிடும் நண்ப ரோடு
மிகமிகப் பொழுது போக்கும்.

நாடகப் பிரியன், நல்ல
நாட்டியக் கலையில் ஆசை,
கேடயம் கத்தி யோடு
கெரடிகள் பழக ஆசை,
நீடிய நேரம் நீரில்
நீந்திட நிறைந்த ஆசை,
ஓடமும் தானே ஓட்டி
உலவிட உவப்பான் உள்ளம்.



வீரர்கள் கதையைப் போற்றும்,
வெற்றியை வியந்து வாழ்த்தும்,
தீரர்கள் முன்னே வாழ்ந்தோர்
திறமையின் சிறப்பைப் பேசி,
சூரர்கள் பலபேர் சொன்ன
சுதந்தர உரைகள் சொல்லி,
ஆரொரு மனிதற் கேனும்
ஆண்மையே அழகாம் என்பான்.

'காதலே தெய்வம்' என்பான்.
'கடவுளே காதல்' என்பான்.
'பூதல வாழ்வு முற்றும்
காதலிற் பொருந்தும்' என்பான்.
ஆதலால் காத லென்னும்
அப்பொருள் அடைந்தி லாதார்
சாதலே மேலாம்' என்று
சாற்றுவான் சலிப்பில் லாமல்.

பெண்களை அழகுத் 'தெய்வப்
பிறிதொரு பிரதி' யென்பான்.
பண்கொளப் பாடி ஆடிப்
பல்கலைப் பயிற்சி யோடும்
கண்கொளும் உடைகள் பூண்டு
களிதரும் காட்சி யாக
எண்கொளும் இனிமைக் கெல்லாம்
இருப்பிட மாக எண்ணும்.

பற்பல வழியில் நாட்டின்
பொதுநலம் பரிந்து பேசிச்
சொற்பொழி வாற்ற லுள்ளான்.
சுதந்தர ஆசை யூட்டும்

அற்புதத் திறமை யோடு
அறிவுடன் அமைவ தான
கற்பனை மிகுந்த நல்ல
கதைகளும் காட்டிச் சொல்வான்.

"ஊரெலாம் செழிக்க வேண்டும் ;
உயிரெலாம் களிக்க வேண்டும் ;
நேரிலாப் புதுமை மிக்க
சமுதாயம் நிறுவ வேண்டும் ;
பாரெலாம் நமது நாட்டின்
பெரும்புகழ் பரப்பி, மக்கள்
போரெலாம் ஒடுங்க வேண்டும்
என்பதே பொழுதும் பேச்சாம்.

"அடிமைகள் இல்லா நாடும்
அன்பறம் அரசு செய்யக்
கடிதரும் ஜாதி பேதக்
கட்சிகள் இல்லா நாடும்
குடிகொலை களவின் அச்சம்
கொஞ்சமும் இல்லா நாடும்
விடிவது எப்போ" தென்ற
பேச்சையே விரும்பிப் பேசும்.

வாய்மையும் கருணை சேர்ந்த
வாழ்க்கையே வகுத்துக் கூறித்
தூய்மையைப் புகட்டல் ஒன்றே
இலக்கியத் துறையாய்க் கொண்ட
தாய்மொழித் தமிழைப் போற்றல்
தனியறம் என்றே நல்ல
ஆய்வுடை அறிஞர் தம்மை
அடிக்கடி கூட்டிப் பேசும்.



"புதுப்புது எண்ணம் வேண்டும்
வாழ்க்கையிற் புதுமை வேண்டும்
மதிப்புடன் நம்மைக் கண்டு
மற்றநாட் டவர்க ளெல்லாம்
துடிப்புடன் தொடர எல்லாத்
துறையிலும் புதுமை தோன்ற
விதிப்பயன் என்ற பேச்சை
விட்டிட வேண்டும்" என்பான்.

"பிறந்தவர் சாவ துண்மை,
பெற்றபொன் நாட்டிற் காக
அறந்தரும் சிந்தை யோடு
அன்புசேர் பணிகள் ஆற்றி
இறந்தவ ரன்றோ என்றும்
இருப்பவர் ஆவார்" என்று
சிறந்திடும் தேச பக்தி
முறைகளே சிந்தை செய்வான்.

"அன்னியர்க் கடிமை யாகி
அழுதுநொந் துருகி வாடும்
அன்னையின் தளைக ளெல்லாம்
அறுத்தொடித் தழித்து விட்டுச்
சென்னியில் மகுடம் சூட்டிச்
சிங்கவா சனத்தில் ஏற்றி
என்னையீன் றெடுத்த நாட்டை
எப்போது காண்பேன்" என்பான்.

**மாதவன்** அவன்பே ராகும்.
மாபெரும் செல்வர் மைந்தன்
ஓதரும் கல்வி கற்று
உயர்தரப் பட்டம் பெற்றோன்.

தீதறும் அறிவிற் காகத்
தேசயாத் திரையும் செய்தோன்.
ஏதொரு குறையும் இன்றி
இருபத் தேழாண் டுள்ளோன்.

பணத்தின்மேல் ஆசை வைத்துப்
படிப்பையும் எண்ணிப் பார்த்துக்
குணத்தையும் கொஞ்சம் போற்றிக்
குலத்தையே கருதி டாமல்
மணத்தினால் அவனைத் தங்கள்
மருமகன் ஆக்கிக் கொள்ளக்
கணக்கிலாத் தந்தை தாயார்
காத்திருந் தார்கள் கண்டீர் !

# சந்திப்பு

மாதவன் சொந்தஊர் '**திருவன மங்கலம்**'.
அந்தஊர் சிறியதோர் அழகிய நகரம்.
அங்கிருந் திருபது மைலுக் கப்பால்
காட்சிகள் நிறைந்தஊர் '**கந்தன் சோலை**';
சிற்றூர் எனினும் சிறப்புகள் வாய்ந்தது
பெண்களுக் காகஓர் பெரியகல் லூரி,
சிற்ப வேலைகள் மிகவும் சிறந்துள
அழகிய முருகவேள் ஆலயம் உள்ளன.
பட்டுக் கம்பளம் விரித்த பான்மையாய்ப்
பசும்புல் படிந்து, பந்தா டுதற்கே
செதுக்குச் சீர்பெறச் செய்ததைப் போன்ற
ஒப்பிலாச் சமநிலம் உள்ளது அங்கே.
விதவித மாகிய விளையாட் டுகளில்
அகில இந்தியப் பந்தய ஆட்ட மும்
வருஷா வருஷம் வாடிக்கை யாக
அதிலே நட க்கும். அவற்றைப் பார்க்க
எங்கெங் கிருந்தோ எண்ணிலா ஜனங்கள்
வருபவர்க் கான வசதிகள் செய்து
பந்தய விழாக்களைப் பார்த்துக் கொள்ளவே
தனியே அதற்கொரு சங்கம் உண்டு.
விளையாட் டுகளில் விருப்பம் மிகுந்து
செல்வமும் நிறைந்த சீமான் ஆனதால்
சங்கம் அதற்கு மாதவன் தலைவன்.
கணக்கில் லாமல் கைப்பணச் செலவில்
விமரிசை யாக விழாக்களை நட த்துவான்.

கந்தன் சோலையைக் கடந்து சென்றால்
சமுத்திரம் போலத் தண்ணீர் நிறைந்த
ஒருமைல் அகலமாய் ஏரிஒன் றுண்டு.
ஏரியின் குறுக்கே எடுத்துக் கட்டிய
பாதையிற் சென்றால் பந்தாட் டிடமும்
காரியா லயமும் அங்கே காணலாம்.

* * *

அப்படி ஒருநாள் அங்கே நடந்த
பந்துவிளை யாட்டின் பந்தயம் பார்க்க
ஏரிப் பாதையில் ஏராள ஜனங்கள்
நடந்தனர். அந்தக் கூட்டத்தின் நடுவில்
மாதவன், சங்கரன், ராகவன் மற்றும்
நண்பர்கள் சிலருடன் நடந்துகொண் டிருந்தான்
பின்னாற் கேட்டது பெரியதோர் கூக்குரல்.
திரும்பிப் பார்த்தான் ; திடுக்கிடும் வேகமாய்
வண்டியும் குதிரையும் வருவதைக் கண்டான்.
அவனைத் தாண்டி அப்பாற் சென்றதும்
ஓடிய குதிரை உடனே நின்றது.
எதையோ பார்த்து எகிறிக் குதித்து
மருண்டு வெருண்டு 'மக்கர்' செய்தது.
பின்னும் முன்னும் பிணக்குகள் காட்டிச்
சிறுகச் சிறுகப் பின்னால் சென்றது.
இரண்டே எட்டுகள் இன்னும் போனால்
வண்டியும் குதிரையும் வண்டியில் வந்தவர்
எல்லோ ருமாக ஏரியில் விழுந்து
என்னதான் ஆகுமோ ஈசனே அறிவார்
வண்டிக் காரன் வாய்விட் டலற,
உள்ளே இருந்தவர் உயிரை நினைக்க,
பார்த்தவ ரெல்லாம் பதறித் துடிக்க,



அருகில் நின்றவர் அஞ்சி நடுங்க,
செயலறி யாமல் திகைக்கிற வேளையில்
ஏரிக் கரையில் பேர்த்தெடுத் தானோ !
என்னவோ ! மாதவன் எங்கே யிருந்தோ
பருத்த இரண்டு பாறாங் கற்களை
முக்கிக் கொணர்ந்து முட்டுக் கொடுத்துச்
சக்கரம் பின்னால் போவதைத் தடுத்தான் ;
உடனே வண்டிக்கு முன்னால் ஓடினான் ;
கடிவா ளத்தைக் கையில் வாங்கிக்
குதிரையின் கழுத்தைத் தட்டிக் கொடுத்துத்
தைரியம் சொல்லும் சமிக்கை செய்தான்.
கொஞ்சம் கொஞ்சமாய் இடக்குக் குறைந்து
நாலெட்டு முன்னால் நடந்தது குதிரை.
உடனே வண்டியில் உள்ளவ ரெல்லாம்
இறங்கும் படிக்கு ஏவினான் மாதவன்.
பெரியவர் ஒருவரும் பெண்கள் இருவரும்
குதித்தனர் ; ஓடிக் கும்பலில் சேர்ந்தனர்.
குதிரை மீண்டும் குதிக்கத் தொடங்க
மாதவன் ஏவலால் வண்டிக் காரன்
வண்டியும் குதிரையும் பிரித்து வைத்தான்.
பாரம் குறைந்ததால் பாய நினைத்துத்
தாவிய குதிரையைத் தட்டிக் கொடுத்தான்.
ஓய்ந்தது போல ஒருகணம் நின்றது ;
மறுகணம் குதிரை மாதவன் தன்னையும்
இழுத்துக் கொண்டு எடுத்தது ஓட்டம்.
மாதவன் அதற்கு மருண்டவன் அல்லன் ;
கொஞ்சத் தூரம் கூடவே ஓடினான் ;
நறுக்கென இழுத்து நடையைத் தடுத்தான்.

வேகமாய் இழுத்த வேதனை யாலே
துள்ளிட முன்னங் கால்களைத் தூக்கி
அள்ளையில் திரும்பி, அங்கே பாய்ந்து
ஒதுங்கி ஓடிய பெண்பால் ஒருத்தியைத்
தலையில் உதைத்துத் தாக்கி விட்டது.
அடிபட்ட அப்பெண் அலறித் துடித்துக்
கண்ணிருண் டவளாய்க் கரையில் ஓடி
இடறி உருண்டு ஏரியில் விழுந்தாள்.
அவளுடன் வந்த ஆண்பிள்ளை ஒருவன்
கத்திக் கொண்டே கரையில் இறங்கினான்.
இறங்கிப் போயவன் எடுப்பதற் குள்ளேயே
உருண்டு போனவள் ஏரியின் உள்ளே
கரைக்குத் தூரமாய்க் கடந்து விட்டாள்.
எடுக்க வந்தவன் நீரில் இறங்கினான் ;
நீந்திச் சென்று கைகளை நீட்டித்
துணியைப் பிடித்துத் தூக்க முயன்றான்.
தூக்கிய கைகளைத் துணையாய்ப் பற்றி
உயிருக் கலையும் உடலின் துடிப்பால்
உதவி வந்தவன் உடலைத் தழுவிப்
பின்னி இறுக்கிப் பிடித்துக் கொண்டாள்.
நிலைதடு மாறினான் நீந்தமாட் டாமல்,
இருவரும் முழுகி ஏரியில் மறைந்தனர்.
கரையில் ஜனங்கள் கதறித் துடித்தனர்.
குதிரைக் காரனைக் கூவி யழைத்துக்
குதிரை 'லகானை'க் கொடுத்து விட்டு
எகிறிக் குதித்தான் ஏரியில் மாதவன்.
இருவரும் முழுகின இடம்தெரி யாமல்,
பலமுறை முழுகிப் பார்த்தான் மாதவன்.
மாதவன் உருவமும் மறைந்தது ஏரியில்.
'வண்டியும் குதிரையும் வண்டியில் வந்தவர்



பெரியவர் ஒருவரும் இரண்டு பெண்களும்
ஏரியில் விழாமல் இடையே தடுத்த
தீரனுக் கெதுவும் தீமை நேருமோ !'
என்றே யாவரும் இரங்கும் வேளையில்
என்னவோ கறுப்பாய் ஏரியில் தெரிந்தது.
அதற்குப் பக்கமாய் அலைகள் புறப்பட
மாதவன் உருவம் மலைபோல் தோன்றி
முடுகிக் கிளம்பி மூச்சு வாங்கினான் ;
உடனே முழுகினான் ; உந்தினான் எதையோ.
பெண்ணும் ஆணும் பிணம்போல் மிதந்து
கரைக்கு வருவதைக் கண்டனர் கரையுளோர்
இரண்டு பேரையும் இரண்டு கைகளால்
இழுத்துக் கொண்டு ஏறினான் மாதவன்.
அதற்குள் பலபேர் அங்கே கூடினர்.
ஆண்பிள்ளை உடலில் அசைவுகள் இருக்க,
பெண்பிள்ளை உடலம் பிணமாய் விறைத்துத்
தேகம் முழுவதும் சில்லிட்டு விட்டது.
ஆண்பிள்ளை உடலை அருகுளோர் தாங்கப்
பெண்பிள்ளை உடலைப் பிள்ளையைப் போலத்
தோளிற் போட்டுத் தூக்கிக் கொண்டு
ஏரிக் கரைமேல் ஏறினான் மாதவன்.
சுற்றிவந் தவர்களைத் தூரமாய் விலக்கிக்
கொண்டுவந் தவளைக் குப்புறப் பிடித்துக்
கரகர வென்று கடுகிச் சுழற்றினான்.
குபுகுபு வென்று கொட்டிக் கொண்டு
வாயிலும் மூக்கிலும் தண்ணீர் வந்தது.
தண்ணீர் வந்ததும் தைரியம் வந்து
மாதவன் முகத்தில் மகிழ்ச்சியுண் டாகிச்
சுற்றுதல் விட்டுச் சுமந்த பெண்ணைத்

தலைகீ ழாகத் தாங்கிப் பிடித்தான் ;
முற்றிலும் தண்ணீர் வடிந்து முடிந்தபின்
படுக்கப் போடஓர் இடத்தைப் பார்த்தான்.
அங்கே நின்றஓர் பெண்ணின் ஆணையால்
வண்டியில் இருந்த கம்பளம் வந்தது.
படுக்க வைத்துத் தொட்டுப் பார்த்தான் ;
உச்சந் தலையிலும் உள்ளங் காலிலும்
கையிலும் தேய்த்துக் கதகதப் பேற்றினான்.
முழுகின பெண்மணி மூச்சு வாங்கினாள் !
'பிழைத்துக் கொண்டாள்' என்ற பேச்சுகள்
சுற்றிலும் நின்றவர் சொன்னதைக் கேட்டு
ஆபத்தில் உதவிய ஆனந் தத்துடன்
அந்தப் பெண்ணை ஆஸ்பத் திரிக்கு
அனுப்புதற் காக அங்கிருந் தொருவரை
வண்டிக் கனுப்பி, வருகிற வரைக்கும்
தண்ணீர் சொட்டும் தன்னுடைய சட்டையைக்
களைந்து விட்டுக் காற்று வாங்கி
அலுப்புத் தீரப் பாதையில் அமர்ந்து
சுற்றிநின் றவர்களைச் சுமுகமாய்ப் பார்த்தான்.
கூடி யிருந்தஅக் கும்பலின் மத்தியில்
கண்டான் மாதவன் இரண்டு கண்கள் !
'ரயிலில்', 'மெயிலில்', ராத்திரி வண்டியில்
இஞ்சினின் முன்னால் இருட்டை விரட்டும்
இரண்டு விளக்குகள் ஏககா லத்தில்
தன்னுடைக் கண்களைத் தாக்குதல் போலத்
தகதக வென்று தன்னையே பார்த்தன !
கண்கள் கூசினான். உள்ளம் களித்தது.
அப்படித் தன்னையே அயராது பார்க்கிற
அந்தக் கண்களின் சொந்தக் காரராய்



ரோஜா இதழ்களின் பூஜா பலத்தால்
ஒத்தன போன்ற உதடுகள் மலர்ந்து
முகத்தினும் சிறந்த முறுவல் தோன்றச்
செதுக்கிய பொன்னின் சிற்பச் சிலைபோல்
மோகன சுந்தரப் பெண்ணின் முகத்தைப்
பார்த்த மாதவன் பரவச மானான் ;
முகத்தைப் பார்த்து, முற்றிலும் வடிவைப்
பார்க்க விரும்பிப் பதைத்தான். ஆனால்
அதற்குத் தடையாய் அவளுக்கு முன்னால்
தந்தையும் தாயும் என்றிடத் தகுந்த
ஆணும் பெண்ணும் அங்கே நின்றனர்.
காரிகை ஒருத்தி கண்கொட் டாமல்
தன்னையே பார்ப்பதைத் தாங்கமாட் டாமல்
மாதவன் தன்னுடைப் பார்வையை மாற்றி
வெவ்வே றிடங்களைப் பார்த்து விட்டு
மீண்டும் மீண்டும் மெல்லியைப் பார்த்தான்
அந்தப் பெண்ணோ ! அவனைத் தவிர
எதையும் பார்க்க இயலா தவளாய்
ஆற்றலை நினைத்தோ, அழகில் மயங்கியோ,
உடலின் அமைப்பின் உறுதியைப் பார்த்தோ,
உடலையும் உருவையும் ஒதுக்கி விட்டு
ஆன்மா அதனை அறிந்துவிட் டாளோ !
பார்வையை அவனிடம் பறிகொடுத் தவளாய்
அவனையே பார்த்து அசையாமல் நின்றாள்.
அப்படி நின்றபெண், அவளே **கமலம்.**
கந்தன் சோலைதான் கமலம் சொந்தஊர்,
பந்தாட் டத்தின் வேடிக்கை பார்க்கத்
தந்தையும் தாயும் தானும் தங்கள்
வண்டியி லேறி வந்தவள் அங்கே

இடையே குதிரை இடக்குகள் செய்ததால்
அத்தனைக் கதைகளும் அங்கே நடந்தன.
மாதவன் முற்றிலும் தன்னையே மறந்து
பிறருக் குதவும் பெருங்குணத் தோடு
செய்திட நேர்ந்த தீரச் செயல்களில்
எப்படி யோஅவன் இடக்கைப் புறத்தில்
காயமுண் டாகி ரத்தம் கசிந்தது.
உயிர்களைக் காத்த உத்சா கத்திலோ,
ஆண்மை விளங்கிய அவனுடைச் செயல்களை
அங்கே இருந்தவர் அனைவரும் மெச்சிப்
புகழ்ந்து பேசிய பூரிப்பி னாலோ,
பெண்மை அழகெல்லாம் ஒன்றாய்ப் பிணைந்து .
கண்ணைப் பறிக்கும் கட்டழ கமைந்த
கன்னிகை ஒருத்தி கண்கொட் டாமல்
தன்னையே பார்க்கிற தருக்கி னாலோ,
உற்ற ரணத்தையும் உணர்ந்திலன் மாதவன்.
ஆனால்,
கொஞ்ச மாயினும் கூச்சப் படாமல்
அவனையே பார்த்து அப்படி நின்ற
கமலம், அவனுடையக் காயத்தைக் கண்டு
பச்சா தாபப் பட்டவ ளாகிக்
காயத் துக்கொரு கட்டுப் போட்டிட
வழக்கமாய்க் கையில் வைத்தி ருந்தஓர்
குட்டையை அவனிடம் கொடுக்க நினைத்தாள் ;
தானே கொடுக்க விரும்பியும் தயங்கித்
தந்தையி னிடத்தில் குட்டையைத் தந்து
வாலிப னுக்கதை வழங்கச் செய்தாள்.
பார்க்கா தவன்போல் அவளையே பார்த்து
மகிழ்ந்துகொண் டிருந்த மாதவன் குட்டையை



வந்தனம் சொல்லி வாங்கிக் கொண்டான்.
கமலம் தந்தையே கட்டும் கட்டினார்.
வண்டியும் வந்தது. வயணமாய் அதிலே
ஏரியில் எடுத்த இரண்டு பேரையும்
ஆஸ்பத் திரிக்கு அனுப்பி யானபின்
கொஞ்சம் கொஞ்சமாய்க் கூட்டம் கலைந்தது.
கமலம் நின்ற நிலையும் கலைந்தது.
அவசர மாக அப்பால் நடந்து
தாய்தந் தையரைத் தனியே அழைத்துக்
கமலம் அவர்கள் காதொடு பேசினாள்.
அவர்களும் கேட்டு ஆமோ தித்தனர்.
கமலம் தந்தை கைகூப்பி வந்து
மாதவன் செயல்களைப் புகழ்ந்து மகிழ்ந்து
வந்தனம் கூறி வாழ்த்துகள் சொல்லித்
தன்னுடை வீட்டில் தங்கிப் போகக்
கெஞ்சிக் கெஞ்சிக் கேட்டுக் கொண்டு
அன்பு ததும்ப அழைத்தார் அவனை.
ஏரிக் கரையில் இருந்தவர் கலைந்து
அவரவர் வழியே அவரவர் போனபின்,
மறுமுறை எப்படி மங்கையைப் பார்ப்பது
என்பதை எண்ணி ஏங்கின மாதவன்
அழைப்பில் அடைந்த ஆனந் தத்தினை
வர்ணித் தெழுத வார்த்தையே இல்லை.
உடனே மாதவன் ஒத்துக் கொண்டு
வந்தன உரைக்கு வணக்கம் சொல்லி,
அவருடன் போக ஆயத்த மானான்.
அவனுடன் வந்த அன்பர்கள் சகிதம்
**கந்தன் சோலையில்** கமலம் வீட்டில்

நான்குநாள் மாதவன் நல்விருந் தாயினான்.
உபசா ரங்களை உரைக்கவும் வேண்டுமா ?
ஐம்பது பசுக்கள் அடங்கிய கொட்டமும்,
எட்டுக் குதிரைகள் கட்டிய லாயமும்,
ஒன்பது ஜோடி உயர்ந்த எருதுகள்
விதவித மாகிய வில்வண் டிகளும்,
தனித்தனி யேபல தானியச் சாலைகள்,
சொந்தப் பண்ணையில் தோப்பில் காய்ப்பன
காயும் கனிகளும் கணக்கிலா வகைகளும்,
எத்தனை யோபோல ஏவல் ஆட்களும்
நிறைந்த, எல்லா நிதிகளும் மிகுந்த
கமலம் வீட்டைக் கண்டு வியந்து
மாதவன் மயங்கி மலைத்து மகிழ்ந்தான்.
கமலாம் பாளின் கல்வித் திறத்தையும்
படிப்பில் உயர்ந்த பட்டம் பெற்றதும்
சொல்லக் கேட்டு உள்ளம் சுகித்தான்.
அவளுடைச் சொந்த அலமா ரிகளில்
பொறுக்கி வாங்கிய புத்தக நூல்கள்
அடுக்கி யிருந்த அழகைப் பார்த்துத்
தன்னுடை அறையில் தாறுமா றாகப்
புத்தக மெல்லாம் புரண்டு கிடப்பதன்
ஞாபகம் வந்து நாணினான் மாதவன்.
இன்னமும் கமலம் கன்னியே என்பதை
முன்னமே அறிய முடிந்த தென்னினும்
தந்தை மகளின் தன்மையைச் சொல்லி,
"எத்தனை யோபல இளைஞர்கள் வந்து
அவளை மணக்க அரும்பாடு பட்டனர்.
பந்துக் களிலும் பலபேர் கேட்டனர்.



உரிமைக் காரரும் சிலபேர் உண்டு
ஒருவரை யாவது உவந்திலள் என்மகள் ;
வந்திடும் எந்தஓர் வாலிபன் தன்னையும்
தானே பார்த்துத் தீர்ப்புத் தருவாள்.
பணக்காரர் பலரைப் படிப்பிலை என்றும்,
படித்த சிலரைப் பணமிலை என்றும்,
அழகிருந் தவர்களை அறிவிலார் என்றும்,
அறிவுளான் என்றால் ஆற்றலைக் கோரியும்,
ஆற்றல் இருந்தால் அன்பிலன் என்றும்,
ஒவ்வொரு வருக்கும் ஒச்சம் சொல்லி,
'கண்ணுடன் கருத்தைக் கவரும் கண்ணியன்
நேர்ந்தால் திருமணம் நினைப்போம்' என்று
கலியா ணத்தின் கவலையே யின்றி
இருக்கிறாள் குழந்தை. எங்கள் இச்சையும்
அவளுடை ஆசை எதுவோ அதன்படி
நடக்கட்டு மென்று கடவுளை நம்பி
இருந்து வருகிறோம்" என்றார் அவள்பிதா.
மாதவன் மனத்தில் மகிழ்ச்சியும் ஏக்கமும்
மாறி மாறித் தோன்றி மறைந்தன.
அறிமுகம் இல்லா ஆடவர் வரினும்
ஒண்டிப் பதுங்குதல் ஒன்றுமில் லாமல்
அருவருப் பின்றி அவருடன் பேசி
வீட்டில் உலாவி வெளியிலும் சென்று
காரியம் பார்ப்பது கமலம் வழக்கம்.
கலியா ணத்தையே கருதி வந்திடும்
இளைஞ ரிடத்திலும் இப்படிச் செய்வாள்.
அப்படிப் பட்ட அந்தக் கமலம்
தானே சொல்லித் தந்தையும் தாயும்

வருந்தி யழைத்த விருந்தென வந்துள
மாதவன் தங்கள் மனையிற் புகுந்த
நிமிஷம் முதலாய் நிலைமை மாறினாள்.
எட்டவே நிற்பதும், எட்டிப் பார்ப்பதும்
ஒதுங்கிப் பதுங்கி உள்ளே இருப்பதும்,
அவனறி யாமல் அவனைப் பார்ப்பதும்,
மாதவன் பார்த்தால் முகத்தை மறைப்பதும்,
அந்தநாள் வரையிலும் ஆடவ ரிடத்தில்
உணர்ந்தறி யாத உணர்ச்சிகள் உதித்தோர்
அதிசயம் போல அச்சமும் நாணமும்
புதிதாய்த் தன்னுள் புகுந்தவ ளானாள்.
ஏரிக் கரையிலே எதிரே நின்று
கூச்சமோ அச்சமோ கொஞ்சமும் இன்றி
அப்படித் தன்னையே ஆவலாய்ப் பார்த்த
கமலம் அதன்பின் கண்ணிற் படுவதும்
அரிதாய்ப் போனதன் காரணம் அறியான்
மாதவன் மிகவும் மனந்தடு மாறினான்
இளமையின் இச்சைகள் இருப்பவன் எனினும்
ஆரோக்கிய மாகிய ஆசையே மிகுந்து
ஒழுக்கம் என்பதை உயிரைக் காத்தவன்,
இடையிடை யேஅதன் எண்ணம் வரினும்
காமத் துன்பமே கண்டறி யாதவன்,
கமலம் பார்வையிற் கட்டுண் டவனாய்
அவளுடை அழகின் அடிமையாய்ப் போனான்.
கமலம் தனக்குக் காதலி யானால்
அதைவிட உலகில் அடைய விரும்பும்
இன்பமோ சிறப்போ இல்லையென் றெண்ணி
உள்ளும் புறமும் உருகினான் மாதவன்.



நான்குநாள் சென்றன. அடுத்த நாளில்
அவனுடன் வந்தவர் அவசரப் பட்டதால்
திருவன மங்கலம் திரும்பிப் போக
ஏற்பா டுகளை எல்லாம் முடித்து
ராத்திரி விருந்தை உண்டு ரசித்து
ஜாமம் வரையிலும் சல்லா பித்தபின்
அவரவர் படுக்கையில் அவரவர் படுத்தார்.
அன்பர்கள் அனைவரும் அயர்ந்து தூங்கினர்.
மாதவன் கண்கள் மூடவும் மறுத்தன.
கண்ணிற் புகுந்து உயிரைக் கலக்கும்
பெண்ணை விட்டுப் பிரிந்து போகிற
ஏக்கம் பிடித்தவன் எப்படித் தூங்குவான் ?
கன்னிமேல் நினைப்பு கனமாய் எரிக்க,
அவளுடை உருவம் அடிக்கடி தோன்றி
முன்னால் நின்று முறுவல் காட்டி
உரைபே சாமல் உற்றுப் பார்த்து
ஆசையை மூட்டி-அவதிப் படுத்த,
புழுங்கிப் படுக்கையிற் புரண்டு புரண்டு
'ஆசையில் லாமலா அப்படிப் பார்த்தாள் ?
ஏரிக் கரையில் இச்சைப் பட்டவள்
வீட்டுக்கு வந்தபின் வேறாய் நினைத்து
மனத்தை முற்றிலும் மாற்றிவிட் டாளா ?
பார்ப்பது கூடப் பஞ்சமாய்ப் போச்சே !
வார்த்தை பேசிட வாய்க்க வில்லையே !
எவரிடம் சொல்வது ? எப்படிக் கேட்பது ?
அவளே யல்லவா அதற்கதி காரி ?'
என்பன வெல்லாம் எண்ணிக் கொண்டு
வெம்பி விதிர்த்து வேர்த்து வெறித்து
உருக்கம் தீர உலாவ நினைத்துப்

படுக்கையை விட்டுப் பதறி எழுந்தான் ;
வெளியே போக மிகவும் விரும்பினான்.
வீதியிற் சென்று வெளியைக் காணக்
கதவுகள் நான்கைக் கடந்திட வேண்டும்
அதனால் தூங்குவோர் அலட்டிக் கொள்ளுவர்.
பக்கத்தி லிருந்த மச்சுப் படிகளில்
மாதவன் ஏறினான். மாடியில் அங்கே
விஸ்தார மாகிய வெளியிடம் உண்டு
அமைதியை நாடி அங்கே உலாவினான்
முழுமதி நாளின் முந்தின நாள்அது.
பால்போல் நிலவு பகலெனக் காய்ந்து,
மெல்லிய காற்று மேனியைத் தடவ,
இரவின் அமைதியில் எண்ணம் விரிந்து,
குளிர்ந்த காற்றும் வெப்பமே கொடுத்து,
சந்திர ஒளியும் செந்தணல் வீசி
அவஸ்தையை இன்னும் அதிகப் படுத்த,
உலாவி நடப்பதும் ஓய்ந்தவ னாகி,
கைப்பிடிச் சுவரில் கைகளை ஊன்றி,
கமலாம் பாளின் கருவிழிப் பார்வை
ஏரிக் கரையில் இருந்த நிலைமையை
நினைத்துக் கொண்டே நின்றான் மாதவன்,
முகத்திலே வந்து மோதின காற்றில்
மல்லிகை மலரின் இனிய மணம்போல்
வாசனை என்னவோ வந்தது கண்டான் ;
'மாடியில் உண்டோ மல்லிகைச் செடி'யென
நாலா பக்கமும் நன்றாய்ப் பார்த்து
மூக்கைத் தீட்டிக் காற்றை முகர்ந்தான்
மல்லிகைப் பூவின் மகிமையே மகிமை !
பழக்கத் தாலோ, இயற்கையின் பண்போ,



தனியே அதற்கொரு தன்மை உண்டு.
இந்நாடு கண்ட எல்லா மலரினும்
மல்லிகை மலரே மாதர் நினைப்பையும்
காதல் களிப்பையும் அதிகமாய்க் காட்டும்.
அந்த விதத்திலோ, எந்த நினைப்பிலோ
திரும்பவும் வாசனை வீசின திசையின்
காற்றை மிகவும் கவனித்து முகர்ந்தான்
மல்லிகை மலரின் மணத்துடன் கலந்து
வாடிய ரோஜா மலரின் வாசமும்,
வதங்கிய மருகின் விதங்களின் வாடையும்
வீசுதல் கண்டு வியந்த மாதவன்
மோப்பம் பிடித்து முன்னால் நடந்து
பூமணம் வந்த திசையிற் போனான் ;
நீண்ட மாடியில் நெடுகச் சென்று
கோடியி லிருந்த குள்ளச் சுவரின்
பக்கமாய் வந்து எட்டிப் பார்த்தான்.
மாடிக்கு மட்டமாய் மற்றொரு தளத்தில்
இதற்கும் அதற்கும் படிகள் இருந்தன.
அந்தப் படிகளின் அடிப்படி யதனில்
கண்டான் மாதவன் ! கருநா கம்போல்
நீண்ட ஜடையில் நிறைந்த பூக்கள்
நாகப் படத்தின் நாமம் போன்றிட
முகம்தெரி யாமல் முதுகைக் காட்டி
உட்கார்ந் திருந்த உருவம் ஒன்றை.
பின்னிய கூந்தல் பெண்ணெனக் காட்ட,
இடையும் உடையும் இளமையைச் சொல்ல,
'கமலந் தானோ ! கண்ணின் மயக்கமோ !
உண்மை உருவமோ ! உருவெளித் தோற்றமோ !'
தெரியமாட் டாமல் திகைத்தான் ...

ஓசையில் லாமல் உற்றுப் பார்த்தான்.
அங்கே யிருந்த அந்தப் பெண்மணி
தன்னையே மறந்து தலைக்கு நேராய்
முன்னால் கொஞ்சம் மூளியா யிருந்த
சந்திர வட்டம் தன்னையே பார்த்து,
மதியில் இருக்கும் மறுவைப் பற்றியோ !
மறுவில் தோன்றும் மான்வடி வத்தையோ !
மானுருப் போன்றது மலையென நினைத்தோ !
'மலைபோல் தெரிவதை மரமெனச் சொல்லி
அந்த மரத்தின் அடியில் அமர்ந்து
குடுகுடு கிழவி கொட்டை நூற்கிறாள்'
என்கிற பேச்சையும் எண்ணிக் கொண்டோ !
சந்திர மண்டலச் சாத்திரம் படிப்போர்
அதையே பார்க்கிற ஆராய்ச்சி போல
அணுவள வேனும் அசையில் லாமல்
பார்த்துக் கொண்டே பதுமைபோல் இருந்தாள்
முகத்தைப் பார்க்க முடியா விடினும்
கமலமே அவளெனக் கண்டு கொண்டதும்
மாதவ்ன் உடலம் மயிர்க்கூச் செறிந்து,
வெதுவெதுப் பெல்லாம் விறுவிறுப் பாகி,
வீரமும் தீரமும் விலுவிலுப் படைந்து,
கடகட வென்று கைகால் நடுங்கி,
தைரிய மெல்லாம் தளர்ந்தவ னாகி,
திருடப் போனவன் திறுதிறுப் போடு
குற்றமில் லாமலும் குறுகுறுப் படைந்து,
அன்னிய ஆட்சியின் அடிமையைப் போலச்
சுதந்தரம் என்பது சூனிய மாகி,
தப்பிதம் இன்றியே தண்டனை விதிக்கும்
அவசரச் சட்டமாய் நெஞ்சம் அலட்ட,



ஆசையும் அச்சமும் அடுத்தடுத் துற்று,
விரும்பிய வார்த்தை வெளியில் வராமல்
தொண்டை யடைத்துத் தொனியில் லாமல்
கடைசி யாகக் 'கமலம் !' என்று
அச்சமும் அஞ்ச அழைத்தே விட்டான்.
காதில் விழுந்தும் கருத்தில் படாமலோ
அந்தப் பெண்மணி அசையா திருந்தாள்.
மற்றும் இருமுறை மாதவன் அழைத்தான்.
நான்காம் தடவை நங்கை அசைந்தாள் ;
திடுக்கிட் டவளாய்த் திரும்பிப் பார்த்தாள்.
அடையா ளத்தை அறிந்து கொண்டோ !
பதறி எழுந்து படிகளுக் கப்பால்
எட்டி நடந்து எதிரே நின்று
நிமிர்ந்து பார்த்துக் குனிந்து நின்றாள்.
ஓடி ஒதுங்கி ஒளிந்துகொள் ளாமல்
வரவேற் கின்ற வண்ணமாய்க் கமலம்
நின்றதைக் கண்ட மாதவன் நெஞ்சில்
அச்சம் குறைந்து அமைதி பிறந்தது,
நடுக்கம் நீங்கி நம்பிக்கை ஓங்கி,
சுதந்தரம் அடைந்து சுகம்பிறந் தாற்போல்
தன்னுடை நாட்டில் தன்னர செனப்
பதற்றமில் லாமல் படிகளில் இறங்கி
அவளுக்கு முன்னால் அருகில் வந்தான்.
நின்ற இடத்திலே கமலம் நின்றாள்.
"மருட்டிவிட் டேனோ ? மன்னிக்க வேண்டும் ;
உன்னிடம் பேசாமல் ஊருக்குப் போய்விட
நேருமோ என்பதை நினைத்து வருந்தித்
தூக்கம் வராமல் துன்பப் பட்டுக்
காற்று வாங்கும் கருத்தி னாலே

மாடிக்கு வந்தேன் ; மலர்களின் வாசனை
இங்கேது என்று எட்டிப் பார்த்தேன் ;
இங்கே உன்னை எதிர்பார்க்க வில்லை ;
தனியே தங்கித் தயங்குவ தென்ன ?"
என்று மாதவன் இளநகை பூத்தான்.
"எனக்குக் கொஞ்சமும் தூக்கமே இல்லை.
காற்று வாங்கினேன்" என்றாள் கமலம்.
"உனக்கும் இப்படி உறக்கம் கெட்டது
என்ன காரணம் ?" என்றான் மாதவன்.
"உங்களுக் கெதனால் உறக்கம் இல்லை ?"
"எனக்கு உன்னுடன் பேசிட ஏக்கம்"
"அவரைப் பிரிகிற ஆற்றாமை எனக்கு"
"அவரையா ! எவரை ? அவரார் ?" என்றான்.
"அவரைப் பற்றிநான் அப்புறம் சொல்லுவேன்.
என்னுடன் நீங்கள் பேசிட எண்ணின்
காரியம் என்ன ?" என்றாள் கமலம்.
"கல்யா ணத்தைக் கருதும் காரியம்."
"கருதிட வேண்டிய கல்யாண மென்பது
இனிமேல் எனக்கு இல்லவே இல்லை."
"கன்னி யாகவே காலம் கழிக்கவா ?"
"கன்னிகை அல்லநான் கல்யாணம் ஆனவள்."
"கன்னிகை அல்லவா ! கல்யாணம் ஆச்சா !
அப்படியா அது, அறியாது போனேன் !
உன்னுடைத் தந்தையும் உரைத்தா ரில்லையே !
எவரை மணந்தாய் ? எப்போது ?" என்றான்.
"தந்தையும் அறிந்திலர். தாயும் அறியாள்.
கண்டேன் அவரை, கொண்டேன் கணவராய்.
இனிமேல் என்னிடம் கல்யாணம் என்பதன்
ஆலோ சனைக்கே அவசியம் இல்லை.
நீங்களும் அதனை நினைக்க வேண்டா."



"கல்யாண மின்றியா கணவனாய்க் கொண்டாய் ?
ஆலோசிக் காமலா அப்படிச் செய்தாய் ?"
"கண்ணைக் கவருமுன் கருத்தைக் கவர்ந்து
அன்பைப் பெருக்கி ஆசையை மூட்டி
உயிருடன் கலந்து ஒன்றாகி விட்ட
உத்தம லட்சண ஒருவரைக் கண்டேன் ;
கண்ணிய புருஷனைக் கண்டதும் வரித்தேன்.
ஆலோ சிக்கவே அவகாச மில்லை.
அவரை யல்லாது எவரையும் கருதேன்."
'அவரை' வரித்தாய் அவள்சொன்ன சொல்லை
"நீங்களும் அதனை நினைக்க வேண்டா"
என்றத னோடும் எண்ணிப் பார்த்து,
இடிவிழுந் ததுபோல் ஏக்கமுண் டாகி
எதிர்பார்த்த தெல்லாம் ஏமாந் தவனாய்,
'அப்படி யா ! என் ஆசை அழிந்ததே !
கண்டதும் முற்றும் கனவே' என்று
மனமுடைந் தவனாய் மாதவன் சொன்னான் :
'என்னை மணக்க உன்னைக் கேட்டிட
ஊருக்குப் போகுமுன் உன்னுடன் பேச
ஏக்கம் மிகுந்தே தூக்கமும் இல்லை."
"அப்படி யாஅது ! ஐயோ பாவம் !
முன்னமே என்மணம் முடிந்து விட்டதே !"
"என்னையே விரும்பினாய் என்றுநான்
எண்ணினேன்."

"உங்களை விரும்பினேன் என்பது உண்மைதான்.
உயிருள்ள மட்டும் உங்களை மறவேன்.
அன்பிற்கு முண்டோ அடைதாழ் ? ஆனால்
நீங்கள் என்னைக் கேட்க நினைக்குமுன்
அவரைக் கண்டேன் ; அறிவெலாம் மயங்கி

நானே அவரை நாதனாய்க் கொண்டேன்"
என்றாள் கமலம். இளைத்தான் மாதவன் ;
உயிரற்ற மரம்போல் உணர்வற்று நின்றான் ;
பேச்சு வராமல் பெருமூச்சு விட்டு,
வேதனை முகத்துடன் மாதினைப் பார்த்து,
ஊருக்குப் போய்வர உத்தரம் கேட்டான்.
"ஊருக்குப் போவது உறுதியாய் விட்டதா ?"
"ஆமாம் அன்பர்கள் அவசரப் படுகிறார்.
எத்தனை நாளைக்கு இங்கிருப் பார்கள் ?
இனிமேல் எனக்கும் இங்கென்ன வேலை ?"
"அதுவும் சரிதான். அப்படி யானால்
அவரையும் என்னையும் அழைத்துப் போங்கள்.
அவரும் நானும் அரைக்கண மேனும்
உங்களைப் பிரிந்தால் உயிர்வாழ மாட்டோம்"
என்று கமலம் இறைஞ்சி நின்றாள்.
"அவரையும் உன்னையும் அழைத்துப் போவதா
எவரையும் ? எவரையும் ? எவரையும் ?" என்று
விரைந்து மாதவன் வியப்புடன் கேட்டான்.
அரண்டு வருந்திய அக்குரல் கேட்டு,
வாடிப் போன வதனமும் பார்த்து,
கமலம் எண்ணிய கட்டுரை கேட்டு,
மறைபொருள் பேச்சின் மார்க்கம் மறைந்து,
'மூடுமந் திரங்கள்' முற்றிலும் தவறி,
வேஷம் கலைந்து, சாயம் வெளுத்து,
அன்னிய வழக்கம் அதிகமாய்க் கலந்த
படிப்பில் உயர்ந்த பட்டம் பெற்றுக்
கல்யா ணத்தைக் கருதி வந்திடும்
வாலிபர் தம்முடன் வாதம் பேசித்
திகைக்க வைக்கிற திறமையும் சிதறி,



பெண்மனம் என்னும் இரக்கம் பிறந்து
பதில்சொல் லாமல் பரிதா பத்துடன்
கமலம் அவனைக் கனிவுடன் பார்த்தாள்.
'எவரை ? எவரை ?" என்று மாதவன்
மீண்டும் மீண்டும் ஆவலாய் வினவினான்.
"அவரை அவரை அவரை" என்று
கமலம் தன்ஒரு கையை நீட்டி
மாதவன் அகன்ற மார்பைக் காட்டிக்
கைகளால் தன்னிரு கண்களைப் பொத்திப்
பிரேமை என்கிற பித்தம் தள்ள
மயக்கம் போட்டு மாதவன் மார்பில்
சரேலென் றவளும் சாய்ந்து விட்டாள்.
மாண்ட ஜீவன் மீண்டது போலத்
தேடிய ஒன்றைக் கூடிய தெளிவுடன்
மங்கையின் முகத்தை மார்போ டணைத்துக்
கூந்தலின் மணத்தைக் குனிந்து முகர்ந்து,
கொதித்த தென்றல் குளுகுளுப் பாக,
செந்தணல் சந்திரன் சந்தனக் குழம்பாய்
இரவின் அமைதியின் இனிமை யடைந்து,
ஏகாந் தத்தின் ஏற்றமும் கண்டு,
கண்டறி யாத இன்பக் கடலில்
முழுகி முழுகி முயங்கி மயங்கி
உலகை விட்டு உயரப் பறந்து,
மங்கையைத் தவிர மற்றெல்லாம் மறந்து,
இன்னோ ருலகில் இருப்பவ னானான்.
இவர்கள் இருந்த இடத்துக் கருகில்
பின்கட் டிலிருந்து பெண்கள் வருகிற
மச்சுப் படிவழி மற்றொன் றிருந்தது.

அந்தப் படிகளில் யாரோ வருகிற
காலடிச் சத்தம் காதில் விழுந்ததும்
தன்னிலை யுணர்ந்து மின்னலின் வேகமாய்க்
கமலம் மாதவன் கைகளை நீக்கிப்
படிகளை நோக்கிப் பாய்ந்து மறைந்தாள்.

# கலை வாழ்க்கை

"காமனும் ரதியும் கதைகளிற் கேட்டது
ராமனும் சீதையும் ராமா யணத்திலே
நளன்தம யந்தியை நாம்கண்ட தில்லை.
சாவித்திரி சத்தியவான் சாமான்ய மல்ல.
ஷாஜஹான் மும்தாஜ் சரித்திரப் பாடம்.
மாதவி கோவலன் மணந்தவ ரல்லர்.
கண்ணகி கோவலன் இன்பம் கண்டிலர்.
கமலம் மாதவன் கண்கண்ட ஜோடி"
என்றே ஊரார் எவரும் புகழ்ந்திடச்
சத்திய மாகவே சதையும் நகமுமாய்
ஒன்றிய மனத்துடன் உயர்ந்த முறையில்
இல்லறம் நடத்திய இன்ப வாழ்க்கையை
எழுதவோ சொல்லவோ எவரால் முடியும் ?
அவர்கள் வீடொரு ஆனந்த மாளிகை.
கற்றவர் பலரையும் அங்கே காணலாம்.
கலைஞரும் கவிஞரும் கணக்கிலர் வருவர்.
ஏழை எளியவர் எவரும் போகலாம்.
உதவிகள் நாடுவோர் ஓயாது புகுவார்.
பொதுநல முயற்சிகள் பொழுதும் பார்க்கலாம்.
தெய்வநம் பிக்கையும், தேச பக்தியும்
தாய்மொழிப் பற்றும், தன்னல மறுப்பும்,
வேதாந்த சித்தாந்த விளக்க வாதமும்,
சுதந்தர உணர்ச்சியும், சுசிகர வாழ்க்கையும்
அடிமைத் தனங்களை அகற்றும் ஆர்வமும்
மாநிலத் துள்ள மக்கள் அனைவரும்

மருவிக் கலந்து வாழ்ந்திட மார்க்கமும்
போதிக்க வென்றே புதுப்புது அறிஞரின்
அறிவுரைப் பேச்சுகள் அடிக்கடி நடக்கும்.
"பாரியை ஓரியைப் பார்த்தவர் இல்லை.
குமணனைப் பார்க்கவும் கொடுத்துவைத் தோமா ?
சடையப்ப வள்ளலைச் சந்திக்க நேர்ந்திலோம்.
புலவருக் கெல்லாம் பொற்குவை கொடுத்த
பாண்டிய மன்னரைப் பார்த்தோ மில்லை.
கலைகளை யெல்லாம் கட்டிக் காத்த
சோழனைப் பற்றியும் சொன்னதைக் கேட்டதே.
அறங்களுக் கெல்லாம் அள்ளிக் கொடுத்த
சேரன் பெருமையும் கேட்ட சேதியே.
இல்லையென் னாத இதயம் வேண்டிய
கர்ணன் கொடைகளும் காதாற் கேட்டதே.
வாணரை வளர்த்த வடமொழி வேந்தன்
போஜன் வன்மையும் புத்தகம் சொன்னது.
கமலம் மாதவன் கண்கண்ட வள்ளல்கள்"
என்றே யாவரும் ஏற்றிப் போற்றிட
ஆண்டவன் கொடுத்த அனைத்துள செல்வமும்
ஏழை மக்களின் இன்னல் தீர்க்கவும்,
கலைகளை வளர்த்துக் கல்வியைப் பெருக்கிப்
பொதுநலச் செயல்கள் புரியவு மென்றே
கமலமும் கணவனும் களிப்புடன் ஈவார்.
பொதுநலத் தொண்டுகள் புரிவதற் கென்றே
அறிஞர்கள் கூடும் சங்கம் அமைத்துத்
தமிழைப் பற்றியும், 'தமிழிசை' பற்றியும்,
அரசைப் பற்றியும் ஆராய்ச்சி பேசுவார்.



## தமிழ்

" 'தன்குஞ்சு ஒன்றைப் பொன்குஞ்சு என்று
கன்னங் கறுத்த காக்கையும் கருதும்'
என்னும் பழமொழி இயல்புக் கிணங்க
அவரவர் மொழியே அவரவர்க் குயர்ந்தது.
ஆயினும் தமிழை அதற்காய்ப் புகழ்ந்திடோம்.
பழமை மிக்கது தமிழெனும் பாஷை.
ரசங்கள் நிறைந்த ராமா யணத்தை
வான்மீகி முனிவன் வரைந்த போதே
தமிழர் நாட்டைத் தனியே புகழ்ந்து
ஆட்சியின் சிறப்பையும் அதிலே சொன்னான்.
வான்மீகி காலம் வரையறை அற்றது.
அதற்கும் முன்னால் ஆண்டனர் தமிழர்.
இலக்கண அமைப்பிலும் இலக்கியச் சிறப்பிலும்
தனிப்பட் டுயர்ந்தது தமிழ்மொழி என்று
ஆராய்ந் தறிந்த அனைவரும் சொல்லுவர்.
எந்த மொழியையும் இகழ்ந்திடாத் தமிழன்
பற்பல பாஷைகள் நன்றாய்ப் படித்து
அறிவையே நாடி அலசிப் பார்த்து
உலகத்தி லுள்ள உயர்ந்த கருத்துகள்
எல்லாம் நிறைந்த இலக்கியம் உள்ளதாய்ச்
சேர்த்து வைத்த செல்வம் தமிழ்மொழி.
இன்று நேற்று ஏற்பட்ட தன்று,
மூவேந்தர் ஆட்சிக்கு முன்னா லிருந்தே
இந்திய நாட்டிலும், அன்னிய இடத்திலும்
திரவியம் தேடித் திரைகட லோடியும்,
கப்பல் ஓட்டிக் கடலைக் கடந்தும்,
அன்னிய மன்னர் அழைப்புக் கிணங்கியும்,

எவரும் மதித்து எதிர்கொள்ளும் இனமாய்
எங்கும் சென்று எவரோடும் பழகி
ஆண்டுகள் பற்பல ஆயிர மாக
வாழ்ந்த தமிழர் வருந்திச் சேர்த்தது.
உலக வழக்குடன் ஒட்டியே நின்று
'கன்னித் தமி'ழென இன்னும் களிக்கப்
புதுப்புது அறிவுகள் புகுதற் கிடந்தர
எண்ணிச் செய்த இலக்கணம் உள்ளதாய்,
உண்மை அறிவில் ஊன்றிய வேருடன்
பருத்துப் படர்ந்த பற்பல கிளையுடன்
விழுதுகள் எண்ணில வெவ்வேறு தாங்க,
ஊழிக் காற்றே உரத்தடித் தாலும்
அசைக்க முடியா ஆல மரம்போல்
நேர்ந்தவர்க் கெல்லாம் நிழலே கொடுத்து
அலுப்பைத் தீர்த்து, அமைதியும் தந்து
கவிதையும் காட்டி, களிக்கச் செய்திடச்
செழித்து நிற்பது செந்தமிழ்ச் சிறப்பு
தமிழைப் போற்றுதல் தமிழரின் கடமை
தமிழின் வளர்ச்சியை மனத்தில் தரித்து
அன்னியர் அறிவையும் தமிழில் ஆக்கி,
அவசிய மானால் அருவருப் பின்றிப்
பிறமொழிப் பதங்களைத் தமிழில் பிணைத்துத்
தொழில்முறை அறிவுகள் தமிழில் தொடுத்து,
ஏனைய நாட்டின் எல்லா அறிவும்
தமிழில் உண்டெனத் தருக்கும் படியாய்ச்
செய்து வைப்பதே தமிழ்மொழிச் சேவை.

## கவிதை

அசதியைக் கிள்ளி, அறிவைக் கிளப்பி,
அலையும் மனத்தை அடக்கி நிறுத்தி,



இன்ப துன்ப உணர்ச்சிகள் எழுப்பி,
நன்மை தீமையை நன்றாய் விளக்க
இல்லாத ஒன்றையும் இருப்பதைப் போலவே
மனக்கண் முன்னால் மலரச் செய்து,
இருக்கிற ஒன்றையும் இல்லாத தேபோல்
மனத்தை விட்டு மறையச் செய்து,
வாழ்க்கைக் குதவும் நல்ல வழிகளில்
ஊக்கம் கொள்ளும் உறுதியை ஊட்டப்
பாடு படாமல் பாடம் பண்ணவும்,
நினைவில் எளிதாய் நிற்கவும் தக்கதாய்
இணைத்த சொற்களே 'கவிதை' எனப்படும்
'கவிதை' என்பது கற்பனை உள்ளது ;
கூட்டியும் பேசும், குறைத்தும் கூறும்.
பொய்மையும் வாய்மையே போலப் பொலிவுற
அறங்களைப் புகட்டலே அதனுடை நோக்கம்.
எதுகை மோனை இலக்கணம் பார்த்துப்
பதங்களை அடுக்கிப் பாட்டெனச் செய்து
உள்ளதை உள்ளதே போல உரைக்கும்
கதையோ பாட்டோ கற்பனை யில்லையேல்
'ஐந்தும் ஒன்றும் ஆறு என்கிற
கணக்கே யாகும் ; கவிதையா காது
'கற்பனை மிகுந்த கவிதைகள் மிகுந்தது
தமிழ்மொழிக் குள்ள தனிப்பெரும் சிறப்பு'
என்றொரு கவிஞர் எடுத்துப் பேசுவார்.

## தமிழிசை

"இசை'எனல் கருத்துடன் ஓசையும் இசைவதாம்.
'கற்றலில் கேட்டலே நன்றெனும் கட்டுரை
படிப்பிற்கு மட்டுமா ? பாட்டிற்கும் உண்டு

'படித்துக் கற்றிடும் அறிவைப் பார்க்கினும்
கேட்டுக் கற்றிடும் அறிவே கெட்டியாம்'
என்னும் தத்துவம் இசையினால் பலம்பெறும்.
செவிவழி நுழைந்து உணர்ச்சியைத் திரட்டி
அறிவைத் தேடும் ஆவலுண் டாக்கி
எண்ணச் செய்கிற ஓசையே இசையாம்.
ஓசைகள் மட்டுமே உணர்ச்சிஉண் டாக்கலாம்.
அழுவதற் கென்றொரு ஓசையை அறிவோம்.
சிரிப்பதைக் காட்டும் சத்தமும் தெரிவோம்.
அச்சம் குவிக்கிற ஒலியையும் அறிவோம்.
அதிசயப் பட்டால் அதற்கொரு தனிஒலி.
ஐயம் வினாக்களும் ஓசையால் அறியலாம்.
அபயக் குரலையும் ஓசையால் அளக்கலாம்.
எல்லா உணர்ச்சிகளும் ஓசையால் எழலாம்.
எனினும் ஓசையே இசையா காது.
'சங்கீதம்' என்பது ஓசையின் சங்கதி.
சப்த சுரங்களைச் சமர்த்தாய்க் கலந்து
நீட்டலும் குறுக்கலும் நெளித்தலும் செய்து
நிரவல் செய்து பரவல் நிரப்பிக்
கற்பனை மிகுந்த ஓசைகள் காட்டலே
சாமான்ய மாகச் 'சங்கீதம்' என்பது.
அதிலே மட்டுமோர் ஆனந்த மிருக்கலாம்.
நாதப் பிரம்மமும் அதிலே நாடலாம்.
அதைப்பற்றி இங்கே ஆராய்ச்சி இல்லை.
ஓசையை மட்டும் ரசிப்பவர் உண்டு ;
ஆனால் அவர்கள் அதற்கெனப் பழகினோர் ;
அப்படிப் பழகினோர் மிகச்சிலர் ஆவர் ;
அவர்களைப் பற்றியும் அக்கறை இல்லை.
பொதுஜன மனத்தில் அறிவைப் புகட்ட



இனிய ஓசையால் உணர்ச்சியை எழுப்பப்
'பாடுவோன்' கருத்தைக் 'கேட்போன்' பருக
எண்ணமும் ஓசையும் இசைவதே 'இசை'யாம்.
இசைப்பவன் கருத்தும் கேட்பவன் எண்ணமும்
ஒன்றாய்க் கலப்பது ஓசையால் அன்று.
சொல்லே அதற்குத் துணையாய் நிற்பது.
அந்தச் சொல்லும் சொந்தச் சொல்லாம்
தாய்மொழி ஒன்றே தனிச்சுவை ஊட்டும்.
அவரவர் மொழியில் அவரவர் கேட்பதே
'இசை'எனப் படுவதன் இன்பம் தருவது.
புரியாத மொழியில் இசையைப் புகட்டல்
கண்ணைக் கட்டிக் காட்சி காட்டுதல்.
'தமிழன் சொந்தத் தாய்மொழிச் சொல்லில்
இசையைக் கேட்க இச்சை கொள்வதே
தமிழிசை' என்பதன் தத்துவ மாகும்.
தத்துவம் இதனை மனத்தில் தாங்கி,
புதுப்புது 'மெட்டை'யும் இசையிற் புகுத்தி,
பழைய 'சிந்துகள்', 'பதங்கள்', 'வண்ணமும்',
தமிழின் சொந்தச் சந்தம் பலவும்
அழிந்துபோ காமல் அவற்றையும் போற்றித்
'தமிழிசை' வளர்ப்பது தமிழன் கடமையாம்.
சங்கீ தத்தையும் தமிழன் கைவிடான்.
சரித்திரம் அறிந்த சத்தியப் படிக்கு
யாழின் விதங்களும் குழலினம் அனைத்தும்,
வாத்தியக் கருவிகள் வகைகள் பலவும்,
ஏழு சுரங்களை இயக்கும் விதமும்,
'கர்நா டகத்துச் சங்கீதம்' என்று
அழைக்கப் படுகிற அந்தக் கலையும்
தமிழன் ஆதியில் வளர்த்துத் தந்ததே.

இன்றைய தினத்திலும் இந்தக் கலைகளில்
தலைசிறந் துள்ளவன் தமிழனே யல்லவா ?"
என்றொரு கலைஞன் இசையை ஏத்துவான்.

## அரசியல்

"அரசியல் நீதிகள் அனைவரும் அறிந்து
வாழ்க்கையின் நித்திய வழக்க ஒழுக்குடன்
கலந்து நடந்த காவலன் ஆணையால்
'அரசியல்' எனத்தகும் அதற்கொரு பெயருடன்
தனியே நூல்களைத் தமிழிற் காணோம்.
வாதுகள் வளர்க்கும் வார்த்தைகள் சேர்ந்து
ஓயா வழக்குகள் உண்டாக்கு மென்றோ
ஏட்டுச் சட்டமும் எழுதிலர் போலும்.
இருந்தன அழிந்ததோ என்பதும் அறியோம்
அரசரும் குடிகளும் அன்புடன் கலந்து
பசியும் பிணியும் பகைமையும் அரிதாய்
வாழ்ந்தனர் என்பதை வையகம் அறியும்.
'தனித்'தனி மனிதன் தன்னறம் காத்து,
வீட்டுக்கு வீடு கடமையை விரும்பி,
ஒவ்வொரு குடும்பமும் ஒழுக்கமே ஓம்பி,
ஊருக்கு ஊராய் உரிமைகள் தந்து,
நாட்டுக்கு நாடு நடுநிலை நாடி,
அரசுக்கு அரசு அன்புடன் நடந்து,
அவரவர் கடமையை அவரவர் செய்தால்
சமுதாய வாழ்வு சரிவர நடந்து
பொதுநலம் என்பது தானே புலப்படும்
என்பதே தமிழன் எண்ணிய வாழ்க்கை.
'மன்னவ ராயினும் மற்றவ ராயினும்
சொந்த வாழ்க்கையில் சுத்தமாய் நடந்தால்



அரசியல் ஒழுங்கும் தானே அமையும்
என்பதே தமிழன் எண்ணிய அரசியல்.
'தன்னுயிர் போல மன்னுயிர் காத்தல்'
என்னும் சொற்றொடர் தமிழன் இலட்சியம்.
'தனக்கொரு நீதி, பிறர்க்கொரு தன்மை'
என்பதைத் தமிழன் இலக்கியம் வெறுக்கும்.
தன்னுடை ஒழுக்கம் தவறிய மன்னவன்
தமிழர் பரம்பரை தன்னிலே இல்லை
என்பதைத் தமிழ்நூல் எல்லாம் காட்டும்.
பகைவர் வந்தால் படையெடுத் தெதிர்த்து
ஆயுதந் தாங்கி அழிவுகள் செய்து
மானங் காக்கவும், மக்களைக் காக்கவும்
மடிவதும் தமிழன் மரபே என்னினும்,
அன்னிய நாட்டை அடிமைப் படுத்தி
அடக்கி ஆளும் ஆசைக் காகவே
சண்டை தொடுத்தவன் தமிழன் அல்லன்.
அரசியல் தந்திரம் அனைத்தும் அறிவான் ;
ஆயினும் அறம்கெட அரசை விரும்பான் ;
அரசை இழப்பினும் அறங்களை விட்டிடான்.
நாட்டையே இழந்து நலிவுற்ற நாளிலும்
நாக ரிகத்தையே தமிழன் நாடினான்.
'ஒன்றாக நல்லது கொல்லாமை மற்றதன்
பின்சார நன்று பொய்யாமை' என்னும்
பொய்யா முதுமொழி எதனைப் புகட்டுமோ
அதனையே தொடரும் தமிழன் அரசியல் ;
தமிழ்நாட்டு மன்னர்கள் சரித்திரம் சாட்சி.
புதுமையே போல நம்மிடைப் புகுந்த
அன்னிய அரசியல் அறிவுகள் அனைத்தும்
சூதும் வாதும் சூழ்ச்சியும் மிகுந்து

தன்னலம் ஒன்றே தலைவிரித் தாடப்
பிறநலம் சிறிதும் பேணாத் தன்மையால்
பொதுநலம் என்பதைப் புதைத்து விட்டன.
தன்னுடை வாழ்க்கை தன்னல மாகப்
பொதுநலம் பேசும் பொய்ம்மை மிகுந்தது.
அன்னிய மக்களை ஆளும் ஆசையால்
வெல்வதை விரும்பிக் கொல்வதே வேலையாய்,
'தன்னுயிர் போல மன்னுயிர்' என்றநம்
பொன்மொழி தன்னையும் பொசுக்கி விட்டது.
சண்டை செய்வதும் சாவதும் கொல்வதும்
பண்டைத் தமிழன் பார்த்துச் சலித்தது
புதுமை மிகுந்தன போலவே தோன்றும்
ஐரோப் பியரின் அதிசயம் மிகுந்த
விஞ்ஞான மெல்லாம் வாண வேடிக்கை.
விஞ்ஞான னங்களை விருத்தி செய்துள
நாட்டவர் கண்ட நன்மைகள் என்ன ?
நீரில் லாமல் நிலம்பயி ராச்சா ?
பசுவில் லாமல் பால்கறந் தாரா ?
உழவில் லாமல் உணத்தந் தாரா ?
மந்திரம் செய்து மாங்கனி வந்ததா ?
பசியில் லாமல் பண்ணிவிட் டாரா ?
பிணியில் லாமை பெற்றுவிட் டாரா ?
மூப்பில் லாமல் முடித்துவிட் டாரா ?
மரணம் என்பதை மாற்றிவிட் டாரா ?
இறந்தவர் தம்மை எழுப்பிவிட் டாரா ?
'எப்படி மனிதரை எளிதிற் கொல்லலாம் ?
எவருடன் சண்டை எப்படிச் செய்யலாம் ?
என்பதைத் தவிர என்னசா தித்தார் ?
பொய்யெனத் தள்ளிய புராண நூல்களில்



'அரக்கன் என்பவன் தவங்களை ஆற்றிச்
சக்திகள் பற்பல சம்பா தித்தபின்
தோள்தின வெடுத்துச் சண்டை தொடுக்கச்
சிவனையும், திருமால், திசைமுகன், இந்திரன்
அவனையும் இவனையும் போருக் கழைத்தான் ;
இடையே சிக்கிய மக்களை யெல்லாம்
கொன்றான், வென்றான், கொடுமைகள் செய்தான்
என்றுநாம் முன்னே இகழ்ந்து பேசிய
கதைகளை இன்றுநாம் கண்ணாற் காண்கிறோம்.
இதற்கும் அதற்கும் என்னவித் தியாசம் ?
மெய்ஞ்ஞா னமென்பது மெய்யோ பொய்யோ
விஞ்ஞா னத்தின் தீமைகள் வெளிப்படை
ஆயிரம் பற்பல ஆண்டுகள் முன்னால்
இந்திய நாட்டில் இருந்தநம் முன்னோர்
படித்துத் தேறிய ஆரம்பப் பாடமே
இன்றுமேல் நாட்டவர் இருக்கிற நிலைமை.
அவர்களைத் தொடர ஆசை கொள்வது
படிப்பில் உயர்ந்து பட்டம் பெற்றபின்
அரிவரி வகுப்பில் ஆசை கொள்வதே
அதிசயப் பட்டு அனைவரும் வியக்கத்
திறமை மிகுந்த எந்திரம் செய்து
அதனைக் கொண்டு மக்களை அழிப்பதை
நம்மிலும் சிறந்த நாக ரிகம்போல்
அவைகளைக் கண்டுநாம் ஆசை கொள்வது
விளக்கில் விழுகிற விட்டிலைப் போன்றதே.
மாறுதல் கோருதல் மக்களின் இயல்பே.
புதுப்புது வழிகளைப் புகுத்தலே அறிவு.
நித்திய மான சத்தியம் நிறைந்து
நீக்க முடியா நியாயம் சேர்ந்த

ஒழுக்க வழக்கம் உண்டென் றாலும்
'வழக்கம், வழக்கம், வழக்கம் !' என்று
இழுக்கம் மிகுந்த எதையும் செய்து,
சமுதா யத்தைச் சாக்கடை யாக்கி,
சேற்றில் புரளச் செய்து விடுவதை
மாற்றுதல் அறிவுடை மக்களின் கடமை,
அழுகிப் போனதை அப்புறப் படுத்தி,
ஊசிப் போனதை உதறித் தள்ளி,
இறந்து போனதை எரித்து விட்டு,
புதுப்புது வாழ்வைப் புகுத்தவே வேண்டும்.
மற்றும்,
புதியன புகுதலும் பழையன போதலும்
ஒழிக்க முடியா உண்மையே எனினும்
**மாறாத அறங்களை மதித்தல் வேண்டும்.**
உண்ணும் பொருளின் உருவம் மாறலாம் ;
அணியும் துணியும் அடிக்கடி மாறலாம் ;
மாட மாளிகை கூடமும் மாறலாம் ;
வழக்க ஒழுக்க வகைகள் மாறலாம் ;
வரவும் போகவும் வாகனம் மாறலாம் ;
யுத்த முறைகளும் யூகமும் மாறலாம் ;
ஆயுத விதங்கள் அனைத்தும் மாறலாம் ;
அரசியல் சட்டமும் அடிக்கடி மாறலாம் ;
கல்வி முறைகளும் கலைகளும் மாறலாம் ;
ஆனால்,
பஞ்ச பூதங்களின் சேர்க்கை படைத்த
உடலின் இயற்கையும் உயிரின் இயல்பும்
மாறின தில்லை ; மாநிலம் சாட்சி.
உடலை வளர்ப்பதும், உயிரைக் காப்பதும்,
எட்டிய மட்டும் இன்பம் தேடலும்,



ஆசையும், பாசமும், அவற்றின் தொடர்ச்சியும்,
பசியும் பிணிகளும் படுத்தும் பாடும்,
நட்பால் நன்மையும், பகையால் நஷ்டமும்,
அன்பு செய்வதால் இன்பம் ஆவதும்,
வம்பு செய்தால் துன்பம் வருவதும்,
என்பன வற்றுள் புதியன ஏது ?
மாறாத இவற்றை மனத்தில் வைத்தே
நம்முடை முன்னோர் அறங்கள் நாட்டினார்.
'தன்னுயிர் போல மன்னுயிர்' என்ற
ஒன்றில் அடக்கினார் உண்மைக ளெல்லாம்.
ஆகையி னாலே அறங்களைப் போற்றித்
தனித்தனி மனிதன் தன்கடன் செய்தால்
அரசியல் நலங்கள் தாமே அமையும்"
என்னும் பேச்சை இன்புறக் கேட்பார்.

✣ ✣ ✣

நான்கு ஆண்டுகள் இப்படி நடந்தபின்
கமலம் மங்கலக் கருப்பம் தரித்தாள்.
தெய்வம் தொழுது தெரிவன தெரிந்து
கருப்ப வதிகளின் பத்தியம் காத்துப்
பத்து மாதம் பருவம் நிறைந்தபின்
வையகம் வாழ்த்த வடிவெல்லாம் சிறந்த
பெண்மக வொன்றைப் பெற்றாள் சுகமாய்.
மாதவன் அளவிலா மகிழ்ச்சிகொண் டாடி
ஜென்ம விழாவைச் சிறப்பாய் நடத்தி,
**ராஜாம் பாள**ெனும் நாமமும் சூட்டி
குழந்தையை ஏந்திக் கொஞ்சி மகிழ்ந்து,
புண்ணியம் புரிந்து புகழொடு வாழ்ந்தான்.

# அவளும் அவனும் விரும்பிய நாடு

மன்னவன் என்ற மனிதனில்லை - அங்கே
மந்திரி தந்திரி யாருமில்லை
சின்னவர் என்றும் எவருமில்லை - பட்டம்
தேடி யலைந்திடும் மக்களில்லை.

ஊருக்குப் பத்துப்பேர் நல்லவர்கள் - பொது
யோசனை செய்திட வல்லவர்கள்
யாருக்கும் எதிலும் ஓரங்கள் செய்யாமல்
அப்பப்போ தீர்ப்புகள் செப்பிடுவர்,

நல்லவர் கெட்டவர் என்பதெல்லாம் - அங்கே
ராஜாங்கப் பட்டம் பதவியல்ல
சொல்லில் நடத்தையில் சூரத்தில் - தீரத்தில்
சுத்தரென்று பலர் நத்துவதே.

கச்சேரி என்றொரு கட்டடமும் - அதைக்
கண்டு நடுங்குதல் அங்கிலையே
அச்சமில் லாமலே யாரும் பொறுப்புடன்
அங்கங்கே நீதிந டத்திடுவார்.

வீதிக்கு வீதியோர் நீதிஸ்தலம் - பத்து
வீட்டுக்கு அங்கொரு பள்ளிக்கூடம்,
நீதிக்கு ஓடி யலைந்து செலவிட்டு
நிலைகெட்டுப் போகிற நிந்தையில்லை.



பள்ளிப் படிப்புக்குச் சம்பளம் - இன்னும்
பரீட்சைக்குக் கட்டப் பணமெனவும்
பிள்ளைகள் பந்தாடப் பின்னும் பணமென்று
பிச்சிப் பிடுங்குதல் அங்கில்லையே.

வேலையில் லாதவர் யாருமில்லை - முற்றும்
வீணருக் கங்கே வேலையில்லை.
கூலியில் லாதவர் யாருமில்லை - சும்மா
கும்பிட்டுத் தின்கின்ற கும்பலில்லை.

கூனும் குருடனும் மொண்டி முடங்களும்
கொஞ்சம் ; அவருக்கும் பஞ்சமில்லை.
தானங் கொடுப்பதென் றில்லாமல் - பொது
தர்மமென்றே வைத்துத் தாங்கிடுவார்.

ஒப்பி மனங்களித் தெல்லோரும் - அங்கே
உண்டு உடுத்துக் களித்திடுவார்
தப்பிதம் செய்திடத் தோன்றாது - அதன்
தண்டனை தந்திட வேண்டாது.

வாது வாக்குக்கு நேரமில்லை - அங்கே
வஞ்சித்து வாழமு டியாது
சூதுசெய் பந்தயம் ஏதுமில்லை - முற்றும்
சோம்பிச் சுகிக்க வழியுமில்லை.

கள்ளைக் குடிப்பது கூடாது - அங்கே
காமக் கலகங்கள் கண்டதில்லை ;
கொள்ளை யடித்திடத் தேவையில்லை - என்றும்
கொஞ்சமும் யாருக்கும் பஞ்சமில்லை.

காவிரி நீர்வற்றிப் போவதில்லை - ஒரு
 கால்வாய் மேஸ்திரி எங்குமில்லை ;
காவலும் கட்டுகள் ஏதுக்கு எப்போதும்
 கள்ளர் பயமென்ற சள்ளையில்லை.

பண்ணையக் காரர்கள் எல்லாரும் - எங்கும்
 பட்டினி என்கிற சொல்லேது ?
கண்ணியம் அற்றவர் யாருமில்லை - ஒரு
 காலித்தனம் பண்ண ஏலாது.

கண்டதும் கேட்டதும் எப்படிப் போனாலும்
 கச்சேரி வந்துபொய் சொன்னதுமெய்.
கண்டவர் உண்மையைச் சொல்லவும் வாய்பொத்திக்
 கைகட்டி நின்றிடும் கஷ்ட மில்லை.

கொடுத்த பணத்தையும் வாங்குதற்கு - நித்தம்
 கோர்ட்டு வாசலில் காத்திருந்தும்
அடுத்த பிறவிக்குப் போகுமட்டு நொந்து
 அல்லல் அடைகின்ற தொல்லையில்லை.

துக்கத்தைச் சொல்லி அழுவதற்கும் - வெகு
 தூரம் நடந்துபி ராது சொல்லி,
பக்கத்தில் நின்றவர் ஏனென்று கேட்கவும்
 பற்றற்றுப் போவதும் சற்றுமில்லை.

தீண்டப் படாதென்று சொன்னாலும் - அங்கே
 தீண்டுதல் வேண்டித்தி ரிவதில்லை.
வேண்டிய சுகங்கள் யாவும் பிறரைப்போல்
 வேணமட்டும் உண்டு வேறெதற்கு ?



கோயில் குளங்களும் வேண துண்டு - ஆனால்
 கும்பிடப் போவதில் சண்டையில்லை ;
வாயில் ஜெபதபம் வஞ்சனை நெஞ்சத்தில்
 வைத்துப் பிழைத்திடத் தேவையில்லை.

வட்டிக்குப் போடப் பணமும் இல்லை - அங்கே
 வட்டிக்கு வட்டிசெய் சட்டமில்லை.
பெட்டிக்குச் சாவியும் இல்லாமல் - வெறும்
 பேச்சில் புரண்டிடும் நாணயங்கள்.

தானியம் தவசம் அல்லாமல் - அங்கே
 தங்கமும் வெள்ளியும் செல்வமல்ல ;
நாணய மாற்றென்ற நாடக ஜாலங்கள்
 நாகரிகப் பித்த லாட்டமில்லை.

சின்னக் குழந்தைக்குத் தாலிகட்டி - வெகு
 சீக்கிரம் தாலி அறுத்தாலும்
வன்னம் கெடுத்தவள் வாழ்வைக் குலைத்திடும்
 வண்ட வழக்கங்கள் கண்டதில்லை.

நாட்டுக்குப் பகைவர் யாருமில்லை - பிறர்
 நாட்டின்மேல் ஆசையில் லாததனால்
கூட்டுக்குச் சூடும் கொடுத்திடுவார் - பகை
 துஷ்டர் வந்தாலும்து ரத்திடுவார்.

# அவனும் சாரதாவும்

மாதவன் தனக்கு மகிழ்தரும் நண்பன்
சங்கரன் ; நல்ல சாந்த குணவான் ;
படிப்பும் பணமும் நிரம்பப் பெற்றவன் ;
அறிவிலே நிறைந்த ஆசை யுள்ளவன் ;
பகலிர வாகப் படிப்பதே வேலை ;
புத்தகங் களையே பொக்கிஷ மென்பான் ;
புதிதாய் வெளிவரும் புத்தகம் எதையும்
என்ன விலையினும் எளிதாய் வாங்குவான் ;
ஐந்தாறு பாஷைகள் ஆழ்ந்து படித்தவன் ;
அன்பும் அமைதியும் ஆன்ம சிந்தையும்
உண்மையும் ஒழுக்கமும் உள்ளவன் சங்கரன் ;
எல்லாக் கலையிலும் இன்பங் கொள்வான் ;
என்னினும் கலைகளை இலேசாய் எண்ணுவான் ;
'ஆடலும் பாடலும் அலுப்புத் தீரவே ;
நாடகம் பார்ப்பது நலிவுகள் மறக்க ;
சித்திர இன்பமும் சிரமம் தீர்க்கவே ;
சிற்பச் சிலைகளும் சிந்தனை யூட்டவே'
என்பதே சங்கரன் கலைகளின் எண்ணம் ;
என்னினும் கலைகளை இகழ்ந்திட மாட்டான்.
நல்ல படங்களும் நவநவச் சிலைகளும்
வாத்தியக் கருவிகள் எல்லா வகைகளும்
அவனுடை வீட்டில் அழகுறக் காணலாம்.
சங்கரன் மனைவி **சாரதா** என்பவள்
இங்கிதம் நிறைந்த இன்பப் பெண்மணி ;



அணிகளைப் பொறுக்கிய அலங்கார முள்ளவள் ;
துணிகளில் மிகவும் துப்புர வுடையாள் ;
வாசனை வகையும் வதனப் பூச்சும்
பூசனை போலப் பொழுதும் புரிவாள் ;
இயற்கை அழகிலும் குறையிலை எனினும்
செயற்கை அழகுகள் சிறப்புறச் செய்வாள் ;
பார்த்தவர் கண்களைத் தன்வசப் படுத்தும்
வார்த்தெடுத் ததுபோல் வடிவம் வாய்ந்தவள் ;
பாட்டிலும் யாழிலும் பழக்க முள்ளவள் ;
நாட்டியக் கலையில் நன்றாய்த் தேர்ந்தவள்.
"பாரதம் எனப்பெயர் பகர்வார் என்னினும்
சரதம் நாட்டியம் தமிழன் வளர்த்தது.
வடவரை முதலாய்க் கன்னி வரையிலும்
நடைபெறக் காணும் நாட்டிய வகையில்
நந்தமிழ் நாட்டின் நட்டுவக் கலையே
நிந்தையில் லாத கலைச்சுவை நிறைந்தது.
அன்னிய நாட்டார் ஆடல் அனைத்தும்
நன்னயம் இசையா நடப்பும் குதிப்புமே.
பாடலின் கருத்துகள் பண்ணொடும் பொருந்த
ஆடலின் அபிநயம் அறிவுடன் அமையும்
அருமைத் தமிழன் ஆடற் கலையின்
பெருமை முற்றிலும் பேசவும் எளிதோ !
ஆண்டுகள் ஆயிரம் ஆயிரம் முன்னே
பாண்டிய மன்னர் பார்வையில் வளர்ந்து,
வளங்கள் மிகுந்து, வரிசையில் வாழ்ந்து,
இளங்கோ அடிகள் இசைமொழி பெற்று,
சேரன் நாட்டிலும் சிலநாள் தங்கி,
தீரம் முழுவதும் தெய்விகம் திகழப்
பூவிரி சோலையும் வயல்களும் பொலியும்

காவிரி யாற்றின் கரைகளில் நடந்து,
கலைகளை யெல்லாம் கட்டிக் காத்து
நிலைகொளச் செய்த நெறிமுறை அரசுடைச்
சோழ நாட்டைச் சுகமெனக் கண்டு
வாழும் வீட்டை அங்கே வகுத்து,
சீரும் சிறப்புடன் செழித்துக் களித்து,
பேரும் புகழும் பெருமையும் பெற்று,
வந்திடும் அன்னியர் வாழ்த்தி வணங்க
இந்திய நாட்டின் புகழுக் கிடமாய்
நெடுநாள் உலகில் புகழுடன் நின்றபின்
கெடுநாள் எதற்கும் கிட்டிடும் இயல்பால்
சோழ மன்னர்கள் சுருங்கிய பின்னர்
ஏழ்மையிற் பட்டு, இலக்கணங் கெட்டு,
தஞ்சையை ஆண்ட மராட்டியர் தயவால்
கொஞ்சநாள் மீண்டும் குறைவிலா திருந்து,
அன்னிய ஆட்சியில் அடிமைகள் ஆனபின்
தன்னுடைக் கலையெனத் தாங்கிடத் தக்க
அரசாங் கத்தின் ஆதர வின்றி
விரசே எல்லா வீழ்ச்சியும் விரவத்
தாசியம் செய்து, கோவிலில் தங்கி,
வேசியர் வீட்டின் வேலையா ளாகி,
கலையின் பெருமை கடுகள வறியார்
விலையில் வாங்கி விருந்தெனக் காட்டும்
பணக்காரர் வீட்டுக் கலியாணப் பகட்டாய்க்
குணக்கே டுள்ளவர் கூட்டத்தில் ஆடும்
சோற்றுக் கானதோர் தொழிலாய்ப் போனபின்
ஏற்றம் குறைந்து இருந்திட நேர்ந்தும்
ஜீவ சக்திகள் சிறந்திருந் ததனால்
தீவிர மாகத் திரும்பவும் தளிர்த்து,



சொந்தக் கலைகளைத் துலங்க வைத்திட
இந்திய மக்களின் எழுச்சியோ டெழுந்து,
சுதந்தர உணர்ச்சியில் தோன்றிய துணிபுடன்
இதந்தர வந்துள இயக்கங் களினால்
புத்துயிர் பெற்றுப் புதுமணம் வீசி
இத்தினம் உலகிலே எவரும் விரும்பிடும்
தமிழன் நட்டுவம் தனிப்புகழ் கொண்டது ;
நமதெனும் பெருமை நாமுற வேண்டும்"
என்று சாரதா இலக்கியம் பேசி
நன்று பயின்ற நாட்டியக் கலைக்குச்
சங்கரன் மிகவும் சாதக மானவன்.
நாட்டியக் கலையில் நல்ல நிபுணர்கள்
பலபேர் வந்து பழக்கி வைத்ததில்
செலவுகள் யாவிலும் சிறிதும் கூசான் ;
நாயகி ஆசைகள் நலிவுறப் பேசான்.

✣ ✣ ✣

சங்கரன் வீட்டில் சாரதா வின்சதிர்
அன்பர்கள் களிக்க அடிக்கடி நடக்கும்.
பணத்துக் கன்றிப் பார்த்தவர் வியக்கப்
பொதுஇடங் களிலும் போய்அவள் ஆடுவாள்
அழகுத் தெய்வமாய் அவளையும் மதிக்கும்
மாதவன் சாரதா சதிரில் மயங்குவான்.
சாரதா அவனுடன் சகஜம் மிகுந்தவள்.
பயிற்சிகள் நித்தம் மாதவன் பார்வையில்.
அடிக்கடி தனியே அவன்முன் ஆடுவாள்.
கலைகளின் இலக்கணம் கற்றவன் ஆனதால்
தன்னுடை நாட்டியச் சிறப்பின் தன்மையை
மாதவன் புகழ்ந்திட மகிழ்வாள் சாரதா.
சங்கரன் பொழுதெலாம் தன்னுடை உள்ளிலே

புத்தகத் திடையே புதைந்து படிப்பதே
இன்பமாய் எண்ணி இருப்பவன் ஆனதால்
சிற்சில நாளே சேர்ந்து ரஸிப்பான்.
மற்றநா ளெல்லாம் மாதவன், கமலம்
முதலிய நண்பரே முற்றிலும் களிப்பவர்
கருப்ப வதியாய்ப் பிரஸவம் காத்துக்
கமலம் வராத காலம் சிலநாள்
மாதவன் ஒருவனே தனியே வந்து
சாரதா சதிரில் சந்தோஷ முறுவான்.

✣ ✣ ✣

அழகுடன் சாரதா ஆடலின் ஆசையோ,
நாட்டியக் கலையைத் தானும் நயந்தோ,
அவனும் நாட்டியம் ஆட விரும்பினான்.
பலநாள் மாதவன் சாரதா பார்வையில்
ஆடப் பயின்று அனுபவம் பெற்றபின்
இருவரும் ஜோடியாய் இசையுடன் ஆடுவார்.
ஒருவரை ஒருவர் மிகவும் உவந்து
நாட்டியக் கலையே நாளும் பேச்சாய்
நேசம் மிகுந்து நெருங்கிப் பழகுவார்.

# அவன் எழுதிய கடிதம்

நாட்டியக் கலையை நாளும் நயந்து
சாரதா ஆடலைச் சலியாது புகழ்ந்து
ஓராண்டு காலம் ஓயாது பயின்று
மாதவன் நடனம் மாண்புறச் சிறந்து
பொதுவிலும் ஆடிப் புகழும் பெற்றான்.
கமலமும் மகிழ்ந்து கணவனை மெச்ச
மாதவன் மிகுந்த மகிழ்ச்சியில் முழுகி
அருமை மகளின் ஆண்டு நிறைவில்
தன்னுடை நடனமும் சாரதா சதிரும்
இசையும் கருவிகள் இன்பம் பலவும்
விலையில் மிகுந்து விருந்துக ளுடனே
ஊரெலாம் மெச்ச உயர்வாய் நடத்தி
இன்பம் நிறைந்து இருந்திடும் நாளில்,
ஒருநாள் காலை உணவுகள் உண்டபின்
நாட்டியக் கலையின் நயங்களைப் புகழ்ந்து
கமலம் தன்னோடு களிப்புறப் பேசி,
குழந்தையைக் கொஞ்சிக் குலவி மகிழ்ந்து
ஏதோ கடிதம் எழுதஉட் கார்ந்தான்.
எழுத்து வேலையாய் இருப்பதைக் கண்டு
வீட்டுக் குள்ளே கமலம் விலகினாள்.
தன்னுடை மேஜையில் தனியே யிருந்து
எண்ணி யெண்ணி எழுதத் தொடங்கினான்.
ஒருமணி நேரம் யோசனை செய்தான்.
கவிதை எழுதக் கற்பனை தேடியோ !
உபமா னங்களின் ஒப்பு நாடியோ !

பாட்டுக் கோக்கப் பதங்கள் பொறுக்கவோ !
தொடுத்த கதையின் தொடர்ச்சி எண்ணியோ !
நினைத்த ஒன்றை மறக்க நேர்ந்தோ !
உருவம் தெளியா ஓவியன் போல,
சித்திரம் கலைந்த சிற்பியைப் போல,
பாட்டு வராத பாவலன் போல,
பரிட்சையில் விழிக்கும் பையனைப் போல,
நினைத்து நினைத்து நிமிஷத் துக்கொரு
வார்த்தை வராமல் வதனம் சுருக்கி
மேலும் கீழும் மிரளப் பார்த்து
சிறுகச் சிறுகச் சேர்த்துப் பிடித்து
ஒவ்வொரு வார்த்தையாய் ஒட்ட வைத்து
என்னவோ கடிதம் எழுதி முடித்தான்.
திருப்பித் திருப்பிப் படித்துத் திருத்திக்
குறுக மடித்துக் கூட்டிலே போட்டு,
'நாட்டியச் சிறப்புள நற்கலை வாணி
சாரதாம் பாளின் சமுகத் திற்'கென
மேல்வி லாசம் மெலுக்காய் எழுதி,
உறையின் மூடியை ஒட்ட வைக்கத்
தண்ணீர் வேண்டித் தானே எழுந்து
அறையை விட்டு அகன்றான் மாதவன்.
அந்த வேளையில் சொந்த அலுவலாய்,
வேறு என்னவோ தோட்ட விஷயமாய்,
கலந்து பேசிடக் கணவனைத் தேடி
மாதவன் அறைக்குக் கமலம் வந்தாள்.
கடிதம் மேஜைமேற் கண்ணிற் பட்டது
களங்கமெண் ணாமல் கையில் எடுத்தாள்.
எடுத்ததைக் கண்முன் ஏந்திடும் போது
மாதவன் வந்தான். மனைவியின் கையில்



கடிதம் இருந்ததைக் கண்டு மருண்டு
வெடுக்கெனப் பிடுங்கி, வெகுண்டு பார்த்து,
"என்ன கமலம் ! ஏன்அதை எடுத்தாய் ?
ஒருவர் கடிதம் ஒருவர் பார்ப்பது
என்றும் மிகவும் இழிவுடைக் காரியம் ;
அறிவுடை எவரும் அப்படிச் செய்யார்,
அந்த ஒழுங்குநீ அறியாத தல்லவே"
என்று மாதவன் இடித்துக் கூறினான்.
"என்ன நாதா ! இத்தனை கோபம்ஏன் ?
என்னவோ பேசநான் இங்கே வந்தேன்.
கடிதம் மேஜைமேல் கண்ணிற் பட்டது.
விளையாட் டாக விகற்பமெண் ணாமல்
கையில் எடுத்தேன். கவர்ச்சியா யிருந்த
விலாசம் பார்க்க விருப்பம் வந்தது.
உள்ளே இருப்பதை ஒன்றும் பார்த்திலேன்.
'ஒருவர் கடிதம் ஒருவர் பார்ப்பது
ஒழுங்கிலை' என்பது உலக வழக்கந்தான்.
நமக்குள் அப்படி நடந்தறி யாத
பழக்கத் தாலே 'பாதகம் இல்லை'
என்ற நினைப்பினால் எடுத்துவிட் டேனதை ;
மறந்து செய்தேன், மன்னித் திடுங்கள்.
வருந்த வேண்டா" என்று வணக்கமாய்க்
கமலம் சுபாவக் கனிவுடன் சொன்னாள்.
மாதவன் கேட்டு மனமிக நொந்து,
நாயகி அவளை நலிவுறச் சொன்னது
சரியல வென்ற சங்கடம் மிகுந்து,
நெஞ்சை உறுத்த நெக்குவிட் டுருகி,
சினமுகம் மாறிச் சிறுநகை செய்து,
கமலம் முகத்தைக் கருணையிற் பார்த்து,

நெருங்கி நின்று நெற்றியை நீவி,
தோளை மெதுவாய்த் தொட்டுத் தடவி,
மனைவியின் தலையை மார்பிற் சாய்த்துக்
குற்ற மனத்தின் குறுகுறுப் போடும்,
"கண்ணே கமலம் ! கலங்கிட வேண்டா.
எதையோ எண்ணி என்னவோ சொன்னேன்.
சிந்தனை தவறிச் சினந்து விட்டேன்.
அறிவு கலங்கி அன்பறப் பேசினேன்.
பித்தனைப் போலவே பிதற்றி விட்டேன்.
வருத்தம் மனத்தில் வைத்திட வேண்டா
அருமைக் கண்மணீ ! அவசரப் பட்டுநான்
என்னவோ......."
என்று மாதவன் இன்னும் சொல்லுமுன்,
"என்ன நாதா ! எனக்கா வருத்தம் !
நீங்கள் இதைமிகப் பெரியதாய் நினைத்து
எனக்கு வருத்தம் இருக்குமென் றெண்ணி
நெஞ்சு புண்ணாக நினைத்திட வேண்டா.
அதுவே எனக்கு ஆறுதல் ஆகும்.
நந்த வனத்தில் மரங்களை நடவும்
புஷ்பச் செடிகளைப் புதிதாய் வைக்கவும்
தோதுகள் கேட்கநம் தோட்டக் காரன்
வந்திருக் கின்றான், அதற்காக வந்தேன்"
என்று பேச்சினை எளிதில் திருப்பி,
கணவன் கொண்ட கவலையை மாற்றி,
கமலம் தான்வந்த காரியம் பேசினாள்.
மாதவன் கொண்ட மனத்தடு மாற்றம்
முற்றும் மறந்து, முகமும் மலர்ந்து,
நந்த வனத்தில் மரங்கள் நடுவதில்
வேண்டிய தெல்லாம் விவரமாய்ப் பேசி,



"நாமே சென்று நடுவதை முற்றிலும்
நேரிற் பார்த்து நிச்சயம் செய்வோம்.
இன்று மாலைநாம் இருவரும் போவோம்.
தோட்டக் காரனைப் போகச் சொல்லிடு"
என்றான் மாதவன், சென்றாள் கமலம்.
கமலம் போனபின் கையிலே இருந்த
கடிதம் அதனைக் கண்முன் பிடித்து,
உற்றுப் பார்த்து, உறையை ஒட்டத்
தண்ணீர் தொட்டுத் தடவப் போனவன்
கைவிர லோடும் தண்ணீர் காய
அசையாது நின்று ஆழ்ந்த சிந்தனை
செய்பவன் போலச் செயலற் றிருந்தான்.
நீண்ட நேரம் அப்படி நின்றபின்
நினைத்து நினைத்து நிச்சயம் வந்து
சட்டென மீண்டும் தண்ணீர் தொட்டு
ஒட்டினான் அந்த உறையின் மூடியை ;
ஒட்டிய அதனை உற்றுப் பார்த்தான் ;
மேஜைமேற் போட்டான் ; மீண்டும் எடுத்தான்.
ஒட்டிய ஈரம் உலர்வதற் குள்ளே
என்ன நினைத்தோ எதனா லேயோ !
பொறுக்கிப் பொறுக்கி வார்த்தை போட்டு
நினைத்து நினைத்து நிர்மா ணித்து
எண்ணி யெண்ணி எழுதி முடித்துக்
கவனம் செய்த கடிதம் அதனை
இரண்டு கையிலும் இறுகப் பிடித்துக்
கூட்டையும் சேர்த்துக் குறுக்கே கிழித்துக்
குப்பைக் காகிதக் கூடையிற் போட்டான்.

# அவளும் ராகவனும்

'இனிய பார்வையும் இன்சொலும் உடையான்
**ராகவன்** எல்லாக் கலையிலும் ரஸிகன் ;
சிற்சில கலைகளில் சிறந்த நிபுணன் ;
சங்கீ தத்திலே சமானமில் லாதவன் ;
ராகமும் தாளமும் ரகமெலாம் தெரிந்தவன்
லயமெனப் படுவது நயமிகும் அவனிடம்
சரள வரிசைகள் சரளமாய்ப் புரளும்.
பாவம் என்பது பரவசப் படுத்தும்.
சொற்கள் எல்லாம் சுத்தமாய்ப் புரியும்.
மொழியின் இலக்கணம் முரியா திருக்கும்.
நீட்டலும் குறுக்கலும் நிறுத்து நிற்கும்.
குரலின் இனிமை தெய்வம் கொடுத்தது.
இசையின் இன்பம் இதுதான் என்னக்
கல்லெனும் மனமும் கரைந்திடும் படியாய்
உருகிப் பாடுவான் ; உருகிடச் செய்வான் ;
வாய்ப்பாட் டோடு வீணைவா சிப்பான் ;

✤ ✤ ✤

சித்திரக் கலையிலும் கைத்திறம் சிறந்தவன் ;
பார்த்ததை யெல்லாம் படமாய் எழுதுவான் ;
நேர்ந்தது எதையும் நிமிஷம் வரைவான் ;
அவரவர் உருவை அடையா ளத்துடன்
எழுதிக் காட்டி இன்புறச் செய்வான்.
அழகுத் தெய்வம் அவளே யாகக்
கமலம் தன்னுடைக் கட்டழ கெல்லாம்



பற்பல விதமாய்ப் படத்தில் எழுத
நினைத்த படியெலாம் நிற்கவும் இருக்கவும்
வேண்டுவான்; அவளும் விருப்புடன் செய்வாள்.
மாதவன் மிகவும் மகிழ்ந்திடும் நண்பன் ;
பள்ளித் தோழன் ; பந்தடித் தோழன் ;
அழகுத் தெய்வ ஆசையில் தோழன் ;
போட்டோ பிடிக்கிற பொழுதும் தோழன் ;
காலையோ மாலையோ கணக்கே இல்லை.
காரியம் இருக்கும் இல்லையென் றாலும்
சொந்த வீட்டின் சுதந்தரத் தோடு
மாதவன் வீட்டைத் தன்மனை போல
அடிக்கடி ராகவன் அங்கே வருவான்.

✤ ✤ ✤

ராகவன் வந்தால் ரவியினைக் கண்ட
கமலம் போலவே களிப்பாள் கமலம் ;
கொஞ்சி மகிழ்ந்து குலவிப் பேசுவாள் ;
பன்னிப் பன்னிப் பாடச் சொல்லுவாள் ;
இரைந்து சிரித்து இன்பம் கொள்வாள் ;
கூச்சப் படாமல் குறுகி நிற்பாள் ;
உண்டிகள் தந்து உண்ணச் செய்வாள் ;
பானம் பற்பல பருகத் தருவாள் ;
தாம்பூ லத்தைத் தரிக்கச் செய்வாள் ;
வீணையைக் கொடுத்து மீட்டச் செய்வாள் ;
பாடக் கேட்டுப் பரவசப் படுவாள் ;
மெச்சிப் புகழ்ந்து மெய்சிலிர்த் திடுவாள் ;
குழந்தை போலக் குழைந்து போவாள் ;
மதுவைக் குடித்த வண்டென மயங்கிச்
சங்கீத மென்னும் சாகரந் தன்னில்
முழுகிக் கிடப்பாள் முற்றும் மறந்து

✤ ✤ ✤

பலநாள் இப்படிப் பழகி வருகையில்
ஒருநாள் ராகவன் உள்ளே வந்தான்.
மாதவன் இல்லை ; மாதவள் இருந்தாள்.
வழக்கம் போல வரவுரை சொல்லி,
ஆசனம் போட்டு அமரச் செய்து,
உள்ளே ஓடி உண்டிகள் தேடி,
பாலுடன் நல்ல பழவகை பலவும்
வெண்ணெயும் ரொட்டியும் வேறுள வெல்லாம்
கொண்டு வந்து கொடுத்தனள் கமலம்.
வாங்கினான் ராகவன் வைத்தான் மேஜைமேல்.

✤ ✤ ✤

உண்டிலன் எதையும் ; ஒன்றும் பேசிலன் ;
வழக்க விரோதமாய் வாடிய முகத்துடன்
தலையைக் கவிழ்த்துத் தரையைப் பார்த்து,
சிறகை இழந்த சிட்டுக் குருவிபோல்,
தோகை பறித்த மயிலின் தோற்றமாய்,
வண்ணங் கெட்டு வதங்கிய மலர்போல்,
நீந்துதல் மறந்த நீர்வாழ் வனபோல்,
தந்தி அறுந்த வீணையின் தன்மையாய்,
பசுமை மாறிய பயிரினம் போல,
வெளிச்சமில் லாத விளக்குத் தண்டாய்,
உப்பில் லாத உணவைப் போலவும்,
செழிப்பில் லாமல் சிரிப்புமில் லாமல்,
களிப்பில் லாமல், களைகெட்ட உருவாய்,
கவலையோ ! கலக்கமோ ! காரணம் என்னவோ !
அச்சமோ ! அவதியோ ! ஐயமோ ! திரிபோ !
சங்கீ தத்தின் சரசசல் லாபமும்,
வீணை மீட்டும் விநய வேகமும்,



ஓவியம் வரையும் ஊக்கஉத் சாகமும்,
கவிதை மிகுந்த கற்பனைப் பேச்சும்
எல்லாம் ஒருங்கே இழந்தவ னாக
உட்கார்ந் திருந்தான் ஊமைபோல் ராகவன்.

✤ ✤ ✤

பார்த்தாள் கமலம், பதைபதைத் திட்டாள் ;
வேர்த்தாள், விதிர்த்தாள், வியந்தாள், வெகுண்டாள் ;
நலிந்தாள், மெலிந்தாள், நாவுலர்ந் திட்டாள்.
குலைந்தாள், குழைந்தாள், குழறிய குரலாய்,
"என்ன ராகவா ! என்ன இப்படி ?
என்ன கவலை ? ஏது விசாரம் ?
துக்கம் என்ன ? துயரம் எதனால் ?
மக்கள் யாரால் மனக்குறை வந்தது ?
வீட்டில் உள்ளவர் விளைத்த வருத்தமா ?
நாட்டில் யாரும் நலிவுசெய் தாரா ?
தாயார் தந்தை தமர்கள் எவரும்
நோயால் வருந்தும் நொடிப்புகள் உண்டா ?
நாயகன் இருக்கிறார், நானும் இருக்கிறேன்.
ஆவன செய்ய அன்பர்கள் உண்டு.
நாக்கை அசைத்தால் நாடசை யாதா ?
வாக்கும் செல்வமும் வலிமையும் இருக்க
வாய்திற வாமல் வருந்துவ தேனோ ?
நோய்தரு கின்றது, நோக்க நோக்க.
சங்கதி என்ன ? சங்கடம் என்ன ?
எங்களுக் குரைக்க இயலா ரகசியம்
ராகவா ! உம்மிடம் ரவைகூட இல்லையே !
ஆகவே உடனே அதனைச் சொல்லுக.
எத்தனை பெரிய இடைஞ்சல் இருப்பினும்

முற்றிலும் அதனைத் தீர்த்திட முயல்வேன்"
என்று கமலம் ஏங்கித் தவித்துக்
கன்றிக் கரைந்து கனிந்து வினவினாள்.
கேட்டான் ராகவன், கிளர்ச்சி தந்தது.
வாட்டம் குறைந்த வதனத் தோடு,
தலையை நிமிர்ந்து தன்முகந் துடைத்து,
குலையும் அவளைக் குளிரப் பார்த்து,
"அருமைக் கமலம் அன்பின் அருவியே !
பெருமை, பெருமை ! பேசிய பேச்செலாம் !
உள்ளம் மகிழ்ந்தேன். உச்சி குளிர்ந்தது.
வெள்ளம் போன்றஎன் விசனம் குறைந்தது.
கலையின் நலமெலாம் கற்றநீ என்றன்
நிலைமைக் கிரங்குதல் நிரம்பவும் சரியே.
அன்பின் உருவாய் அவதரித் திட்டநீ
இன்பம் செய்யவே எனக்கெதும் முயல்வாய்.
உன்னைப் போல என்னிலை உணர்வார்
பின்னை ஒருவர் பிறந்திலர் உண்மை.
எனக்கு நேரிடும் எந்தத் துன்பமும்
உனக்கு நேர்ந்ததாய் உருகுவாய் அறிவேன்.
அழகுத் தெய்வமாய், அமுதத் தாரையாய்ப்
பழகிய எனக்குநீ பண்ணிய நன்மைகள்
இத்தனை என்று எண்ணவும் முடியுமோ ?
எத்தனை பிறவி எடுத்துவந் தாலும்
நீசெய்த உதவிக்கு நேர்செய்ய முடியுமா ?
வாய்கொண்டு சொல்லவும் வருணனை போதுமோ ?
இந்தஎன் உடலில் இரத்தமும் எல்லாம்
சொந்தஎன் கையால் சோறுண்ட செழிப்பே
உண்டியும் பானமும் ஒப்பிலா உணவுகள்



கண்டபோ தெல்லாம் தந்தஉன் கருணையின்
அருமையை வாழ்த்தி அனுதினம் துதிப்பேன் ;
மறுமையும் இம்மையும் நீஎன மகிழ்வேன்.
சங்கீ தத்திலும் சந்தோஷம் எல்லாம்
இங்கே உன்னுடை இசைப்பில் வளர்ந்ததே.
வீணையிற் பழகிய விரல்களின் வேகமும்
ஆணையிட் டுரைப்பேன் உன்னுடை அன்பால்.
சித்திரப் பழக்கம் தேர்ச்சி பெற்றதும்
சத்தியம் உன்னுடைச் சந்தோ ஷத்தினால்.
என்ன சொல்லுவேன் என்னருங் கமலம் !
கவலை என்பதைக் கனவிலுங் கண்டிலேன்.
துக்கம் என்னைத் தொடர்ந்ததே இல்லை.
விசனம் என்றதன் விதத்தையும் அறியேன்.
சங்கடம் என்கிற சங்கதி என்னவோ !
கலைகளின் இன்பக் கடலிலே முழுகி
அவஸ்தை என்பதை அறியா எனக்கு
இடிவிழுந் ததுபோல் இப்பெரும் ஏக்கம்
திடீரென வந்து தின்கின்ற தென்னை.
உணவை விட்டு, உறக்கமும் கெட்டு,
கலைகளி லுள்ள களிப்பெலாம் கசந்து,
அவதிப் படுத்தி அழிவுசெய் கின்றது.
நினைக்க நினைக்க நெஞ்சு குமுறுது.
மறந்து விடவும் மனம்மறுக் கின்றது.
தள்ளி வைக்கவும் தைரியம் இல்லை.
விலக்க விலக்க விட்டபா டில்லை.
நீக்க நீக்க முன்வந்து நிற்குது.
ஓட்ட ஓட்ட ஒட்டிக் கொள்ளுது.
மிரட்ட மிரட்ட என்னையே மிரட்டுது.

இதைப்போன்ற துன்பம் இன்னொன் றிருக்குமா !
அந்தஎன் குறையை உன்னிடம் அன்றி
யாரிடம் சொல்லி ஆற்றிட முடியும் ?
என்னினும் கமலம், என்னவோ அறியேன்,
'உன்னிடம் சொன்னால் இக்குறை ஒழியுமோ'
என்கிற ஐயமும் இருக்கிற தெனக்கு ;
என்ன சொல்லுவேன்" என்று ராகவன்.
பேச்சை நிறுத்திப் பெருமூச்சு விட்டான்.
உடனே கமலம் உருகிச் சொல்லுவாள் :
"என்ன ராகவா, இப்படி நினைப்பதேன் ?
ஐயம் எதற்கு ? நான் அன்பிலா தவளா ?
உம்மைப் போன்றஓர் உயர்ந்த கலைஞரை
ஆதரித் திடுவதே அறமெனத் தகுவதாம்.
தாங்கிக் காப்பதே தவமெனச் சொல்லலாம்.
நீங்கள் இப்படி நிலைகுலைந் திருக்க
நேர்ந்த துன்பம் நீக்கிட நினையார்
இருந்தா லென்ன, இறந்தா லென்ன ?
உடலையும் கருதேன், உயிரையும் மதியேன்,
சொத்து சுகங்களைத் துச்சமாய்த் துறப்பேன்,
செல்வம் முழுமையும் செலவுசெய் தாயினும்
அல்லது வேறு எப்படி யாயினும்
உம்முடைத் துயரை உடனே நீக்கிட
எதையும் செய்யக் காத்திருக் கின்றேன்.
என்னிடம் சொல்ல இத்தனைத் தயக்கமேன் ?
சொல்லு ராகவா ! உடனே சொல்லுக"
என்று கமலம் உறுதி இயம்பினாள்.
அதனாற் கொஞ்சம் ஆறுத லடைந்து,
முகமும் மலர்ந்து முறுவலும் அரும்பி,
கலங்கியே நிற்கும் கமலம் அவளை



ஏற இறங்க இன்புறப் பார்த்து,
"சொல்லுவேன் கமலம் ! சொல்லுவேன்
பொறுப்பாய்,
சொல்லுவேன். உனக்குச் சொல்லவே வந்தேன்.
உன்னிடம் அன்றி யாரிடம் உரைப்பேன் ?
சொல்லுவேன் பொறு" எனச் சொல்லிக் கொண்டே
அருகி லிருந்தஓர் ஆரஞ்சுப் பழத்தைக்
கையில் எடுத்துக் கண்களில் ஒற்றி
மோந்து பார்த்து முன்னாற் பிடித்துத்
திருப்பித் திருப்பித் திருப்பி - அதனை
வடிவைப் பார்த்தோ ! வர்ணம் பார்த்தோ !
உரித்துத் தின்ன ஊறிய ஆசையோ ! -
அதையே பார்த்து இருந்த அவனைக்
கமலம் பார்த்துப் பசியின் களைப்பால்
பழத்தை ராகவன் பார்ப்பதாய் நினைத்து,
"அவசரம் என்ன ? அப்புறம் பேசலாம்.
முதலில் நீங்கள் உண்பது முக்கியம்.
பழத்தைத் தின்று பாலையும் குடித்துக்
களைப்பு மாறினால் கவலையும் குறையும்,
அலுப்புத் தீர்ந்தால் அமைதியுண் டாகும்.
பசிப்பிணி போனால் பலதுயர் போகும்.
பார்த்திட்ட போதே பசியென நினைத்தேன்.
சாப்பிட்ட பின்னர் சகலமும் பேசுவோம்"
என்று கமலம் பழங்களை எடுத்துத்
தானே உரித்துத் தந்தாள் கையில்.
ஆறிப் போன பாலைக் கொண்டுபோய்ச்
சூடுண் டாக்கிச் சுருக்காய் வந்தாள்.

கொஞ்சம் கொஞ்சமாய்க் கொண்டுவைத் திருந்த
உணவினை ராகவன் பசியுடன் உண்பதைக்
கமலம் பார்த்துக் களித்து நினைத்தாள் :
'பசிக்களை தீர்ந்ததும் பாட்டிலே மனத்தைக்
கொஞ்சம் திருப்பினால் சஞ்சலம் குறையும் ;
ஊக்கம் பெருகி உத்சாக மும்வரும்.
அதற்குப் பின்னால் அவர்குறை கேட்போம்'
என்று நினைத்து எதிரில் இருந்த
தன்னுடை அறைக்குள் தாவி ஓடினாள்.
அங்கே இருக்கும் அழகிய வீணையை
எடுத்துக் கொணர்ந்து எதிரில் வைத்தாள்.
பாடச் சொல்லிப் பரிவுடன் வேண்டினாள்.
மறுத்துச் சொல்ல மாட்டா தவனாய்
வீணையை எடுத்து மீட்டினான் ராகவன்.
வழக்கம் போல வரவே இல்லை.
உலகை மறந்து உடலையும் மறந்து
இசையும் உணர்ச்சியும் இசைந்து நின்றிட,
பாட்டும் மனமும் படிந்து போக,
உடலும் வீணையும் ஒன்றே யாகக்
கலையும் தானும் கலந்து கரைந்து
பாடும் பெருமையே ராகவன் பாட்டு.
அப்படிப் பட்டதோர் அவனுக்கு, ஐயோ !
இன்றைக்கு ஏனோ இப்படிப் போனது !
நயமும் லயமும் ராகமும் நழுவிட
வீணையும் பாட்டும் விகாரப் பட்டன.
எண்ணம் பாட்டில் இல்லவே இல்லை.
கண்ணும் அலைந்தது, கருத்தும் திறந்தது.
பார்த்தாள் கமலம் பரிதா பத்துடன்.



'ஐயோ பாவம் ! அவருக் கென்னவோ
வருத்தம் சேர்ந்து இங்கே வந்தார்.
அவதியைச் சொல்லி ஆறுதல் அடைய
வாடியே நம்மைத் தேடிவந் திட்டார்.
துன்பம் கேட்டுத் துணைபுரி யாமல்,
வருத்தம் போக்கிட வழிதே டாமல்,
கவலை மாற்றும் கருணையில் லாமல்,
பாடச் சொல்லிப் பாரம் சுமத்தினேன்,
பாவம் ! பாவம் ! பாதகம் பண்ணினேன்
வீணையும் பாட்டும் விரசமாய் விட்டது"
என்றெல்லாம் எண்ணி எழுந்து நின்று
"சங்கடம் என்ன ! சஞ்சலம் எதனால் ?
உடனே அதனை உரைத்திட வேண்டும் ;
அதனைத் தீர்த்தபின் அப்புறம் பாடலாம்"
என்றாள் கமலம் இருகரங் குவித்து.
"சொல்லுவேன் ; கமலம், சொல்லுவேன், அதனைச்
சொல்லுவேன் ; கவலையைத் துடைப்பதுன் பாரம்"
என்று ராகவன் தானும் எழுந்தான்.
கமலம் வீணையை உறையில் கட்டினாள்.
அதனைக் கொண்டுபோய் அறையில் வைத்தபின்
நண்பனுக் குதவிகள் நாடலாம் என்று
வீணையை வைக்க அறைக்குள் விரைந்தாள்
தானும் நுழைந்தான் ராகவன் அறைக்குள்.

# சாரதாவுடன் சச்சரவு

சாரதாம் பாளின் சதிரில் மயங்கி,
சிங்கா ரித்திடும் சிறப்பை மெச்சி,
அபிநயம் சிறந்த ஆடலை வியந்து,
இங்கிதம் மிகுந்த இனிமையை ரஸித்து,
நவீன உடைநடை நயங்களைப் புகழ்ந்து,
தனியே அவளுடன் அடிக்கடி தங்கி,
கலைகளைப் பற்றியும் கல்வியைக் குறித்தும்
சரசம் மிகுந்த தர்க்கம் புரிந்து,
நாட்டியம் ஆடவும், நாடகம் காணவும்,
பாட்டுக் கேட்கவும் படங்கள் பார்க்கவும்
**சங்கரன்** வராத சமயங் களிலும்
அவளையும் தானே அழைத்துச் சென்று,
அழகுத் தெய்வமாய் அவளை மதித்து,
மாதவன் சாரதா நட்பில் மகிழ்ந்து,
நெருங்கிப் பழகிட நேர்ந்தத னாலே
அழகுத் தெய்வம் ஆசைப் பொருளாய்,
ஆசையும் அங்கே காமமாய் அலர்ந்து,
சாரதா வின்மேற் சபலம் பிறந்து,
விரகம் என்ற விஷத்துளி புகுந்து,
கண்ணியம் நிறைந்த கருத்தைக் கலக்கி,
ஒழுக்கம் நிறைந்த உளத்தைக் கெடுத்து,
மானம் அறிந்த மனத்தை மாற்றி,
நீதிகள் மலிந்த நெஞ்சைக் குழப்பி,



தன்னலம் கருதாத் தன்மையைத் தகித்து,
உயர்ந்த நோக்கின் உணர்ச்சியை ஒடுக்கி,
அறிவைக் கலைத்து, அமைதியைக் குலைத்தது.
உதித்த ஆசை ஒழுங்கிலை யென்று
மாதவன் தன்னுடை மனத்தைக் கடிந்து,
தனக்குள் தானே தர்க்கம் பண்ணி,
அறிவைக் கொண்டுஅவ் வாசையை அடக்கப்
பலநாள் முயன்றும், பற்றிய ஆசை
கொஞ்சம் கொஞ்சமாய்க் கொழுந்துகள் விட்டும்
பஞ்சிலே பட்ட தீயெனப் பரவி,
அடக்க முடியாத் தன்மையை அடைந்து,
சொல்ல நினைப்பான், சொல்லத் துணியான்.
பேச விரும்புவான், பேசக் கூசுவான்.
தூர இருக்கையில் துணிவு கொள்ளுவான்.
நேரே கண்டால் நெஞ்சம் தளர்வான்.
இப்படி யாகவே இருபது மாதம்
எண்ணி யெண்ணி ஏக்கம் பிடித்து,
நினைத்து நினைத்து நெஞ்சம் உருக,
கடைசி யாகக் கடித மூலமாய்த்
தெரியப் படுத்தத் தீர்மா னித்தான்.
சொல்லத் தகாததைச் சொல்லமாட் டாமல்,
எழுதத் தகாததை எழுத வராமல்,
கஷ்டப் பட்டுமுன் எழுதின கடிதமே
ஒட்டிய ஈரம் உலர்வதன் முன்னால்
குறுக்கே கிழித்துக் கூடையிற் போட்டது.
எழுத்து மூலமாய் இருப்பது தீதென
நேரிற் சொல்லிட நிச்சயம் செய்து,
கடிதம் கிழித்தபின் சிலநாள் கழித்து,
ஒருநாள் மாலையில் நடனம் ஓய்ந்தபின்

சிற்றுண் டிகளுடன் தேநீர் அருந்திச்
சாரதாம் பாளுடன் சல்லாப மாக
இருவரும் தனியே இருந்த வேளையில்
ஆசையை வெளியிட அதுவே சமயமாய்,
தடுமாறும் மனத்தைத் தைரியப் படுத்தி,
அறிவும் ஆண்மையும் அல்லவென் றிடித்து
அலறும் தன்மனச் சாட்சியை அடக்கி,
ஆசை வெட்கம் அறியாத் தன்மையில்
கூசிக் கூசிக் கூறத் தொடங்கினான் ;
"அன்பின் வடிவே ! அருமைச் சாரதா !
என்ன சொல்லுவேன் என்பெரும் மகிழ்ச்சியை !
நல்வினைப் பயனே உன்னுடை நட்பு.
அழகுத் தெய்வமே ! ஆனந்த ரூபியே !
இன்பக் காட்சியே ! இணையிலாச் சுந்தரீ !
நடன சிங்கார நற்கலை வாணியே !
உடையிலும் நடையிலும் ஒய்யார மெல்லாம்
சேர்ந்து வரைந்த சித்திரப் படமே !
பத்தரை மாற்றுப் பசும்பொற் பாவையே !
உன்னுடன் ஆடவும், உன்னுடன் பாடவும்,
உன்னுடன் உண்ணவும், உன்னுடன் மகிழ்ந்து
எல்லாக் கலையிலும் கல்விகள் எதிலும்
இருவர் எண்ணமும் ஒன்றா யிருக்க
உன்னுடன் தினமும் உவக்கக் கிடைத்த
என்னரும் பாக்கியம் என்னென்று மகிழ்வேன் !
உன்னை விட்டு ஒருகணம் ஆயினும்
பிரிந்திட நேர்ந்தால் பெருத்த துன்பமாய்ச்
சகிக்க முடியாத சங்கடம் பிறக்குது.
நீயில்லா நேரம் நிலவில்லா இருட்டே ;
நீரில்லா ஆறுபோல், நிழலில்லாச் சாலையாய்



வெப்பம் மிகுந்து வேதனை யுறுவேன்.
நம்முடைய நட்பு நாளும் வளர்ந்து
இன்பம் நிறைந்ததா யிருந்திட வேண்டித்
தினமும் இதுவே தியானமாய்த் தொழுவேன்"
என்று மாதவன் எண்ணிப் பேசினான்.
கேட்ட சாரதா கிளியெனக் கொஞ்சுவாள்.
தன்னைப் புகழ்ந்து மாதவன் தந்த
சித்திரப் பேச்சில் சிந்தை களித்து,
உச்சி முதலாய் உள்ளங் கால்வரை
குளிர்ச்சி யடைந்து குதூகலம் பொங்கி,
நாட்டியச் சிறப்பை நாடெலாம் புகழும்
பேச்சில் தனக்குள்ள பெருமிதம் பெருகி,
அழகில் தனக்கிணை 'யாருளர்' என்று
தனக்குத் தானே தருக்கி நினைக்கும்
அவளுடை நினைப்பும் அதிகமாய் உயர்ந்து,
கல்வியி லேனும் கலைகளி லாயினும்
உயர்ந்த ஞானம் உடையவ ளாகவே
எண்ணும் சுபாவ இறுமாப் புயர்ந்து,
மாதவன் பேச்சில் மனமுவந் தவளாய்க்
குலுங்கச் சிரித்துக் குழைந்து பேசுவாள் ;
'இனிய நண்பரே, என்னுடை இச்சையும்
நம்முடை நட்பு நாளும் சிறந்திட
அதுவே எண்ணமாய் அனுதினம் துதிப்பேன்.
என்னுடை வாழ்க்கையின் இன்பம் பெரிதும்
உங்கள் நட்பினால் உண்டான தன்றோ ?
நாட்டியக் கலையில் நான்பெற்ற புகழும்,
பாட்டில் உயர்ந்த பழக்கம் பெற்றதும்,
கலைகளை ரஸிக்கக் கற்றுக் கொண்டதும்,
எல்லாம் உங்கள் இனிய உறவினால்

நீங்கள் இங்கே நித்தமும் வந்து
பாடலைக் கேட்டு ஆடலைப் பார்த்துக்
குற்றம் குறைகளை எடுத்துக் கூறிக்
குலவுதல் ஒன்றே குறையாச் செல்வம்.
அதுவே எனக்கு ஆனந்த மாகும்.
நீங்கள் வருவது ஒருநாள் நின்றால்
என்னவோ போல ஏக்கமுண் டாகிச்
சொல்ல முடியாத் துன்பப் படுவேன்.
நற்குணம் நிறைந்த என்னுடை நாயகன்
இன்பக் கலைகளை எண்ணுவ தில்லை,
எனக்காக வேனும் என்னுடை ஆடலைப்
புகழ்ந்தொரு வார்த்தை புகன்றதும் இல்லை.
உடனிருந் தாகிலும் உத்சாகம் ஊட்டி
வளரும்என் திறமையை வாழ்த்தவும் செய்யார்.
வேடிக்கை பார்க்கவோ, வெளியில் உலாவவோ
வருவதென் றாலும் வருத்தப் படுகிறார்
தன்னுடை உள்ளில் தனியே இருந்து
புத்தகம் படிப்பதே பொழுதும் வேலையாய்
ஏகாந்த மாகவே இருக்க விரும்புவார்.
படுக்கை வீட்டில்நான் பக்கத்தில் அமர்ந்து
வீணையை மீட்டி விநயமாய்ப் பாடி
என்ன கலைத்திறம் எப்படிக் காட்டினும்,
கண்களை மூடிக் கவனமாய்க் கேட்டுத்
தலையை ஆட்டித் தனக்குள் சுவைப்பினும்
மெச்சிப் புகழ்ந்தொரு மேன்மை சொல்லார்.
செல்வம் நிறைந்த சிறப்புகள் இருந்தும்,
அணியும் துணியும் அளவிலா திருந்தும்,
கணவர் என்னுடைக் கலைகளிற் கலந்து
அனுபவிக் காதஓர் ஆயா சத்துடன்



நானே ஆடியும் நானே பாடியும்
அண்டையில் இருந்து ஆனந் திக்கஓர்
துணையும் இல்லாத் துக்கத் துடனே
தனியே இருந்து தவித்திட்ட நானும்
நல்ல வேளையாய் உங்கள் நட்பினை
அடைந்தது என்னுடை அதிர்ஷ்ட வசந்தான்.
நீங்கள் வாழ்த்தி நிலைத்ததென் கலைத்திறம்,
உங்கள் அன்பே என்கலைக் குயிர்நிலை,
கல்வியின் பெருமையும் கலைகளின் இன்பமும்
உங்களை யல்லால் உண்டோ எனக்கு ?"
என்று சாரதா இயம்பிடக் கேட்ட
மாதவன் முற்றிலும் தன்னையே மறந்து,
"என்னைப் போலவே உன்னுடை எண்ணமும்
இருக்கும் என்றுநான் எண்ணிய படிக்கே
நீயும் என்னை நினைப்பதைக் கண்டு
அடையா இன்பம் அடைந்தேன் சாரதா !
அருமை ! அருமை ! உன்னுடை அன்பு !
அன்பிற் குரிய அறம்பொருள் நீயே !
நட்பிற் கினிய நலனெலாம் நீயே !
சாரதா ! உன்மேல் சத்திய மாக
உன்னைக் காட்டிலும் உயர்ந்த ஒருபொருள்
எனக்கிலை யென்றே எண்ணி யிருக்கிறேன்.
நீயே எனக்குள் இன்ப நினைப்பெலாம்.
உன்னுடை இன்பமே உயிரின் நோக்கமாய்
எண்ணித் தினமும் ஏங்கி இளைத்தேன்.
உண்ணும் போதும் உறங்கும் பொழுதும்
நினைவும் கனவும் நீயே எனக்கு.
மனத்தில் நினைப்பினும் மணந்தரும் மலரே !
கருதினும் இன்பச் சுவைதரும் கனியே !

எண்ணும் பொழுதே இனித்திடும் தேனே !
கற்பனைக் கடங்காக் காம ரூபியே !
காதலுக் கினிய கண்மணி நீயே.
உன்மேற் காதலாய் உருகினேன் மிகவும்.
என்மேல் மிகவும் இரக்க முள்ளநீ
கருணை புரிந்தொரு கனிவாய் முத்தம்
தந்துஎன் துயரைத் தணித்திடல் வேண்டும்'
என்று மாதவன் எதிரில் நின்ற
சாரதா கைகளைச் சட்டெனப் பிடித்து
ஆத்திரக் காரன் அவசரப் புத்தியில்
முத்தங் கொடுக்க முயற்சி செய்தான்.
திடுக்கிட் டவளாய்ப் பின்னுக் கிழுத்து,
எட்டி நின்று, ஏறப் பார்த்து,
"என்ன நண்பரே ! என்ன விசித்திரம் !
உங்களுக் குற்ற உளறு படிகளை
நம்பவும் என்மனம் நாணுறு கிறதே !
உயர்ந்த குணங்கள் உள்ள உமக்கு
இந்தச் சிறுகதி எப்படி வந்தது ?"
என்று சாரதா இரங்கிடும் போது,
காமத் துடிப்பினால் கண்கெட்ட மாதவன்
பின்னும் அவளைப் பிடிக்கவே போனான்.
விலகினாள் சாரதா. விடுமோ காமம் !
தொடர்ந்து மாதவன் தொடவே முயன்று
போகப் போகப் பின்னால் போனான்.
சாரதா மிகவும் சங்கட மடைந்து,
"வேண்டா நண்பரே, விலகிநில் லுங்கள் ;
தூரமே நின்று சொல்வதைக் கேளும் ;
என்னை இப்படி எண்ணுதல் பாவம்.
விபசார ஆசை தீமை விளைக்கும்.



நீங்கள் அறியாத நியாயமும் உண்டோ ?"
என்றாள் சாரதா, எதிர்மொழி பேசான்
மாதவன் ; முற்றும் மலைத்து நின்றான்.
வாதுகள் பேச வார்த்தைகள் வருமா ?
தர்க்கம் செய்யத் தைரியம் தருமா ?
நீதிகள் நினைக்க நேரமும் உண்டா ?
அறிவை நாட அவகாசம் ஏது ?
காமம் மிகுந்தபின் கருதிப் பார்க்குமோ ?
மாதவன் அதனால் மதிகெட் டவனாய்
"சாரதா ! சாரதா ! சாரதா !" என்று
கெஞ்சிக் கெஞ்சிக் கிட்டச் சென்று
தாவிப் பிடித்துத் தழுவ முயன்றான்.
நாட்டியச் சாரதா நழுவிக் கொண்டாள்.
கோபம் பெருகிக் கொதித்துப் பார்த்து,
"சீச்சீ ! உமக்கேன் சின்னத் தனமிது !
கண்ணியம் மிகுந்த நட்பெனக் கருதி,
நாணய மான நம்பிக்கை யோடு
உயர்ந்த உறவாய் உம்மை மதித்து,
கொஞ்சிப் பேசிக் குலவி மகிழ்ந்து,
பாடி யாடிப் பழகிவிட் டதனால்,
வேசியென் றென்னை விலைமதித் தீரா ?
விபசாரி யென்று விரும்பிவிட் டீரா ?
கற்பிலாப் பெண்ணெனக் கருதிவிட் டீரா ?
காதல் என்பது கடையில் விற்பதா ?
நண்பரே உமக்கிது நன்றா யில்லை"
என்று சாரதா இடித்துக் கூறினாள்.
மானம் மறைந்த மாதவன் பின்னும்
பல்லைக் கெஞ்சிப் பசப்பிக் கொண்டு,
கைகள் இரண்டையும் கவைபோல் விரித்து,

கூனனைப் போலக் குனிந்து கொண்டு,
பித்தன் ஒருவன் பிச்சை கேட்பதாய்,
'கண்ணே', 'பெண்ணே', 'காதலி' என்று
வாசக மில்லா வார்த்தைகள் முனகி,
உருப்படி யற்ற சொற்களை உளறி,
குற்றம் செய்யப் பழகா ஒருவன்
'குற்றப் பட்டுக் குழைவது இதுவென
ஏளனம் பண்ண எழுதின படம்போல'
அஞ்சிக் கெஞ்சி அவதிப் பட்டு,
அருகிற் சேரும் ஆசையே மிஞ்சி,
எட்டிப் பிடித்துத் துணியை இழுத்தான்.
உடனே சாரதா உரக்கக் கத்தி,
"போதும் போதும் வெளியே போங்கள் ;
பித்தம் தெளிந்தபின் பேசிக் கொள்ளலாம்.
யாரடா அங்கே வேலைக் காரன்
கோப்பைக ளெல்லாம் கொண்டுபோ" என்று
வேலைக் காரரை விளித்தாள் வேகமாய்.
ஆள்களைக் கூப்பிடும் சொற்களைக் கேட்டதும்
மாதவன் கொண்ட மயக்கம் மாறி,
காமம் குறைந்து கோபம் கண்டது.
"பெண்ணும் பேயும் ஒன்றெனப் பேசி
உலகம் சொன்னது உண்மையாய்ப் போச்சு ;
ஆசை காட்டிக் கழுத்தை அறுக்கும்
மோசக் காரிநீ, முன்னால் அறிந்திலேன்,
'பெண்களை நம்புதல் பெரும்பிழை' என்று
எத்தனை பேரோ எழுதியும் பாடியும்
மொழிந்தது எல்லாம் முற்றிலும் சரிதான்"
என்பன சொல்லி எரிந்து பொரிந்து
வெட்கக் கேட்டின் விகாரம் மேலிட,



அசடு வழிந்த அலங்கோல மாக,
வெறுத்துக் கொண்டு வெளியே போனான்.

### சங்கரன் வருதல்

பொருமிக் கொண்டே போன மாதவன்
சாரதாம் பாளின் கணவன் சங்கரன்
படிக்கிற அறைக்குப் பக்கம் போகையில்
வாய்விட் டென்னவோ வருத்தம் காட்டிக்
கனத்த சத்தமாய்க் கனைத்துச் சென்றான்.
காதில் விழுந்ததும் கவனம் செலுத்தி,
மாதவன் களைப்பாய் இருந்ததை மதித்து,
சங்கரன் அறையின் தாழை நீக்கி
எட்டிப் பார்த்தான். மாதவன் இல்லை.
மாதவன் வீதிக்குச் சென்று மறைந்தான்.
தெருவிற் சென்றதைச் சங்கரன் தெரிந்திலன் ;
நண்பனைப் பார்த்து நாள்பல ஆனதால்
மாதவன் தன்னுடன் பேசி மகிழ்ந்திட
ஆசை என்னவோ அப்போது தோன்றி,
நாட்டியம் பழகும் அறையை நாடி
அகஸ்மாத் தாக அங்கே போனான் ;
ஆட்டம் பழகும் அறைக்குட் புகுந்தான் ;
கோபமும் விசனமும் குறையா முகத்துடன்
சாரதா நின்றதைச் சங்கரன் கண்டான்.
"என்ன சாரதா ! எங்கே மாதவன் ?
அவனைநான் பார்த்து அதிகநாள் ஆயின.
கண்டு பேசிடக் கருதியே வந்தேன்.
நீயேன் இப்படி நிற்கிறாய் ? என்றான்.
கலகல வென்று கண்ணீர் வடித்து,

முகத்தைக் கைகளால் மூடிக் கொண்டு,
தலையைக் கவிழ்த்து அழுதாள் சாரதா.
அழுவதைக் கண்டு அதிசயப் பட்டு,
ஆத்திரப் படாமல் அருகிற் சென்று,
கைகளை விலக்கிக் கண்ணீர் மாற்றி,
முகத்தைத் திருப்பி முறுவல் காட்டி
"என்ன சாரதா ! என்னஇவ் விந்தை !
அழுதிட வேண்டிய அவசியம் என்ன ?
எங்கே நண்பன் ? ஏன்அழு கின்றாய் ?"
என்று சங்கரன் இதமாய்க் கேட்டான்.
"மாதவன் கொண்ட மடத்தன மெல்லாம்
என்னென்று சொல்வேன், நாதா !" என்றாள்.
"என்ன சாரதா ! இப்படி ஏசினாய் ?
மாதவன் மிகவும் மதிக்கத் தகுந்தவன் ;
உன்னையும் என்னையும் உயிரெனக் கருதுவான் ;
என்னிலும் உயர்வாய் உன்னை எண்ணுவான் ;
அருமை நண்பன் ; இவனுக்கு ஐயோ !
'மடத்தனம்' என்றுஉன் வாயாற் சொல்லிட
அப்படி என்னஅவன் செய்தது?" என்றான்.
"மாதவன் மிகவும் மதிக்கத் தகுந்தவர்
என்றுதான் நானும் எண்ணி யிருந்தேன்.
வழக்கம் போலவே வந்தார் மாதவன் ;
ஆடலும் பாடலும் ஆனபிற் பாடு,
இதுநாள் வரையிலும் இல்லாத விதமாய்
ஆடலை வியந்தார் ; அறிவைப் புகழ்ந்தார் ;
அழகை மெச்சினார் ; ஆசை பேசினார் ;
'கண்ணே, மணியே, காதலி' என்று
காமப் பைத்தியம் கண்டது போல
முத்தங் கொடுக்க முயற்சி பண்ணினார் ;



கட்டி அணைக்க ஆசை காட்டினார் ;
கற்பைக் கெடுக்கக் கருதிவிட் டாரே !
என்ன கொடுமை, நாதா ?" என்றாள்.
"நீஎன்ன செய்தாய்?" என்றான் நிதானமாய்.
"சாரதாம் பாளா சம்மதிக் கின்றவள் !
புத்திகள் சொல்லிப் போகச் சொன்னேன்.
'பெண்களை நம்புதல் பெரும்பிழை' என்று
உறுமிக் கொண்டே ஓடினார்" என்றாள்.
"அப்படி யானால் நீஏன் அழுகிறாய் ?
மாதவன் அல்லவா வருந்த வேண்டும் ?
இதற்கா இத்தனைச் சஞ்சலம் ? என்றான்.
"என்ன நாதா ! இப்படிச் சொல்வது ?
நீங்கள் இப்படி லேசாய் நினைத்தால்
மற்றவர் என்னை எப்படி மதிப்பார் ?
கண்டிக்கத் தக்கதைக் கண்டிக்க வேணும்.
என்னுடைய அழகை இவரேன் புகழ ?
காதலை எனக்குக் கற்பிக்க இவரார் ?
காதல் என்பது விளையாட்டுக் கருவியா ?
கற்பைக் கெடுக்கக் கருதிவிட் டாரே !
இப்படி என்னை இழிவுகள் செய்தும்
'நீயேன் அழுகிறாய்' என்கிறீர் நீங்கள்"
என்று சாரதா இன்னும் அழுதாள்
கணவன் மனைவியின் கையைப் பிடித்து
அருகில் இருந்தஓர் ஆசனத் தமர்த்தி,
தானும் எதிரில் தங்கி இருந்து,
'சாரதா, கொஞ்சம் சாஸ்திரம் சொல்லுவேன் ;
உற்றுக் கேட்டு உண்மைகள் உணர்வாய்.

## காமம்

"ஒழுக்கம்' என்பதை ஒருபுறம் ஒதுக்கி
உலகத் தியல்பின் உண்மையைப் பார்ப்போம் :

அழகிய எதிலும் ஆசை கொள்வது
உயிர்களுக் கெல்லாம் பிறப்பின் உரிமை.
இன்பப் பொருளில் இச்சை பிறப்பது
தடுக்க ஒண்ணாத் தத்துவம் ஆகும்.
கண்ணுக் கின்பம் காண்பதே போதும்.
காதுக் கின்பம் கேட்டால் கழியும்.
மூக்கிற் கின்பம் முகர்ந்தால் முடிவுறும்.
நாக்கிற் கின்பம் நற்சுவை நல்கும்.
உடலுக் கின்பம் காமம் ஒன்றே.
அறிவுக் கின்பம் அதன்மேல் உண்டு.
அதற்கும் மேலாம் ஆன்ம இன்பம்.
அறிவின் இன்பம் அடைவோர் சிலரே.
ஆன்ம இன்பம் அறிந்தவர் அருமை.
நடைமுறை உலகில் நாம்காண்ப தெல்லாம்
ஐம்புலன் தேடும் இன்ப ஆசைதான்.
அவற்றுள் ஒன்றே காம ஆசையும்.
பார்க்கிற இன்பம் பயமின்றிப் பெறலாம்.
கேட்கிற சுகமும் எளிதிற் கிடைக்கும்.
மூக்கின் ஆசையும் சுலபமாய் முடியும்
நாக்கின் சுவைகள் நாடெங்கும் உண்டு.
உடலுக் கின்பமாம் காமம் ஒன்றுதான்
அப்படிச் சுலபமாய் அடைவது அல்ல.
காமம் என்பது உடலையே கருதும்.
வேறோர் உடலை விரும்புவ தாலே
இன்னொரு மனமும் இசைதல் வேண்டும்.
இசையா மனமுள்ள இடத்திலும் முட்டிக்
காம ஆசைதான் கலகம் விளைப்பது.
காமம் என்பது அடிக்கடி கலையும் ;
ஒன்றை விட்டு ஒன்றைத் தாவும் ;



புதுப்புது இடங்களிற் புகுந்து புழுங்கும்.
ஆதலால் அதனை அஞ்சுவர் யாரும்.
அறிவில் வலியவர் அடக்குவர் அதனை ;
ஆன்ம ஞானம் அழிக்கவே முயலும் ;
ஒழுக்கம் சொல்லி உலகம் ஒடுக்கும்,
அறிவின் வலிமையும் ஆன்ம ஞானமும்
சிற்சில சமயம் சிக்கிக் கொண்டு
காமத் தாலே கலங்கிட நேரும்.
பல்லாண்டு பழகிய ஒழுக்கப் பண்பையும்
கணத்தில் உதித்த காமம் கலைக்கும்.
அழகும் இளமையும் அதற்குத் தூண்டுகோல்,
இன்பக் கலைகளும் இதற்குத் துணைதரும்.
ஆதலால் சாரதா ! ஆத்திரம் வேண்டா.
நீயோ இயற்கையாய் அழகு நிறைந்தவள்.
அணிகளும் துணிகளும் அடிக்கடி மாற்றிச்
செயற்கை அழகும் சிறந்து திகழ்வாய்.
ஆடலால் அழகுகள் அதிகமாய்த் தோற்றும்.
நெருங்கிப் பழகிய நேசமும் நிறைந்து,
அழகுக் கலைகளை அதிகமாய் விரும்பும்
மாதவன் உன்னுடை அழகில் மயங்கி
ஆசைப் பட்டதில் அதிசயம் இல்லை.
வழக்கமும் ஒழுக்கமும் வழுவி விட்டதை
என்னிடம் சொன்னதை வேறு இடங்களில்
சொல்லியும் நண்பனைத் தூஷிக்க வேண்டா.

## காதல்

" 'காதல் பேசினான்' என்றே கலங்கித்
துடிக்கிறாய் சாரதா ! சொல்லுவேன் கேட்பாய் :
காதல் காதல் காதல் என்று,

காமத் துடிப்பையே காதலாய்க் கருதி,
கண்டதை யெல்லாம் காதலாய்ப் பேசி,
எடுத்ததற் கெல்லாம் காதலென் றெழுதி,
பார்த்ததை எல்லாம் காதலாய்ப் பாடி,
கொச்சைக ளோடு காதலைக் குழப்பும்
வார்த்தைகள் முற்றும் வண்ட வழக்கம்.
காதல் என்பதைக் கண்டவர் அரிது.
காதல் என்பது கடவுள் தன்மை.
காலம் முழுவதும் கடவுளைக் கருதும்
பக்தியைப் போன்றது காதலின் பண்பு.
காதலுக் குள்ளே காமம் இருப்பினும்
காமம் என்பதில் காதலே இல்லை.
காமம் என்பது தேகம் கலத்தல்.
அறிவு, உணர்ச்சி, ஆன்மாவி னோடும்
கலந்து போவதே காதல் எனப்படும்.
காதலின் குணத்தைச் சொல்வது கடினம் ;
அனுபவம் ஒன்றே அறியக் கூடும்.
உடலைப் பற்றிய உணர்ச்சியே அல்ல.
அழகை மட்டும் ஆசிப்ப தல்ல
நிறத்தைக் கருதி நிற்பதும் அல்ல.
அறிவை மெச்சி அடைவதும் அல்ல.
இளமையை எண்ணி இருப்பதும் இல்லை.
புகழோ இகழோ பொருட்படுத் தாது.
இன்பமோ துன்பமோ இணைபிரி யாது.
அழுகின உடலையும் அணைத்து நிற்கும்.
உலக சுகங்களை உதறித் தள்ளும்.
செல்வமோ வறுமையோ சேர்ந்தே வாழும்.
குற்றம் நேரினும் குறைசொல் லாது.
ஒட்டி யிருந்து உயிரையும் உதவும்



பற்றிய ஒன்றில் பற்று விடாது.
தன்னை வெறுக்கினும் தான்வெறுக் காது.
விரும்பிய பின்னர் விலகஎண் ணாது.
ஊனையும் உணர்வையும் உயிரையும் தாண்டி
அப்பால் தொடரும் அன்பே காதல்.
காதல் முறிந்தால் சாதலும் கருதும்,
காதலைக் கண்டவர் கடவுளைக் காணலாம்.

## கற்பு

"கற்பைக் கெடுக்கக் கருதினான்' என்று
கண்ணீர் விட்டுக் கலங்கினாய், சாரதா !
கற்பெனப் படுவது பெண்களின் காவல்.
காப்பதோ விடுவதோ அவர்களின் காரியம்
அதனை அழிக்க யாரால் முடியும் ?
கற்பிற் சிறந்த பெண்களின் கதைகளே
சமுதா யத்தை வளர்க்கும் சாரம்.
அறங்களுக் கெல்லாம் அகராதி எனலாம்.
காதலை இழந்தும் கற்பைக் காத்த
பெண்களின் பெருமை பேசவும் பெரிதே.
உள்ளத்தை எல்லாம் உவப்புடன் இழப்பார் ;
உடலை வெறுப்பார் ; உயிரையும் விடுவார் ;
கற்புடைப் பெண்களைக் கடவுளும் மதிக்கும்"
என்று சங்கரன் இயம்பிடும் இடையில்,
"அந்தக் கற்பு ஆண்களுக் கில்லையா ?
பெண்கள் தானா காக்கப் பிறந்தவர் ?
சொன்னவ ரெல்லாம் இதையே சொன்னார் !
எழுதின வரெல்லாம் இதையே எழுதினார் !
பாடின பேரும் அப்படிப் பாடினார் !
நீங்களும் அப்படித் தானா நினைக்கிறீர் ?"

என்றாள் சாரதா. சங்கரன் இயம்புவான் ;
"ஆண்களுக் காயினும் பெண்களுக் காயினும்
கற்பைக் காக்கிற கடமை பொதுவே.
ஆண்களின் கற்பும் அகத்தியம் ; ஆயினும்
பெண்களின் கற்பே உலகின் பெருமை.
கற்பெனும் பெருமையைக் காத்தவர் பெண்களே.
இளமையும் அழகும் இரண்டும் உள்ள
பெண்பால் ஒருத்தி பிரியம் காட்டி
வலுவில் சென்று வாய்விட் டுரைத்துக்
காம இச்சையைக் காட்டி விட்டால்
வேண்டா என்று வெறுத்து விட்டுக்
கற்பைக் காக்கும் கருத்தி னோடும்
துன்பம் பொறுத்துத் துயரம் சகித்து
உயிரை விடவும் உறுதி காட்டிய
ஆண்களின் கதையை அறிந்தவர் உண்டோ ?
பார்த்ததும் இல்லை ; படித்ததும் இல்லை ;
கற்பனைப் பேச்சிலும் காணோம். ஆனால்,
கணவன் முற்றிலும் கயவனே யாகி
மனைவியை இகழ்ந்து மற்றும் பற்பல
தீமையே செய்து திரிவான் எனினும்,
அவனிலும் சிறந்த அழகுள வாலிபன்
செல்வம் யாவையும் சேர்ந்தவன் ஆயினும்
காம இச்சையைக் காட்டி விட்டால்
காறி உமிழ்ந்து, கனல்போற் சீறி,
துன்பம் வரினும் துச்சமாய் எண்ணி
இணங்க மறுத்து, எதிர்த்து நின்று,
கற்பைக் காக்கும் ஒன்றையே கருதி,
உயிரையும் விட்ட உத்தமப் பெண்களின்
அற்புத நிகழ்ச்சிகள் அனந்தம் உண்டு.



கற்பனை அல்ல, கண்ணாற் கண்டுளோம்.
இதுமட்டு மல்ல, இன்னுமோர் உண்மை :
பலவந்த மாகப் பற்றி இழுத்து,
காமம் கருதிக் காதலைப் பேசி,
இசையா விட்டால் இம்சையும் செய்து,
பூட்டியும் வைத்துப் புலம்பப் பண்ணி,
கொடுங்கோல் அரசின் குணமெலாங் காட்டி,
கட்டா யத்தினால் கற்பைக் கெடுக்க
முயற்சி செய்தது முற்றிலும் ஆண்களே.
ஆண்களே கற்பை அழிக்க முயல்வார்.
பெண்களே அதனைப் பெரிதும் காத்தவர்.
ஆதலால் சாரதா ! இதிலென்ன ஐயம் ?
கற்பைப் பற்றிக் கருதும் போதெலாம்,
பெண்களின் கற்பையே உலகம் பேசும்."

## மாதவன் தன் மனை சேர்தல்

சாரதாம் பாளுடன் சச்சர வானபின்
வெறுத்துப் பேசி வெளியே சென்ற
மாதவன் தன்னுடை மனையை நாடி,
தோல்வி யடைந்த துக்கத் துடனும்,
ஆசை முரிந்த ஆத்திரத் தோடும்,
மானங் கெட்ட வருத்தம் வாட்ட,
புறமுது கிட்ட போர்வீ ரனேபோல்,
அம்புபட் டுருவிய ஆண்சிங் கம்போல்,
புண்பட் டலறும் புலியைப் போல,
சிக்கிக் கொண்ட சிறுத்தையின் சினமாய்,
வேல்பட் டோடும் வேழமே என்ன,
காயம் பட்ட காட்டுப் பன்றிபோல்,
குணமெலாம் மறைந்து கோபமே மிகுந்து

உறுமிப் பொருமி உரப்பிக் கொண்டு,
வீதியின் வழியே வேகமாய் நடந்தான் ;
எதிரில் வந்த எவரையும் பாரான் ;
நேசரைக் கண்டும் நின்று பேசான் ;
கும்பிட் டவர்க்கும் திரும்பிக் கும்பிடான் ;
கூப்பிட் டாலும் காதிற் கொள்ளான் ;
'பித்தம் தெளிந்தபின் பேசிக் கொள்ளலாம்,
வெளியே போங்கள்' என்று விரட்டிய
சாரதா உருவம் தள்ளித் துரத்த,
'பெண்களை நம்புதல் பெரும்பிழை' என்ற
ஒன்றே ஜெபம்போல் உளறிக் கொண்டு
விரசாய் நடந்து வீட்டில் நுழைந்தான்.
தன்னுடைச் சொந்தத் தனியறை சேரக்
கமலம் அறையைக் கடக்கும் போது
அடைபட் டிருந்த அந்தக் கதவு
சட்டெனத் திறந்த சத்தம் கேட்டது.
நின்று, மாதவன் நிமிர்ந்து பார்த்தான்.
வேகமாய் ராகவன் வெளியே வந்து
கதவைச் சாத்தினான், கண்டான் மாதவன்.
நண்பனைக் கண்டதும் நாணிய ராகவன்
ஒன்றும் பேசான் ஒதுங்கி நின்றான்.
"என்ன ராகவா, எங்கே கமலம் ?
இன்றைக் கென்ன சங்கீதம் இல்லையா ?"
என்று மாதவன் என்னவோ கேட்டான்.
"வீணையும் பாட்டும் முடிந்து விட்டன.
கமலம் வீணையின் உறைகட்டு கின்றாள்"
என்று ராகவன் இயம்பும் போது
மாதவன் தன்னுடை மனைவியின் அறையைத்
தாண்டிச் சென்று, தன்னுடை அறையில்



உடைகளைக் களைய உள்ளே நுழைந்தான்.
வழக்கம் போல வார்த்தையா டாமல்
ராகவன் மெதுவாய் நழுவி மறைந்தான்.
கணவன் குரலைக் கேட்டதும் கமலம்
அறையின் உள்ளே அவசர மாக
நிலைக்கண் ணாடியின் முன்னால் நின்று,
குலைந்துபோ யிருந்த கூந்தலை நீவி,
வேர்த்த முகத்தை வேகமாய்த் துடைத்து
நெற்றியில் திலகம் நேர்பெறச் செய்து,
அணிகளை யெல்லாம் அமைவுறப் பார்த்து,
உடைகளைச் சரியாய் ஒழுங்கு பண்ணி,
பழக்கமா யுள்ள வதனப் பொலிவுடன்
கலவரம் இன்றிக் கதவைத் திறந்து
நாயகன் இருந்த அறையை நாடினாள்.
கமலம் வந்து கதவைத் திறந்த
அந்தக் கணத்தில், அங்கே மாதவன்,
தன்னுடை வீட்டில் தன்அறைக் குள்ளே
பக்கம் பார்த்துப் பயந்து பேசும்
அவசியம் இல்லாக் காரணம் அதனால்
தவித்துப் புலம்பும் தன்னுடை மனத்தின்
உச்சியில் மிதக்க உருப்போட்ட ஜெபமாய்ப்
பொங்கி வழியும் புலம்பலா யிருந்த,
'பெண்களை நம்புதல் பெரும்பிழை' என்ற
பேச்சையே மிகவும் பெருத்த குரலில்
வருத்தத் தோடு வாய்விட் டுரைத்தான்.
கேட்டாள் கமலம் ; கேலிபோல் நினைத்து,
வழக்கமாய் அடிக்கடி வாதுகள் செய்து
கணவன் கருத்தையும் கண்டனம் பண்ண
நேர்மா றாகிய நியாயமும் நீட்டிச்

சொந்தக் கருத்தைச் சுதந்தரத் தோடு
எடுத்துப் பேச இடமுள்ள தாகத்
தானும் கணவனும் தர்க்கம் செய்து
இருவரும் மகிழும் இன்ப நினைப்புடன்,
"பெண்களை நம்புதல் பெரும்பிழை என்றால்
ஆண்களை நம்பலும் அதுவே" என்று
சொல்லிக் கொண்டே உள்ளே தோன்றினாள்.
எதிர்ப்புப் பேச்சையும் இன்பமாய் ஏற்கும்
வழக்கம் போல்அவன் வரவேற்க வில்லை.
வெட்டிப் பேசினும் விருப்பமாய்க் கேட்டு,
நிதான மாக நிறுத்த சொற்களால்
சிரித்துக் களித்துச் சிக்கறப் பேசி,
சொல்லிற் சிறந்ததை எவர்சொன் னாலும்
போற்றி ஏற்றிப் புகழ்ந்து மகிழும்
மாதவன் சிறிதும் மகிழ்ச்சிஇல் லாமல்
கலங்கி யிருந்ததைக் கண்டாள் கமலம்.
பெண்கள் உரிமையைப் பெரிதும் போற்றி,
அவர்களே உலகில் அழகெலாம் என்று
பெண்களை மிகவும் பெருமையாய்ப் பேசும்
தன்னுடை நாயகன் தனிக்குணம் மாறி,
'பெண்களை நம்புதல் பெரும்பிழை' என்று
அவருடை வாயில் அப்படிச் சொல்வர
எந்தப் பெண்ணால் என்ன நேர்ந்ததோ !
என்று கமலம் தனக்குள் எண்ணி,
நாயகன் மிகவும் நலிந்த வேளையில்
தர்க்கம் பேசுதல் தவறெனக் கண்டு,
அவசர மாக அறைவிட் டகன்று,
வேலைக் காரரை வேகமாய்க் கூவி,
சிற்றுண்டி பழங்களைச் சேகரம் செய்து,



பான வகைகள் பலவும் கொணர்ந்து
கணவனுக் குற்ற கவலையை மாற்றச்
சுருக்கமாய் ஓடித் தொட்டிலில் தூங்கிய
அருமை மகளை அணைத்து வந்தாள்
குழந்தையைக் கண்டதும் குறைகளை மறந்து,
மகளை வாங்கி மார்போ டணைத்து
மாதவன் சற்றே மகிழ்ச்சி காட்டினான்.

# ரகசியக் கடிதம்

மறுநாட் காலையில் மாதவன் தன்னுடை
வீட்டு வாசலில் வீதியை நோக்கி
நின்றுகொண் டிருக்க நேர்ந்த வேளையில்
ராகவன் வீட்டு வேலைக் காரி
கையிற் பிடித்ததோர் கடிதத் துடனே
வாசலில் நுழையுமுன் வழியிலே மாதவன்
நிற்பதைக் கண்டு, துணுக்குற்று நின்று,
கையில் இருந்த கடிதம் அதனை
மடியில் வைத்து மறைக்க முயன்றாள்.
அதனைப் பார்த்து அதிசயப் பட்டுக்
கேலி யாகவே கேட்க நினைத்து
மாதவன், வந்த மங்கையைப் பார்த்து,
"கடிதம் என்ன கையிலே ?" என்றான்.
"அம்மா ளிடத்தில் அவசர மாகத்
தந்து வரும்படி தந்தார் ராகவன்"
என்று கூறினாள் ஏவலாய் வந்தவள்.
"அம்மா ளிடத்திலா ! அவசரக் கடிதமா !
இந்நே ரத்திலே என்ன அவசரம் ?
கமலம் உள்ளே காரியம் பார்க்கிறாள்.
கொடுஅதை யிப்படி நானே கொடுக்கிறேன்"
என்று மாதவன் கையை ஏந்தினான்.
"அம்மா ளிடந்தான் அதைத்தர வேணும்,
தங்க ளிடத்திலே தரப்படா தென்று
கண்டிப் பாய்அவர் கட்டளை இட்டார்"



என்று, வந்தவள் எதிர்மொழி சொன்னாள்.
"அப்படி யா ! சரி, ஆனாற் கொண்டுபோ ;
அம்மா ளிடமே அதனைக் கொண்டுபோ"
என்று மாதவன் சற்றே எரிச்சலாய்ச்
சொல்லி, விலகித் தூரமாய் நின்று
வந்தவள் போக வழியை விட்டு
எட்டி யிருந்து எண்ணத் தொடங்கினான் :
"நேற்றுச் சாரதா நெஞ்சை உடைத்தாள்.
இன்று என்னவோ ரகசியக் கடிதம் !
நான்அறி யாமல் நடக்கத் தக்கது
என்ன ரகசியம் இவர்களுக் குள்ளே ?
கடிதம் என்னிடம் காட்டத் தகாதாம் !
கண்டிப் பானதாம் ! ராகவன் கட்டளை !
சொந்த வீட்டில் சூது நடப்பதைக்
காணக் கூடக் கண்ணில் லாமல்,
நினைக்கக் கூட நேரமில் லாமல்,
வெளுத்ததை எல்லாம் பாலாய் விரும்பி,
கருத்ததை எல்லாம் நீராய்க் கருதி,
வஞ்சனை இன்றி வாழ்ந்த எந்தன்
நெஞ்சம் குமுற நேர்ந்து விட்டதே !
நம்பின தெல்லாம் நாசமாய்ப் போச்சே !
நேற்று இரவில் நான்வந்த நேரம்
கமலம் அறையின் மூடிய கதவு
உடனே திறந்ததும், உள்ளே இருந்து
அந்த ராகவன் அவசரக் கோலமாய்
வெளியே வந்ததும், வெறிக்கப் பார்த்ததும்,
'எங்கே கமலம் ?' என்றுநான் கேட்க,
'உள்ளே வீணைக்கு உறைகட்டு கின்றாள் !'
என்று சொன்னவன் எங்கோ மறைந்தான்.

வழக்கம் போல வார்த்தைபே சாமல்
போனதும் எல்லாம் புதிய தினுசுதான்.
கமலமும் நேற்றுக் களித்துப் பேசிலள்.
'பெண்களை நம்புதல் பெரும்பிழை' என்று
என்னவோ சொன்னேன் ; எதிர்த்துப் பேசி,
'ஆண்களை நம்பலும் அதுவே' என்றாள் ;
வழக்கமில் லாத வாதுகள் செய்தாள் ;
பழக்கமில் லாத பதில்கள் பகர்ந்தாள் ;
இவர்களுக் குள்ளே என்னவோ ரகசியம்
இருப்பது நிச்சயம். இந்தக் கணமே
அதனை முற்றிலும் அறிந்திட வேண்டும்.
'என்ன ரகசியம் ராகவன் எழுதினான் ?
கடிதம் வந்ததைக் காட்டுக' என்றால்
கமலம் சொல்லும் பதிலில் காணலாம்"
என்று மாதவன் எண்ணும் பொழுது
கமலத் திடத்திற் கடிதம் கொடுத்த
வேலைக் காரியும் வெளியில் வந்தாள்.
"அம்மா ளிடமே அதைக்கொடுத் தாச்சா ?
படித்து அம்மாள் பதிலென்ன தந்தாள் ?
எங்கே காட்டு, எடுத்திட மாட்டேன்,
பதில்இருக் கிறதா பார்த்தால் போதும்"
என்று மாதவன் இதமாய்க் கேட்டான்.
"எழுதிக் கொடுத்த பதிலொன்றும் இல்லை.
'சரிசரி ரொம்ப சந்தோ ஷந்தான் ;
கடிதத்தி லுள்ளதைக் கவனிப்பேன்' என்று
சொல்லச் சொன்னார் அம்மாள்" என்று
தூது வந்தவள் பணிவுடன் சொன்னாள்.
மாதவன் கொண்ட மனக்குழப் பங்கள்
பின்னும் அதிகமாய்ப் பின்னிப் பிணித்தன.



ஐயுற வின்னும் அதிகம் அடைந்தான் ;
நேரில் மனைவியைக் கேட்க நினைத்து
உள்ளத் திகைப்புடன் உள்ளே போனான்.
கடிதம் வந்ததை வாங்கின கமலம்
உடனே பிரித்து, படித்து உவந்தாள்.
மனத்தில் ஊறிய மகிழ்ச்சியை முற்றும்
முகத்தின் பொலிவும் முறுவலும் காட்ட,
ஏக்கத் தோடு எதிர்பார்த் திருந்த
காரியம் ஒன்று கைகூடி விட்ட
நிம்மதி யோடும் நிருபம் அதனைப்
பொன்னே போலப் போற்றி மடித்து,
உறையிற் போட்டு, உள்ளே கொண்டுபோய்த்
தன்னுடை அறையில் தனியொரு பெட்டியில்
கடிதக் கத்தையில் சேர்த்துக் கட்டிப்
பத்திர மாகப் பதனப் படுத்தி
வைத்து விட்டு, வெளியே வந்தாள்.
கணவன் அங்கே நிற்பதைக் கண்டாள்.
"என்ன நாதா ! எங்குச்சென் றீர்கள் ?
நீங்கள் இன்னும் நீராட வில்லையே !
வெந்நீ ரெல்லாம் விருவிருத் திடுமே !
காலை உண்டிகள் காய்ந்து போகுமே !
எனக்கோ மிகவும் பசியாய் இருக்குது ;
உங்களைக் காணாது உழன்றுகொண் டிருந்தேன் ;
வாருங்கள் போவோம்" என்று வணக்கமாய்க்
கமலம் நயந்து கணவனை அழைத்தாள்.
"அவைகளை யெல்லாம் அப்புறம் பார்ப்போம் ;
ராகவன் என்னவோ ரகசியக் கடிதம்
அவசரம் என்று அனுப்பினா னேஅது
என்ன அவசரம் ?" என்றான் மாதவன்.

கடிதம் வந்ததைக் கணவன் அறிந்ததில்
கவலை சிறிதும் காட்டா தவளாய்,
'ஒருவர் கடிதம் ஒருவர் பார்ப்பது
ஒழுங்கல்ல' என்ற உபதே சத்தினை
எடுத்துக் காட்டும் ஏளனம் போலக்
கலகல வென்று கமலம் சிரித்தாள்.
சிறிது நேரம் சிரித்து ஓய்ந்தபின்,
'ஆமாம் நாதா ! அன்பர் ராகவன்
என்னவோ எனக்கு எழுதி யனுப்பினார் ;
அவசரம் ஒன்றும் அதிலே யில்லையே"
என்றாள் கமலம். என்றதும் உடனே
"கடிதம் எங்கே ? காட்டுக" என்றான்.
"உங்களுக் கானது ஒன்றுமே யில்லை.
ரகசியம் என்பது ரகசியந் தானே ?
தாங்கள் அதனைப் பார்ப்பது சரியா ?"
என்று கமலம் இன்னும் சிரித்தாள்.
'கடிதப் பேச்சை மறைக்கக் கருதிச்
சிரித்துச் சிரித்துச் சாகசம் செய்கிறாள்'
என்றே தனக்குள் எண்ணிய மாதவன்,
"சரிசரி வேண்டா ; சங்கடம் உனக்கேன் ?"
என்பதை மட்டும் ஏம்பி யுரைத்து,
ஆத்திர மெல்லாம் அடக்கிக் கொண்டு
வீட்டுக் குள்ளே விரைந்து சென்று,
முழுகிக் குளித்து நியமம் முடித்து,
அரைகுறை யாக ஆகார முண்டு,
வீட்டை விட்டு வெளியே போனான்.
ஊருக் கப்பால் ஒன்றரை மைலில்
பாட்டன் கட்டிய பங்களா உண்டு.
அதனைச் சுற்றிலும் அழகிய காவனம் ;



காவனம் சூழக் கனிதரும் மரங்கள் ;
சேர்ந்தாற் போல்ஒரு தென்னந் தோப்பு ;
ஊடே ஓடும் வாய்க்கால் ஓரமாய்ப்
படித்துறை கட்டிய பன்ன சாலையாம்
இயற்கை செயற்கையில் இன்புற இணைந்த
அமைதி குலவும் அழகிய ஓரிடம்.
அங்கே சென்று ஆயா சங்களைக்
குறைத்துக் கொள்ள ஆசை கொண்டே
நந்த வனத்தை நாடிச் சென்றான்.
தோட்டக் காரன் தொழுது நின்றான்.
வழக்கம் போல இரண்டொரு வார்த்தை
அவனுடன் பேசி, அத்துடன் அவனை
நிற்கச் சொல்லி, நெடுகச் சென்று
பூத்த செடிகளைப் புகுந்து பார்த்தான் ;
மலர்கள் எல்லாம் மாதரைக் காட்ட,
கொடியிலும் செடியிலும் கோதையர் தோன்ற,
நறுமணத் தென்றலில் நாரியர் நடக்க,
அழகுகள் எல்லாம் அவர்களாய் நிற்க,
சாரதா நினைவும் கமலம் சாயலும்
முன்னால் வந்து முறைத்து விழிக்க,
'பெண்களை நம்புதல் பெரும்பிழை' என்று
தன்னுடை எண்ணம் திரிந்த தன்மையால்
பெண்களின் நினைப்புப் பேய்போல் மருட்ட,
அவ்விடம் விட்டு அப்புறம் நடந்து
பங்களா விற்குள் பலமுறை சென்றான் ;
மரங்களிற் சாய்ந்து மயங்கி நின்றான் ;
தென்னந் தோப்பின் நிழலில் திரிந்தான் ;
உள்ளம் கனத்து, உறுதிகள் குறைந்து
புழுங்கிப் பொருமிப் புகைந்து புலர்ந்து

அழுங்கி அரண்டு அயர்ந்து வெயர்த்து
அங்கே இருந்தஓர் ஆல மரத்தின்
அடியிலே தன்னுடை அங்க வஸ்திரம்
தன்னை விரித்துத் தரையிற் படுத்தான்.
கல்வியில் நிறைந்து, கலைகளிற் சிறந்து,
நாக ரிகத்தின் நடைமுறை பொலிந்து,
கண்ணிய வாழ்வின் கனத்தை மிகுத்து,
ஆண்மையும் ஆற்றலும் அறிவும் செறிந்து,
அன்பும் அருளும் அறங்களும் புரிந்து,
உயிர்களுக் கெல்லாம் உதவியே செய்து,
கண்டவர் எவரும் கைதொழும் படிக்கு
வையகம் புகழ வாழும் மாதவன்,
சாரதா வின்மேல் வந்த சபலம்
மானம் கெடுத்த மாளாத் துன்பமும்,
ராகவ னோடும் ரகசியம் பேசும்
கமலத் திடத்தில் கண்ட களங்கமும்,
நெஞ்சையும் உடலையும் நெருப்பாய் எரிக்க,
தென்னந் தோப்பின் செறிந்த நிழலும்,
குளிர்ச்சி யின்றிக் கொதிப்பே கொடுக்க,
ஆல மரத்தின் பழங்களை அருந்தக்
கூட்டங் கூட்டமாய்க் கூடிக் குலவிய,
பற்பல ஜாதிப் பட்சிகள் பாடிய
இன்னிசை யெல்லாம் எரிச்சலைக் கிளப்ப,
கொஞ்சும் கிளிகளும் கூவும் குயிலும்
வஞ்சியர் நினைப்பின் வருத்த மூட்ட,
மத்தி யானம் ஒருமணி வரையிலும்
படுத்துக் கிடந்தான் பற்பல நினைவுடன்.
சாப்பிடும் நேரம் தாண்டியும் கூட
வீட்டுக்குப் போக விருப்பமில் லாமல்



பசியை ஆற்றப் பழங்களை நினைத்து
எழுந்தான் மாதவன். எதிரில் நின்றான்
தோட்டக் காரன். சுமந்து வந்ததோர்
கூடை நிறைய இளநீர் கொண்டு
கையிற் பிடித்ததோர் கத்தியோ டிருந்த
வேலைக் காரனின் விநயம் பார்த்துத்
தன்னையும் மறந்து சந்தோ ஷித்து,
பழங்களை வேண்டிப் பறிக்கச் சொல்லி,
அவைகளை உண்டு இளநீர் அருந்தி,
பங்களா விற்போய்ப் படுத்திளைப் பாற
மாலை வரையிலும் மயங்கிக் கிடந்தான்.

# மனம் மாறுபடல்

பரந்த நோக்கப் பழக்கமுள் ளவராய்ச்
சிறந்த முறையில் குடித்தனம் செய்து,
ஒருவர் கருத்தை ஒருவர் மதித்து,
இருவரும் எதிலும் இரண்டு கட்சிபோல்
வாதம் புரிவதில் மாறுபட் டாலும்
பேதம் கருதிப் பிணங்கின தில்லை.
மாதவன் மனைவியின் உரிமைகள் மதிப்பவன்.
ஆதலின் கமலம், ராகவன் அனுப்பிய
காகித ரகசியம் காட்ட மறுத்ததை
'சாகசம் !' என்றே தான்கொண்ட போதும்,
கொதிப்பும் கோபமும் மனத்திற் குமுறியும்,
மதிப்பிற் குறைந்த வார்த்தைகள் பேசான்.
'சரிசரி வேண்டா, சங்கடம் ஏன் ?' என
ஒருசிறு பேச்சுடன் ஒதுங்கி விட்டதால்
வழக்கம் போல்அது வாதமென் றெண்ணி,
'முழுக்க மாதவன் மறந்திட முடியும்'
என்றே கமலம் எண்ணிவிட் டதனால்
சென்ற கணவர் போஜனம் செய்யவும்
மத்தியா னத்தில் மனைக்கு வராமல்
உத்தியா னத்தில் பழங்கள் உண்டதை,
நித்தமும் சென்று சாரதா வீட்டில்
நர்த்தனம் பழக நேரும் நாள்களில்
சங்கரன் மனையில் சாப்பாட் டிற்கும்
தங்கி விடுவது சகஜம் ஆனதால்



இன்றும் அப்படி இருக்குமென் றெண்ணி,
ஒன்றும் மனத்தில் உறுத்தலில் லாமல்
உண்டு, படுத்து, ஓய்ந்து, எழுந்து,
கொண்ட வழக்கமாய்க் கோலம் புனைந்து,
அருமை மகளுக் கலங்காரம் செய்து,
பெருமை கொண்டு பெரிதும் களித்து,
பாட்டுக் கேட்கவும் பார்த்துப் போகவும்
வீட்டைத் தேடி விரும்பி வந்தவர்
மகளிர் தம்மொடு பேசி மகிழ்ந்து,
மிகவும் அவர்கள் விரும்பிச் சொன்ன
ஆணையின் படிஅவர் ஆசையைத் தீர்க்க
வீணையை எடுத்து மீட்டினாள் கமலம்,
ராகவன் பாணியில் வீணையைத் தடவி,
பாகெனும் தன்னுடைக் குரலிற் பாடி,
அவனைப் போலவே ஆலா பனமும்,
கவனம் நிறைந்த கமகம் முதலிய
சங்கதி முழுவதும் ராகவன் சாயலாய்,
இங்கிதம் சிறக்க வீணையின் இசையுடன்
பாட்டின் இன்பம் பரவிய வேளையில்
கேட்டுக் கொண்டே மாதவன் கிட்டினான்.
வழக்கமாய் அப்படி மாதவன் வந்தால்
பாடும் மனைவியின் பக்கத்தில் அமர்வான் ;
மனைவியின் பாட்டில் தானும் மகிழ்வான் ;
இனிமையை மெச்சி இன்னும் வேண்டிய
பாட்டோ ராகமோ பாடச் சொல்லிக்
கேட்டு ரசித்துக் கிளர்ச்சி பொங்குவான்.
இன்றைக்கு அப்படி எதுவும் செய்திலன்.
அங்கே இருந்த அவனுடன் பழகிய
பெண்கள் தமக்கொரு பேச்சுமில் லாமல்

பாடும் மனைவியின் பக்கமும் பாரான்
நேரே வேகமாய் நெடுகச் சென்று
அறைக்குட் புகுந்து கதவை அடைத்தான்.
கமலம் பார்த்துக் கலக்க முற்றாள்.
அதிசயப் பட்டு அச்சமும் வந்து,
'நாயகன் உடலில் நலக்குறை யுண்டோ ?
போன இடத்தில் துன்பம் புகுந்ததோ ?
என்னவோ, ஏதோ ?' என்று நினைத்து,
பாட்டை முடித்து மங்களம் பாடி
வீணையை எடுத்து வைத்து விட்டு,
அன்பரை யெல்லாம் அனுப்பி யானபின்
கணவனைப் பார்க்கக் கமலம் ஓடினாள் ;
அறைக்குட் புகுந்து அவனை நாடினாள்.
நாயகன், அவனுடை நாற்கா லியிலே
உட்கார்ந்த படியே உறங்குதல் போலவே
மேஜையின் மேலே மேனியைச் சாய்த்து,
கைகளின் மேலே தலையைக் கவிழ்த்து,
படுத்துக் கிடப்பதைப் பார்த்தாள் கமலம் ;
துடித்துச் சென்று தொட்டுப் பார்த்தாள்.
காய்ச்சலோ தேகக் கதகதப் பில்லை.
வேர்த்ததைத் தவிர வேறொன்றும் காணாள்.
'என்ன நாதா ! ஏனிவ் வாட்டம் ?
களைப்பெதும் உண்டா ? காப்பி தரவா ?
பழரசம் பிழிந்த பானம் வேண்டுமா ?"
என்ற மனைவியின் இரங்குதல் கேட்டு
ரசித்திலன் மாதவன் ராகவன் நினைப்பால்
தன்னுடை உடலைத் தடவிப் பார்த்த
அவளுடைக் கையை அப்புறம் தள்ளி
"ஒன்று மில்லை ; உனக்கேன் வருத்தம் ?



வீணையைச் சீக்கிரம் நிறுத்திவிட் டாயோ ?
ராகவன் இன்றி ரசிக்க வில்லையோ ?"
என்றான் மாதவன் ; எல்லாம் மறந்து
கமலம் உடனே கலுக்கெனச் சிரித்தாள்.
'ராகவன் பேச்சை மறைப்பதற் கென்றே
சிரித்துச் சிரித்துத் தந்திரம் செய்கிறாள்'
என்றே மீண்டும் எண்ணிய மாதவன்
ஒன்றும் பேசான் உடனே எழுந்து
பலகணி ஒன்றன் பக்கமாய்ச் சென்று,
கைகள் இரண்டையும் பின்புறம் கட்டி,
மனைவியைப் பார்க்க மறுப்பவன் போல
வெட்ட வெளியை வெறுக்கப் பார்த்து,
நின்றுகொண் டிருந்தான் நீண்ட நேரம்.
கமலம் மெதுவாய்க் கையைத் தொட்டாள்.
தொட்ட கையைத் தூரத் தள்ளினான்.
கமலம் மிகவும் கலங்கிப் போனாள்.
அழுகையும் துக்கமும் ஆத்திரம் பொங்க
அறையை விட்டு அகன்றாள் கமலம்.
மனைவி போனபின் மாதவன் மீண்டும்
ஆசனத் தமர்ந்து அசைவற் றிருந்தான்.
இரவில் சரியாய் எட்டு மணிக்குள்
மாதவன் தன்னுடை மனைவியோ டிருந்து
சேர்ந்து உண்பதே தினசரி வழக்கம்.
பரிசா ரகனே பரிமா றிடுவான்.
இருவரும் பற்பல இன்பப் பேச்சுடன்
வர்த்தமா னங்களில் வாதுகள் செய்து
சேதிகள் பேசிச் சிரித்துக் கொண்டே
சாவதா னத்துடன் சாப்பிடு வார்கள்.

அன்றைய தினம்

பத்து மணிவரை காத்துப் பார்த்தும்
மாதவன் வந்திலன் ; கமலமும் வந்திலள்.
சமையற் காரன் சாப்பிடக் கூப்பிடக்
கமலம் தன்னைக் கண்டு அழைத்தான்.
கணவனை அழைக்கக் கமலம் ஏவினாள்.
ஏவலன் சென்று எட்டிப் பார்த்தான்.
கதவின் ஓசையால் 'கமலமோ' என்று
திரும்பிப் பார்க்கவும் செய்யா திருந்த
எஜமான் அருகில் சென்று நின்று
பணிந்த குரலில் பரிவுடன் அழைத்தான்.
குரலைக் கேட்டதும் கொஞ்சம் திரும்பி,
சாப்பிட அழைத்தது சமையற் காரன்
என்பதை அறிந்த மாதவன் எழுந்து,
பகல்உண வில்லாப் பசியும் தூண்ட
உள்ளே சென்றான் உணவு கொள்ள
நாயகன் உண்ண நயந்ததைக் கண்டு
கமலம் சற்றே கவலை குறைந்து
அருகிற் சென்று தானும் அமர்ந்து
கணவன் உண்பதைக் கண்கா ணித்தாள் ;
பரிமா றுதலும் தானே பண்ணினாள்.
மாதவன் அதனை மறுத்திட நினைத்தும்
கண்ணியம் கருதிக் கஷ்டத் துடனே
பொறுத்துக் கொண்டு போட்டதை உண்டான்.
'ராகவ னோடுதன் ரகசியப் பேச்சை
ஒளிக்க வென்றே உபசரிக் கின்றாள்'
என்றே அதையும் மாதவன் எண்ணினான்.
உண்ட மாதவன் உடனே சென்று
படுக்கையிற் படுத்துப் படிப்பவன் போலக்
கையில் தினசரிக் காகிதம் ஒன்றை



வைத்துக் கொண்டும் வாசிக் காமல்
விரித்துப் பிடித்து விழித்துக் கொண்டு
சாரதா நினைப்பு சஞ்சலப் படுத்த,
'கமலம் ரகசியம்' கருத்தை யழிக்கப்
புலம்பும் மனத்துடன் புரண்டுகொண் டிருந்தான்.
கணவன் உண்டபின் கமலம் உண்டிலள் ;
பாலை மட்டும் கொஞ்சம் பருகினாள் ;
வீட்டுக் காரியம் விரைவில் முடித்து,
வேலை யாள்களை விடைகொடுத் தனுப்பி,
அழுத குழந்தையை அணைத்துக் கொண்டு
படுக்கை வீட்டினுள் பைய நுழைந்தாள்.
மாதவன் கமலம் வந்ததை மதித்திலன் ;
கண்முன் னிருந்த காகிதத் தினையே
பார்த்துக் கொண்டு திரும்பியும் பார்த்திலன்.
கணவன் கொண்ட கடுமையை மாற்றிச்
சாந்தப் படுத்த அருகே சார்ந்து,
குழந்தை யோடு கொஞ்சிக் கொண்டே
படுக்கையை விட்டுப் பக்கத்தில் அமர்ந்து,
நாயகன் பார்வையை நாடினாள் கமலம்.
அந்த நிலைமையில் குழந்தை அழுதது.
மடைஉடைந் ததுபோல், மாதவன் மனத்தில்
அடக்கி யிருந்த அத்தனை கோபமும்
பிய்த்துக் கொண்டு பீறிட் டதுபோல்,
"என்னடி, சனியன் இங்கே கத்துது !
தூர எடுத்துக் கொண்டுபோய்த் தொலையேன்,
அலுப்புத் தீர அயர்ந்து படுத்தேன்,
இங்கும் வந்து இழவு கொடுக்கிறாய்"
என்று மாதவன் எரிந்து விழுந்தான்.
நடுங்கி விட்டாள் நாயகன் சொல்லால்.

தன்னை இகழ்ந்த தன்மையைக் கருதாள்,
குழந்தையைச் 'சனியன்' என்ற கொடுஞ்சொல்
ஈட்டியைக் கொண்டு குத்திய தென்னத்
தாயின் மனத்தில் சுருக்கெனத் தைத்தது.
'காதிற் பட்டது கனவா நிஜமா !
நாயகன் தானா அச்சொல் நவின்றது !
தந்தையா மகளைச் 'சனியன்' என்றது !
அழகிலும் சிறந்த ஆண்மை நிறைந்து,
ஆண்மையிற் சிறந்த அறிவு மிகுந்து,
அறிவினும் பெரிய அன்பு விளங்கி,
அன்பைக் காட்டிலும் அரிய பொருளாய்க்
கண்ணைக் காட்டிலும் கருத்தைக் கவர்ந்த
காதலன் வார்த்தையா காதில் விழுந்தது !'
என்று தனக்குள் எண்ணித் தவித்து,
நினைத்து நினைத்து நெஞ்சைத் தடவி,
கலங்கிய அறிவைக் கட்டித் தேக்கி,
சிதறிய பொறுமையை ஒன்றாய்ச் சேர்த்து,
பெண்மை வருந்திப் பேசத் தொடங்கினாள் :
"என்ன நாதா ! ஏனிந்தக் கோபம் ?
நீங்கள் வெறுத்தால் நிலைஎனக் கெங்கே ?
உங்கள் அன்பே உயர்நிலை எனக்கு.
கல்வியின் பெருமையும் கலைகளின் இன்பமும்
உங்களை யல்லாமல் உண்டோ எனக்கு ?"
என்று கமலம் இயம்பிடும் வேளையில்,
இதே சொற்களை எங்கோ கேட்டதாய்ச்
சட்டென மாதவன் சாரதா நினைவுற
"போதும், போதும், போதும் நிறுத்து ;
இப்படிப் பேசி ஏய்த்திட வேண்டா,
பசப்பிப் பேசிப் புலிபோல் பாயும்



பெண்களை நம்புதல் பெரும்பிழை அறிவேன்"
என்றான் மாதவன். ஏமாந்த கமலம்,
"என்னநான் உங்களை ஏய்த்தது ?" என்றாள்.
"ராகவன் என்ன ரகசியம் எழுதினான் ?
அதைநான் கேட்டால் அமுக்கப் பார்க்கிறாய் !
இதைவிட என்ன ஏய்ப்பது இன்னும் ?
உள்ளதை யெல்லாம் ஒளியாது சொல்லு"
என்றான் மாதவன். கமலம் இயம்புவாள் :
"ராகவன் கடிதம் ரகசியம் என்றேன் ;
நீங்களும் ஒத்துக் கொண்டதாய் நினைத்தேன்"
என்றாள் கமலம். எதிராய் மாதவன்,
"நமக்குள் அப்படி நடப்பில்லை யென்று
அன்றைக் கென்னவோ அளந்தா யல்லவா ?
இன்றைக் கந்தசொல் எங்கே போனது ?
நேற்று இரவில் நான்வந்த நேரம்
அவனும் நீயும் உன்னுடை அறையில்
கதவை மூடிக் கருதிய ரகசியம்
என்ன ? நடந்தது எல்லாம் சொல்லுக"
என்று மாதவன் ஏச்சாய்க் கேட்டான்.
பதில்மொழி ஒன்றும் பகர்ந்திலள் கமலம் ;
தலையைக் குனிந்து தயங்கித் தயங்கிப்
பெருமூச்சு விட்டுப் பேசா திருந்தாள்.
"என்ன ? கேட்டதற் கேன்பதி லில்லை ?
சுத்தமா யிருந்தால் சொல்வதற் கென்ன ?
'பெண்களை நம்புதல் பெரும்பிழை' என்றால்
வருத்தப் பட்டு வாதுகள் பேசுவாய் ;
சிரித்து மறைக்கச் சூழ்ச்சிகள் செய்கிறாய் ;
என்றான் மாதவன் ஏளனம் செய்து
"என்னவோ ராகவன் ரகசியம் எழுதினார்"

என்று கமலம் பேச்சை எடுக்குமுன்,
"எழுதின தெல்லாம் எனக்கு வேண்டா ;
அறைக்குள் புகுந்து கதவை அடைத்து
அவனுக் கென்ன அங்கே வேலை ?
உள்ளே பேசினது ஒன்றும் இல்லையா ?
இந்தக் கேள்விக் கென்ன சொல்கிறாய் ?
மற்றதை யெல்லாம் கேட்க மாட்டேன்"
என்று மாதவன் இரைந்து கேட்டான்.
" 'ராகவன் பேச்சு ரகசியம்' என்றேன்.
நம்பினால் என்ன நாதா ?" என்றாள்.
"நம்பவே மாட்டேன் நானினிப் பெண்களை.
அறைக்குள் அவனுக்கு அங்கென்ன வேலை ?
கதவைச் சாத்திடக் காரணம் என்ன ?
உள்ளதைச் சொல்லு, உன்மகள் ஆணை"
என்றான் மாதவன் இடியிடித் ததுபோல்.
பச்சைக் குழந்தைமேல் பாஷை வைத்த
கொச்சைப் பேச்சு மனத்தைக் குத்த,
நாயகன் தன்பால் நம்பகம் அற்றதை
எண்ணி யெண்ணி யிளைத்த கமலம்,
அறிவு குழம்பி அச்சமும் உதித்து,
கணவன் கேட்டதைக் கருதுவாள் ஒருகணம் ;
ராகவன் ரகசியம் நினைப்பாள் மறுகணம் ;
தவியாய்த் தவித்துத் தலையைக் கவிழ்த்து
மறுமொழி யின்றி மலைத்து மருண்டாள்.
கேட்ட கேள்விக்குப் பதில்கிடைக் காததால்
தான்கொண்ட ஐயம் சரியென நினைத்து
மாதவன் பின்னும் மனக்கொதிப் பேறி
இறுகிய மனத்துடன் அசைவிலா திருந்தான்.
அந்த நிலைமையில் அவர்கள் குழந்தை



அழுவது ஒய்ந்து ஆனந்தம் பொங்கித்
துள்ளி விளையாடத் தொடங்கிய தென்னவோ
தாயும் தந்தையும் தர்க்கம் செய்வதைப்
பார்த்து வியந்து பரிகசிப் பதுபோல்
மாற மாறி மாதா பிதாவைப்
பார்த்துக் களித்துப் பரவசப் பட்டுச்
சிறுகை வீசிச் சிரித்த வண்ணமாய்த்
தாயை விட்டுத் தாவிக் கொண்டு
தந்தையின் அருகில் தவழ்ந்து சென்று,
மாதவன் மார்பில் மலர்க்கரம் ஊன்றி,
அப்பன் முகத்தை அமரப் பார்த்து,
'கக்கக்' கென்று சிரித்துக் களித்தது.
அண்டிய சிசுவை அணைத்திலன் தந்தை ;
தழுவிய குழந்தையைத் தடவிக் கொடுத்திலன் ;
கொஞ்சும் மகளைக் கொண்டாட வில்லை ;
சிரித்த சேயைச் சீராட்ட வில்லை ;
எண்ணமும் பார்வையும் எங்கோ அலைய
மாதவன் உணர்விலா மரம்போல் கிடந்தான்.
கொஞ்சும் குழந்தையைக் கொஞ்சமும் மதியான்.
கணவன் இருந்ததைக் கமலம் பார்த்து,
தாய்மனம் என்னும் தனிக்குணம் தூண்ட
எல்லாம் மறந்து, இளகிய மனத்துடன்
"பாப்பா உங்களைப் பார்த்துச் சிரிக்கிறாள் ;
என்ன நாதா ! ஏன்பேச வில்லை ?
இத்தனை நாளும் இல்லாத கோபம்
எப்படி வந்தது ? என்றே சிரித்து
உங்கள் குழந்தை உங்களைக் கேட்கிறாள்"
என்று கமலம் ஏதோ சொல்லுமுன்
"என்னுடைக் குழந்தையா ! இல்லவே இல்லை ;

என்னுடைக் குழந்தையா இது ?" வெனச் சொல்லி
மடியில் தவழ்ந்த மகளை இழுத்துத்
தாயின் பக்கமாய்த் தள்ளினான் மாதவன்.
'ஐயோ ! ஐயோ ! ஐயோ ! நாதா !
இப்படிப் பட்ட இழிமொழி பேசவும்
எப்படி உங்கள் பெருமனம் இசைந்தது ?
நாதா ! நாதா ! நாதா !" என்று
மார்படைத் ததுபோல் மயங்கி விழுந்தாள்.

✤ ✤ ✤

மயங்கி விழுந்த மனைவியைத் தேற்றிலன்.
'அத்தனை தடவை அப்படிக் கேட்டும்
பதில்சொல் லாமல் பாசாங்கு பண்ணி
அழுவது போலும் விழுவது போலும்
ராகவன் பேச்சை மறைக்கவே பார்க்கிறாள்.
பெண்கள் அப்பா பெருமோசக் காரர் !'
என்று மாதவன் எண்ணிக் கொண்டே
படுத்தே யிருந்தான் மனைவியைப் பாரான்.
அரைமணி நேரம் அப்படிக் கிடந்து
கமலம் மெதுவாய்க் கண்ணைத் திறந்தாள்.

✤ ✤ ✤

"நாதா ! நாதா ! நாதா !" என்றாள்.
"போதும், போதும், போதும்" என்றான்.

# முரிந்த மனம் உயிரை வெறுத்தல்

விலுக்கென எழுந்தாள் ; விரைவாகப் பார்த்தாள்.
பக்கத் திருந்த பாலகப் பெண்ணை
இடுக்கினாள் இடுப்பில் ; இரண்டே எட்டில்
'படக்'கெனக் கதவைப் பரக்கத் திறந்தாள் ;
அறையை விட்டு அகன்றாள் கமலம்.
படுக்கை வீட்டின் பக்கத்து அறையில்
தன்னுடைப் பொருள்கள் தனியே இருந்த
பெட்டியைத் திறந்தாள் ; பெரியஓர் காகிதக்
கட்டை எடுத்தாள் ; கடைசியில் இருந்தது
அந்தக் கடிதம். அதனை எடுத்தாள்.
அன்பைக் கெடுத்தது அந்தக் கடிதம்.
பாலும் நீரும் கலந்த பான்மையில்,
நீரும் ஆவியும் நெருங்கிய நேர்மையாய்,
குளத்திலே பாசம் கூடிய கொள்கைபோல்,
கரியில் நெருப்புக் கலந்த காட்சியாய்,
வெயிலில் வெப்பம் வேறலா விதமாய்,
இடியும் மின்னலும் இணைந்ததைப் போல,
பொருளும் நிழலும் பொருந்திய தென்ன,
உடலிரண் டுக்கும் ஒன்றே உயிரென
மருவி யிருந்த இல்லற மகிமையை,
இணைபிரி யாத இன்ப வாழ்க்கையை,
ஒன்றி யிருந்த உயர்ந்த உறவை,
பாறையைப் பிளக்கும் பசுமர வேர்போல்,
பாலைப் பிரிக்கும் பிரைத்துளி பட்டதாய்,

உள்ளே புகுந்து உறவைக் கெடுத்தது
அந்தக் கடிதம். அதனை எடுத்தாள்.
"இதனை இங்கே இருக்க விட்டால்
நாயகன் அதனை நாடித் தேடி
எடுத்துப் பார்க்க எண்ணம் கொள்ளும்.
ராகவன் வேண்டிய ரகசியம் தெரிந்து
கோபம் பிறந்து கொதிக்கும் நாயகன்.
விரோதக் குரோத வெம்மை வளரும்.
வேறு தீமைகள் விளையினும் விளையும்.
நம்பிய ஒருவனை நழுவ விடுவது
மானம் உடையவர் மதித்திட மாட்டார் ;
என்ன தீமை எனக்குவந் தாலும்
என்னால் எவரும் இடர்ப்பட வேண்டா."
என்றெல்லாம் எண்ணிக் கடிதம் இருந்த
கூட்டைக் கசக்கிக் குப்பையிற் போட்டாள் ;
கடிதத்தை மட்டும் கவனமாய் மடித்து
மூலையில் தன்னுடைச் சீலையின் முந்தியில்
இறுக முடிந்து இடுப்பில் செருகினாள்.
வேறு எதையும் எடுக்க விரும்பிலள்.
பெட்டிச் சாவியும் பெட்டியில் இருக்க,
திறந்த பெட்டியும் திறந்தே கிடக்க,
வீட்டை விட்டு வெளியே வந்தாள் ;
பாட்டைத் தனிவழி பதறி நடந்தாள் ;
வீதி விளக்கில் வெளிச்ச மிருந்ததோ !
பாதையில் தன்னைப் பார்ப்பவர் உண்டோ !
அண்டை அயலார் அப்பொழு தெவரும்
கண்டடை யாளம் கண்டுகொள் வாரோ !
அக்கம் பக்கம் அறிந்தவர் யாரும்
துக்கம் கண்டு தொடர்ந்திட நேருமோ !



'எங்கே போகிறாள் இப்படி' என்று
அங்கே யாரும் அதட்டிடு வாரோ !
அருகில் போனது ஆடோ மாடோ !
தெருவில் நாய்கள் குலைத்ததோ தெரியாள் ;
சிந்தனை எதுவும் செய்திலள் கமலம்,
தந்தனள் நடையைத் தனியே சென்றாள்.

✤ ✤ ✤

'மனிதர் கண்ணுக்கு மறைந்திட் டாலும்
புனிதன் சகல புவனமும் புரக்கும்
எல்லாம் வல்ல இறைவன், ஒருவன்
வல்லான், எதையும் வகுப்பவன் உண்டு.
எவர்எதை எங்கே எப்படிச் செய்யினும்
அவனறி யாமல் அணுஅசை யாது
எங்கும் இருப்பவன் ; எதையும் பார்ப்பவன் ;
அங்கும் தன்செயல் அறிவான்' என்று
கற்றதும் கேட்டதும் சொன்னதும் கருதாள் ;
முற்றிலும் தன்னையே மறந்த முடுக்காய்க்
கள்ளரும் ஒதுங்கும் நள்ளிருள் தன்னில்
பிள்ளையை இடுக்கித் துள்ளி நடந்தாள்.
கோபத் தீயின் கொதிப்பின் வேகமோ !
ஒடிந்த மனத்தின் உறுதி என்பதோ !
முரிந்த அன்பின் முடுக்கென லாமோ !
இடிந்த காதலின் எடுப்பின் இயல்போ !
நம்பி யிருந்தது நழுவிய நடையோ !
வாழ்க்கையின் நோக்கம் வழுவிய வாதையோ !
வைத்த ஆசை பொய்த்தால் வருவதோ !
ஏதோ ஒருபொருள் உயிர்போல் இருந்ததை
இழந்து போனதால் எழுந்திடும் இழுப்போ !
பித்தம் பிடித்ததோ ! பேயோ ! பிசாசோ !

சித்தம் என்பது சிதறினால் வருவதோ !
பாவப் பயனோ ! சாபப் பலனோ !
இன்னது என்று பெயர்சொல இயலாது !
என்னவோ வேகம் இழுத்துச் சென்றது.
இடுப்பில் இருந்த இன்பக் குழந்தை
துள்ளிக் களித்துத் துணியை இழுத்துச்
சீரிளங் கையால் சிறுகத் தட்டி
மலரெனும் பாதம் மடியில் மோத
ஆடி ஆடி அசைப்பதை உணராள்.
தந்தையின் சொற்கள் நிந்தனை தந்ததும்,
தாயவள் கொண்ட நோயின் தன்மையும்,
கோபம் மகிழ்ச்சி என்பதன் கூறும்,
இன்பம் துன்பம் இருவகை இயல்பும்,
வேண்டல் வேண்டாமை வேறுபா டுகளையும்,
விருப்பு வெறுப்பு என்றுள விவரமும்,
பகைமை நட்பெனும் பாகுபாட் டினையும்,
அச்சம் என்றிடும் அழிதரும் சொல்லையும்,
அறியாக் குழந்தை ! அன்புரு வாகிய
தாயின் இடுப்பே தனிப்பெரும் பதவியாய்,
அன்னையின் அணைப்பே ஆனந்த வெள்ளமாய்,
கொஞ்சிக் கொஞ்சிக் குலுங்கச் சிரித்துப்
பச்சைக் குழந்தை தன்முகம் பார்த்து,
'அம்மா ! அம்மா ! அம்மா !' என்று
அடிக்கடி அழைத்த இன்னிசை அமுதம்
காதில் விழுந்ததும் கேட்டிலள் கமலம் ;
ஆடி மாதம் வாடைக் காற்று
சில்லென உடலில் பட்டதுந் தெரியாள் ;
காற்றோடு முகத்திலும் கண்ணிலும் மோதி
வீதிச் சிறுமணல் விழுந்ததும் உணராள் ;



காலில் இடித்த கல்லையும் அறியாள் ;
காற்றில் விலகிய மேற்றுணி கருதாள்.
ஊரைத் தாண்டி ஒருகல் சென்றபின்
ஆற்றங் கரைக்கொரு கொடிவழி ; அவ்வழி
வெட்ட வெளியில் வெளிச்சம் காட்டி
நடப்பவர்க் குதவும் நட்சத் திரங்களும்
கண்ணிற் படாமல் 'கறுகும்' இருட்டாய்
அடர்ந்த மரங்கள் அடங்கிய தோப்பின்
குறுக்கே செல்லுமோர் குறுகிய பாதை
இருட்டில் வந்து இரையை விழுங்கி
ஓடமாட் டாமல் உடலை நெளித்துப்
பாம்புகள் குறுக்கே படுத்துக் கிடக்கும்
நரிகள் மரநாய் நடுவிலே ஓடும்.
இரண்டு பக்கமும் இருண்ட புதர்கள்.
கல்லும் முள்ளும் கலந்த கொடித்தடம்.
வளைந்து வளைந்து வழியை அறிய
நின்று, குனிந்து, நிமிர்ந்திட வேணும்.
அந்த வழியில்,
முன்னே ஒருநாள் முழுநில இரவில்
ஆற்றுப் பெருக்கிலா அடிசுடும் நாளில்,
கோடைக் காலக் கொதிப்புக் குறைய,
வேனிற் கால வெப்பம் ஆற,
வெயிற் கால வேர்வை மாற,
ஆற்று மணலின் அகன்ற வெளியில்.
தானும் கணவனும் தம்முடை நண்பரும்
குடும்ப சமேதராய்க் கூட்டமாய்த் தங்கி,
காடா ரம்பக் கூடா ரங்களும்,
கட்டிலும் மெத்தையும், காற்றசை கருவியும்,
மடக்கு மேஜைகள், முடக்குநாற் காலிகள்,

பாட்டுப் பெட்டிகள், சீட்டுக் கட்டுகள்,
சோப்பு, சீப்பு, சுகந்த தைலங்கள்,
சலவை உடைகள், கலவைச் சந்தனம்,
இவைபோன் றனபல இன்ப இனத்துடன்
நாகரி கச்சிறு நகரம் ஒன்று
ஆற்றங் கரையில் அரைமணிப் பொழுதில்
உண்டா னதுபோல் ஒருபெருந் திரளாய்,
ஆற்று மணலின் அழகிய பரப்பில்
உலாவி நடந்தும், உருண்டும், புரண்டும்,
பயில்வான் வேலைகள், பந்தயம், குஸ்தி,
குட்டிக் கரணம், குடுகுடு ஆட்டம்,
விரும்பிய அவரவர் விளையாட்டுகளில்
ஓடி, ஆடி, ஓடாத் தண்ணீர்,
இடுப்பள வாழம் இல்லா ஆற்றில்
முழுகி முழுகி மூச்சை அடக்கியும்,
நீச்சல் அடித்து நின்று நிமிர்ந்தும்,
ஒருவர்மேல் ஒருவர் நீரை உந்தி
மூச்சுத் திணற முகத்தில் அடித்தும்,
குளித்து முழுகிக் கோலங் கொண்டபின்,
அதற்கென ரூபாய் ஆயிரம் செலவில்
சமையல் வேலையில் சாத்திரம் தேறிய
நிபுணர் வந்து நிறுத்துப் பொறுத்து
'நளனும்', 'பீமனும்' நாக்கில் ஜலம்வர
ஆக்கிக் கொணர்ந்த அறுசுவை உண்டிகள்
வெண்ணிலாப் பொங்கல் விருந்தென உண்டபின்,
ஆடல் பாடல் இன்னிசை அரங்கம்
அன்பின் முறையில் அங்கே வந்த
கலைஞர்கள் பலபேர் காட்டிய திறமையில்



ஆனந்த வெள்ளம் ஆற்றில் நிறைய
மகிழ்ந்த நாளை என்றும் மறவாள் ;
அந்த நாளில்,
கணவனும் தானும் கைகோத் தவராய்
நகரை விட்டு நான்கு மைலும்
நடந்தே வந்து நதிக்கரை சேர
அந்தக் கொடித்தட வழியே அந்நாள்
போன நினைப்பில் இன்றும் போனாள்.

✤ ✤ ✤

விருந்து நடந்த விரிந்த இடத்தின்
மேற்கே, கரையில் மேலும் போனால்
உயர்ந்த பாறைகள் உள்ளது ஓரிடம்.
ஆற்றின் அகலம் அங்கே குறுகல்.
ஆற்றைக் கடக்கும் படித்துறை அங்கே.
படகுகள் இருக்கும் பக்கமும் அதுவே.
ஆழமும் அதிகம் ; வேகமும் அதிகம்,
படித்துறைக் கப்பால் உயர்ந்தஓர் பாறை.
அந்தப் பாறை ஆற்றில் கவிழ்ந்தது.
அதையெலாம் முன்னே அறிந்தவள் கமலம்.
இருட்டில் நடந்து எப்படி யோஅவள்
அந்தப் பாறையின் உச்சியை அடைந்தாள்.
அங்கே யிருந்து அரைப்பனை கீழே
ஆடிப் பெருக்கம் அலைபுரண் டோடும்
ஓசையை நினைப்பினும் உள்ளம் நடுங்கும்.
அங்கே யிருந்து ஆற்றில் விழுந்து
செத்துப் போகச் சித்தம் துணிந்தாள்.
முன்னால் குழந்தையை முழுகப் போட்டுப்
பின்னால் குதிக்க எண்ணம் பிறந்தது.

✤ ✤ ✤

படித்த படிப்பின் பயனெலாம் எங்கே ?
கற்ற கலைகளின் கருத்துகள் எங்கே ?
பலமொழி படிக்கப் பறந்தவ ளாச்சே !
ஆங்கிலப் படிப்பின் பகுத்தறி வெங்கே ?
தமிழ்மொழி தந்த தண்மை எங்கே ?
வடமொழி ஞான வரம்புகள் எங்கே ?
நாகரி கத்தின் நலமெலாம் எங்கே ?
பெண்களின் உரிமை பேசின திதற்கா ?
சுதந்தரம் வேண்டிய சொல்லெலாம் இதற்கா ?
சமத்துவம் நாட்டிய சமத்தெலாம் எங்கே ?
எல்லா உயிரிலும் ஈசனே என்று
கொல்லா விரதம் பிறர்க்குக் கூறிய
எல்லாக் கருணையும் எங்கே போனது ?
தன்னுடைக் குழந்தையைத் தானே கொல்ல
எண்ணும் விகாரமும் எப்படி வந்தது ?
படிப்பே வேண்டா
'பெண்மை' என்ற பெருமையில் மாறினாள் ;
திண்மை என்றதன் தீமையில் மீறினாள்.
மெல்லியல் பாகிய மேனி முழுவதும்
கல்லியல் பாகிய கடினம் கண்டது.
சின்னஓர் நோயும் சிசுவைத் தீண்டினால்
தன்னதே நோய்எனத் துடித்துத் தவித்து,
பத்தியம் தின்று, பால்கொடுத் தூட்டி,
நித்திரை விட்டு, நித்தமும் காத்து,
இன்னல் எதையும் இன்பமாய் ஏற்கும்
'தன்னல மறுப்'பின் தங்கிட மாகிய
'தாய்மை' என்னும் தனிப்பெருந் தன்மையின்
வாய்மை முற்றும் மறந்தனள் நொடியில்.
'அன்னை' என்பவள் 'அன்பு' என்பதன்



'சின்னம்' என்பதைச் சிதைத்தனள் அக்கணம்.
'பெற்றவள் அறிவாள் பிள்ளையின் அருமை'
முற்றிய மொழியதை முற்றிலும் அழித்தாள் ;
'அம்மா' என்னும் ஆதாரச் சொல்லின்
செம்மாண் பொருளைச் சிதறச் செய்தாள்.
'ஆயா' என்று அலுப்பில் அழைக்கும்
மாயாப் பதத்தின் மகிமையும் மறைந்தது.
தன்னை மறந்தாள் ! தன்மையும் மறந்தாள் !
பொன்னும் புகழும் பூமியும் வானும்
என்ன ஒன்றும் இணையிலாச் செல்வம்
வன்னக் குழந்தையின் வதனமும் மறந்தாள் !
குழலும் யாழும் குறைபடச் செய்யும்
மழலைப் பேச்சையும் மறந்தனள் ஐயோ !
சேற்றைக் குழப்பிய தன்சிசு கையினால்
சோற்றைக் குழப்பினும் சொர்க்கமென் றுண்ணும்
பெற்ற மனத்தின் தெய்விகப் பெருமையை
முற்றும் ஒடித்து முரித்தழித் திட்டாள்.
ஊன்பெற்ற உடலுக்கு ஒருபெரும் இன்பம்
தான்பெற்ற மகவின் உடலைத் தடவித்
தீண்டிக் கிடைக்கிற தெவிட்டா உணர்ச்சியை
வேண்டியே மக்களை அணைக்க விரும்புவார் !
இடுப்பில் இருந்த இன்பம் அதனை
எடுத்து ஆற்றில் எறிய எண்ணினாள் !

✤ ✤ ✤

அனலாய்க் கொதித்தது அவளுடைத் தேகம்
கனலாய் மின்னொளி கக்கின கண்கள்.
பின்னிய கூந்தல் தன்னாற் பிரிந்து
9 முன்னால் கொஞ்சம் முகத்தையும் மூட,

குங்குமத் திலகம் வேர்வையிற் குலைய,
இங்கித வதனம் பொங்கும் எரிபோல்
ஏறிய புருவம் இறங்கி ஏற,
சீறிய மூச்சில் புகையும் சேர,
கடித்த பற்களின் கறகறப் பொலிக்க,
துடித்த உதடுகள் சுருங்கிக் கருக,
வெறித்த பார்வையால் இமைகள் விரிய,
குறித்த குறியெலாம் கொடுமையே கொள்ள,

✣ ✣ ✣

ஆடிக் காற்றின் வாடை இதனால்
குளிருக் கொதுங்கக் குறுகிக் குறுகித்
தாயின் உடலை இறுகத் தழுவி,
அன்னையின் மேனியில் தன்முகம் அழுந்தப்
பதுங்கி யிருந்த பச்சிளம் பசலையை
இழுத்து எடுத்தாள் ஆற்றில் எறிய.
வலித்த இழுப்பால் வலிஉண் டானதோ !
நலித்த குளிரின் நடுக்கத் தாலோ !
தாயைப் பிரிய மனமிலாத் தன்மையோ !
இடுப்பி லிருந்து இழுக்கும் போதே
அலறித் துடித்து அழுதது குழந்தை.
அன்னையின் ஆடையை அழுத்திப் பிடித்து
இடுப்பி லிருந்து எடுக்க விடாமல்
கவ்விக் கொண்டு கதறிய சிசுவை
வேகமாய் இழுத்து வெடுக்கென எடுத்தாள்.
இருட்டின் அமைதி இடிவது போலக்
கூவிக் கூவி அழுதது குழந்தை.
அழுததோ என்பதும் அறியாள் கமலம்
காதும் செவிடாய்க் கையும் இரும்பாய்
எடுத்த குழந்தையை எறிந்தே விட்டாள்.

✣ ✣ ✣



கையை விட்டுக் குழந்தை கடக்குமுன்
அந்தப் பாறையின் அடிப்புறத் திருந்து
"யாரடா மேலே ! யாரது அழுவது ?"
என்றொரு சத்தம் இடியெனக் கேட்டது.
திடுக்கிடச் செய்தஅத் தீவிரக் குரலைக்
கேட்டாள் கமலம். கிலிபிடித் திட்டது.
அச்சம் வந்ததும் எண்ணம் அசைந்தது.
கூண்டோடு எல்லாக் குணங்களும் மறைந்து
குடிபோ யிருந்த உணர்ச்சிகள் கொஞ்சம்
கூட்டில் வந்து புகுந்து கொண்டன.
இறுகிய நெஞ்சம் எண்ணத் தொடங்கி,
'யாரோ கீழே அங்கே இருப்பது
நிச்சயம்' என்ற நினைப்பு வந்ததும்,
'அங்கே விழுந்தால் அவர்கள் எடுத்து
ஊரிற் கொண்டுபோய் ஒப்பித் திடுவார்.
ஊரார் சிரிக்க ஒடுங்கிட வேணும்,
நாட்டுக் கெல்லாம் நகைப்புக் கிடமாம்.
வேறே இடத்தில் விழுவோம்' என்று
பாறையை விட்டுப் பதைத்து இறங்கி
ஆற்றங் கரையில் அப்புறம் நடந்து
இடறி இடறி இருட்டில் நடந்தாள்.

# மகிழ்ச்சி இழந்த மாதவன் செயல்

விலுக்கெனக் கமலம் விரைந்து எழுந்ததும்,
குழந்தையைத் தூக்கி இடுக்கிக் கொண்டதும்,
படக்கெனக் கதவைப் பரக்கத் திறந்ததும்,
அறையை விட்டதும் அறிவான் மாதவன்.
'என்'னெனத் திரும்பிலன், ஏனெனக் கேட்டிலன்.
இதுவரை அப்படி இருந்ததே இல்லை.
முன்னே அப்படி அவனால் முடியுமா ?
மனைவி உறங்கினால் மாதவன் உறங்குவான் !
காதலி விழித்தால் காதலன் விழிப்பான் !
நாயகி எழுந்தால் நாயகன் எழுவான் !
குழந்தை அழுதால் தானே எழுந்து
நாயகி தனக்கொரு நலிவு தராமல்
அழுகை ஒய்ந்திட ஆனதை முயல்வான் !
தொட்டிலை ஆட்டித் தூங்கச் செய்வான் !
தூங்கும் கமலம் துணிஅசைந் தாலும்
ஏங்கிப் பரிவுடன் என்னென்று கேட்பான் !
அப்படிப் பட்டவன் அசைந்திலன் இன்று.
'ஐயம்' என்பதன் அழிதரும் பலனோ !
'திரிபு' என்பதன் தீங்குசெய் திறனோ !
'சந்தே கத்தின்' சதிசெய்யும் தன்மையோ !
நம்பகம் கெட்டதன் நாச வேலையோ !
"போனால் என்ன முழுகிப் போய்விடும் !
வருவாள் தானே, வரட்டும்" என்று
படுக்கையிற் புரண்டு படிப்பவன் போலவே
பாவனை செய்து படுத்தே இருந்தான் ;



கமலம் போனபின் கால்மணி கழித்துச்
சட்டென எழுந்து கதவைச் சாத்தினான் ;
சத்தம் கேட்கத் தாழ்ப்பா ளிட்டான் ;
கனைத்தான் ; இருமினான் ; கறுமுறுத் திட்டான் ;
அதிர நடந்து அறையில் உலாவினான் ;
அங்குள்ள பொருள்களை, அதையும் இதையும்
ஒவ்வொன் றாக உற்றுப் பார்த்தான்.
காலியாய்க் கிடந்த கமலம் படுக்கையும்,
கொசுவலை கட்டிய குழந்தைத் தொட்டிலும்,
அவனுடைக் கண்களில் அதிகம் உறுத்தின.
வெறுப்பி னாலோ விசனத்தி னாலோ
பலமுறை கமலம் படுக்கையைப் பார்த்து
வீங்கி வீங்கிப் பெருமூச்சு விட்டான்.
வெறுப்பை மறைக்கப் படிக்க விரும்பியோ,
விசனம் மறையத் தூங்க வேண்டியோ,
படுக்கையிற் சென்று படுத்தான் மீண்டும்.
படிக்க முயன்றான் ; பலிக்கவே இல்லை.
தூங்க முயன்றான் ; தூக்கமும் வருமா ?
என்னவோ வேதனை இருக்க விடாமல
படுக்கையை விட்டுப் பந்துபோல் கிளம்பிக்
கதவைத் திறந்தான். கமலம் தன்னுடைச்
சொந்த அறைக்குச் சுருக்காய்ப் போனான்.
அறையில் விளக்கு அவியா திருந்தது.
எட்டிப் பார்த்தான் கமலம் இல்லை.
உள்ளே புகுந்தான் ; உற்று நோக்கினான்.
திறந்து கிடக்கிற பெட்டி தெரிந்தது.
கடிதக் கற்றையும் கண்ணிற் பட்டது.
கத்தையில் இருந்த எல்லாக் கடிதமும்
ஒவ்வொன் றாக உருவிப் பார்த்தான் ;

ராகவன் எழுதிய ரகசியக் கடிதம்
அங்கே இல்லை என்பதை அறிந்தான் ;
கமலம் கொண்ட கருத்தை முற்றிலும்
கண்டு கொண்ட தாய்த் தனக்குள் கருதிக்
கோபச் சிரிப்புடன் தலையைக் குனிந்தான்.
கீழே என்னவோ வெள்ளையாய்க் கிடந்தது.
என்னவென் றதனை எடுத்துப் பார்த்தான்.
கமலம் முன்னே கசக்கிப் போட்ட
'கவர்'எனப் படுகிற காகிதக் கூடு.
விரித்துப் பார்த்தான். விலாசம் இருந்தது.
அதற்கு மேலே 'அவசரம் ரகசியம்'
என்பன எழுதி இருந்ததும் கண்டான்.
எழுத்து முழுவதும் ராகவன் எழுத்தே.
'கமலம் பெரிய கள்ளியாய் விட்டாள் ;
முற்றிலும் ராகவன் மோசக் காரனே'
என்றுதான் நினைத்தது சரிதான் என்று
பின்னும் கோபப் பித்துமே லிட்டு
வீடு முற்றிலும் வேகமாய்த் தேடினான்.
கமலமும் குழந்தையும் காணவே இல்லை.
வீட்டை விட்டு வெளியே விரைந்தான் ;
நேரே ராகவன் வீட்டை நெருங்கினான் ;
தடதட வென்று கதவைத் தட்டினான்.
கைவிளக் கோடு கதவைத் திறந்து
ராகவன் தாயார் நடையில் நின்றார்.
"எங்கே ராகவன் ?" என்றான் மாதவன்.
"யாரோ நண்பரும் அவனும் சேர்ந்து
அவசர வேலையாய் அசலூர் போகச்
சற்று முன்புதான் சாப்பிட்டு விட்டு
ரயிலுக் கென்று ராகவன் போனான்"



என்று ராகவன் தாயார் இயம்பினார்.
"அந்த நண்பர் யார்?" எனக் கேட்டான்.
"அதைநான் சிறிதும் அறியேன் அப்பா,
உள்ளே வாயேன், உட்கார்ந்து பேசலாம்.
என்னவோ மாதிரி இப்படிக் கேட்பது
புதிதா யிருக்குது. புரிய வில்லையே !
உள்ளே வா" வென உரைத்திடு முன்னால்
"எத்தனை நேரம் ஆயிற்று ? என்றான்.
"அரைமணிக்கு மேல் ஆனதே" என்றாள்.
"சரிசரி" என்று சட்டென மாதவன்
அவ்விடம் விட்டு அப்புறம் போனான் ;
தேகமும் மனமும் தீயெனக் கொதிக்கச்
செய்வது என்னெனச் சிந்தனை செய்தான்.
"கடிதம் எனக்குக் காட்ட மறுத்ததும்,
இப்போது அதனை எடுத்துப் போனதும்,
எண்ணிய படியே எல்லாம் இருக்குது.
கமலமும் அவனும் கள்ளத் தனமாய்
ஊரை விட்டே ஓடிவிட் டார்கள்.
இப்படி என்னை ஏய்த்து விட்டு
இவர்கள் போகநான் இளிச்ச வாயனா ?
சும்மா விடுவது சுத்த மடத்தனம்,
கமலம் தொலைந்தால் கவலையே இல்லை.
குழந்தையை எடுத்துக் கொண்டு போய்விட
அவளுக் கென்ன ஆதிக்க முண்டு ?
நகையும் குழந்தையும் நமக்குப் போதும்
சட்டப் படிக்குக் குற்றம் சாட்டிட,
போலீ சுக்கு உடனே புகன்று
தந்தி கொடுத்து ரயிலில் தடுத்துப்
பின்னால் மற்றதைப் பேசிக் கொள்வோம்"
என்று தனக்குள் எண்ணிக் கொண்டே

தன்னுடை வீட்டுத் தலைவாசல் வருமுன்
சொந்தக் கவுரவம் சுறுக்கெனத் தைத்தது.
ஊரிலே மிகவும் உயர்ந்த மனிதனாய்,
கற்றவர்க் கெல்லாம் கற்பகத் தருவாய்,
கலைஞருக் கெல்லாம் காம தேனுவாய்,
தளர்ந்து வந்தவர் சங்க நிதியாய்,
பந்துமித் திரர்க்குப் பதும நிதிபோல்,
பொதுநல உழைப்பின் புகழெலாம் பூண்டு,
எவரும் வாழ்ந்திட இல்லறம் நடத்தி,
கமலமும் தானும் வாழ்ந்த கௌரவம்
முற்றிலும் வந்து முன்னால் நின்றது.
'கமலம் செய்த கள்ளத் தனத்தை
வெளியிற் சொல்வதே வெட்கக் கேடு
ஆதலால் அவளை அறவே மறந்து
சனியன் விட்ட தாய்ச் சங்கடம் தீர்ந்து
வேண்டு மானால் வேறொரு மனைவியைத்
தேடிக் கொள்வதே தெளிவுடைத் தாகும்.
அவளைப் போல ஆயிரம் பெண்களை
வேண்டிய மட்டும் விலைக்கும் வாங்கலாம்'
என்று புதுப்புது எண்ணங் கொண்டு
வீட்டுக் குள்ளே வேகமாய் நுழைந்தான்.
கமலம் படுக்கையைக் கட்டிச் சுருட்டி,
குழந்தைத் தொட்டிலைக் கூண்டுடன் அவிழ்த்து,
அவளுடைப் பொருள்கள் அனைத்தையும் வாரி,
எல்லா வற்றையும் எடுத்துக் கொண்டுபோய்
அவளுடை அறைக்குள் அள்ளி யெறிந்து,
அறையைப் பூட்டி, அந்தச் சாவியைத்
தன்னுடை அறையில் தனியிடம் வைத்து,
நிம்மதி வந்ததாய் நினைத்துக் கொண்டு
படுக்கையில் மீண்டும் மாதவன் படுத்தான்.

# ஆற்றில் வீசிய குழந்தை

தாய்மனம் அழிந்து பேய்மனம் தள்ளக்
குழந்தையை எறிந்த கொடுமையைச் செய்யக்
கமலம் நின்ற ஆற்றங் கரையின்
அந்தப் பாறையின் அடிப்புறத் திருந்து
"யாரடா மேலே ? யார்அது அழுவது ?"
என்ற சத்தம் இடியெனக் கேட்டது
ஓடத் தலைவர் **ராமன்** உரைத்தசொல்.
அவனுடைச் சொந்தஊர் அக்கரை இருப்பது,
**அணியூர்** என்பது அதன்பெய ராகும்.
அங்கே வசிப்பவன் பாறையின் அடியில்
இங்கே வந்து இப்போ திருந்தது
தோணி ஓட்டும் தொழிலால் நேர்ந்தது.
எதிர்க்கரை இருக்கும் அவனுடை இருப்பிடம்
வர்த்தகர் நிறைந்த வாணிபத் துறைமுகம்.
வெளியூர் களுக்கெலாம் விற்பனை அனுப்ப
ஏற்ற ரயில்வே ஸ்டேஷன் இருப்பது,
வாழைக் காயும் வாழை இலைகளும்
நெல்லும் கரும்பும் தேங்காய் நெற்றும்
வெல்லம் முதலிய வேண்டிய பொருள்களை
வந்து இங்கே வர்த்தகர் வாங்கும்
பண்டம் பலவும் படகில் ஏற்றி
ஆற்றைத் தாண்டி அக்கரை கொண்டுபோய்ச்
சேர்ப்பதே ராமன் சீவன மாகும்.
எங்கோ இருக்கிற எவரோ சீமான்
சிறப்புடன் நடத்தும்ஓர் திருவிழா விற்கு

ஆயிரம் வாழைத் தாறுகள், அவற்றுடன்
தேறிய ஐந்து ஆயிரம் தேங்காய்,
இன்னும் பத்து ஆயிரம் இலைகள்,
தாறுடன் மரங்கள் தனியே வேறு
அவசர மாக வேண்டும். அதனால்
பத்துப் பரிசலும் தானும் பலருமாய்
இரண்டு நாளாய் இங்கே இருந்து
வாங்கின- வற்றை வகைவகை யாகப்
பரிசல் களிலே பாரம் ஏற்றினான்.
ஆடிக் காற்று அடங்கிடும் வேளை
காலைப் பொழுதில் ஆற்றைக் கடக்க,
இரண்டு பாறைகள் அடிப்புறம் ஆற்றில்
அந்தப் பாறையின் இடையில் இருந்தன.
ஒதுக்கிட மாக உள்ளத னாலே
ஆற்றின் இழுப்பு அங்கே இல்லை,
பாறையின் இடுக்கில் பரிசலைக் கட்டி,
பண்டம் நிறைந்த படகினைக் காத்து,
அவரவர் படகில் அவரவர் இருந்தார்.
ராமன் படகிலே வாழைக் காய்களும்
வாழை இலைகளும் வந்து சேர்ந்தன.
பரிசலின் அடியில் காய்களைப் பரப்பி,
அதன்மேல் இலைகளை அடுக்கி, அதற்குமேல்
சருகுகள் போட்டுச் சந்துகள் மூடி,
விடிகிற மட்டும் விறைக்கிற காற்றில்
தங்கி யிருக்கத் தனக்கொரு இடமாய்
வாங்கிய கொஞ்சம் வைக்கோற் புல்லை
மெத்தெனப் பரப்பி மெத்தைபோல் அதிலே
படுத்துக் கிடந்தான் பரிசலில் ராமன்.

✤ ✤ ✤



பாறையில் கமலம் ஏறிய பதற்றம்
காலிற் பட்ட ஓர் கல்லைத் தள்ள
அதுபோய் விழுந்தது அந்தப் படகிலே.
'ஏதோ விழுந்தது, என்ன ?'என் றெழுந்து
கண்ணைத் துடைத்துக் காது கொடுத்தான்.
அந்தச் சமயமே குழந்தை அழுதது !
அழுகுரல் கேட்டு அஞ்சிய ராமன்
குழந்தையை வீசிய கமலம் குதிக்குமுன்,
வீசிய குழந்தைக் கையை விடுமுன்,
எடுத்த குழந்தையை எறிந்த க்ஷணமே
"யாரது மேலே ? யாரது அழுவது ?"
என்றவன் கூவிய இடிகுரல் கேட்டே
பயந்து கமலம் ஓடினாள் பகர்ந்தோம்.

✤ ✤ ✤

வீசிய குழந்தை விழுந்தது கீழே
'விதி'எனப் பட்டதன் விசித்திர வேலையோ !
'கதி'எனும் சொல்லின் காரியம் அதுவோ !
'தலையெழுத்' தென்பதன் தன்மையே தானோ !
'நல்ல வேளை' என்பதன் நன்மையோ !
'அதிருஷ்டம்' என்பார், அதுவே தானோ !
'திக்கற் றவர்க்குத் தெய்வம் துணை'எனும்
உலகப் பேச்சிலே உண்மை இருக்குமோ !
'குழந்தையே தெய்வம், தெய்வமே குழந்தை ;
சிசுவினைக் காப்பது தெய்வமே' என்று
வழங்கிடும் வாக்கின் வாய்மையி னாலோ !
தானாக நேர்ந்ததோ ! யாரோ தடுத்ததோ !
ஆடிக் காற்றுதான் அப்படிச் செய்ததோ !
என்ன மாயமோ ! எவருடைச் சூழ்ச்சியோ !
விந்தை ! விந்தை ! விளங்கிடா விந்தை !
அதிசயம் ! எவரும் அறியா அதிசயம் !

ஆற்றிலே போட்ட அந்தக் குழந்தை
படகிலே ராமன் படுத்துக் கிடந்த
மெத்தையில் வந்து சொத்தென விழுந்தது.
விழுந்த குழந்தை வீறிட் டலறத்
தாவி எடுத்துத் தழுவினான் ராமன் ;
தழுவிய குழந்தையைத் தடவிப் பார்த்தான்.
'அடிபட் டிருக்குமா ! அதிர்ச்சி மட்டுமோ !
உடலில் எங்கோ உரம்விழுந் திட்டதோ !
காயம் பட்டதோ ! கைகால் ஒடிந்ததோ !'
என்றெலாம் எண்ணி இரங்கி ஏங்கிக்
குருடனைப் போலக் குழந்தையை முழுதும்
தடவிப் பார்த்துத் தைரியம் அடைந்தான்.
பரிசலில் கிடந்த பழைய வேஷ்டியால்
குளிருக் காகக் குழந்தையைப் போர்த்து,
காற்றுப் படாமல் கைகளால் மூடி,
மார்புடன் அணைத்து, மற்ற ஆள்களை
ஏவினான் மேலே 'குழந்தையை எறிந்தது
யார்'எனப் பார்க்க. அவர்களும் அங்குப்போய்த்
தேடிப் பார்த்துத் திரும்பி வந்தனர்.
போட்டவர் யாரோ புலப்பட வில்லை.
குழந்தையை ராமன் குதுகுதுப் புடனே
ஆட்டித் தேற்ற ஆனதைச் செய்தான்.
கொஞ்சம் கொஞ்சமாய் அழுகை குறைந்து,
துள்ளுதல் ஓய்ந்து, தூங்கி விட்டது.
செய்வதொன் றின்றிச் சிந்தனை செய்தான்.
'எப்படி விழுந்ததோ ! எறிந்தவர் யாரோ !
கழுத்தில் சங்கிலி கனமாய் இருக்குது.
காதிலே என்னவோ கைக்குத் தட்டுது.
இடுப்பிலுந் தங்கமோ வெள்ளியோ இருக்குது.



நகையைத் திருட நடந்ததா யில்லை.
குடும்பப் பகைவர்கள் குழந்தையைக் கொல்லச்
செய்த வேலைபோல் தெரிகிற தெனக்கு.
எந்த ஊரோ ! எத்தனைத் தூரமோ !
யாருடைக் குழந்தையோ ! எப்படி அறிவது ?
எங்கே தேடி எவரிடம் கொடுப்பது ?
நல்ல வேளையாய்ப் புல்லில் விழுந்தது.
ஈசனே தந்தான் என்னிடம் இதனை.
என்வீடு கொண்டுபோய் என்னுடை மக்கள்
நாலுடன் அஞ்சாய் நானே வளர்ப்பேன்'
என்று தனக்குளே எண்ணி முடித்தான்.

✣ ✣ ✣

காலை விடியுமுன் காற்று நின்றது.
இருட்டும் கொஞ்சம் இருக்கிற பொழுதே
ஓடம் செலுத்த உத்தர விட்டான் ;
புலபுல வென்று விடியும் பொழுதில்
அக்கரை சேர்ந்தான் ; அவசர மாகக்
குழந்தை யோடுதன் குடிசையில் நுழைந்து,
**"மாரியம் மாள்"**எனும் மனைவியை அழைத்தான் ;
குறுநகைப் புடனே குழந்தையைக் காட்டிக்
கையிற் கொடுத்துக் கதையெலாம் சொன்னான்.
குழந்தையை வாங்கிக் குதூகலத் துடனே
மாரி யம்மாள் மார்போ டணைத்தாள்.
அவளுடை மக்கள் நால்வர். அவருள்
மூத்த குழந்தைகள் மூன்றும் ஆண்கள்.
கடைசிக் குழந்தை காளியம் மாளெனும்
ஏழு வயதுள இளம்பெண் ணாகும்.
வாங்கிய சிசுவின் வடிவெலாம் பார்த்து
மாரி யம்மாள் மகிழ்ந்து மயங்குவாள் ;

"கையும் காலும் கரணை கரணையாய்
நெய்யும் மாவும் நேகப் பிசைந்து,
தங்க நிறத்தை அதன்மேல் தடவி,
குங்குமச் சிவப்பும் கொஞ்சம் கூட்டிப்
பிடித்து வைத்த பிள்ளையார் போல,
கொடுத்து வைத்தவர் யாருடைக் குழந்தையோ !
மூக்கும் முழியும் முகவாய்க் கட்டையும்
பார்க்கப் பார்க்கக் கண்ணைப் பறிக்குது.
பசுந்து பசுந்து பால்வடி கின்றது !
ஒசந்த வீட்டு உறவாய்த் தெரியுது !
சீமான் வீட்டுச் சிசுவாய்த் தோணுது !
பூமான் செல்வப் பொருளாய்க் காணுது !
பார்த்திருந் தாலும் பசிதீர்ந் திடுமே !
காத்திருந் தாலும் கலிதீர்ந் திடுமே !
உச்சிமோந் தாலும் உள்ளங் குளிரும் !
வச்சிருந் தாலும் வருத்தம் போகுமே !
பணமிருந் தாலும், பவிசிருந் தாலும்
குணமிருந் தாலும், குலமிருந் தாலும்,
பட்டம் பதவிகள் பலஇருந் தாலும்,
சட்டம் பேசும் சமத்திருந் தாலும்,
எட்டும் பகையை எதிர்த்து வென்றிடத்
திட்டம் போடத் திறமிருந் தாலும்,
என்னதான் மாற்ற எதுஇருந் தாலும்,
தன்னதாம் என்று தழுவிக் கொள்ளஓர்
குழந்தைஇல் லாமல் கோயில் குளங்களில்
விழுந்து விழுந்து வேண்டுதல் செய்வார் ;
காசிரா மேச்வரம் காலால் நடப்பார் ;
ஜோசியன் வைத்தியன் சொன்னதைச் செய்வார் ;
மந்திரம் ஜெபிப்பார் ; பீடைகள் மாற்றும்
எந்திரம் கட்டுவார் ; எதையும் செய்வார் ;



எல்லாம் செய்தும் குழந்தையில் லாமல்
பொல்லா விதியெனப் புலம்புவார் புவியில்
சொத்து சுகங்களைத் தொடர்ந்திட வென்று
தத்துக் காயினும் தமக்கொரு மகவை
வாங்கி வளர்த்து வருத்தம் குறைந்து,
ஏங்கிய மனத்திற்கு இன்பமாய் எண்ணுவர்.
கூனோ குருடோ கோரம் குரூபமோ
மொண்டியோ முடமோ முழுதும் செவிடோ
கறுப்போ சிவப்போ களிமண் மூளையோ
குணமோ குரங்கோ குட்டிச் சுவரோ
ஆணோ பெண்ணோ அலியோ எனினும்
குழந்தை பெற்றிட எவரும் கோருவர்.
தான்பெற்ற தென்னினும், தனதல்ல வாயினும்
எத்தனைக் குழந்தை பெற்றவர் என்னினும்,
'குழந்தை'என் றாலே உள்ளம் குளிர்வார்.
'சிசு' எனில் எவர்க்கும் சித்தம் இரங்கும்.
'பிள்ளை' என் றிட்டால் பேயும் தாயாம்.
'பாலகர்' என்றால் பாவியும் பரியும்.
'மகவு'என் றிட்டால் மலருடன் மகிழ்வார்.
குழந்தையைக் கண்டால் கோபம் குறையும்.
சிசுவைப் பார்த்தால் தீமைகள் மறையும்.
பிள்ளையின் முன்னால் பிரியமே பிறக்கும்.
'பாலகர்' முன்னால் பகைமையும் பறக்கும்.
'மகவின்' எதிரே கல்மனம் மாறும்.
ஆதலால்,
இந்தக் குழந்தையை அப்படி எறிய
எந்தப் பாவியின் எண்ணந் துணிந்ததோ !
ஆடிப் பண்டிகை அடுத்த சமயம்
வெள்ளிக் கிழமை விடிகிற வேளையில்
நல்ல நாளிலே நம்வீடு வந்தது.

சீதேவி நம்மைத் தேடிவந் திட்டாள்.
நல்லது, நல்லது நாமே வளர்ப்போம்,
பக்கத்து வீட்டில் பசுமா டிருக்குது.
பார்வதி யம்மாள் 'பிள்ளைப் பால்'தரும்.
விளையாட்டுப் பேசி வேடிக்கை காட்டித்
தூக்கி வைத்துத் துணையா யிருக்கக்
காளி யம்மாள் கண்மணி இருக்கிறாள்.
இதற்கு வேண்டிய எல்லாச் சுகமும்
இங்கே நம்மிடம் இல்லாது போச்சா ?
ஐந்தாம் குழந்தையாய் ஆசையாய் வளர்ப்பேன்"
என்று குழந்தையை ஏந்தி மகிழ்ந்தாள்.
தூங்கிய குழந்தை துள்ளி விழித்தது ;
வேற்று முகங்களைப் பார்த்து வெருண்டது ;
அழுகையும் கொஞ்சம் ஆரம் பித்தது ;
பசியும் கலந்து பலமாய் அழுதது.
பிள்ளைகள் பெற்ற பெண்கள் அறிவார்
குழந்தை அழுகிற குறிப்பை. அதனால்
மாரி யம்மாள் மருண்டா ளில்லை ;
அங்கும் இங்கும் அலைந்து தேடிப்
பசுவின் பாலும் பழமும் பிட்டும்
வாங்கி ஊட்டி வருத்தம் மாற்றினாள்.
சிறுகச் சிறுகச் சிரித்தது குழந்தை.
'குழந்தையும் தெய்வமும் கொண்டாடும் பக்கம்'
என்று சொல்லும் பழமொழிக் கிணங்கப்
பழகிப் பழகிப் பயமும் தெளிந்து
ஏக்கம் குறைந்து இருந்தது குழந்தை.
மகிழ்ச்சியில் முழுகிய மாரியம் மாளும்
இரவில் குழந்தையை ஏணையில் இட்டுத்
தாய்மனத் தோடு தாலாட்டு கின்றாள் :

# தாலாட்டு

ஆராரோ ! ஆரிரரோ !
அம்மா !நீ கண்ணுறங்கு
பேரேதோ ! ஊரெதுவோ !
பெற்றவர்கள் யாரெவரோ !
சீராரும் காவேரித்
தேவி திருவருளால்
வாராமல் வந்துதித்த
மாமணியே கண்ணுறங்கு. (ஆ)

ஆழக் கரைபுரளும்
காவேரி ஆற்றருகே
ஏழைப் படகோட்டி
என்கணவன், ஆனாலும்
கூழைக் குடித்துறங்கும்
குடித்தனந்தான் என்றாலும்
கோழைகள் அல்லவம்மா
குறைச்சல்உனக் கேதுமில்லை. (ஆ)

நாளைக் கணக்கெண்ணி
நல்லநல்ல சம்பளத்தில்
ஆளை மிரட்டுகின்ற
அதிகாரம் இல்லையம்மா !
வேளைப்பொழு தில்லாமல்
வேலைசெய்யும் ஜீவனந்தான்
காளி குலதெய்வம்
காத்திடுவாள் கண்ணுறங்காய். (ஆ)

அதிகாரம் என்றுசொல்லி
அநியாயம் செய்தறியோம்.
சதிகாரத் தந்திரத்தால்
சம்பாதித் துண்பதில்லை.
துதிபாடிப் பொய்பேசிச்
சுகித்திருக்கும் சூதறியோம்.
கதிகேடு வந்துவிடக்
காரணங்கள் இல்லையம்மா ! (ஆ)

வாது வழக்கறியோம் ;
வம்புதும்பு செய்தறியோம் ;
சூது புரிந்தறியோம் ;
பொய்ச்சாட்சி சொன்னதில்லை.
நீதி நெறிதவறி
நிந்தைசொல்ல நின்றதில்லை.
ஏதும் ஒருகெடுதி
இங்குவர ஞாயமில்லை. (ஆ)

வேலையின்றிக் கூலிகொள்ளும்
வித்தைகளைக் கற்றறியோம்.
கூலியின்றி வேலைகொள்ளும்
கொடும்பாவம் செய்தறியோம்.
காலையென்றும் மாலையென்றும்
காலமின்றிப் பாடுபட்டு
நாலுபணம் வந்தாலும்
நல்லசுகம் செய்துவைப்போம். (ஆ)

தேடிப் புதைத்துவைத்து
வயிறாரத் தின்னாமல்
வாடிப் பசித்துநொந்து
வந்தவரை நிந்தைசொல்லி



ஓடி ஒளிந்துகொள்ளும்
உலுத்தரல்ல நாங்களம்மா !
நாடிஒரு தீம்புவர
ஞாயமில்லை இவ்விடத்தே. (ஆ)

கோவம் மிகுந்தாலும்
குத்துச்சண்டை வந்தாலும்
பாவம் பழிகளுக்குப்
பயந்தொதுங்கும் எங்களுக்குச்
சீவன் இருக்குமட்டும்
தேகம் உதவும்அம்மா !
தேவி துணையிருப்பாள்
தெள்ளமுதே கண்ணுறங்கு. (ஆ)

பள்ளிப் படிப்பறியோம்.
பட்டணத்துப் பேச்சறியோம்.
வெள்ளைத் துணியறியோம்.
வீண்பிலுக்குச் செய்தறியோம்.
கள்ளப் பிழைப்பறியோம்.
காவேரி சாட்சியம்மா !
உள்ளபடி இங்குனக்கு
ஒருகுறையும் இல்லையம்மா ! (ஆ)

# காவேரித் தெய்வம்

**(குழந்தை கிடைத்த குதூகலத்துடன் மாரியம்மாளும் அவளுடைய இனத்தாரும் ஆடிப் பண்டிகை கொண்டாடிக் காவேரி பூஜை செய்கிறார்கள்.)**

ஆடிப் பதினெட்டுப் பண்டிகைக் காவேரி
ஆற்றினைப் பூசித்துப் போற்றிடுவோம்.
கூடிப் பணிந்து குலதெய்வம் காத்திடக்
கும்பிடு வோமினித் துன்பமில்லை.

கடவுளை நேரில் கண்டதில்லை. அதைக்
கண்டவர் என்றவர் விண்டதில்லை.
அடைவரும் அந்தக் கடவுளும் காவேரி
ஆற்றின் பெருமையில் தோற்றுதுபார்.

வெள்ளப் பெருக்கினைப் பார்க்கையி லும்,அதன்
வேகத்தின் சத்தத்தைக் கேட்கையிலும்,
உள்ளம் திகைத்தொரு உண்மை அறிவினை
ஊட்டுது ; தெய்வத்தைக் காட்டுதுபார்.

ஆலம ரத்தையும் வேர்பறித்து, அதை
ஆட்டி உருட்டி அடித்துக்கொண்டு
காலனும் கண்டால் நடுங்க வருகின்ற
காட்சியும் யாருடைச் சூழ்ச்சியினால்.



காடும் மலையும் கிடுகிடுக்க, அந்தக்
காட்டு மிருகங்கள் ஓட்டமிட,
ஓடும் நதியிலே அத்தனைத் தண்ணீரை
ஊற்றுவதார் ? என்ற மாற்ற வரும்.

ஆனை சிறுத்தைகள் அஞ்சிப் பதுங்கிட
ஆட்டையும் மாட்டையும் அடித்துக்கொண்டு
சேனை யிலும்கடு வேகத்து டன்வரும்
சீக்கிரம் யாருடை ஆக்கினையோ !

மேட்டில் அணையென்று போட்ட சுவர்களில்
மெள்ளமெள் ளஅதன் கல்லசைக்கும்
ஓட்டத் துடன்வரும் ஊட்டத்தைக் கண்டுநம்
உள்ளத்தில் எண்ணங்கள் துள்ளுதுபார்.

நேற்று நடந்திட்ட மக்களின் பாதங்கள்
நீற்று நெருப்பெழக் கொப்புளித்த
ஆற்றிலே இன்றைக்கு அத்தனைத் தண்ணீர்
அப்படி வந்ததும் எப்படியோ !

வானகத் தில்வந்து மேகம் மழையென்று
வாரி யிறைத்ததண் ணீரல்லவோ
கானகம் சேர்மலைக் கல்லையும் உருட்டிக்
காவேரி போல்நதி ஓடுவது.

நீரின்றி மக்கள் நிலையுமுண் டோ ?அந்த
நீரைத் தருவதும் ஆறல்லவோ !
ஆறென்ற நீருக்கும் மேகங்கள் ஆதாரம்.
ஆகாயம் மேகத்துக் காதரவு.

ஆனதி னாலந்த வானத்தி லேஒரு
    அற்புத சக்தி இருக்கு மென்றே
வானத்தை யேதெய்வம் வாழும் இடமென்று
    வையகம் சொல்வதும் பொய்யல்லவே.

ஆனைகட் டியர சாண்டா லும்,பல
    ஆயிரம் வித்தைகள் கற்றாலும்,
சேனைகட் டிப்பகை வென்றா லும்,அவர்
    தின்னக் கொடுப்பாள் காவேரி.

அன்னம் அளிப்பவள் காவேரி, நல்ல
    ஆடை கொடுப்பவள் காவேரி.
இன்னும் மனிதர்க்கு வேண்டிய இன்பங்கள்
    யாவும் காவேரி யேதருவாள்.

விண்கொண்ட தெய்வத்தை நாமறியோம். சொல்லும்
    வேதம் புராணங்கள் பார்த்தறியோம்.
கண்கண்ட தெய்வம் காவேரி, நம்மைக்
    காத்திடு வாள்கஞ்சி வார்த்திடுவாள்.

தாய்மொழி தெய்வத் தமிழ்மொழி யாம்.அதைத்
    தந்த அகத்திய மாமுனிவன்
தூய்மைக் கமண்டல நீரென்று காவேரிச்
    சுத்தத்தைச் சொல்லித் துதித்திடுவார்.

யாருக்கு எப்படி ஆனாலும், இந்த
    ஆற்றங்க கரையில் வசிக்கு மெங்கள்
ஏருக்கு நீர்தந்து யாருக்கும் சோறூட்டும்
    எங்கள் குலதெய்வம் காவேரி.



காவேரித் தெய்வம் கொடுத்ததன் றோஇந்தக்
    கண்மணி யாகிய பெண்மணியாள் !
'காவேரி' என்றவள் பேரிட்டுக் காவேரி
    காத்திட வேண்டிநாம் கைதொழுவோம்.

தெய்வத் திருநதி காவேரி தந்திட்ட
    தெய்வக் குழந்தை இதுவாகும் ;
கைவைத்த பண்டங்கள் பொன்னாகும் ; இங்கே
    கால்வைத்த நேரம் கலிதீர்ந்தோம்.

கும்மி யடித்துத் துதித்திடு வோம் ;இந்தக்
    குழந்தைக்கு ஒன்றும் குறைச்சலின்றி
நம்மைப் படைத்திட்ட நாதன் திருவருள்
    நாடிடு வோம் ; துதி பாடிடுவோம்.

பொங்கல் படைத்துப் பணிந்திடு வோம் ; பல
    பூசைகள் போட்டு வணங்கிடுவோம் ;
மங்கள மாகவே காவேரி தந்திட்ட
    மகளை வளர்த்திட வேண்டிடுவோம்.

# திட்டம் எங்கே ? திறமையும் எங்கே ?

'யாரடா மேலே அழுவது யார் ?' எனக்
கூவிய அந்தக் குரலைக் கேட்டு
அங்கே குதிக்க அஞ்சிய கமலம்,
வேறோர் இடத்தில் ஆற்றில் விழுந்திடப்
பாறையை விட்டுப் பதைபதைத் திறங்கி
ஆற்றங் கரையின் அப்பால் நடந்தாள் ;
வீட்டை விட்டபின் பாறையை விடும்வரை
இருட்டு என்பது இன்னதென் றறியாள் ;
கல்லையும் முள்ளையும் கருதினா ளில்லை ;
காற்றின் வேகக் கடுமையும் காணாள் ;
களைப்போ இளைப்போ கடுகள வறியாள் ;
தனிவழி நடந்த தன்மையும் தெரியாள்.
அப்படி வந்தவள் அந்தக் கமலம்
அச்சம் புகுந்த அதிர்ச்சியி னாலே
குழந்தையை எறிந்த வருத்தமும் குத்த,
வெறியும் குறைந்து, வேகமும் குறைந்து,
கல்லும் முள்ளும் காலைக் கிழிக்க,
கறுத்த புதர்கள் நெஞ்சைக் கலக்க,
காற்றின் வேகம் கால்தள் ளாட,
பாறைக் கப்பால் பாதையின் அமைப்பைப்
பழக்கமோ ஒருதரம் பார்த்ததும் இல்லை,
ஆனதி னாலே அதிலே நடக்க
வழிதெரி யாத வாதையும் சேர,



பிள்ளையைப் பிரிந்த பெருந்துயர் பொங்கி,
உயிரை வெறுத்த உறுதியைத் தவிர
மற்றத் தெம்புகள் முற்றிலும் மறைந்து,
உள்ளமும் நொந்து உடலும் தளர்ந்து
ஆடி அசைந்து அரைமைல் தூரம்
அந்தப் பாறைக்கு அப்பாற் சென்று,
ஆற்றை மறைத்த அடர்ந்த மரங்கள்
இல்லாத இடத்தில் இறங்கினாள் படுகையில்.
சிறுசிறு பாறைகள் சிதறிப் பரவிக்
கல்லுகள் நிறைந்த கரையின் ஓரமாய்
நீரில் மறைந்து நிலைதெரி யாதென
பரல்களின் மீதும், பாறை இடுக்கிலும்,
காலை வைத்துக் கவ்வி நடந்து
தட்டுக் கெட்டுத் தடுமா றிப்போய்
ஆத்திரத் தோடு ஆற்றில் விழுந்தாள்.

✣ ✣ ✣

விழுந்த இடத்தில் வேகமும் இல்லை.
அவளை அமுக்க ஆழமும் இல்லை.
கையும் காலும் கல்லில் இடிக்க,
மேனியும் ஆடையும் மேலே மிதக்க,
அவிழ்ந்த கூந்தல் அலையுடன் அலைய,
கழுத்தும் முகமும் குப்புறக் கவிழ்ந்து
தலையை மட்டும் தண்ணீர் மூட,
முழுகிக் கிடந்தாள் மூச்சைப் பிடித்து,
இயற்கையின் வேகம் இழுத்து விட்டது.
தன்னை மீறித் தலையை நிமிர்ந்தாள்.
மூக்கையும் மீறி மூச்சு வந்தது.
உடலும் நின்றது ; உயிரும் இருந்தது.
ஆற்றில் விழுந்ததும் அழிந்தபா டில்லை.

மகளின் நினைப்பு மார்பைப் பிளக்க,
மாதவன் தந்த வேதனை மருட்ட,
சாகா திருப்பது சங்கடப் படுத்த,
ஆழமும் வேகமும் அதிகமா யுள்ள
இன்னோர் இடத்தில் விழுந்திட எண்ணித்
தடவித் தடவித் தத்தி நடந்து
ஓடும் தண்ணீர் உள்ள இடத்தில்
தலைவிரி கோலமாய்த் தாவி விழுந்தாள்.
அப்படி விழுந்த அந்தக் கணத்தில்
புதிய வெள்ளம் புகுந்தத னாலே
ஆற்றுப் பெருக்கம் அதிகப் பட்டுப்
புதுப்புது அலைகள் புரண்டு வந்தன.
காற்றின் வேகமும் கலந்து வீசிய
அந்த அலைகள் அவளைக் கொண்டுபோய்
ஆற்றின் முடுக்கில் அங்கே இருந்தஓர்
வட்டப் பாறைமேல் வாரி எறிந்தன.
அலையோடு வந்த அந்தக் கமலம்
பாறையின் இடுக்கில் பட்டுக் கொண்டாள்.
வந்த அலைகள் வடிந்தன ஆற்றில்.
ஆற்றுப் பெருக்கம் அத்துடன் குறைந்து
திரும்பவும் தண்ணீர் தீண்டவே இல்லை.
விசிய அலைகளின் வேகத் தாலே
பாறையில் அவளைப் பலமாய் மோதிக்
கமலம் மண்டையில் காயமும் பட்டது.
பாறையில் இடுக்கிலே படுத்தவள் போலக்
காயம் பட்டதில் ரத்தமும் கசிய,
ஊறிய புடைவை காற்றில் உலர,
அவிழ்ந்த கூந்தல் அலைகளாய்க் கிடக்க,
வாயிலும் மூக்கிலும் விடிந்த தண்ணீர்



முட்டிக் கிளம்பும் மூச்சொடு முரண்டி
கறுமுறு வென்று காசம் காட்ட,
கல்லின் மேலே கிடந்தாள் கமலம்.
என்னே மனிதர் எண்ணுவ தெல்லாம் !
எப்படி எண்ணி எப்படி முடிந்தது !
நாமொன்று நினைத்தால் நமக்குத் தெரியா
வேறொன்று அதனை வேறாகச் செய்து
ஒன்றை நினைக்கின் ஒன்றாய் முடிவதேன் ?
கையிற் கிடைத்த கவளச் சோறும்
வாயில் விழுமுன் வழியில் தவறும் !
கமலம் வந்த காரியம் எங்கே !
போட்ட திட்டம் எப்படிப் போனது !
எங்கே நினைத்து எங்கே விழுந்தாள் !
குழந்தையும் தானும் ஆற்றில் குதித்துச்
சாகத் துணிந்து வேகமாய் வந்தவள்
ஆற்றங் கரையில் அங்கே யிருந்து
குழந்தை யோடு குதித்து விடாமல்
குழந்தையைப் போட்டுப் பின்னால் குதிக்க
எண்ணம் வந்தது என்ன காரணம் ?
உயிரையும் இழக்க உள்ளம் துணிந்தவள்,
'யாரடா மேலே ? அழுவதார் ?' என்றதைக்
கேட்டு நடுங்கிக் கிலிபிடித் தவளாய்
ஓடச் செய்த உணர்ச்சியும் எதனால் ?
வேறே இடத்தில் விழுந்திட்ட அவளை
அலைகள் புரட்டி அப்படிக் கொண்டுபோய்ப்
பாறையின் மேலே படுக்க வைக்க
அதற்கென் றங்கே அந்த வேளையில்
புதிய வெள்ளம் புகுந்திட நேர்ந்ததேன் ?
நினைக்கும் தன்மை நீருக்கும் உண்டோ ?

சாகவும் கூட உரிமையும் சக்தியும்
நமக்கிலை என்ற உண்மையை நாட்ட
வல்லான் யாரோ வகுத்த திட்டமோ ?
தன்னுடைப் பலமும், தன்னை எதிர்க்கும்
எதிரியின் பலமும் இவ்வள வென்று
கணக்குப் போட்டுக் கூட்டிக் கழித்துப்
பெருக்கி வகுத்து, வகுத்துப் பெருக்கி,
தேர்ந்து தெளிந்து திட்டம் போட்டு,
பற்பல நாட்டைப் படையெடுத் துப்போய்
அடித்துப் பிடித்து அங்குள மக்களைச்
சுட்டுக் கொன்று சூறை யாடிய
வெற்றி மாலை கழுத்தில் விழுமுன்
வெட்டுக் கத்தியே கழுத்தில் விழுந்திட,
தன்னுடைப் படையே தன்னைக் கொல்ல,
மாண்டு மறைந்த வீரரும் மன்னரும்
போட்ட திட்டம் போனது எங்கே ?
அந்நிய நாட்டை அடிமைப் படுத்தி
அங்கு மக்கள் சோற்றுக் கலைய,
தம்முடை நாடும் தாமும் தமர்களும்
தின்று கொழுத்துச் சுகமாய்த் திரிய
அடிமைப் படுத்திய அங்குள்ள மக்களை
ஒன்று சேரவும் ஒட்டா விதமாய்த்
தனித்தனிக் கும்பலைத் தட்டிக் கொடுத்து,
கொழுத்த சம்பளக் கூலி கொடுத்து,
நாட்டை விற்று நல்லசோ றுண்ணக்
காட்டிக் கொடுக்கிற கயவரின் துணையால்,
குற்றங் காட்டி அடித்துக் கூறி,
அறவழி காட்டும் அந்த ணாளரை,
சத்தியம் பேசும் சாது மக்களை,
சீறி அடக்கியும் சிறையில் தள்ளியும்



உலகமும் தாங்களும் உள்ள வரையிலும்
பரம்பரை யாகப் பாத்தியம் கூறிச்
சுகித்து வாழும் சூழ்ச்சிகள் எண்ணி,
அரசியல் தந்திரம் அனைத்தையும் சேர்த்துத்
திட்டம் போடும் திறமை மிகுந்த
எத்தனை யோபல ஏகாதி பத்தியம்
மண்ணிற் புதைந்து மறைந்து போவதைப்
படித்தும் கேட்டும் பார்த்தும் வருகிறோம்.
திட்டம் எங்கே ? திறமையும் எங்கே ?

✤ ✤ ✤

குடும்பச் சொத்துகள் குறையா திருக்கக்
கோயில் சத்திரம் குளங்களுக் காகத்
தருமம் என்று சாசனம் செய்து,
தன்னுடைப் பரம்பரை தன்னிலே பிறக்கும்
அவர்களே என்றும் ஆண்டு வரும்படி
பத்திர மாகப் பத்திரம் எழுதி
முத்திரை யோடு முடித்து வைத்தும்,
தருமம் என்பதும் தாறுமா றாகிக்
கள்ளிலும் சூதிலும் காம வெறியிலும்
கட்சிச் சண்டைகள் கண்ட வழக்கிலும்
அழிவதைக் கண்டு அதிகா ரத்தினை
மற்றுள ஊரார் மாற்றி விடுவதும்,
அல்லது, அந்தச் சொத்தினை ஆளவும்
அந்தச் சந்ததி மைந்தனில் லாமல்
வேறே யாரோ விவகா ரங்களைத்
தொடுத்துச் சொத்தினைத் தொடர்வதும் உண்டு.
அன்றியும், அதனை அரசாங் கத்தார்
பறிமுதல் செய்வதும் பார்த்தோ மதனால்,
முத்திரை போட்ட பத்திரம் எங்கே ?
திறம்பட வகுத்த திட்டமும் எங்கே ?

✤ ✤ ✤

விஞ்ஞா னத்தின் விரிந்த அறிவுடன்
இயற்கையின் விதிகளை முற்றும் இணைத்து,
சக்தி சாஸ்திரம் சரியாய்ச் சேர்த்து,
அணுஅணு வாக அளந்து செய்து,
கொஞ்சம் கூட க் குற்றமில் லாமல்,
குறித்த வேளையில் குறிதவ றாமல்,
எண்ணிய படியே எதையும் செய்யப்
பாடு பட்டுப் பண்ணி முடித்து,
பரிட்சை பலமுறை செய்தும் பார்த்த
எந்திரப் பொறிகளில் ஏறிக் கொண்டு,
எதிரியை மிகவும் எளிதிலே கொல்லத்
திறமை வாய்ந்த திட்டத் துடனே
வீரம் கூறிச் சென்றிடும் வீரன்
இடையிலே தன்னுடை எந்திரம் கெட்டு,
தந்திரம் விழுந்து தானும் மடிந்து,
விழுந்த இடத்தையும் வேறே யாரும்
கண்டு பிடிப்பதும் கஷ்டமாய் விடுகிற
நிகழ்ச்சிகள் எத்தனை நித்தமும் பார்த்தோம் !
மந்திரம் எங்கே ? தந்திரம் எங்கே ?
திறமை மிகுந்த திட்டமும் எங்கே ?
வருஷக் கணக்கில் வருந்தி எண்ணித்
தீர்த்து முடித்துத் திட்டமும் செய்யினும்
எண்ணுவ தொன்றே மனித இஷ்டமாய்க்
காரியம் முடிக்கக் கர்த்தா அல்லவே !

✤ ✤ ✤

சேலூர் என்பது சிறிய கிராமம்.
காவிரி யாற்றின் கரைக்கு அருகில்
கூப்பிடு தூரம் குறைய உள்ளது.
வலைஞர்கள் பலபேர் வாழும் சிறுவூர்.



அங்குள பலரும் ஆற்றில் அலைந்து
மீன்களைப் பிடித்து விற்றுப் பிழைப்பவர்.
அவர்களுக் கெல்லாம் அதிபன் போன்றவன்
**வீரன்** என்பவன் ; விநய முள்ளவன்.
விடியும் வேளையில் வீரனும் சிலரும்
ஆற்றின் வெள்ளம் அடங்கிய பின்பு
படுகை களிலே படிந்திடும் நீரில்
வெள்ளத் துடனே வந்து விழுந்துள
மீன்களைப் பிடிக்க மிகுந்த ஆசையால்
வலையும் கையுமாய் வந்தனர் கரைக்கு.
படுகையில் இறங்குமுன் பாறை தெரிந்தது.
பாறையில் என்னவோ பளிச்செனப் பட்டது,
வேகமாய் ஓடினான் வீரன் அங்கே ;
கதியற்றுக் கிடந்த கமலத்தைக் கண்டான் ;
துள்ளித் துடித்துத் தொட்டுப் பார்த்தான் ;
மூக்கைத் தீண்டி மூச்சை நாடினான் ;
உடலைத் தொட்டது உறுத்திய தாலோ
தலையைப் புரட்டினான் சலனம் தெரிந்தது.
'அம்மா, அம்மா, அம்மா' என்று
ஆன மட்டிலும் அழைத்துப் பார்த்தான் ;
மெதுவாய்த் தோளை மெல்லப் பிடித்து
அசைத்துக் கொஞ்சம் ஆட்டியும் பார்த்தான்.
மூச்சைத் தவிரக் கண்ணை விழித்திலள்.
பேச்சுக் கான பிரக்ஞையும் இல்லை.
காதிலே வயிரக் கம்மல் ஜொலிக்க,
கழுத்திலே ரத்தின வடங்கள் காண,
வளைகளின் வரிசை கைகளில் வயங்க,
விரல்களில் இரண்டொரு மோதிரம் விளங்க,
இடுப்பிலும் மார்பிலும் இறுக்கிக் கட்டிய

பட்டுப் புடைவையின் பளபளப் போடும்
மூர்ச்சையாய்க் கிடந்த மோகன வடிவைப்
பார்த்துப் பார்த்துப் பச்சாத் தாபமாய்
நெடுமூச்சு விட்டு வீரன் நினைப்பான் ;
தன்னுடை மனைவி முன்னே ஒருதரம்
கோபங் கொண்டு ஆற்றில் குதித்த
கதையை நினைத்துக் கலங்கிய கருத்துடன்,
'பார்த்தால் ஐயோ ! பட்டணக் கரையின்
படித்த பெண்ணாய்த் தெரியுதே பாவம் !
பணமும் காசும் பலமா யுள்ளதாய்ப்
பண்ணையம் பெருத்த பெண்ணாய் இருக்குதே !
ஏழை எளியவர் எங்களைப் போலப்
படிப்பும் பட்டணப் பழக்கமில் லாத
பட்டிக் காட்டார் பெண்டுகள் தானே
கோபம் வந்தால் ஆற்றிலே குதிப்பார் !
அப்படி இருக்குமா ? எப்படி ஆனதோ ?
ஆற்றின் வெள்ளம் அடித்து வந்துதான்
இப்படிப் போட்டதாய் இருக்க வேணும்.
தவறி விழுந்ததோ ! தானே விழுந்ததோ !
எப்படி யிருந்தால் நமக்கதில் என்ன ?
ஆபத்து வேளையில் அதைநினைப் பானேன் ?
உடனே கொண்டுபோய் ஊரில் வைத்துப்
பண்டிதம் செய்து, பாடமும் போட்டு,
மயக்கம் தெளிந்தபின் மற்றதைப் பார்ப்போம்'
நிமிஷத் துக்குள் இப்படி நினைத்து,
வலைகளை யெல்லாம் வாங்கி மடித்து
ஒன்றாய்ச் சேர்த்து, ஒப்புர வாக்கி
மெத்தென விரித்து, மெதுவாய் அதிலே
தூக்கி வைத்துத் தூளிபோல் எடுத்து



ஐந்தாறு பேர்கள் ஆடாமல் பிடித்து
வீரன் வீட்டில் விரைவில் சேர்த்தனர்.
காற்றோட்ட மாகக் கட்டிலிற் போட்டு
நானா விதமாய் நாட்டு வைத்தியம்
வேப்பிலைப் பாடமும் வேணது செய்தார்.
மூர்ச்சை தெளிந்து கண்ணை விழித்தாள்.
முன்னால் நின்றது மகளின் திருமுகம் !
"ஐயோ ! மகளே ! ஆற்றிலா போட்டேன் ?
எங்கே ? மகளே ! எங்கே இருக்கிறாய் ?
உன்னைப் பிரிந்தும் உயிரோ டிருக்கிறேன் !
என்னைக் கொல்ல எமனும் இல்லையோ !
பாதகி யானேன் ! பழிகாரி யானேன் !
காதகி என்னைக் காட்டிலும் உண்டோ ?
மகளே ! மகளே ! மகளே !" என்று
மறுபடி யுமவள் மயக்க மடைந்தாள்.
**நல்லாள்** என்னும் வீரன் நாயகி
பணிவிடை மிகவும் பரிவுடன் செய்து
தடவிக் கொடுத்துத் தைரியம் சொல்லிப்
பாலைக் கொஞ்சம் பருகப் பண்ணினாள்.
வெகுநே ரம்போய் விழித்தாள் கமலம்.
மாதவன் உருவம் மலர்ந்தது கண்முன்.
சீறிச் சினந்த சிடுசிடுப் பல்ல ;
வருத்தம் மூட்டிய வதனம் அல்ல ;
வெறுத்துப் பேசிய வெம்முகம் அல்ல ;
மகளை மறுத்த மரமூஞ்சி யல்ல ;
குழந்தையைத் தள்ளிய கோரமும் அல்ல ;
அப்போ தங்கே அவளுக்கு முன்னால்
உருவ மாகிக் கண்ணை உறுத்திய
மாதவன் உருவம் மணந்திடும் முன்னால்

கலியா ணத்தையும் கருதிடும் முன்பு,
இருவரும் முதல்முதல் எதிர்ப்பட்ட போது
கண்ணைக் காட்டிலும் கருத்தைக் கவர்ந்த
அந்த மாதவன், அவன்வந்து நிற்பதாய்,
"நாதா ! நாதா ! நான்பெரும் பாவி !
நீங்கள் என்னைச் சினந்து நீத்து
வெறுத்து விடும்படி விதியும் இருந்ததே !
ஐயோ ! ஐயோ ! ஐயோ !" என்று
மீண்டும் கமலம் மெய்ம்மறந் திட்டாள்.
வீரனும் மனைவியும் வியந்து வெகுண்டு
வியப்புடன் செய்த விதவித மான
முயற்சிகள் பலவும் முற்றிலும் பலித்துச்
சிறுகச் சிறுகச் சித்தம் தெளிந்து
மப்பு மயக்கம் யாவும் மாறின.
கலக்கமில் லாமல் கண்ணைத் திறந்து,
தன்னிலை தெரிந்து, தைரியம் வந்து,
ஊக்கமும் ஊறி எழுந்துஉட் கார்ந்தாள் ;
தன்னையே பார்த்தாள் ; தரையைப் பார்த்தாள் ;
சுற்றிலும் தன்னைச் சூழ்ந்த பேரையும்
குடிசை வீட்டையும் கூரையைப் பார்த்தாள் ;
தலையில் வலித்த புண்ணைத் தடவினாள் ;
ஏவலாள் போல எதிரில் நின்ற
வீரன் முகத்தை விருப்புடன் பார்த்தாள் ;
அண்டையில் தன்னை அணைத்து நின்ற
நல்லாள் முகத்தை நயந்து நோக்கினாள் ;
"யாரம் மாநீ ? யாருடைய வீடு ?
எப்படி வந்தேன் இங்கே ?" என்றாள்.
வீரன் எல்லா விவரமும் சொன்னான் ;
கமலம் கேட்டாள். கண்ணீர் துளித்து,



இருகரங் குவித்து, இருவர் முகத்தையும்
மாறி மாறிப் பார்த்து வணங்கி,
தலையைக் குனிந்து தன்னை மறந்து
அழுதாள், கொஞ்சம் ஆத்திரம் தீர.
நல்லாள் மிகவும் நயந்து நயந்து
தொழுது வணங்கித் துன்பம் துடைத்துப்
பேசிய சொற்களால் பெரிதும் தேறி,
கண்ணைத் துடைத்துக் கவலையை ஒதுக்கி,
"இங்கே இருக்கும் உங்களை யெல்லாம்
கெஞ்சி மிகவும் கேட்டுக் கொள்கிறேன்.
இப்படி இங்கே நான்இருக் கின்றதைத்
திருவனம் உள்ளவர் எவரும் தெரிந்திடக்
கூடாது ; உங்களைக் கும்பிடு கின்றேன்"
என்று கமலம் இருகரங் கூப்பினாள்.
"சத்தியம், எங்கள் சாமி சாக்கியாய்ச்
சொல்லவே மாட்டோம், சுத்தமாய் நம்பலாம்"
என்றனர் அங்கே இருந்தவ ரெல்லாம்.

..................................

இடுப்பில் முன்னே இறுக்கிக் கட்டிய
பாதி உலர்ந்த பட்டுப் புடைவை
நீரில் நனைந்தது இடுப்பை நெருக்க,
தளர்த்திட எண்ணித் தடவினாள் இடுப்பை.
மூலையின் சீலையின் முந்தியில் முடிந்து
முன்னே செருகிய முடிச்சுப் பட்டது ;
**ராகவன் எழுதிய ரகசியக் கடிதம்.**
மெள்ள அவிழ்த்து மெதுவாய் எடுத்துக்
கையிற் பிடித்துக் காய வைத்தபின்
மறுபடி யும்அதை மடித்து மிகவும்
பவித்திர மாக பத்திரப் படுத்தினாள்.

# ராகவன் முயற்சி

மாதவன் தன்னுடை மனைவியைத் தேடி
ராகவன் மனைக்குப் போன ராத்திரி
'அவசர வேலையாய் அயலூர் போவதாய்
ரயிலுக்குப் போனான் ராகவன்' என்று
அவனுடைத் தாயார் சொன்னதை அறிவோம்.
அப்படி உண்மையில் அயலூர் போனவன்
தினங்கள் நான்கில் திரும்பி வந்தான்.
அணியூர் என்கிற அந்த ஸ்டேஷனில்
ரயிலில் வந்து ராகவன் இறங்கினான் ;
ஆற்றைக் கடக்கத் துறையை அடைந்தான்.
ஓடம் ஓட்டுவோர் ஒருவரும் இல்லை.
படகுக் காரனைப் பார்ப்பதற் காகப்
பரிசல் காரனின் குடிசைகள் பக்கமாய்ச்
சென்றவன், உடனே திடுக்கிட்டு நின்றான் ;
எதிர்பார்க் காதது என்னவோ ஒன்று
கண்ணிற் பட்டதால் கவனம் செலுத்தி
உள்ளம் திகைத்து உற்றுப் பார்த்தான்.
குடிசையின் அருகில் குழந்தையை இடுக்கி
யாரோ ஒருத்தி அங்கே இருந்தாள்.
அந்த இடத்தில் அத்தனை அழகிய
குழந்தை இருந்ததைக் குறிப்பிட நேர்ந்தது.
கமலம் குழந்தைபோற் காணப் பட்டது.
உற்று நோக்கினான் ; உறுதியாய் நம்பிக்
'கமலம் பெற்றது, கண்மணிப் பெண்ணிது



இங்கே இருக்கிற அதிசயம் என்ன ?
கேட்போம்' என்று கிட்டே போனான்.
அயலான் யாரோ அப்படி நின்று
உற்றுப் பார்த்ததை உணர்ந்து விட்டதால்
ஐயுற வடைந்து, அச்சமும் உதித்து,
குழந்தையைக் கொண்டு குடிசைகள் மத்தியில்
மாரி யாத்தாள் விரைவில் மறைந்தாள்.
வந்த ராகவன் குடிசையின் வாசலில்
நின்றவர் தங்களை நெருங்கிக் கேட்டான்.
உள்ளதைச் சொல்வார் ஒருவரும் இல்லை.
'புகுந்தவன் ஒருகால் போலீஸ் காரனோ !'
என்று பயந்தே எவரும் பேசிலர்.
உள்ளே இருந்து ஓடத் தலைவன்
ராமன் வந்தான். ராகவன் கேட்டான்.
"அந்தக் குழந்தை அருகே வசிக்கிற
பெரிய மனிதர் பெற்றது" என்றான்.
"அதைநான் பார்க்க ஆசைப் படுகிறேன் ;
கொஞ்சம் அந்தக் குழந்தையைக் காட்டு"
என்று ராகவன் இரக்கமாய்க் கேட்டான்.
"ஊரார் பிள்ளையை உனக்குக் காட்ட
நானா அதற்கு நாதன் ஐயா ?
வேணு மானால் மாந்தோப்பு வீட்டில்
நீங்களே போனால் நேராய்ப் பார்க்கலாம்.
அவசர மாகநான் அக்கரை போகிறேன்.
பரிசிலைத் தள்ளும் பயல்கள் இல்லை.
நானே அதைப்போய் நடத்த வேணும்.
வருவதா யிருந்தால் வாங்கோ போகலாம்"
என்று ராமன் இணைத்துச் சொல்லிப்
பரிசல் துறையைப் பார்த்து நடந்தான்.

'அந்தப் பரிசலை விட்டால் அப்புறம்
அடுத்த பரிசலைத் தள்ளவும் ஆள்கள்
இல்லையே' என்பதை எண்ணிய ராகவன்
ஆற்றைத் தாண்டும் அவசர ஆசையால்,
'கமலம் குழந்தையைப் போலவே காணுது,
யாருடைக் குழந்தையோ ! அதனைப் போலவே
இருக்கிற வேறொரு குழந்தையாய் இருக்குமோ ?'
எப்படி யாயினும் இப்படி அழகிய
குழந்தை இந்தக் குடிசையில் இருப்பது
விந்தைதான்' என்று வியந்து கொண்டே
ஓடத்தில் ஏறி ஊருக்குப் போனான்.

✤ ✤ ✤

மாதவன் வந்ததை மாதா சொன்னாள்
கமலம் எங்கோ காணாது போனதை
மாதவன் வெளியிட மறைத்தான் எனினும்
கமலமும் குழந்தையும் காணாமற் போனதே
ஊரிலே எங்கும் ஓமலிப் பாக
இருந்ததை ராகவன் எல்லாம் அறிந்தான்.
அந்தக் கணமே 'அணியூர்த் துறையில்
கமலம் குழந்தைபோல் கண்டதை' நினைத்தான்.
மாதவன் வீடாம் மாளிகை தன்னில்
வேலைக் காரர்கள் வெகுபேர் உண்டு.
அவர்கள் அனைவரும் ராகவன் அன்பர்.
அவர்களுள் ஒருவன் அவனிடம் வந்து
மாதவன் தன்னுடை மனையில் அடிக்கடி
'கமலம் பெரியதோர் கள்ளியாய்ப் போனாள்.
ராகவன் பொல்லாத ராஸ்கல்' என்று
உரைத்ததைச் சொல்லி உஷார்ப்ப டுத்தினான்.
அதையும் கேட்டபின் அனுமா னத்தினால்



கமலம் மறைந்ததன் காரணம் கண்ட
ராகவன் மனத்தில் ரணமுண் டானது.
மனக்கண் முன்னால் மலர்ந்தாள் கமலம்.
அவளை நினைத்து அழுதான் ; தொழுதான் ;
பித்தனைப் போல என்னவோ பேசினான் ;
உரைதடு மாறி ஓய்ந்து சாய்ந்தான் ;
உடனே எழுந்து உறுதி பண்ணினான் ;
எப்படி யாவது கமலம் இருப்பிடம்
கண்டு பிடித்துக் காணத் துடித்தான்.
'அங்கே பார்த்தது அந்தக் குழந்தைதான்.
குழந்தையைக் கண்ட குடிசைகள் இடையில்
தனியே சென்றால் தந்திர மாகத்
தக்க வெகுமதி பணமாய்த் தந்து
அங்கே ஒருவரை உளவாய் அடைந்து
முயன்றால் அறிந்திட முடியும்' என்று
வேண்டிய பணத்துடன் வீட்டை விட்டான்.

# கைமாறல்

அணியூர் ஆற்றங் கரையின் அருகிலே
பரிசல் காரர்கள் வசிக்கிற பக்கமாய்க்
குடிசைகள் தாண்டிக் கொஞ்சதூ ரத்தில்
மாந்தோப்பு ஒன்று. அதிலொரு மாளிகை.
**"முத்துக் குமார சாமி முதலியார்**
பங்களா" என்றால் பலரும் அறிவார்.
அணியூர்க் கிராமம் ஆற்றுப் பாசனம்.
ஐந்நூறு ஏக்கரா அவருடை ஆஸ்தி.
விவசா யத்துடன் வியாபாரம் உண்டு.
சென்னையில் வாணிபம் செய்வதற் காகப்
பத்துப் பதினைந்து பங்களா சொந்தம்.
பாதிநாள் இங்கே பாதிநாள் சென்னையில்
வசிப்பது அவருடை வழக்க மாகும்.
பார்வதி அம்மாள் அவருடைப் பத்தினி,
முதலியார் வயது ஐம்பத்து மூன்று.
**பார்வதி யம்மாள்** பத்துக் குறைச்சல்.
இரண்டு குழந்தைகள் பிறந்து இறந்தன.
மூன்று கர்ப்பம் முற்றா தழிந்தன.
குழந்தை யில்லாத ஒன்றே குறைச்சல்.
தானமும் தருமமும் தளரா து செய்தார்.
இமய மலைமுதல் இலங்கை இறுதியாய்ப்
பார்க்காத ஸ்தலங்கள் பாக்கி இல்லை.
பிள்ளையில் லாமல் பெரிதும் வருந்துவர்.
ஏழை எளியவர் குழந்தையென் றாலும்



பார்த்து மகிழ்வாள் பார்வதி யம்மாள் ;
வாரி யெடுத்து வைத்துக் கொஞ்சுவாள் ;
தின்பண் டங்களைத் தினமும் கொடுப்பாள் ;
எந்தநே ரத்திலும் எவர்கேட் டாலும்
'பிள்ளைப் பால்'வெகு பிரியமாய்த் தருவாள்.
வறியவர் மகிழ்ந்து வாழ்த்தி வணங்கும்
உயர்ந்த குணமுள உத்தமி பார்வதி.

✣ ✣ ✣

ஆற்றிலே கிடைத்த அருமைக் குழந்தையை
இடுப்பில் இடுக்கி, இன்பம் பொங்க,
மாரி யம்மாள் மறுநாள் மாலையில்
பாலுக் காகஓர் பாத்திரத் தோடு
பார்வதி யம்மாள் பங்களா சென்றாள்.
பார்வதி யம்மாள் குழந்தையைப் பார்த்தாள் ;
கண்ணைக் கவர்ந்த அழகைக் கண்டு
ஓடி எடுத்து உச்சி மோந்தாள் ;
பார்த்துப் பார்த்துப் பரவச மடைந்து
உள்ளம் குளிர்ந்து உவகை பெருகி,
"என்னடி மாரி, ஏதுஇக் குழந்தை ?
இப்படிக் குழந்தை இந்த ஊரிலே
எந்த வீட்டிலும் இல்லையே !" என்றாள்.
மாரி யாத்தாள் உண்மையை மறைக்க
முடியா தவளாய் முற்றிலும் மொழிந்தாள்.
அனைத்தும் கேட்ட பார்வதி யம்மாள்
அதிசயப் பட்டு ஆசையும் மிகுந்து,
'மனத்துக் கினிய மாரியம் மாளே !
இத்தனைப் பணமும் காசும் இருந்தும்
குழந்தையில் லாத கொடுமையை எண்ணி
நாங்கள் படுந்துயர் நன்றாய் அறிவாய்.

உனக்கோ குழந்தைகள் நாலுபேர் உண்டு.
இந்தக் குழந்தையை எனக்குத் தந்தால்
உன்பேர் சொல்லித் துயரம் ஒழிவேன் :
ஆசையாய் வளர்த்து ஆத்திரம் தீருவேன்.
உனக்கு ரொம்பவும் புண்ணியம் உண்டு.
என்மேல் இரக்கமாய் என்னிடம் தந்திடு.
உயிருள்ள வரையிலும் உன்னை மறவேன்.
நீயே வளர்ப்பதாய் நினைத்துக் கொண்டு
இங்கே குழந்தையை இருக்க விட்டிடு.
பணமோ, காசோ, பண்ணைக்கு நிலமோ,
மாடோ, கன்றோ, மற்றளப் பொருளோ,
எதைக்கேட் டாலும் இச்சைப் படிக்குநான்
கொடுக்கிறேன்" என்று பார்வதி கூறினாள்.
மாரி யாத்தாள் மறுமொழி சொல்லுவாள் :
"அம்மா ! அம்மா ! அதுசரி யாகுமா ?
காவேரித் தேவி கையிலே தந்தது
தேடி என்னிடம் தெய்வமே கொடுத்த
குழந்தையை விற்பது கொடும்பாவம் அம்மா !
எத்தனை நாங்கள் ஏழையா னாலும்
பிள்ளை விற்றா பிழைக்க வேணும் ?
அப்படிக் கேட்பது நியாயமா அம்மா ?"
என்று சொல்லிக் குழந்தையை எடுத்தாள்.
பார்வதி யம்மாள் பதில்பே சாமல்
குழந்தையை அவளிடம் கொடுத்து விட்டுப்
'பிள்ளைப் பாலை'ப் பிரியமாய்க் கொடுத்தாள்.
வாங்கிக் கொண்டு மாரி மறைந்தாள்.
பார்த்த குழந்தை பார்வதி யம்மாள்
மனத்தை விட்டு மறையவே இல்லை.
எண்ணிக் கொண்டே இருக்கும் போது



முத்துக் குமார முதலியார் வந்தார்
உடனே அவரிடம் உரைத்தாள் பார்வதி.
குழந்தையில் லாத குறையைப் பற்றிய
ஆசையை யெல்லாம் அடியொடு விட்டு,
மறந்துபோ யிருந்த வருத்த மெல்லாம்
மீண்டும் தோன்றி மிகவும் கலக்க,
முத்துக் குமார முதலியா ருக்கும்
வாங்கி வளர்த்திட ஆசை வலுத்தது
உடனே வேலையாள் ஒருவனை அனுப்பி
அவசர மாக ராமனை அழைத்தார்
வந்தான் ராமன் ; வணங்கி நின்றான்
'ராமா ! எனக்குநீ வெகுநல்ல நண்பன்
உன்னால் எனக்கொரு உதவி வேண்டும்.
நாலு ஏக்கரா நன்செய் நிலமும்,
ஆயிரம் ரூபாய் ரொக்கமும், அத்துடன்
காளை மாடுகள் கறவைப் பசுக்களும்
எல்லாங் கொடுத்து இப்போ தேஉனைப்
பண்ணையக் காரனாய்ப் பண்ணி யாச்சுது.
நாளையி லிருந்து நல்ல சுகத்துடன்
குடும்பமும் நீயும் குறைச்சலில் லாமல்
இருக்கும் படியே ஈசன் அருள்வார்.
எனக்குநீ செய்வது என்ன வென்றால்
குழந்தை யில்லாத கொடுமையை எண்ணி
நாங்கள் இருவரும் நலிந்து கிடப்பதை
ராமா ! நீவெகு நன்றாய் அறிந்தவன்.
ஆற்றிலே கிடைத்த அந்தக் குழந்தையை
எங்க ளிடத்தில் இருக்கத் தந்திடு ;
ஏக்கம் தீர எடுத்து வளர்த்து
உன்னுடை உபயமாய் உள்ளம் களிப்போம்.

என்ன சொல்கிறாய் ?" என்றார் முதலியார்.
உடனே ராமன் ஒத்துக் கொண்டான்.
வெற்றிலை பாக்குடன் விடைபெற்றுக் கொண்டு
குடிசைக்குச் சென்று மனைவிக்குக் கூறினான்.
சொத்துக் கிடைக்கிற ஆசை தூண்டியும்,
பெண்மனத் தாலோ, குழந்தையைப் பிரிய
மாரி யாத்தாள் மனம்வர வில்லை.
"போடீ போடீ ! புத்திகெட் டவளே !
எங்கே வளர்ந்தால் என்னடீ நமக்கு ?
எப்படிக் கொஞ்சி என்னசெய் தாலும்
அப்படி வளர்க்க நம்மால் ஆகுமா ?
செல்வம் பெருத்த சீமான் வீட்டில்
நன்றாய் வளர்வதை நாமேன் கெடுக்க ?
நீயும் போனால் நித்தமும் போலக்
குழந்தையைத் தூக்கிக் கொஞ்சிட்டு வாயேன்.
வேண்டா மென்று விலக்கு வார்களா ?
பைத்தியக் காரீ ! பஞ்சகா லத்தில்
பண்ணையும் பணமும் பசுவும் மாடும்
தானாய் வருவதைத் தள்ளியா விடுவது ?
லட்சுமி போல நம்மிடம் வந்தாள்.
சீதேவி அவளால் சிறப்பும் வருகுது ;
சும்மா யிருநான் சொல்வதைக் கேளு.
குழந்தையை அங்கே கொடுத்து விடுவது
நமக்கும் நல்லது ; அதற்கும் நல்லது"
என்று ராமன் இயம்பக் கேட்டு
மாரி யம்மாள் மௌனமாய் விட்டாள்.

✤ ✤ ✤

குழந்தை கிடைத்த குதூக லத்தினால்
பார்வதி யம்மாள் பரவச மடைந்தாள்.



மறுநாள் காலையில் மதராஸி லிருந்து
முத்துக் குமார முதலியா ருக்கு
அவசர மானஓர் வர்த்தக அலுவலாய்
வரவேணும் என்று தந்தி வந்தது.
'இங்கே குழந்தை இருப்பதை அறிந்தால்
சொந்தக் காரர்கள் தொடரலாம்' என்று
முன்பே எண்ணின முத்துக் குமாரர்
மனைவியும் தானும் வளர்ப்பு மகளுடன்
அடுத்த நாளே அணியூரை விட்டுப்
பட்டணம் சென்றுதம் பங்களா சேர்ந்தார்.

# கமலம் சென்னை சேர்தல்

சேலூர் வலைஞர் சிறிய குடிசையில்
வீரனும் மனைவியும் விருப்புடன் செய்த
உபசா ரங்களால் ஒருவிதம் தேறிய
கமலம், சற்றே கவலையை மறந்து
இரண்டு நாள்கள் இருந்தாள் அங்கே.
அளவிடக் கூடா ஆழம் உள்ளதாய்ப்
பெருமை நிறைந்த பெண்மனம் கொண்ட
விளக்க முடியா வேறு பாட்டினால்
உயிரை வெறுத்த அவளுடை உறுதிகள்
கொஞ்சங் கொஞ்சமாய்க் குறைந்தன எனினும்,
ஆற்றில் குழந்தையை அப்படி இழந்ததை
நினைத்து நினைத்து நித்தமும் அழுவாள் ;
வேறே இடத்தில் தான்போய் விழுந்தும்,
விதியோ கதியோ வெற்று நிகழ்ச்சியோ
இடையே புகுந்து இழுத்து வந்ததை
எண்ணி யெண்ணிப் பொழுதும் ஏங்குவாள் ;
இறக்கவும் துணியாள், இருக்கவும் விரும்பாள் ;
'எங்கே போகலாம் ? எப்படி வாழலாம் ?'
என்பதைப் பற்றிப் பலவிதம் எண்ணி,
சென்னையில் தன்னுடைச் சிநேகிதி யான
**சரஸ்வதி** என்னும் சற்குணப் பெண்மணி
பள்ளியில் தன்னுடன் படித்த தோழி,
பெண்பா டசாலையில் பெரிய வாத்திமை
வேலையில் இருப்பதை விருப்புடன் எண்ணி
அவளிடம் போக ஆசை கொண்டாள்.
சரஸ்வதி கணவன் **சந்திர சேகரன்**



சென்னையில் மிகவும் சிறப்பா யிருந்தவன்.
குடித்து வெறித்துக் கூத்தியர்க் கலைந்து,
சூதிலும் வாதிலும் சொத்தெலாம் இழந்து,
சீதனப் பொருளையும் சீக்கிரம் அழித்து,
நாயகி நகைகளும் நாசம் ஆனபின்,
அவளை மிகவும் அநாதையாய் விட்டு
எங்கோ போனான். எவரும் அறியார்.
சரஸ்வதி மிகவும் தைரியம் உள்ளவள் ;
கணவனைப் பற்றிய கவலையை விட்டு,
வாத்திமைக் காக வருந்திப் படித்து,
சிறப்பாய்த் தேறினாள் ; சீக்கிர மாகவே
வேலையும் கிடைத்து மேன்மை அடைந்தாள்
நூற்று ஐம்பது ரூபாய் சம்பளம்.
தானும் தனக்கொரு சமையற் காரியும்,
வெளியில் போய்வர வேலைக் காரனும்,
வேலைக்கு வந்தபின் விலைக்கு வாங்கிய
பன்ன சாலைபோல் பங்களா ஒன்றில்
தனியே வசித்துச் சந்தோஷ மாகவே
கண்ணிய மாகக் காலங் கழிக்கிறாள்.
கமலமும் அவளும் கடித மூலமாய்
அடிக்கடி குலவி ஆனந் திப்பர்.
சரஸ்வதி கணவனால் சங்கடம் அடைந்து
கஷ்டப் பட்ட காலத்தி லெல்லாம்
ஐந்நூறு ஆயிரம் அனுப்புவாள் கமலம்.
அப்படிப் பட்ட ஆருயிர் நட்பாம்
'சரசா விடம்போய்ச் சாந்தி பெறலாம்'
என்றே கமலம் எண்ணித் துணிந்து
பட்டணம் போகப் பயணமும் ஆனாள்.
நகைகளை யெல்லாம் நருவிசாய்க் கழற்றி
சங்கலி இரண்டைத் தனியே வைத்து,

மற்றதை யெல்லாம் முடிந்து மறைத்தாள்.
தங்கச் சங்கிலி ஒன்றைத் தந்து
வீரனைக் கொண்டு விற்கச் செய்தாள் ;
அந்தப் பணத்துடன் அவனையே அனுப்பிச்
சின்னஓர் பெட்டியும், சீட்டிச் சீலைகள்
எளியவர் உடுத்தும் இனமாய் வாங்கினாள் ;
கட்டி யிருந்த பட்டைக் களைந்தாள் ;
புதிதாய் வாங்கிய புடைவையைப் புனைந்தாள் ;
யாரும் தன்னுடை அடையா ளங்களைத்
தெரிந்தவர் பார்த்தால் தெரியா திருக்கச்
செய்யத் தக்கன செய்து கொண்டாள் ;
நல்லாள், வீரன் நாயகி தனக்குப்
பட்டுச் சேலையைப் பரிசாய் எண்ணிப்
புதியஓர் சீட்டிப் புடைவையும் சேர்த்துப்
பணமும் வைத்துப் பரிவுடன் புகழ்ந்து
கமலம் கொடுத்தாள். கண்ணீர் சோர
வீரன் மனைவி விம்மி அழுதாள் ;
பிரிந்து போவதில் பெரிதும் வருந்திக்
கொடுத்த பரிசைக் கொள்ள மறுத்தாள்.
கமலம் அவளைக் கட்டித் தழுவித்
தேறுதல் சொல்லித் தெளிவுறச் செய்து,
உபசா ரங்கள் பலவிதம் உரைத்து,
வாங்கிக் கொள்ள வற்பு றுத்தினாள்.
வாங்கிக் கொண்டு, வணங்கினாள் நல்லாள்.
இன்னொரு பொன்வடம் கையில் இருந்ததைக்
கமலம், நல்லாள் கழுத்திற் சூட்டினாள்.
வீரனும் மனைவியும் வியந்து வணங்கினர்.
வீரனைத் தனக்குத் துணைவர விரும்பி
அணியூர் 'ரயில்வே ஸ்டேஷனை' அடைந்து,
ராத்திரி வண்டியில் ரயிலில் ஏறிச்
சென்னைக்குச் சென்று இருவரும் சேர்ந்தனர்.

## கவலை குறைத்த கடிதம்

தெய்வமே தன்னைத் தேடி வந்ததாய்க்
கமலம் வந்ததைச் சரஸ்வதி கருதி,
புதுப்புது பூசனை தினமும் புரிந்து,
நோயுற்ற சிசுவிடம் தாயுற்ற நோன்பாய்
உள்ளம் கனிந்த உபசரிப் புகளால்
கமலம் சற்றே கவலை குறைந்து,
தங்கி யிருந்தாள் சரஸ்வதி வீட்டில்.
சிலநாள் சென்றபின் சிறுகச் சிறுக
மகளின் ஏக்கமும், மாதவன் நினைப்பும்
அடிக்கடி வந்து அவஸ்தை வளர்ந்தது,
குழந்தையை எண்ணிக் குமுறுவாள் ஒருகணம் ;
கணவனைக் கருதிக் கலங்குவாள் மறுகணம் ;
நடுவே கொஞ்சம் ராகவன் நினைப்பு ;
மகளின் உருவம் வந்து மறைந்திடும் ;
கணவன் காட்சி நின்று கலக்கும் ;
குழந்தை விசாரம் அழுதாற் குறையும் ;
புருஷன் நினைப்பும் புரையோடிக் குத்தும்,
மகளைச் சற்றே மறக்க முடியினும்,
கணவனை மட்டும் கணமும் மறந்திலள்.
கலியா ணத்தைக் கருதிடும் முன்னால்
கண்ணைக் காட்டிலும் கருத்தைக் கவர்ந்த
அவனுடை உருவம் அடிக்கடி தோன்றி
உடலை வாட்டி உயிரை வதைக்கும்.
பார்த்தது எதிலும் அவனையே பார்ப்பாள்
நினைவுகள் யாவிலும் அவனே நிற்பான்.

பார்த்துப் பார்த்து உள்ளம் பதைப்பாள் ;
நினைத்து நினைத்து நெக்குவிட் டயர்வாள் ;
அவனைப் பிரிந்த ஆறாத் துயரம்
குறைவதற் காயினும் குழந்தை இல்லையே !'
என்றுதன் மகளையே மீண்டும் எண்ணுவாள்.
உயிரைத் துறந்த உறுதிகள் ஒழிந்தும்,
வாழ்க்கையில் விருப்பம் வைப்பதற் கான
காரணம் எதையும் காணாது கமலம்
நடைப்பிணம் போலவே நாள்கழித் திடுவாள்.

✤ ✤ ✤

சரஸ்வதி வசித்த பங்களாச் சாலையில்
கொஞ்சம் நடந்து குறுக்கே போனால்
'விவேகா னந்தர் வேதாந்த மடம்'என
உண்மைத் துறவிகள் உறைவிடம் உண்டு.
ஜீவகா ருண்யமே சிறந்த அறமென
நொந்தவர்க் குதவும் நோன்பே பூண்டு,
ஏழை எளியவர் இருப்பிடம் தேடி
அன்புகள் செய்து, அறவுரை பேசி,
நோயா ளிகளின் நோயை மாற்றி,
பட்டினி கிடப்போர் பசிப்பிணி போக்கி,
திக்கற் றவர்க்குத் தெய்வமே போலத்
தொண்டு புரிவதே தொழிலாய்க் கொண்ட
கல்வி நயத்துடன் காவி யணிந்தவர்
தபசிகள் சிலபேர் தங்கும் ஆச்ரமம்.
சரஸ்வதி அதற்குச் சந்தா கொடுப்பவள்.
அந்த மடத்தில் ஆன்ம விசாரணை
நிறைந்த நூல்களின் நிலையம் உண்டு.
மடத்தைச் சேர்ந்த வாலிபத் துறவி
**அன்பா னந்தர்**, அங்கே யிருக்கும்



புத்தக நிலையப் பொறுப்பு வாய்ந்தவர் ;
நல்லன வாகிய ஞான நூல்களை
அவமே பொறுக்கி அனுப்பி வைப்பார்.
சரஸ்வதி அம்மாள் வாங்கித் தருவாள்.
கமலம் படித்துக் காலம் கழிப்பாள்.

✤ ✤ ✤

இப்படிச் சென்னையில் இருந்திடும் போது
'சரஸ்வதி யம்மாள் வீட்டிலே யுள்ள
கமலாம் பாளின் கையிற் கொடுப்பது'
என்ற விலாசம் இருந்தஓர் கடிதம்
தபாற் சேவகன் வந்து தந்தான்.
அதிசயப் பட்டு ஆசையாய் வாங்கி
உடனே பிரித்து உள்ளே பார்த்தாள்.
மின்சார வேகம் மேனியிற் பட்டதோ !
துள்ளிக் குதித்தாள் ; கண்களைத் துடைத்தாள் ;
கையிற் பிடித்த கடிதம் அதனை
வெள்ளெழுத் துள்ள விருத்தாப் பியம்போல்
எட்டிப் பிடிப்பாள் ; கிட்ட ஏந்துவாள் ;
படிக்கத் தெரியாப் பாலரைப் போல
எழுத்துக் கூட்டி எண்ணிப் பார்த்து,
திருப்பித் திருப்பித் திருப்பிப் படித்து
உள்ளம் குளிர்ந்து, உடலம் வளர்ந்து,
புத்துயிர் வந்து புகுந்தது போலப்
பூரித்துத் தேகம் பாரித் திடுவாள் ;
'மெய்யோ' என்று மெய்சிலிர்த் திடுவாள் ;
'பொய்யோ' என்று புழுங்குவாள் கொஞ்சம் ;
அப்படி யெல்லாம் அவளைப் படுத்திடக்
கடிதம் அதிலே கண்டது என்னெனில் :
"உன்மகள் ராஜம் உயிரோ டிருக்கிறாள் ;

சென்னையில் உள்ளஓர் சீமான் வீட்டில்
வளர்ந்து வருகிறாள். வருத்தம் வேண்டா.
க்ஷேமமாய் இருக்கிறாள். சீக்கிரம் பார்க்கலாம்"
என்பது மட்டும் எழுதி யிருந்தது.
ஊரோ பேரோ ஒன்றையும் காணோம்.
எழுத்தடை யாளமும் தெரிந்ததா யில்லை.
மூடி யைத் திருப்பி முத்திரை பார்த்தாள்.
"எழும்பூர்" என்று முத்திரை இருந்தது.
எழுதின மனிதர் எவரா னாலும்
ஆற்றிலே போட்ட அருமைத் தன்மகள்,
இறந்து விட்டதாய் எண்ணிய குழந்தை
உயிரோ டிருக்கிறாள் என்றிட்ட உரையால்,
பெற்ற தாயார் பெற்ற உணர்ச்சியை
எழுதிக் காட்ட எவரால் முடியும் ?

# அவன் அலைதல்

மனைவியும் மகளும் மறைந்தபிற் பாடு
மாதவன் வாழ்க்கை மகிழ்ச்சி யற்றது.
எந்த நேரமும் இன்ப மயமாய்,
ஆடலும், பாடலும், அறிஞர்கள் கூட்டமும்,
கற்றவர் பேச்சும், கேட்பவர் காட்சியும்,
விதம்வித மாகிய விருந்து விழாக்களும்
நிறைந்து, கலைகளின் நிலையமாய் நின்ற
தன்னுடை வீட்டின் தகைமையை மறந்தான் ;
வறியவர் வாழ்த்த, வையம் புகழ,
மனையறம் காத்த மங்கையர்க் கரசி
கமலாம் பாளின் கதைகளை மறந்தான் ;
'அழகும் அறிவும் அன்பும் அறங்களும்
ஒருங்கே அமைந்த உத்தமப் பெண்மணி
கமலம் எனக்குக் காதலி யானது
பூர்வ ஜென்மப் புண்ணியம்' என்று
அடிக்கடி சொன்னதை அறவே மறந்தான் ;
சாரதாம் பாளின் சதிரையும் மறந்தான் ;
அவள்பால் உதித்த காம ஆசையால்
தன்னுடை ஒழுக்கத் தவற்றையும் மறந்தான் ;
'ராகவ னோடு ரகசியம் நடத்தி,
கமலம் இப்படிக் கள்ளியா னாளே !'
என்பதை மட்டும் மறக்கவே இல்லை.
'பெண்களை நம்புதல் பெரும்பிழை' என்கிற
எண்ணம் ஒன்றே மனத்தில் இடம்பெறப்

பெண்ணுலக கத்தைப் பெரிதும் பழிப்பான் ;
ஆயினும் பெண்சுகம் ஆசைகள் விட்டிலன் ;
இளமையின் இயல்பும், இன்பத்தில் இச்சையும்,
தூண்டிய ஓயாத் துடிப்புக ளாலே
மற்றொரு பெண்ணை மணக்க நினைத்தான் ;
பற்பல பெண்களைத் தேடிப் பார்த்தான்.
அழகையே நாடும் அவனுடை மனமும்,
கமலம் அழகைப் பருகிய கண்களும்,
பார்த்த பெண்களைப் பற்றவே யில்லை.
மறந்தாற் போல மனைவியை நினைப்பான் ;
சமானமில் லாத சௌந்தர்ய முள்ள
கமலம் வடிவில் களிப்பான் ஒருகணம் ;
அடுத்த க்ஷணமே அருவருப் படைவான் ;
'கமலமே இப்படிக் கள்ளியாய்ப் போனபின்
எந்தப் பெண்ணை இனிமேல் நம்பலாம் ?
பெண்களை நம்புதல் பெரும்பிழை' என்று
மறுமணம் செய்வதை மறுப்பான் கொஞ்சம் ;
பின்னும் ஆசைகள் பின்னிப் பிணைக்கக்
கலியா ணத்தையே மீண்டும் கருதுவான்.
மகளின் உருவமும் மனத்தில் தோன்றும் ;
குழந்தையை எண்ணி உள்ளம் குளிர்வான்.
மனைவியின் அழகு தொடர்ந்து மயக்கும் ;
உடனே ராகவன் உருவம் உதிக்கும் ;
கோபம் பொங்கி உடலும் கொதிப்பான் ;
'இராகவன் செய்தது இரண்டகம் எனினும்
கமலம் இப்படிக் கள்ளியா னாளே !
பெண்களை நம்புதல் பெரும்பிழை' என்று
திருப்பித் திருப்பி எண்ணித் திகைப்பான்.
'மனைவியில் லாவிடின் மாட மாளிகையும்



புலிகள் வசிக்கும் புதரே' என்னும்
சொல்லுக் கிணங்க, சுகம்பல நிறைந்து
செல்வ நலங்கள் சிதையா திருந்தும்
மாதவன் மாளிகை மங்கலம் இழந்தது.
அன்பிற் கென்றோ, ஆசைக் கென்றோ,
காமம் மட்டுமோ, காதலும் கருதியோ,
அலுப்பைத் தீர்க்கவோ, ஆதாரம் சொல்லவோ,
பெண்ணின் பத்தைப் பெரிதும் விரும்பி,
மாதவன் உயர்ந்த அறிவுகள் மங்கி,
வாழ்க்கை நடத்திய வழிகளும் மாறி,
அங்கும் இங்கும் அலைந்துகொண் டிருந்தான்.

# தொழிலும் துன்பமும்

'உன்மகள் ராஜம் உயிரோ டிருக்கிறாள்,
சென்னையில் பார்க்கலாம் சீக்கிரம்' என்றசொல்
குறையும் விளக்கில் கொட்டிய நெய்போல்,
உலரும் பயிரில் ஊற்றிய மழையென,
அலையும் கொடிக்கொரு ஆதாரக் கொம்பாய்,
திசைதப்பிக் கடலில் திண்டாடு கின்ற
கப்பல் கண்ட கரைவிளக் கேபோல்,
கமலம் மனத்தைக் கட்டோடு மாற்றிட,
நிருபம் படித்த நிமிஷம் முதலாய்ப்
புதுத்தளிர் அரும்பிய பூச்செடி போல,
மகவைப் பெற்ற மலடியே என்ன,
புத்துயிர் வந்தோர் பொலிவிற் பூத்தாள்.
அற்றுப் போன ஆசைகள் சேர்ந்து,
உறைந்து கிடந்த உணர்ச்சிகள் உருகி,
வாடி யிருந்த நாடிகள் வலுத்து,
அன்னையின் அன்பு ஆறாய்ப் பெருகிட,
வாழ்க்கையின் லட்சியம் வந்தவள் ஆயினாள்.
மகளைக் கண்டால், துன்பம் மறந்து,
படிக்க வைத்துப் பார்த்துக் கழித்து,
கண்ணுக் கழகாய்க் கட்டிக் கொடுத்து,
கணவனைப் பற்றிய கவலையும் குறைந்து
வேண்டிய படிக்கொரு வேலையில் அமர்ந்து
சரஸ்வதி யைப்போல் சம்பா தித்து
வாழ்க்கை நடத்தவும் ஆசை வந்தது.
நகைகளை விற்று நாணய மாக்கி,



பணத்தை யெல்லாம் 'பாங்கி'யிற் போட்டு,
பெண்ணைத் தேடிக் கண்டு பிடிக்கும்
முயற்சிகள் செய்யும் நினைவே முற்றினாள்.

✤ ✤ ✤

மகள்வரப் போகிற மகிழ்ச்சியி னாலே
ராகவன் எழுதிய ரகசியத் தோடு
விட்டுப் போன வீணையை விரும்பிட
சரஸ்வதி யம்மாள் சந்தோஷ மடைந்து
விலைக்குப் புதியதோர் வீணையை வாங்கினாள்.
வீணையைக் கண்டதும், வித்தை நிரம்பியும்
இறுகிக் கிடந்த ரஸனைகள் இளகி,
வீணையைத் தடவ விரல்கள் துடித்து,
மீட்டும் முன்போல் வீணையை மீட்டி
ராகவன் நினைப்புடன் பாடி ரஸித்துத்
துன்பம் குறைந்து இன்பம் தொடங்கினாள்.

✤ ✤ ✤

விவேகா னந்த வேதாந்த மடத்தின்
பக்கத்தி லேஒரு பெரிய பங்களா.
அதிலே வசிப்பவர் **அனந்த ராமன்.**
அவருக்கு வேலை 'ஹைகோர்ட்' ஜட்ஜு
சொத்து சுகங்கள் மெத்தவும் உள்ளவர்.
பதினைந்து, பன்னிரண்டு, பத்து வயதுள
மூன்று பெண்கள் மூத்த மனைவிக்கு ;
ஆண்மக வில்லை. அதுஒரு சாக்காய்
இன்னோர் அழகியை இளைய தாரமாய்ச்
சிலநாள் முன்புதான் திருமணம் செய்தவர் ;
உல்லாச புருஷன் ; உயர்ந்த உடைகளில்,
சிங்கா ரிப்பதில் சிறந்த ரஸிகர் ;
பக்தர் கூட்டமும் பஜனைக் கோஷ்டியும்

நடத்தி வைப்பதில் நல்லபேர் பெற்றவர் ;
வேதாந்த மடத்தின் விருத்தியை விரும்பும்
பஞ்சா யத்தார் பலருள் ஒருவர் ;
மாலையில் அனுதினம் மடத்துக்கு வருவார்.
காரணம் இருந்தால் காலையும் காணலாம்.
நேர்ந்தபோ தெல்லாம் நினைத்தால் வருவார்.
ஓய்வான ஞாயிற்றுக் கிழமை ஒருநாள்
அனந்த ராமனும், அவருக்கு மிகவும்
ஆப்த மாகிய **அண்ணா சாமி**யும்
மத்தியா னத்தில் மடத்துக்கு வந்தனர்.
மற்றவர் யாவரும் மடத்தி லில்லை.
புதிதாய் வாங்கின புத்தகங் களையெல்லாம்
பதியும் வேலையைப் பார்த்துக் கொண்டு
அன்பா னந்தர் அறைக்குள் இருந்தார்.
அவர்அங் கிருந்ததை அவர்கள் அறியார்.
அனந்த ராமனும் அண்ணா சாமியும்
அந்த ரங்கமாய் அநேகம் பேசினர்.
மூத்த பெண்ணின் விவாக முயற்சியை
அனந்த ராமன் ஆரம் பித்தவர்,
என்னென்ன வோபல பேச்சுகள் இடையில்
சரஸ்வதி யம்மாள் சங்கதி எடுத்து,
கமலாம் பாளின் பெயரையும் கலந்து,
அபூர்வ மாகிய அழகைப் பற்றியும்,
படிப்பைப் பற்றியும், பாட்டைக் குறித்தும்,
வீணையிற் சிறந்த விற்பத்தி என்றும்,
பேசிய பற்பல பேச்சுக ளோடு,
நடுவில் நடுவில் நகைக்கிற சத்தமும்
இங்கொரு சொல்லும் அங்கொரு எழுத்துமாய்
விட்டு விட்டுக் காதிலே விழுந்ததைச்



சேர்த்துப் பார்த்துச் சிந்தனை செய்து
அறைக்குள் ளிருந்த அன்பா னந்தர்
துறவையும் மறந்து துணுக்க முற்றார்.

✤ ✤ ✤

புத்தகம் வாங்கிப் போவதற் காய்வரும்
சரஸ்வதி அம்மாள் சம்பா ஷணைகளில்
கமலாம் பாளின் கஷ்ட காலத்தை
அடிக்கடி பேசிட அறிந்தவ ரானதால்
அன்பா னந்தர் அனுதா பத்துடன்
கமலம் நலத்தில் கவலை காட்டுவார் ;
சரஸ்வதி சொல்லச் சந்தோஷம் அடைவார் ;
எல்லா ருக்கும் எளிதில் விளங்கா
அரவிந்த கோஷின் 'ஆரியா' என்னும்
வேதாந்த தத்துவ விசாரணை களையும்
பக்தி சிரத்தையாய்க் கமலம் படிப்பதை
அறிந்து மகிழ்பவர் அன்பா னந்தர்.
ஆதலால் அவளை அனந்த ராமன்
கேலியாய்ப் பேசின பேச்சைக் கேட்டு
அன்பா னந்தர் துன்பம் அடைந்தார்.

✤ ✤ ✤

கமலம் சென்னையில் கால்வைத்த நாளாய்ச்
சரஸ்வதி யம்மாள் வீட்டைத் தவிர்த்து
வெளியே போய்வர விரும்பின தில்லை.
அவள்அங் கிருப்பதை அறிந்தவர் வெகுசிலர் ;
அகஸ்மாத் தாக அவளைப் பார்த்தவர்
சிலபேர் ; அந்தச் சிலருள் ஒருவர்
அனந்த ராமன். அவருடை வீட்டுப்
பெண்டுகள் அனைவரும் பெரிதும் உறவாய்ச்
சரஸ்வதி யம்மாள் சகவாச முள்ளவர்.

வருவதும் போவதும் வழக்கமாய் உண்டு.
பெண்கள் மூவரும் 'பிடில்'வா சிப்பர்.
வீணைகற் பிக்கவும் பெற்றோர் விரும்பினர்.
சிலநாள் பயிற்சியும் வீணையிற் செய்தனர்.
வீணையின் ஆசான் வேற்றூர் போய்விட,
சொல்லிக் கொடுப்பவர் துர்லபம் ஆனதால்
அந்தப் பயிற்சி அற்றுக் கிடந்தது.
அகஸ்மாத் தாகவே அனந்த ராமன்
கமலாம் பாளைக் காண நேர்ந்தபின்
அவளைப் பார்க்க அடிக்கடி விரும்பிய
அனந்த ராமன், அனுதா பம்போல்
கமலம் நிலையைக் கவனிக்க லானார்.
கமலம் வீணையில் கைதேர்ந் தவளெனத்
தன்னுடை வீட்டுப் பெண்கள் தம்மால்
அனந்த ராமன் அறிந்திட்ட பின்னர்
தன்னுடைப் பெண்கள் மூன்றுபேர் தமக்கும்
வீணைகற் பித்திட விரும்புவ தாகவும்,
அதற்குக் கமலம் அமைவா ளானால்
உயர்ந்த சம்பளம் கொடுப்பதாய் உரைத்து,
சொல்லிக் கொடுக்கச் சொல்லச் சொல்லி,
சரஸ்வதி யம்மாள் சலுகையைக் கோரி,
மூத்த மனைவியின் மூலமாய்ச் சேதியை
அனந்த ராமன் அனுப்பிக் கேட்டார்.
பலமுறை கேட்டுக் கேட்டுப் பார்த்தும்
சரஸ்வதி அம்மாள் சம்மதி மறுத்தாள் ;
"நொந்த மனத்துடன் வந்துள கமலம்
கண்ணியம் மிகுந்த பெண்மணித் திலகம்
ஆயிரம் பேருக்கு அவள்சோறு போடுவாள்
செல்வச் சிறப்புள சீமாட்டி யல்லவா !



கொலுவில் வைத்துக் கும்பிடத் தக்கவள் !
தொழில்செயச் சொல்லியா சோறு போடுவேன் ?
பாவம் அம்மா ! பாவம் பாவம் !"
என்றே சரஸ்வதி இசைந்திலள் அதற்கு.
இப்படிப் பேச்சுகள் இருப்பதைக் கூடக்
கமலாம் பாளின் காதில் படாமல்
சரஸ்வதி மிகவும் ஜாக்ரதை செய்வாள்.
அப்படியிருக்க,
சென்னையில் தன்மகள் சேமமாய் இருப்பதாய்க்
கடிதம் கிடைத்த அந்தக் கணம்முதல்
மாறிய மனத்தின் ஊறிய ஆசையால்
'குழந்தை வந்தால் குறைவிலா திருக்கவும்
சரஸ்வதிக் கும்ஒரு பாரம் தராமல்,
தானும் கொஞ்சம் சம்பா தித்தால்
ஒருவருக் கொருவர் உதவியாம்' என்பதாய்,
கமலம் தனக்கொரு காரியம் தேடிடச்
சரஸ்வதி யிடத்தில் தானே வேண்டினாள்.
சோர்ந்து சுருண்டு துன்ப சொரூபமாய்,
வாடி வதங்கிய வருத்தமே வடிவாய்,
உணவை வெறுத்து உறக்கமும் கெட்டு,
படுத்த வண்ணமாய்ப் படிப்பதைத் தவிர
வேறே எதிலும் விருப்பமில் லாமல்
மங்கி யிருந்த மாது சிரோன்மணி
கமலம் அடைந்த மகிழ்ச்சியைக் கண்டதும்
சரஸ்வதி அடைந்த சந்தோஷ மதற்கு
எல்லை என்பதே இல்லை எனலாம்.
'எப்படி யாயினும் கமலம் இன்புற
வேண்டும்' என்பதே விருப்பம் ஆனதால்,
ஜட்ஜு வீட்டுப் பெண்கள் தமக்கு
வீணை சொல்லித் தருகிற வேலையை,

முன்னே பலமுறை முடியாது என்றதை,
சரஸ்வதி அம்மாள் தானே முயன்று,
சம்பளம் நூற்று ஐம்பது பேசி,
நித்தமும் மாலையில் ஒருமணி நேரம்
கற்றுக் கொடுக்கக் கமலம் இசைந்தாள்.
மாலையில் நான்கு மணிக்குப் போவதும்,
ஒருமணி நேரம் உபதே சித்தபின்
சந்தி சாயுமுன் சரஸ்வதி மனைக்குத்
திரும்பி வருவதும், தினந்தினம் வழக்கம்.
வருவதும் போவதும் வண்டியி லேதான்.
வேதாந்த மடத்தின் வீதி வாசலின்
பக்கமா கத்தான் பாதை உள்ளது.
அன்பா னந்தர் அனுதினம் பார்ப்பார் ;
கமலம் வருவதைக் காணா விடினும்
திரும்பிப் போவதைத் தினமும் பார்ப்பார்.
நேரிற் பழக்கம் நேரா விடினும்
அவளிடம் மிகவும் அனுதாப முள்ளவர்.

✤ ✤ ✤

சிலநாள் இப்படிச் சென்றபின் ஒருநாள்,
அனந்த ராமனின் வீட்டார் அனைவரும்
அவசர மாகஓர் அழைப்பு வந்ததால்
விருந்தின் முறையில் வெளியூர் சென்றனர்.
அவர்கள் போனதைக் கமலம் அறியாள்.
வாசலின் வழியாக வண்டியிற் போனதால்
அன்பா னந்தர் அறிந்திட நேர்ந்தது.
ஜட்ஜு மட்டிலும் தனியே இருந்தார்.
விடுமுறை நாளோ, வேண்டுமென் றேயோ,
அன்றுதன் வேலைக்குச் சென்றிலர் அனந்தர்.
மாலை மூன்றரை மணியி லிருந்தே



அலங்கார மாகிய உடைகளை அணிந்து,
அத்தர் புனுகுகள் அதிகமாய்ப் பூசி,
சிங்கா ரிப்புகள் செய்துகொண் டவராய்,
மாடியி லிருக்கும் பலகணி வழியாய்க்
கமலம் வருவதிற் கண்ணாக இருந்தார்.
வழக்கம் போலக் கமலம் வந்தாள் ;
பெண்களைக் கண்டிலள். பெற்றவள் இல்லை.
இளைய தாரமும் எதிர்ப்பட வில்லை.
வீடெலாம் நிறைந்த வேலைக் காரரும்
எங்குசென் றனரோ, எவரையும் காணாள்.
ஒரேஒரு சேவகன் ஒதுக்கமாய் நின்றான்.
காரணம் யாதெனக் கமலம் கருதுமுன்
அனந்த ராமனே அவளிடம் அணுகினார்.
மலர்ந்த முகத்துடன் வரவுரை சொல்லி,
"பெண்டுக ளெல்லாம் பிரியம் மிக்கஓர்
அன்பர் வீட்டின் அழைப்புக் கிணங்கி
வெளியே சென்றுளர் ; விரைவில் திரும்புவர்.
வருகிற வரைக்கும் வந்துபா ரம்மா.
படிக்கத் தக்கன் புத்தகம் பலவுள ;
சித்திரம், பாட்டு, சிற்பம் முதலிய
எல்லாக் கலையின் இலக்கிய நூல்களும்,
வீணையைப் பற்றிய விளக்கமும் உள்ளன ;
எங்கள் வீட்டில் இருப்பதை நீங்கள்
பார்த்த தில்லையே, பாருங்கள்," என்று
மரியாதை யாக மாடிக்கு அழைத்தார்.
களங்கமெண் ணாமல் கமலம் சென்றாள் ;
அழகான கண்ணாடி அலமாரி களிலே
ஆயிரக் கணக்கில் அடுக்கி அங்கிருந்த
பற்பல வர்ணப் படங்கள் நிறைந்த

புத்தகம் பலவும் பார்த்துப் புகழ்ந்தாள் ;
கலைகளைப் பற்றிய நூல்களைக் கண்டாள்.
வீணையைப் பற்றிய விளக்கமும் இருந்தது.
ஒவ்வொரு மூலையும் உய்த்துப் பார்த்துப்
புத்தக மெல்லாம் புரட்டிக் கொண்டு
காலம் சென்றதைக் கமலம் மறந்தாள்.
அவளைத் தனியே அங்கே விட்டபின்
அனந்த ராமன் அறைக்குள் இருந்தார்.
இருட்டி விட்டது. எவரும் வந்திலர்.
துண்ணெனக் கமலம் துடிதுடித் தெழுந்தாள்.
வீட்டுக்குப் போக விரைந்து சென்றாள்.
அதனைக் கண்டதும் அனந்த ராமன்,
'என்னவோ போனவர் இன்னமும் காணோம்.
நேரமாய் விட்டது ; நீங்கள் போகலாம்.
வாம்மா, இதனை வாங்கிக் கொண்டுபோ"
என்றுதன் அறைக்குள் இனிதே அழைத்தார்.
கமலமும் அறைக்குள் கலங்காது சென்றாள்.
"இந்தா" என்றார். தந்தார் எதையோ.
"என்ன ?" என்றாள் ; "சம்பளம்" என்றார்.
காகித ரூபாய்க் கத்தையாய் இருந்தது.
எண்ணினாள், இரண்டு ஆயிரம் இருந்தன.
"எனக்குச் சம்பளம் இவ்வளவு ஏது ?"
"உனக்குச் சம்பளம் உலகெலாம் தரலாம்,
கோடி கோடியாய்க் கொட்டிக் கொடுப்பினும்
விலையற்ற தாகும்உன் வீணையும் பாட்டும்.
அதிகமா யிருப்பதில் ஆயாசம் வேண்டா ;
எடுத்துக் கொள்ளும் ; இன்னமும் வேண்டுமா ?
எத்தனை வேண்டினும் அத்தனை தருகிறேன்.
கமலம் ! இனிமேற் கவலைப் படாதே.



கண்ணில் வைத்துநான் காப்பேன் உன்னை."
"எனக்கென்ன கவலை ? உமக்கென்ன அதனால் ?"
என்றே கமலம் எரியப் பார்த்தாள்.
அனந்த ராமன் அருகே வந்தார் ;
"கமலம் ! உன்னைநான் கண்டநாள் முதலாய்
என்னவோ உன்மேல் - என்னென்று சொல்லுவேன்
கண்ணே ! உன்னைக் காதலிக் கின்றேன்"
என்றார் ஐட்ஜு. ஈட்டிபோல் சொற்களைக்
கேட்டாள் கமலம் ; கிறுகிறுப் படைந்து,
"ஐயோ" என்றாள் ; அப்பால் ஓடினாள் ;
வாதுகள் பேசிட வார்த்தை வராமல்
கையில் இருந்த காகிதக் கத்தையை
வீசி எறிந்து, விழித்துப் பார்த்து,
சுவரின் மூலையிற் சோர்ந்து சாய்ந்தாள் ;
கலியா ணத்தைக் கருதிடு முன்னே
கண்ணைக் காட்டிலும் கருத்தைக் கவர்ந்த
மாதவன் உருவம் மனக்கண் முன்னால்
மலர்ந்திடக் கண்டாள் ; மயக்கம் கொண்டாள்.
மயக்கமோ, மற்றதோ, மங்கை அப்படிக்
கண்களை மூடிக் கலங்கி நிற்கையில்,
அனந்த ராமன் அறையின் கதவைச்
சாத்தி மெதுவாய்த் தாழ்ப்பா ளிட்டார் ;
அடிமேல் அடிவைத்து அவளிடம் அணுகினார்.
'கிணுகிணு' என்றொரு ஓசை கேட்டது.
கைப்பிடி சிக்கிய கள்ளனைப் போலத்
திடுக்கிட்டு, ஓசையின் திசையில் திரும்பி
அனந்த ராமன் அரண்டு மருண்டார்.
கிணுகிணு சத்தம் பின்னும் கேட்டது.
அறைக்குள் ளிருந்த அவருடை 'டெலிபோன்'

அவசரக் குரலாய் அழைப்பதை அறிந்தார்.
ஓடினார் அருகில், உற்றுக் கேட்டார் ;
கருவியை எடுத்துக் காதிலே வைத்தார்.
"................................................"
"யாரது ? யார்அது ?" "என்ன சார் ? என்ன ?"
"................................................"
"ஆமாம். நான்தான். அனந்த ராமன்."
"................................................"
"அந்தம்மா ளிருக்கட்டும் ; யார் நீங்கள் பேசுவது ?"
"................................................"
"போலீசா ! அடராமா ! போலீசு எதற்காக ?"
"................................................"
"கமலாம் பாளா ? கமலம் இருக்கிறாள்."
"................................................"
"சுத்தப் பிசகுசார் ; சொன்னதார் அப்படி ?"
"................................................"
"இல்லவே இல்லைசார் ; அப்படி இருக்குமா ?
வீட்டுப் பெண்கள் வெளியே போனவர்
வரவில்லை, அவர்கள் வருகிற வரையிலும்
படிப்பில் ஆசையாய்ப் புத்தகம் பார்க்கிறாள்.
அதற்காக இப்படி அநியாயம் சொல்வதா ?"
"................................................"
"ஆஹா, உடனே அனுப்பி வைக்கிறேன்.
தாங்கள்யார் ? கொஞ்சம் தயவுசெய் திடுங்கள்."
"................................................"
"சப்பின்ஸ் பெக்டரா ? சர்க்கிளா ? ...ட்டா ?
"................................................"



விரைவில் அவர்களை வீட்டுக் கனுப்புவேன்."
"................................................"
"நிரம்பசந் தோஷம், நீங்களார் ? பெயரென்ன ?"
"வருகின் றீர்களா ! வரத்தேவை யில்லை.
இதோ பாருங்கள். இந்த நிமிஷமே
"அந்தஅம் மாளைநான் அனுப்பி வைக்கிறேன்"
"................................................"
"சரிசரி... வந்தனம்..... சந்தோஷம்.... சரிசரி."
அத்துடன் பேச்சுகள் அற்றுப் போயின.
பேசினோர் யாரோ, பெயர்சொல்ல வில்லை.
ஆனாலும் என்ன, அனந்த ராமன்
காதல் பேச்செல்லாம் கடைகட்டி விட்டு,
கடிதே ஓடிக் கதவைத் திறந்து
கமலாம் பாள்முன் கைகூப்பி நின்று,
நடுங்கிய குரலாய் நாத்தடு மாறி,
"தப்பிதம், தப்பிதம், தாயே கமலம் !
போய்வா அம்மா ! போய்வா, போய்வா !
பெரிய மனசுடன் பிழையைப் பொறுத்து
மன்னிக்க வேண்டும். மறவேன் நன்றியை"
என்பன சொல்லி இறைஞ்சினார் ஜட்ஜு.
'டெலிபோன்' பேச்சைத் தெளிவுறக் கேட்டுக்
கருத்தை அறிந்த கமலம், வியப்புடன்
'எந்தத் தெய்வமோ இப்படிக் காத்தது !'
என்று தனக்குள்ளே எண்ணிக் குதித்து,
பதில்மொழி எதுவும் பகர்ந்தி டாமல்,
கமலம் உடனே கதவைக் கடந்து
மளமள வென்று மாடிவிட் டிறங்கி
அம்பெனப் பாய்ந்து வீதியை அடைந்தாள்.

✤ ✤ ✤

ஆறு மணிக்குமேல் அந்தச் சாலையில்
ஆள்நட மாட்டம் அதிகம் இராது.
செடிகளும் மரங்களும் இருபுறம் செறிந்து
இரவில் பார்க்கப் பயமாய் இருப்பதாய்
அந்தப் பாதையை அனைவரும் சொல்வதால்
தனியே நடக்கப் பலபேர் தயங்குவர்.
கமலம் அதனைக் கருதினா ளில்லை ;
விடுதலை கிடைத்த அடிமையின் வேகமாய்க்
களித்த மனத்துடன் கமலம் நடந்தாள்.

✤ ✤ ✤

வேதாந்த மடத்தின் வீதி வாசலின்
முன்னா லிருந்த முனிசிபல் விளக்கின்
வெளிச்சம் நன்றாக விழுகிற இடத்தில்
கமலத் துக்கே காத்திருப் பவர்போல்
அன்பா னந்தர் அங்கே நின்றார்,
பேசிப் பழகப் பெற்றிலள் எனினும்
அன்பா னந்தரைக் கமலம் அறிவாள்,
அறிந்தவர் என்பதற் கல்லா விடினும்
காஷாய உடையைக் கண்டதற் கேனும்
வணக்கம் செய்கிற வழக்கப் படிக்கு
அவரை வணங்கி, அப்பால் நடந்தாள்.
துறவியும் அவளைத் தொடர்ந்து நடந்தார்,
கமலம் உடனே கவனிக்க வில்லை.
சிறிதே தூரம் அப்படிச் சென்றபின்
தன்னோடு யாரோ பின்னால் வருகிற
காலடிச் சத்தம் காதிற் பட்டதும்
திகைத்துக் கமலம் திரும்பிப் பார்த்தாள் ;



அன்பா னந்தர் வருவதை அறிந்தாள் ;
"வேண்டாம் சாமீ ! வெளிச்சம் மிக்குள
இந்தச் சாலையில் எனக்குப் பயமிலை.
துணைவர எண்ணித் துன்புற வேண்டா ;
நமஸ்காரம்" என்று நடந்தாள் கமலம்.
ஆயினும் நின்றிலர் அன்பா னந்தர் ;
பின்னும் தொடர்ந்தே பின்னாற் சென்றார்.
சரஸ்வதி பங்களா சமீப மானதும்
அன்பா னந்தர் அத்துடன் நின்றார்.
கதவின் அருகில் கமலம் சென்றாள்.
அருகே இருந்ததோர் ஆல மரத்தின்
இருட்டிலே இருந்து எவனோ ஒருவன்
பைத்தியம் பிடித்தவன் போலப் பாய்ந்து,
கட்டிப் பிடிக்கக் கருதினான் போலக்
கமலாம் பாள்முன் கைகளை நீட்டி,
"கண்ணே ! என்றன் காதலிப் பெண்ணே !
உன்னைப் பிரிந்து ஊரு ராகநான்
அலைந்து திரிந்து அவதிப் படுகிறேன்.
இனிமேல் அப்படி எதுவும் செய்யேன்.
குலதெய் வம்போற் கும்பிடு வேனுனை.
மாதே ! எனைநீ மன்னிக்க வேணும்.
ஒருகணம் இனிமேல் உன்னைப் பிரியேன்.
வாவா,' என்று வழிமறித் திட்டான்.
அதனைக் கண்டதும் அன்பா னந்தர்
வேகமாய் ஓடிஅவ் வெறியனை விலக்கி,
"யாரப் பாநீ ? யாரென நினைத்து
இந்தஅம் மாளிடம் இப்படிப் பேசினாய் ?"
என்றுஅம் மனிதனுக் கெதிரில் நின்றார்.
"என்னுடைக் காதலி, என்மனை யாட்டியை

நானவளைத் திட்டால், நடுவே புகுந்து,
ஆரடா என்னைநீ அதட்ட வந்திட்டாய் ?
உதைத்து விடுவேன், ஓடிப் போ"என,
அன்பா னந்தரை அடிப்பவன் போலக்
கையை ஓங்கிப் பல்லைக் கடித்தான்.
ஓங்கிய கையை உடனே தடுத்து
அன்பா னந்தர் அவனைப் பிடித்துத்
தள்ளிக் கொண்டு சாலையில் இருந்த
முனிசிபல் விளக்கின் முன்னாற் போனார்.
அந்த வேளையில் அவ்வழி இரண்டு
போலீஸ் ஜவான்கள் போக நேர்ந்தது.
கலகம் நடப்பதாய்க் கண்டபோ லீசார்
அருகில் வந்தனர் ; அறியக் கேட்டனர்.
அன்பா னந்தருக்கு அறிமுக மாகிய
அந்த ஜவான்கள் அவருரை கேட்டுக்
கமலாம் பாளுடன் காதல் பேசிய
அந்தக் கிறுக்கனை ஆராய்ந் தார்கள்.
இளமையும் வளமையும் இருந்தவன் ஆயினும்
உணவில் லாமல் ஒட்டிய உடலும்,
இனிமையில் லாமல் இருண்ட கண்களும்,
உரையின் உளறலும், உடையின் கோணலும்,
பைத்தியம் என்பதைப் பரக்கக் காட்டின.
பணமும், காசும், பாங்குநோட் டுகளும்,
கெட்டியாய் முடிந்து சட்டைப் பையில்
அவனிடம் இருந்ததும் அவர்கள் கண்டனர்.
'திருடனோ ?' என்று திகைப்புண் டாகி
அவனைப் பற்றி முற்றிலும் அறியக்
கச்சே ரிக்குக் கடத்திச் சென்றனர்.
அன்பா னந்தர் அவளுடன் வந்ததால்



துன்பம் எதுவும் தொடர்ந்தில தென்ற
நன்றி செலுத்தும் நாக ரிகத்துடன்
வந்தனம் சொல்லித் துறவியை வணங்கி,
கமலம், பங்களாக் கதவைத் திறந்து
அவரையும் உள்ளே அழைக்க நினைக்குமுன்
சாமியார் சென்று சாலையில் மறைந்தார்.
கமலம், அந்தக் கதவைச் சாத்தி
உட்புறம் தாழ்ப்பாள் உறுதியாய்ப் போட்டு
விரசாய் நடந்து வீட்டில் நுழைந்தாள்.
பள்ளிக் கூட அலுவலைப் பற்றிய
கூட்டம் என்னவோ கூடுவ தாகச்
சரஸ்வதி யம்மாள் சாயங் காலமே
வெளியே போனவள் வீட்டுக்கு வந்திலள்.
வேலைக் காரிதான் வீட்டில் இருந்தாள்.
தோட்டக் காரன் திண்ணையில் தூங்கினான்.
கமலம் முகத்தில் களைப்பைக் கண்டு
உணவுகொள் ளும்படி உபசரித் திட்ட
வேலைக் காரியை விலக்கி, தன்னுடைப்
படுக்கை அறைக்குட் பாய்ந்து சென்று,
தன்னுடைப் படுக்கையைத் தானே எடுத்து
விரித்தாள் ; அதிலே விழுந்தாள் கமலம்.
குப்புறப் புரண்டு குமுறுவாள் நெஞ்சம் ;
பிறந்த வீட்டின் பெருமையை நினைப்பாள் ;
புகுந்த மனையின் புகழை எண்ணுவாள் ;
கல்வியிற் சிறந்த கணவனைக் கருதுவாள் ;
அவருடன் வாழ்ந்த அருமையை நினைப்பாள் ;
அருமை மகளின் ஆசைப் பெருக்கால்
வேலைக்குப் போன விதியை வியப்பாள் ;
'ஹைக்கோர்ட்டு ஜட்ஜு' அனந்த ராமன்

காதல் பேசிய கதியிற் கலங்குவாள் ;
எங்கோ போகிற எவனோ ஒருவன்
பைத்தியக் காரன், பங்களா வாசலில்
தழுவ முயன்றதை எண்ணித் தவிப்பாள்.
இப்படிப் பற்பல எண்ணி, ஏங்கி,
விம்மி விம்மி முகமெலாம் வீங்கி,
சிந்திச் சிந்தி மூக்கெலாம் சிவந்து,
கசக்கிக் கசக்கிக் கண்கள் கரிக்கத்
தேம்பித் தேம்பித் தேகம் குலுங்கி,
அசைந்த அசைப்பில் கூந்தலும் அவிழ்ந்து,
வெதும்பிய வெதுப்பிற் கொட்டிய வியர்வையும்
அழுதகண் ணீரும் ஆடையை நனைக்கத்
துன்பம் தோய்ந்து துவண்டு கிடந்தாள்.
கமலம் இருந்த அறையின் கதவைச்
சரேலெனத் திறந்து சரஸ்வதி யம்மாள்
உள்ளே வந்தாள் ; உற்று நோக்கினாள் ;
அழுவதை அறிந்து அஞ்சி நடுங்கித்
துள்ளித் துடித்துத் தொட்டுப் பார்த்தாள்.
தீண்டிய உடனே திடுக்குற விழித்துக்
கமலம் தன்னிரு கண்களைத் துடைத்து,
அழுகையை மறைக்க ஆனதைச் செய்து,
முறுவல் பூத்து, முகமும் மலர்ந்து,
விளைந்தது என்னெனச் சரஸ்வதி வினவுமுன்,
பங்களா வாசலில் பைத்தியக் காரன்
கட்டித் தழுவிடக் கருதிய விஷயம்
ஒன்றை மட்டிலும் விவரமாய் உரைத்து,
அன்பா னந்தர் அன்பையும் சொல்லி
அனந்த ராமனை அடியோடு விலக்கி,
வேலையை நாடி வேறொரு மனிதரின்



வீடுபோய் வருவதில் விருப்பமில் லாமையைத்
தெரியப் படுத்தி, சிறிதே சிரித்தாள்.
"வேண்டா, வேண்டா, வேண்டா, கமலம் !
தொழில்செய்ய வேண்டிய துன்பம் உனக்கேன் ?
பலநாள் என்னைக் கேட்டுப் பார்த்தனள்,
முடியாது என்றே முடிவுசொல் விட்டேன்.
நீயே விரும்பின நிலையை நினைத்து
நானும் அதனை நன்றெனக் கருதினேன்.
வேண்டா, வேண்டா, இனிமேல் வேண்டா
என்னுடை உடல்பொருள் எல்லாம் உன்னது.
இந்தச் சிறுமனை சொந்தம் உனக்கே.
நானிங் கிருக்கையில் நீயேன் நலிவது ?
துன்பம் விடு"எனத் தொழுதாள் சரஸ்வதி.

# சுந்தரம்

சாரதாம் பாளிடம் தான்பட்ட சூடும்,
ராகவன் எழுதிய ரகசியக் கடிதமும்,
மாதவன் குணங்களை மறைத்து விட்டதால்,
'பெண்களை நம்புதல் பெரும்பிழை' என்று
எப்போதும் அதையே எண்ணிக் கொண்டு
பித்தனைப் போலவும் பிதற்றுவான் எனினும்,
பெண்ணையே அழகுத் தெய்வமாய்ப் பேசி
இன்பக் கலைகளின் இருப்பிடம் பெண்ணென
இளமையி லிருந்தே எண்ணிப் பழகிய
அவன்மனம் பெண்ணையே அடிக்கடி நாடும்.
பெண்துணை யின்றிப் பெரிதும் வருந்தி
மாதவன் மற்றொரு மனைவியை விரும்பி,
கமலம் அழகே கண்களில் நிற்க
அவளைப் போலொரு அழகியைத் தேடி
ஊரூ ராக ஓடித் திரிந்ததில்
நாட்டியம் பார்க்கவும் நாடகம் பார்க்கவும்
பாட்டுக் கேட்கவும் பலவித ஆசையால்
தஞ்சா வூரிலே சிலநாள் தங்கினான் ;
ஒருநாள் மாலையில் உல்லாச நடையாய்
நண்பர் சிலருடன் 'ரயில்வே ஸ்டேஷன்'
'பிளாட் பாரத்'தில் பேசிக் கொண்டே
நாலா மூலையும் நடந்த வண்ணமாய்ப்
போகிற வருகிற புகைவண் டிகளில்
ஏறுகின் றோரையும் இறங்கு வோரையும்



வேடிக்கை பார்த்துத் திரிந்த வேளையில்,
மதுரை போகிற வண்டியில், யாரோ
பேரழ குள்ளவள் பெண்மணி ஒருத்தி
அலங்கார மாகிய உடைகளை அணிந்து
வண்டியில் இருந்தஓர் வாலிபன் தன்னுடன்
கலகலப் பாகச் சிரித்துக் களித்துப்
பெரிதும் மகிழ்வுடன் பேசிக் கொண்டே
இரண்டாம் வகுப்பில் இருப்பதைக் கண்டான்.
அழகான பெண்ணைப் பார்க்க ஆசையால்
அருகிலே சென்று அவளைப் பார்த்தான்.
அந்தப் பெண்மணி **சுந்தரம்** என்பவள் ;
கமலாம் பாளின் கல்லூரித் தோழி ;
கமலாம் பாளைக் கண்டுபோ வதற்காய்
அடிக்கடி வந்து அவளுடன் தங்குவாள் ;
மாதவ னிடத்தில் மரியாதை மிக்கவள்.
குடும்ப இன்பம் குறைந்தனள் என்பதாய்
அவனுக்கும் அவளிடம் அனுதாபம் அதிகம்.
சுந்தரம் சரித்திரம் சிந்தனைக் குரியது.
அவளுடைப் பெற்றோர் அவளுக்கு வயது
பத்துப் பிராயம் பார்ப்பதன் முன்னால்
கலியாணம் செய்ததன் காட்சியைக் காணவோ,
அப்படி மாப்பிள்ளை அப்புறம் கிடைப்பது
அரிதாய் விடுமென அஞ்சின தாலோ,
பணமே மிகுந்து பகட்டெலாம் நிறைந்து
குணமோ ஒழுக்கமோ கொஞ்சமும் அறியாக்
குளத்தூர் 'மைனர்' கோவிந்தன் என்னும்
வரனுக்கு, அவளை வலியக் கொண்டுபோய்ச்
சீரும் வரிசையும் சிறக்கச் செய்து
கன்னிகா தானமாய்க் கட்டிக் கொடுத்தனர்.

காதலோ காமமோ கடுகள வில்லை ;
அன்போ ஆசையோ அணுவேனு மில்லை ;
பிரியம் என்கிற பேச்சையும் அறியான்.
கலியாணம் என்னும் கடனைக் கழிக்கத்
தாலியைக் கட்டித் தன்னூர் போனவன்,
பலருடன் சேர்ந்து பள்ளிக்குச் சென்று
சுந்தரம் படிப்பதை நிறுத்தச் சொன்னான்.
அவளுடைப் பெற்றோர் அதனைச் செய்திலர்.
கோவிந்தன் அதனால் கோபம் கொண்டு
தீபா வளிக்கும் திரும்பிப் பார்த்திலன்.
சுந்தரம், பெற்றோர் சொந்தச் செலவில்
பள்ளியிற் படித்துப் பட்டமும் பெற்றாள் ;
பாட்டும் 'பிடிலும்' படித்துத் தேறினாள்.
அதனை அறிந்த அவளுடைக் கணவன்
பின்னும் அதிகமாய்ப் பிகுவுகள் காட்டினான் ;
'பெண்களுக் கெதற்குப் பெரும்படிப்' பென்பான் ;
பாடும் பெண்களைப் 'பரத்தையர்' என்பான் ;
'அலங்காரப் பெண்கள் அலங்கோலம்' என்பான் ;
'நாலுபேர் முன்னால் நகைப்பதுங் கூடக்
குடித்தனக் காரிக்குக் கூடாது' என்பான் ;
புகழுரை பேசிப் பொறுக்கித் தின்கிற
சோதாப் பயல்கள் பலபேர் சூழ,
செல்வம் படைத்த செருக்கே சிறப்பாய்த்
தினம்ஒரு ஊராய்த் திரிந்து கொண்டு,
அவளையும் இவளையும் அழகுபார்த் தவனாய்
வீணருக் குள்ளும் விழலாய்ப் போனான்.
மனைவியை அழைக்க மன்றாடிக் கெஞ்சிப்
பலபேர் முயன்றும் பயன்பெற வில்லை.
சுந்தரம் மிகவும் சுதந்தர மானவள் ;



பலநாள் பொறுத்துப் பார்த்துப் பார்த்துத்
தானே ஒருநாள் தைரிய மாகப்
புருஷனைக் கண்டு புத்திகள் பேசினாள்.
கோவிந்தன் மிகவும் கொதித்துப் பேசி
வேசியென் றவளை ஏசி யனுப்பினான்.
அதுமுதல் சுந்தரம் அவனை வெறுத்தாள்.
தந்தை தாயுடன் தங்கி யிருந்து
ஆண்பிள்ளை போல் அலுவல் பார்த்து,
இஷ்டப் பட்டவர் எவரொடும் பழகி,
பிரியம் உள்ளவர் யாரொடும் பேசி,
விரும்பிய படியெலாம் வேடிக்கை பார்த்து,
உசிதம் நினைத்த ஊர்களுக் கெல்லாம்
போவாள். சிலபேர் புரளியும் பேசுவார்.
அப்படிச் சுந்தரம் அடிக்கடி வந்துதான்
கமலாம் பாளுடன் சிலநாள் கழிப்பாள்.
அந்தச் சுந்தரம் இந்தச் சமயம்
தனியே வண்டியில் தன்னுடன் யாரோ
வாலிப னோடும் வந்ததைக் கண்டு,
மாதவன், பற்பல மனக்குழப் பத்துடன்
அவளுடன் பேசிட ஆசை மிகுந்து,
விளக்கின் வெளிச்சம் தன்மேல் விழும்படி
முன்னாற் சென்று முகத்தைக் காட்டினான்.
கண்டாள் சுந்தரம் கமலம் கணவனை !
சட்டென எழுந்து, சன்னலின் பக்கமாய்த்
தாவி நடந்து தலையை நீட்டி,
அவனைக் கண்டதில் ஆனந்தங் காட்டி,
வந்தனை சொல்லி வரவேற்புச் செய்து,
யோக க்ஷேம உரைபல பேசி
சென்னை பட்டினம் சென்றிருந் ததையும்

தாயார் உடம்பு சரியில்லை யென்று
தந்தி வந்ததால் தன்னூர் போவதாய்ச்
சுருக்கமாய் வந்த வரலாறு சொல்லி,
"நீங்களும் கமலமும் நெடுநா ளாக
மதுரைக்கு வருவதாய் வாக்களித் தீர்களே,
எப்போது வருவது ?" என்றாள் சுந்தரம்.
"இப்போதே வருகிறேன் ; இதிலென்ன கஷ்டம்"
என்று மாதவன் இச்சை கூறினான்.
"வாஸ்தவந் தானா ? வாருங்கள் போகலாம்.
கமலமும் இருந்தால் மிகவும் களிப்பேன் ;
ஆனாலும் என்ன, அவளும் நீங்களும்
இன்னொரு தடவை இருவரும் வரலாம் ;
இப்போது நீங்கள் ஏறுங்கள்" என்றாள்.
சுந்தரம் சொன்னது சும்மா இருக்கலாம் ;
மாதவன் சொன்னது வாஸ்தவம். அதனால்,
உடனே ஏறினான் ; உட்கார்ந்து கொண்டான் ;
தன்னுடன் வந்த இன்னொரு நண்பனைத்
தனக்கொரு டிக்கட் வாங்கித் தரும்படி
ஏவினான். நண்பனும் எளிதிலே செய்தான்.
சீக்கிரம் வருவதாய்ச் சிநேகித னிடத்தில்
விடைபெற வண்டியும் விட்டது ஸ்டேஷனை.
வராத விருந்தினர் வந்ததற் காக
அடையாத பெருமை அடைந்தவ ளாகிச்
சுந்தரம், அளவிலாச் சந்தோஷ மடைந்து,
மாதவன் குணநல மகிமையைப் பற்றியும்,
கமலாம் பாளின் கவிதையைப் பற்றியும்,
அவர்கள் வாழ்க்கையின் அருமையைப் பற்றியும்,
கல்வியிற் சிறப்பையும், கலைகளில் திறத்தையும்,
உதார குணத்தின் உயர்வைப் பற்றியும்,



புகழ்ந்து பேசிப் பொங்கி மகிழ்ந்து,
சென்னையி லிருந்து தன்னுடன் வந்த
வாலிபன் மெச்ச வர்ணித் துரைத்து
அவனையும் மாதவற் கறிமுகப் படுத்த,
"இவரும் முன்னே மதுரையில் இருந்தவர் ;
எங்கள் வீட்டுக்கு எதிரில் வசித்தவர் ;
இவர்தான் **மீனாட்சி சுந்தரம்** என்பவர் ;
சென்னையில் சிறந்த சினிமா நடிகர் ;
பற்பல படங்களில் பார்த்தவர் வியக்க
நடித்திருக் கின்றார், நாடெலாம் அறியுமே ;
'டைரக்ட்' செய்வதில் தன்னிகர் இல்லார்.
கமலாம் பாளைக் கண்டாற் போல
அநேகம் சிறந்த அழகான பெண்கள்
இவரிடம் பயிற்சிகள் இன்னும் பெறுகிறார்.
என்னுடன் மதுரையில் இரண்டுநாள் தங்குவார்.
நீங்களும் அவருடன் சேர்ந்தது அதிர்ஷ்டம்"
என்றாள் சுந்தரம். எல்லாம் கேட்டு
மாதவன் பலவிதம் மனத்தில் எண்ணுவான் ;
'கமலாம் பாளைக் கண்டாற் போல
அழகான பெண்கள் அவனிடம் பயில்வதாய்ச்
சுந்தரம் சொன்னதைச் சிந்தனை செய்து,
அப்படிப் பெண்களின் அழகைப் பார்க்கவும்,
கண்ணுக் கினிமையாய்க் கருத்தும் கலந்தால்
அவர்களுள் ஒருத்தியை மனைவியாய் அடையவும்,
மீனாட்சி சுந்தரம் மிகவும் உதவலாம்'
என்று மாதவன் எண்ணி மகிழ்ந்தான்.
அதனால் அவனுடன் அன்புபா ராட்டிச்
சினிமாக் கலையின் சிறப்பைப் பற்றியும்,

எத்தனைச் செலவில் எப்படிப் படங்களை
என்னென்ன விதமாய் எடுக்கலாம் என்றும்,
உயர்ந்த படங்களை உற்பத்தி யாக்கக்
கூடிய நல்லஓர் 'ஸ்டுடியோ' வைக்க
வேண்டிய பணத்தின் கணக்கு விவரமும்
அந்தத் தொழிலுக் கானதை யெல்லாம்
சாங்கோ பாங்கமாய்ச் சர்ச்சை செய்து
கலைகள் பற்பல கலக்க வேண்டிய
சினிமாத் தொழிலைச் சிறப்பாய் எண்ணி
பலத்த 'ஸ்டுடியோ' படமுத லாளியாய்
விளங்கலாம் என்றொரு விருப்பமும் உதித்தது.
சும்மா இருந்த சுந்தரம் நடுவில்
"கமலம் சுகமா ? காணத் தேடுது.
உத்தமி அவளை ஒருநாளும் மறவேன்.
தாயும் குழந்தையும் சௌக்கியந் தானே ?
எங்குசென் றாலும் இணைபிரி யாமல்
அவளையும் கூடவே அழைத்துக் கொண்டு
வருவது உங்கள் வழக்கமா யிற்றே.
தனியே தானா தஞ்சை வந்தீர் ?"
என்றாள். அதற்கு என்ன சொல்லுவான் !
நெடுநே ரமாக நினைத்துப் பார்த்து,
"கமலமும் குழந்தையும் காணாது போயினர்.
அவளை இழந்துதான் அவதிப் படுகிறேன்"
என்றான் மாதவன். இடிவிழுந் ததுபோல்
சுந்தரம் எழுந்து துள்ளித் துடித்து,
"கமலமா ? ஐயோ ! காணாமற் போவதா !
இதுஎன்ன கதையாய் இருக்கிற தையோ !
என்ன காரணம் ? எங்கே போவாள் ?
தேடிப் பார்த்தும் தெரிய வில்லையா ?



இழந்ததாய்ச் சொன்னீர் ; இறந்துவிட் டாளா ?
விவரமாய்ச் சொல்லி விளக்குங்கள்" என்றாள்.
"செத்துப் போனதாய்ச் சேதிக ளில்லை.
உயிரோ டிருக்கிறாள் என்றுதான் ஊகம்"
என்பதைச் சொல்லிச் சும்மா இருந்தான்.
காணாமற் போய்விடக் காரணம் தெரியக்
கிண்டிக் கிண்டிக் கேட்டுப் பார்த்தாள்.
மாதவன் அதற்கு மறுமொழி யின்றி
வருத்தம் மிகுந்த வாடிய முகமாய்த்
தலையைக் குனிந்து தன்னையே பார்த்துச்
சும்மா விருப்பதைக் கண்ட சுந்தரம்
என்ன வருத்தமோ ? ஏதோ ? என்று
பின்னும் கேட்கப் பிரியமில் லாமல்
அந்தப் பேச்சை அத்துடன் விட்டாள்.

✤ ✤ ✤

வைகைக் கரையிலோர் மாந்தோப்பு மத்தியில்
சுந்தரம் வீடொரு சுகமான பங்களா ;
வசதிகள் நிறைந்த வசந்த மாளிகை ;
நாலா புறத்திலும் நறுமலர்ச் சோலைகள் ;
பார்க்கும் எல்லாப் பக்கமும் பசுமை ;
மூன்றடுக் கமைந்த மோகனக் கட்டடம்.
உச்சியில் ஏறினால், ஊரையும் பார்க்கலாம் ;
பாண்டிய நாட்டின் பண்பின் நிலையமாய்,
தமிழரின் சிறப்பைத் தாங்கும் தூண்களாய்,
அரசரின் மேன்மைக்கு அழியாத சாட்சியாய்,
குடிகளின் குணத்தைக் குறிக்கும் குன்றாய்,
கலையெலாம் சேர்ந்த கண்காட்சி யேபோல்,
தமிழரின் அறிவை நிறுக்கும் தராசுபோல்,
தெய்வ பக்தியின் திருவிளக் கென்ன,

நாகரி கத்தின் நந்தா விளக்காய்,
சகல புவனமும் காக்கும் சக்தியாம்
அன்னைமீ னாட்சி அமர்ந்தருள் புரியும்
கோயிலின் நான்கு கோபுரம் தெரியும்.
சுருக்கமாய்ச் சொன்னால் சுந்தரம் வீடு
இன்பம் என்பதன் இருப்பிடம் எனலாம்.
அப்படி வீட்டில் இப்படி நண்பர்க்கு
எப்படி விருந்தென எழுதவும் வேண்டுமோ ?
'என்னுடன் தங்குவார் இரண்டுநாள்' என்று
சுந்தரம் சொன்ன மீனாட்சி சுந்தரம்
ஆறுநாள் முடிய அங்கே தங்கினான் ;
அதன்பின் மிகவும் அவசரம் என்று
சினிமா வேலையாய்ச் சென்னைக்குச் சென்றான்.
மதுரையில் நித்தமும் மாதவ னிடத்தில்
மீண்டும் மீண்டும் மீனாட்சி சுந்தரம்
சினிமாத் தொழிலின் சிறப்பையே பேசி
மாதவன் மனத்தை மயக்கி விட்டான் ;
நெடுநாள் பழகின நேசனைப் போலப்
பிரிந்து போவதில் பிரியமில் லாமல்
மீனாட்சி சுந்தரம் சென்னைக்கு மீண்டான்.
கண்ணுக் கினியவன் ; கல்வியும் கற்றவன் ;
சினிமாத் தொழிலில் சிறந்தவன் ; எனினும்
மீனாட்சி சுந்தரம் மிகவும் தீயவன்.
காசு படைத்த கயவர் சிலபேர் ;
முதலாளி என்றிடும் முழுமூடர் பலபேர் ;
செல்வச் செருக்குடன் சிற்றின்பம் சேர்ந்து
கலைகளைக் காப்பதாய்க் காமமே கண்ணாய்,
வேலையில் லாத வீணருக் குளவாய்,
அன்னிய ஆட்சியின் அலங்கோ லத்தால்



தலைவிரித் தாடும் தரித்திரக் கொடுமையால்
வயிறு வளர்க்கும் வழிதெரி யாமல்
படிப்போ பாட்டோ பழக்கம் ஆனதால்
சினிமா விலாவது சீவனம் தேடித்
திக்கற் றவராய்த் திரியும் அநேக
சிறுசிறு பெண்களைச் சீரழித் திட்டவன் ;
பத்தினி யாவார் பலரைக் கெடுத்தவன் ;
உத்தமப் பெண்களை உயிர்விடச் செய்தவன் ;
கலியாண மாகாத கன்னிப் பெண்ணையும்,
புருஷனைப் பிரிந்த பூவையர் தம்மையும்,
தேடிக் கெடுப்பதில் திறமை மிகுந்தவன் ;
கணவன் வெறுத்ததால் காவலில் லாமல்
தளர்ந்து வயதுள தாய்தந்தை யில்லாமல்
வேறு துணைவர்கள் வீட்டிலில் லாமல்,
செலவுக்கு வேண்டிய செல்வமும் சேர்ந்து
அதிகாரம் முழுவதும் அவளிடம் உள்ளதாய்ச்
சுதந்தரம் நிறைந்த சுந்தரம் நிலைமையை
நன்றாக அறிந்த நயமிக்க வஞ்சகன்
மீனாட்சி சுந்தரம் மெதுவாய் அவளைத்
தன்னுடை வலைக்குள் தள்ள நினைத்து,
பட்டண மிருந்து பலமுறை வந்து,
முன்னே பழகின முறைமையி னாலே
எப்படி யோஅவள் ஏமாறச் செய்து,
சினிமாத் தொழிலில் சேர்ந்திடச் சொல்லி,
சென்னைக்கு அவளைக் கூட்டிச் சென்றான்.
அவளை நன்றாக அறிந்தவர் சிலபேர்
சுந்தரம் பெற்றோ ரிடத்திற் சொன்னதால்,
'தாயா ருக்குத் தட்புடல்' என்று
தந்தி கொடுத்ததால் வந்தவள் சுந்தரம்

பட்ட விஷம்போல் விட்டு விடாமல்
கூடவே வந்து கூட்டிப் போகவே
அவனும் இப்போது அவளுடன் வந்தது.
சொல்லிக் கொடுத்த சூழ்ச்சியின் படியே
நோயாற் படுத்த தாயார் இன்னமும்
அபாய நிலையை அகலா தவள்போல்
படுத்த படுக்கையாய்க் கிடத்தலைப் பார்த்து,
தன்னுடன் சுந்தரம் சென்னைக்கு வருவது
முடியாது என்பதை முடிவாகக் கண்டு
நடிகன் தனியே சென்னையை நாடினான்.
அப்படி வந்தவன் அந்த 'டைரக்டர்'.
மாதவன் வந்ததும் மதுரையைப் பார்க்கவா ?
சுந்தரம் அழகில் சொக்கியே வந்தவன்.
மாதவன் வந்தது நயவஞ் சகத்தால்.
மாதவன் வந்தது மதிகெட்டு விட்டதால்.
மாதவன் ஆசை மனத்துள் ஒன்றைச்
சுந்தரி யிடத்தில் தனியே சொல்ல
இடைஞ்சலாய்ச் சினிமா நடிகன் இருந்தான்.
தாயார் நோயும் தடையா யிருந்தது.
சுந்தரம் தாயார் நொந்திடல் குறைந்து
அபாயம் நீங்கிய உபாய நோயாய்க்
குணமடைந் திடுமெனக் குறிகள் தோன்றின.
சுந்தரம் அதனால் சிந்தைநிம் மதியுடன்
மாதவ னோடு மகிழ்ந்து பேசிட
நேரமும் நிலைமையும் நிரம்ப நேர்ந்தது.
சுந்தரம் முன்னே பலமுறை சொல்லி
மாதவன் சிறப்பை அறிந்து மதிக்கும்
சுந்தரம் பெற்றோர் சொன்னதற் காக,
சென்னைக்கு மீனாட்சி சுந்தரம் சென்றபின்



மற்றும் சிலநாள் மாதவன் தங்கினான்.
ஒருநாள் ராத்திரி உணவுக் கப்புறம்
நந்த வனத்தின் நடுவே உள்ளதாய்ப்
பலவித மலர்களின் பரிமளம் கமழும்
மெல்லிய தென்றல் தவழும் மேடைமேல்
மூன்றுநாள் தேய்ந்த முழுநிலா ஒளியில்
மாதவன் சுந்தரம் இருவரும் மகிழ்வுடன்
பற்பல விஷயமாய்ப் பரிவுடன் பேசி
ஏகாந்த மாக இருந்த வேளையில்,
வண்டியில் அவளைக் கண்டதும் உடனே
தஞ்சா வூரிலே தன்மனத் தெழுந்த
ஆசைக் காகவே அப்படி வந்து
தனியே பேசத் தருணம் பார்த்து
ஏழெட்டு நாளாய் எதிர்பார்த் திருந்த
சமயம் வாய்த்த சந்தோ ஷத்துடன்,
"சுந்தரம் ! ஒன்றுநான் உன்னிடம் சொல்ல
ஆசைப் படுகிறேன் அதிகமாய்" என்றான்.
"என்ன சொல்லுங்கள்," என்றாள் சுந்தரி.
மனத்தில் உள்ளது வாய்க்கு வருமுன்
சாரதா நினைப்புச் சட்டென வந்து
மாதவன் சற்றே மருண்டு மலைத்தான்.
மாதவன் மலைத்தால் ஆசை மலைக்குமா ?
சிறுகச் சிறுகத் தேற்றிக் கொண்டு
"அறிவும் அழகும் பிறவும் அமைந்து
தேடக் கிடைக்காத் திரவியம் போன்ற
உன்னையும் இப்படி உன்னுடைக் கணவன்
இகழ்ந்து விட்ட கொடுமையை எண்ணி"
என்று மாதவன் எடுத்ததை முடிக்குமுன்,
"கணவரைப் பற்றிய கவலையே இல்லை.

அந்தப் பேச்சை அடியோடு விலக்கி
வேறெதைப் பேசினும் விரும்புவேன்" என்றாள்.
"கணவனைப் பற்றிய கவலையே வேண்டா.
அவர்க்குச் சலுகையாய்ச் சொன்னதும் அல்ல.
கமலம் எங்கோ காணாது போனபின்
வேறொரு மனைவியை விரும்பித் தேடினேன் ;
கண்ணுக் கினியஓர் பெண்ணைக் கண்டிலேன்.
உன்னுடைக் கணவனோ உன்னைத் துறந்தான்.
என்னுடை மனைவியோ எங்கோ மறைந்தாள்.
நீயும் நானும் நிலைமையில் ஒன்றே.
கமலம் இப்படிக் காணாது போனபின்
அடிக்கடி உன்னையே ஆசையாய் எண்ணுவேன் ;
சுந்தரம் ! உன்னுடை அழகில் சொக்கினேன்.
உன்மேற் காதலாய் உருகிடும் என்றன்
கவலையைத் தீர்க்கக் கருணை புரிந்திடு.
கணவன் மனைவிபோற் களித்து வாழலாம்.
மறுமணம் வேண்டினும் மகிழ்வுடன் புரிவோம்.
தயவுசெய் சுந்தரம், சம்மதம் தந்திடு"
என்று மாதவன் கைகளை ஏந்தினான்.
சுந்தரம் மலர்முகம் சுருங்கி விட்டது.
அருகில் இருந்தவள் அப்பால் நகர்ந்து
மாதவன் முகத்தை மருளப் பார்த்து,
"என்ன நண்பரே ! இப்படிப் பேசினீர் !
கொண்ட கணவன் குணமிலர் என்றால்
கண்டவர் எல்லாம் காதலர் தானா ?
கட்டின புருஷன் காதலிக் காவிடில்
எட்டின பேரெலாம் இச்சை கொள்வதா ?
என்மேல் ஆசையாய் எண்ணிவிட் டதற்காய்
உங்கள்மேற் காதல் உதித்து விடுமா ?



கல்வியும் கலைகளும் கருணையும் கலந்த
அறிவும் ஆண்மையும் ஆற்றலும் அமைந்து
கண்டவர் எவரும் கைகுவித் திறைஞ்ச
உத்தம குணங்களால் உயர்ந்து விளங்கினீர் !
அழகுத் தெய்வம் அவளே யாகிப்
பெண்மைக் கான பெருங்குண மனைத்தும்
உறைவிட மாகிய உத்தமி யாகும்
கமலாம் பாளின் காதல ராகிய
நீங்களும் இந்த நிலைமைக்கு வந்தது
ஆச்சரி யத்திலும் ஆச்சரி யந்தான் !
கமலம் எப்படிக் காணாது போனாள் ?
அதனைப் பேசவும் அஞ்சுவீர் போலும் !
காணாமற் போன கமலாம் பாளைத்
தேடிப் பார்த்ததாய்த் தெரிய வில்லையே !
'உயிரோ டிருப்பதாய் ஊகம்' என்றீர்.
உயிரோ டிருப்பவள் உம்மிடம் வந்தால்
நீங்கள் என்னை விரும்பிய நிலையில்
என்னைக் கண்டால் என்ன நினைப்பாள் ?
பள்ளியில் நாங்கள் பழகிய நாள்முதல்
எனக்கவள் செய்துள உதவியை எல்லாம்
மறந்து போவது மனுஷத் தனமா ?
ஐயோ ! நண்பரே, அவளுக்கு நானா
துரோகம் செய்யத் துணிவது ? தகுமா ?
இதுமட்டும் அல்ல, இன்னொன்றும் உண்டு ;
கமலாம் பாளின் கணவரென் பதற்காய்
உங்களை நான்என் உடன்பிறப் பேபோல்
நெடுநா ளாக நினைத்து வருகிறேன்.
உங்கள்மேல் காமம் உதிக்காது எனக்கு.
வேண்டா. அண்ணா ! விடுங்களிவ் வாசையை

கமலாம் பாளைக் கண்டு பிடித்து
அவளுடன் வாழ்வதே உங்களுக் கழகு"
என்றாள் சுந்தரம் ; எழுந்தாள் போக.
மறுப்பறி யாமல் மாதவன் ஊமைபோல்
பேச்சில் லாமல் பின்னால் போனான்.
மறுநாள் காலையில் மதுரையை விட்டு
மாதவன் சென்றான் திருவன மங்கலம் ;
அங்கே சிலநாள் தங்கி யிருந்தான்.
சுந்தரம் சொன்னவை சுருக்கெனக் குத்த,
கமலம் வடிவம் கண்முன் தோன்ற,
ராகவன் நினைப்பால் ரத்தம் கொதிக்க,
இன்னொரு மனைவியின் ஏக்கமே பெரிதாய்ப்
படித்த படிப்பெலாம் பரிகசிப் பாக,
பழகிய நண்பர்கள் பரிதா பப்பட
அநேக ஊர்களில் அலைந்து திரிந்து,
எந்த இடத்திலும் இருப்புக்கொள் ளாமல்.
'கமலாம் பாளைக் கண்டாற் போல'ப்
பற்பல பெண்களைப் பழக்கு கின்றவன்
மீனாட்சி சுந்தரம் நினைப்பு மேலிடச்
சென்னையை நாடிச் சென்றான் மாதவன்.

## ஆண்டு விழா ஆரம்பம்

வீணைப் பாடம் விட்டபிற் பாடு
கமலம் மிகவும் கவலையில் ஆழ்ந்தாள்.
கட்டிலும் மெத்தையும் புத்தகம் கையுமாய்ப்
படிப்பதே வேலையாய்ப் பகலைக் கழிப்பாள் ;
மகளின் ஏக்கமோ, மாதவன் நினைப்போ,
ராகவன் எழுதிய ரகசியக் கவலையோ,
தூக்கம் என்பது துர்லப மாகப்
புரண்டு மருண்டு இரவைப் போக்குவாள் ;
'உன்மகள் ராஜம் உயிரோ டிருக்கிறாள்,
சென்னையில் பார்க்கலாம் சீக்கிரம்' என்கிற
கடிதமே பொய்யோ என்று கலங்குவாள்.
அந்தக் கடிதம் வந்ததன் பிறகு
மாதங்கள் ஆறு ஓடி மறைந்தன.
'கடிதம் அதனைக் கண்டதா லன்றோ
வேலைக்குப் போக விருப்பம் வந்தது ?
அனந்த ராமனால் அவமதிப் படைந்தது ?
பித்தன் எவனோ காதலைப் பேசித்
தழுவ நினைத்துத் தாவி வந்ததும் ?'
என்பன வற்றைத் தினமும் எண்ணி
மகளைப் பார்க்கும் ஆசையின் மகிழ்ச்சி
கொஞ்சம் கொஞ்சமாய்க் குறைந்து விட்டது.
வாழ்க்கையில் வெறுப்பு மீண்டும் வந்தது.
தெரிந்த ஒருவரைத் தேடிப் பிடிப்பதே
சென்னையில் அப்பா ! என்ன சங்கடம் !

சென்னையில் இருக்கிறாள் உன்மகள்' என்றால்
எங்கே தேடி எவரைக் கேட்பது ?
அப்படி யிருந்தும் அன்பின் மிகுதியால்
சரஸ்வதி யம்மாள் சலிப்பில் லாமல்
தெரிந்த இடமெலாம் தேடவும் செய்தாள்.
குழந்தையைக் காணும் குறிகளே இல்லை.
பட்டினம் முழுவதும் பலஇடம் சென்று
வேதாந்த மடத்தின் வேலைகள் பார்க்கும்
அன்பா னந்தரை, சரஸ்வதி யம்மாள்
கமலம் குழந்தையைக் கண்டு பிடிக்கவும்
முடியுமா என்பதை முயன்றிடக் கோரினாள்.
கமலம் நிலைமையிற் கருணை மிகுந்த
அந்தத் துறவியும் 'ஆகட்டும்' என்றார்.
இப்படி யாகக் கமலம் இருக்கையில்
சரஸ்வதி யம்மாள் கல்விச் சாலையின்
ஆண்டு விழாநாள் அடுத்து வந்தது.
ஆண்டு விழாக்களை அதிகச் சிறப்புடன்
நடத்தி வைப்பதில் நல்லபேர் பெற்றவள்.
விமரிசை யாக விழாவை நடத்திப்
பரிசுகள் தருவது அதிலே பழக்கம்.
பரிசு கொடுக்கும் நூல்களைப் பற்றிப்
புத்தக நிலையப் பொறுப்புள் ளதனால்
விதம்வித மாகிய வெளியீ டுகளை
அன்பா னந்தர் அறிவார் என்று
பரிசுக் குகந்த நூல்களைப் பார்த்துப்
பொறுக்கித் தரும்படி கேட்கப் போனாள்.
விழாவைப் பற்றியும் விவரமாய்ப் பேசி
வழக்கம் போலப் புத்தகம் வாங்கப்
பணவசூல் மிகவும் பற்றா திருப்பதாய்ச்



சுருக்க மாகச் சொல்லவும் நேர்ந்தது.
அதனைக் கேட்ட அன்பா னந்தர்,
"திருவொற்றி யூருக்குத் தெற்கே எனக்கொரு
நண்பர் இருக்கிறார் ; மிகவும் நல்லவர் ;
பிரியம் மிகுந்தவர் ; பெரும்பணக் காரர் ;
பொதுநலம் கருதும் புண்ணிய புருஷர் ;
கல்வியை வளர்க்கக் கணக்கின்றிக் கொடுப்பார் ;
இங்குள்ள புத்தக நிலையம் இதற்குப்
போன வருடம் புத்தகம் வாங்க
ஐம்பதி னாயிரம் நன்கொடை அளித்தார் ;
தானமும் தருமமும் தாராள முள்ளவர் ;
மனைவியும் அதுபோல் வாய்த்த மனிதர்
ஏழை மாணவர் எத்தனை யோபேர்
அவர்கள் உதவியால் அருங்கலை பயில்வர்
அங்கே போனால் ஆயிரக் கணக்கிலும்
வேண்டிய எதையும் விருப்புடன் தருவார்.
நாளையே போவோம் ; நானே கேட்கிறேன்.
என்ன தேவையோ எல்லா வற்றையும்
வாங்கித் தருகிறேன் வாருங்கள்" என்றார்.
எதிர்பா ராத இதனைக் கேட்டதும்
சரஸ்வதி அளவிலாச் சந்தோஷம் அடைந்து
துறவியை மிகவும் தொழுது புகழ்ந்து,
"அன்பா னந்தரே ! தாங்களே அன்பு.
துறவியின் அன்பின் தூய்மையைக் கண்டேன்.
என்னகைம் மாறு செய்வேன் !" என்றாள்.
"துறவிக்கு மட்டுமா அன்பின் தொடர்பு ?
இல்லறம் முற்றிலும் அன்பின் இயக்கமே.
அன்பின் திறங்களை யாரே அறிவார் !
அன்பின் சிறுமையே ஆசை என்பது.

அன்பின் பெருமைதான் காதல் ஆவதும்.
அன்பின் விகாரமே காமமாய் அலர்வது.
அன்பின் விரிவுதான் அருளாய் மலர்வது.
மனைவியும் மக்களும் மற்றுள சுற்றமும்
நண்பரும் என்பதாய் நம்மையே நாடும்
பற்றுள் ளவரிடம் பட்சமே அன்பாம்.
பற்றிலா எவர்க்கும், பற்றுவிட் டவர்க்கும்,
பகைமையே நம்மிடம் பாராட்டு வோர்க்கும்
அன்பே செய்வதாம் அருள்எனப் படுவது.
துறவறம் அருள்செயத் துணைதரும் எனினும்
இல்லற வாழ்விலும் அருளோ டிருப்பதே
ஆன்றோர் வகுத்த அறநெறிப் பொருளாம்.
அன்பின் ஒழுக்கமே இல்லறம் ஆவது.
அன்பிற் பெருக்கிய அருள்சேர் வாழ்க்கையே
துறவறம் என்பதன் தொடக்கம் என்பது.
அன்பைப் போன்ற அரும்பெரும் செல்வம்
மனிதன் பெறுவது மற்றெதும் இல்லை.
அறிந்தவர்க் கெல்லாம் அன்பே தெய்வம்.
அன்பை உணர்வதே ஆனந்தம் எனக்கு"
என்றார் துறவி இதோப தேசமாய்.
வாடகை மோட்டார் வண்டியில் மறுநாள்
திருவொற்றி யூர்செலத் தீர்மா னித்தபின்
விடைபெற்று, சரஸ்வதி வீட்டுக்குப் போனாள்.

♣ ♣ ♣

தஞ்சா வூரிலே சந்தித்த பின்னர்
மாதவ னோடு மதுரையிற் பழகிய
மீனாட்சி சுந்தரன் மிகவும் சமர்த்தன் ;
சென்னையில் நல்ல செல்வாக் குள்ளவன்.
பள்ளிக் கூடங்கள் பலவும் பழக்கம்.



விழாவைப் போன்ற விசேஷ நாள்களில்
நாடகப் பயிற்சிகள் நடத்தி வைக்கவும்,
சிங்கா ரிப்புகள் செய்வதற் காகவும்
அவனுடை உதவியை அநேகர் நாடுவர்.
சரஸ்வதி யம்மாள் கல்விச் சாலையின்
அதிகாரி களுக்கு அவனொரு நண்பன்.
ஆண்டு விழாவின் அரங்க மேடையை
அலங்கரிப் பதற்காய் அவனைக் கோரினர்.
அதனைப் பற்றிய அலுவல்கள் பேச,
சரஸ்வதி யம்மாளைச் சந்திக்க வேண்டி,
சரஸ்வதி யம்மாள் சாமியா ரிடத்தில்
முன்னே சொல்லிய முயற்சிகள் பேசி
வேதாந்த மடத்தில் இருந்த வேளையில்
நடிகன் சரசுவதி வீட்டை நாடினான்.
சாலைக் கதவைத் தானே திறந்து
செடிகள் செறிந்த சிறுவழி நடந்து
வாசலுக் கருகில் வருவதன் முன்னால்,
கட்டட முகப்பில் கண்ணுக் கழகாய்ப்
பயிர்செய் திருந்து படர்ந்து அடர்ந்து
நீண்ட மல்லிகைக் கொடிகளின் நிழலில்,
கைகளைப் பின்னாற் கட்டிக் கொண்டு,
இடதுக்கை விரல்களில் புத்தகம் இடுக்கி,
எதிரில் இருந்தது எதையோ பார்த்து,
அதிலோ எதிலோ ஆழ்ந்த சிந்தையாய்,
மகரந் தப்பொடி மிகவும் படிந்து
பொன்னிறம் மிஞ்சிய செந்நிறப் பூவென,
தங்க நிறத்தொரு தாமரை மலர்போல்,
நிலத்திற் கிடைக்கும் நிறங்களை நீக்கி
வான வில்லின் வர்ணம் தீட்டிய

சித்திர மோ,ஒரு சிலையோ, பெண்ணோ !
கமலம் நின்றதைக் கண்டான் நடிகன்.
விண்ணொளி மின்னிக் கண்ணொளி இருண்ட
குருடனைப் போலக் குழைந்து நின்று,
முன்னால் எடுத்தகால் பின்னால் வைத்து,
எலியைக் கண்டுதான் இருப்பதை மறைக்க
உடலைக் குறுக்கும் பூனைபோல் ஒடுங்கி,
தவளையைப் பார்த்துத் தலையைக் குறுக்கிப்
படுத்துச் சுருளும் பாம்பென நெளித்து,
பூச்சியைக் கண்டதும், 'புழுவோ, வண்டோ,
பறக்குமா' என்று பார்க்கும் பல்லிபோல்,
குளத்தி லிருக்கும் மீனைக் கொத்திட
நீரில் நின்றுதன் நீண்ட கழுத்தைக்
குறுக்கிக் கொள்ளும் கொக்கெனக் கூம்பி,
ஆட்டுக் கிடாவை அடக்கி மடக்கத்
தகுதியில் லாமல் தந்திரம் கருதிக்
குழியிற் பதுங்கும் குள்ள நரிபோல்,
உடலையும் உடையையும் ஒடுக்கிக் கொண்டு
நடிகன் அங்கொரு செடியின் பின்னால்
மறைந்து நின்று அழகை மாந்தினான்.
சிறிது நேரம் இப்படிச் சென்றபின்
கமலம் இருந்த நிலைமை கலைந்து
நடிகன் இருந்த திசையில் நடந்தாள் ;
செடியின் அருகில் உடையைத் தெரிந்து
ஆடவர் யாரோ நிற்பதை அறிந்து
விரைந்து நடந்து வீட்டுள் மறைந்தாள்.
மெய்சிலிர்த் திட்ட மீனாட்சி சுந்தரம்
முன்னால் நடக்க நினைக்கு முன்னால்
வாத்தியா ரம்மாள் பின்னால் வந்தாள்.



"இங்கேன் நிற்கிறீர் ?" என்றாள் சரஸ்வதி.
"ஆண்டு விழாவின் அலுவலைப் பற்றி
நீங்கள் என்னுடன் பேச நினைத்ததாய்,
காரிய தரிசி காலையிற் சொன்னார்,
உங்களைக் காணவே இங்கே வந்தேன் ;
அறிமுகம் இல்லாத யாரோ ஓர்அம்மாள்
வாசலில் நின்றார், கூசுவார் என்றே
இங்கே நின்றேன்" என்றான் நடிகன்.
நடிகன் சொன்னதை நன்றென மதித்து
அழைத்துக் கொண்டுபோய் ஆசனம் கொடுத்து,
பள்ளிக் கூட விழாவைப் பற்றிப்
பேச வந்ததைப் பேசி முடித்தபின்,
உடனே நடிகன் விடைகொள் ளாமல்,
அங்கே கண்ட அவ் வற்புத அழகியை
எப்படி யாவது இன்னும் பலமுறை
பார்க்கவும் முடிந்தால் பழகவும் தோதாய்
வரவும் போகவும் வழிதே டிக்கொள
உபாத்தியம் மாளின் உறவை வளர்க்க
வஞ்சகன் தன்னுடை வலையை வீசுவான்
சந்தேகம் எண்ணாத சரஸ்வதி யிடத்தில்,
"பட்டினத் தில்உள்ள பெண்களின் பள்ளிகள்
அனைத்தும் நான்மிக நன்றாக அறிவேன்.
உங்கள் பள்ளிதான் மிகவும் ஒழுங்காய்
நல்ல முறையில் நடத்தப் படுவது
நேற்றுக் கூடநான் நிர்வாகி யவருடன்
பேசின போதும் பிரஸ்தா பித்தேன்.
'சரஸ்வதி யம்மாள் சாமர்த் தியந்தான்'
என்றுதான் அவரும் என்னிடம் சொன்னார்.
உங்கள் தயவால் ஒருசிறு காரியம்.

நடக்க வேண்டும்" என்றான் நடிகன்.
"என்ன காரியம் ?" என்றாள் சரஸ்வதி.
"பெண்கள் படிப்பையே பெரிதும் கருதிய
கல்வியைப் பற்றிய நல்லதோர் கதையைச்,
சினிமாப் படமாய்ச் செய்து வருகிறேன்.
நல்ல விதமாய் நடத்தப் படுகிற
கல்விச் சாலையின் தினசரிக் காட்சியை
அந்தப் படத்தில் அமைத்திட வேண்டும்.
பற்பல இடங்களை எண்ணிப் பார்த்ததில்
எல்லா விதத்திலும் ஏற்ற முள்ளதாய்
உங்கள் நிலையம் ஒன்றுதான் உள்ளது.
நீங்களும் உங்கள் நிலையத் தவர்களும்
ஒருநாள் வந்துநான் உங்களை யெல்லாம்
போட்டோ பிடித்திடத் தயவு புரிந்தால்
சந்தோஷம் அடைவேன் ; சன்மான மாக
இரண்டு ஆயிரம் ஒதுக்கி யிருக்கிறேன்.
அதிகம் வேண்டினும் ஆட்சேபம் இல்லை ;
அனுமதி தந்து ஆதரித் திடுங்கள்.
இதுதான் காரியம்" என்றான் நடிகன்.
"பெண்கல் விக்குப் பெருமை செய்கிற
எதுவும் எனக்கு இன்பமே எனினும்
பணத்துக் காகப் படத்தில் வருவது
குற்றம் போலக் கூசுவேன்" என்றாள்.
"குற்றம் என்ன ? கூசுவது எதற்காய் ?
வெளியில் எங்கும் வரவே வேண்டா.
இருக்கிற இடத்தில் நீங்கள் இருங்கள்.
பள்ளியில் வந்து படம்பிடிக் கின்றோம்.
படத்தைக் காட்டினால் பணம்வரு கின்றது.
நாங்கள் அதனால் லாபம் அடைகிறோம்.



உங்களுக் கதிலே ஒருசிறு பகுதியைத்
தருகிறோம் என்றால் தவறென்ன இதனால் ?
பணத்தை வாங்கினால் பலவித வழிகளில்
பொதுநலம் செய்யவே பொழுதும் உழைக்கிற
உங்களுக் கதுமிக உதவியாய் இருக்குமே !
அடுத்த வருஷம் ஆண்டு விழாவில்
பரிசுகள் தரவும் பணம்உத வாதா ?
என்ன தயக்கம் ?" என்றான் நடிகன்.
நியாயம் என்றே சரஸ்வதி நினைத்தாள்.
ஆண்டு விழாவிற் கப்புறம் ஒருநாள்.
பள்ளிக் கூடப் படம்பிடிப் பதற்குச்
சரஸ்வதி யம்மாள் சம்மதித் திட்டாள்.
நடிகன் களிப்புடன் விடைபெற்று நடந்தான்.
கமலம் உள்ளே கட்டிலின் மீது
கேட்டுக் கொண்டே படுத்துக் கிடந்தாள்.

# துன்பம் தொலைந்தது

மறுநாள் பிற்பகல் இரண்டு மணிக்குமேல்
சரஸ்வதி யம்மாள் சாமியார் சகிதமாய்த்
திருவொற்றி யூருக்குத் தெற்கே குறித்த
அன்பா னந்தரின் அன்பரைப் பார்க்க
வாடகை மோட்டார் வண்டியிற் போனாள்.
கண்ணாற் கண்டதும் களைத்து வந்தவர்
தாபம் குறைக்கும் சோலை தருவதாய்,
வானுற ஓங்கி வளம்பெற வளர்ந்து
பழுத்துக் கொட்டும் பலவித மரங்களும்,
வெகுதூ ரத்திலும் வாசனை வீசப்
பூத்துக் குலுங்கும் புஷ்பச் செடிகளும்,
நிறைந்து, குளிர்ந்த நிழலே உள்ளதாய்,
இடந்தெரி யாமல் இலைகளில் மறைந்து
கண்ணிற் படாமல் காதுக் கினிமையாய்க்
கூவும் குயிலும், கூட்டம் கூட்டமாய்ப்
பாடித் திரியும் பச்சைக் கிளிகளும்,
மாடியை விட்டு மரங்களில் தாவித்
தோகை விழுதுபோல் தொங்கும் படிக்கு
உச்சிக் கிளைமேல் உட்கார்ந் திருக்கும்
கண்ணைக் கவரும் மயில்களின் காட்சியும்,
கும்பல் கும்பலாய்க் குறுக்கு மறுக்காய்
விண்ணிற் கிளம்பும் வீட்டுப் புறாக்களும்.
பழங்களைப் பற்றிப் பல்லாற் கடிக்குமுன்
ஒன்றைமற் றொன்று துரத்திட ஓடிக்



கிடுகிடு வேகமாய்க் கிளைகளிற் பாயும்
அழகிய சிறுசிறு அணில்களின் ஆட்டமும்,
மதுவைக் குடிக்க மலர்களைச் சுற்றி
வட்டமிட் டுழலும் வண்டின வரிசையும்,
வண்டைப் போலவே மலர்களைத் தேடிப்
பறந்து கொண்டே தேனைப் பருகிடும்
மஞ்சள் குருவியும், செஞ்சிட் டுகளும்,
குளிர்ச்சிக் காகவே குடிகொண் டிருக்கும்
மைனா, புல்புல், மற்றும் பறவைகள்
சுற்றிச் சுற்றிப் பாடும் சோலையாய்,
அங்கே யிருந்த அழகிய தோப்பின்
சுற்றுச் சுவரைச் சுற்றிக் கொண்டு
பாட்டைக்கு நேரெதிர்ப் பக்கத்தி லிருந்த
கனத்த இரும்புக் கம்பிக் கதவின்
முன்னால் வந்துஅம் மோட்டார் நின்றது.
அன்பா னந்தரை அறிந்தவன் ஆகிய
காவற் காரன் கைகூப்பி வந்து
வாசலைத் திறந்து வழிவிட்டு நின்றான்.
சரஸ்வதி யம்மாள், தன்னுடன் கொணர்ந்த
ஆண்டு விழாக்களின் அறிக்கைக் கத்தையைத்
தூக்கிக் கொண்டு துறவியைத் தொடர்ந்தாள்.
உள்ளே போனதும் உலகம் இதனை
முற்றிலும் மறந்து மோனத் திருந்து
சாந்தியை நாடும் சாதுக்கள் வசித்துத்
தவம்புரி வதற்கே தகுந்த இடம்போல்
நிம்மதி தங்கும் நிலையமா யிருந்தது ;
அடர்ந்த செடிகள் ஆடையில் மோத,
புஷ்பக் கொத்துகள் தோளில் புரள,
கொடிமுந் திரியின் குலைகள் முட்ட,

நீண்ட சிறுவழி நெடுகச் சென்றபின்,
வெள்ளை வெளேரென வேந்தரே வாழும்
அரண்மனை போன்றது அங்கொரு மாளிகை,
கட்டடக் கதவைக் கடந்தனர் இருவரும்.
சித்திரக் கம்பளம் மெத்தென விரித்து
நானா விதத்திலும் நளின மாகிய
அலங்கா ரங்கள் அனைத்தும் உள்ளதாய்
அழகான கூடம் அதன்மத் தியிலே
ஐம்பது பிராயம் ஆனவர் போலும்
கனத்துச் சற்றே கறுத்தொரு கனவான்,
குலுங்கச் சிரித்துக் கொஞ்சி மகிழ்ந்து
பொன்னாற் செய்த பொம்மையைப் போன்று
நாலோ கொஞ்சம் மேலோ வயதுள
குழந்தைப் பெண்ணுடன் கொஞ்சிக் கொண்டு
ஊஞ்சற் பலகைமேல் உட்கார்ந் திருந்தார்.
பக்கத்தி லிருந்த படுக்கையின் மீது
நோயுற்ற மாதிரி சாய்வுற் றிருந்த
அம்மாள் ஒருத்தியும் அங்கே யிருந்தாள்.
துறவியைக் கண்டதும் தொழுத கையுடன்
குழந்தையோ டெழுந்து கும்பிட்டு நின்று,
ஆசனம் காட்டி அமரச் செய்து,
அவருடன் வந்த அம்மாள் அவரையும்
நெடுநாள் பழகின நேசரைப் போல
வந்தனை பேசி வழிபா டுரைத்து,
இன்சொல் கூறி, இருக்கச் செய்து,
வீட்டுக் காரர் மிகவும் மகிழ்ந்தார்.
உபசா ரங்கள் ஓய்ந்தபிற் பாடு
அன்பா னந்தரும் அவருடை அன்பரும்
வேதாந்த விஷயமே வெகுவாய்ப் பேசினர்.



குழந்தையைக் கண்டதும் குப்பென மலைத்துச்
சரஸ்வதி யம்மாள் சகலமும் விட்டு,
வந்த வேலையில் சிந்தைசெல் லாமல்,
ஆண்டு விழாவை அடியோடு மறந்து,
குழந்தை ஒன்றையே குதுகுதுப் பாகப்
பார்த்துப் பார்த்துப் பரவசப் பட்டு,
சிசுவை வைத்துச் சீராட்டும் அந்தக்
கறுத்த மனிதரைக் கவனமாய்ப் பார்த்து,
படுக்கையில் இருந்த மாதையும் பார்த்து,
குழந்தையை மீண்டும் கூர்ந்து நோக்கி,
உருவையும் நிறத்தையும் ஒப்புப் பார்த்து,
'இவர்கள் குழந்தையா இது !'வென வியந்து,
தங்க நிறத்துத் தாழம் பூப்போல்
நெஞ்சைக் கவரும் குழந்தையின் நிறமும்,
சுருண்டு நெளிந்து இருண்ட கேசமும்,
நெற்றியின் வடிவும், நீண்ட புருவமும்,
பெருத்த விழிகளும், கறுத்த முழிகளும்,
மூக்கும், உதடும், முகவாய்க் கட்டையும்,
கமலம் சாயலைக் காட்டுதல் கண்டாள்.
வேர்த்துச் சிலிர்த்து, வெப்பமும் குளிர்ச்சியும்
மாறி மாறித் தோன்றி மறைந்திட
இன்பமோ துன்பமோ இன்னதென் றறியா
உணர்ச்சிகள் பொங்கி உள்ளம் குழம்பி,
கமலம் குழந்தைபோற் காணுது என்பதைச்
சரஸ்வதி யம்மாள் சாமியா ரிடத்தில்
சொல்ல விரும்பித் துடியாய்த் துடித்து
அன்பா னந்தரை அடிக்கடி பார்த்தாள்.
அதையறி யாமல் அன்பா னந்தர்
அவரும் அவருடைய அன்பரு மாக

வேதாந்த தத்துவ விஷயம் தொடங்கி,
ஆன்ம விசாரணை ஆழத்தில் இறங்கி,
ராம கிருஷ்ண பரம ஹம்சரின்
குளிர்ந்த மொழிகளில் குளித்து முழுகி,
வீரத் துறவி விவேகா னந்தரின்
தீர மொழிகளின் திடரில் நின்று,
'வீரம்', 'தீரம்' என்பன விளக்க
அன்பா னந்தர் அறிவுரை பேசுவார் ;
"ஆயுதம் தாங்கி அரண்களில் மறைந்து
ஏமாந் திருக்கும் எதிரியைக் கொல்வதும்,
சீவனம் செய்யச் சேனையில் சேர்ந்து
உடைகள் தரித்து நடைகள் பயின்று
எந்திரம் போல ஏவல் கேட்டு,
கொடுமை புரிவதும், கொல்வதும், சாவதும்,
வீரமும் அல்ல ; தீரமும் அல்ல.
வீரமோ தீரமோ விரும்பிப் பழகும்
செயற்கை அல்ல ; இயற்கை சேர்ந்தது.
வீரமும் தீரமும் வெவ்வேறு அல்ல ;
இரண்டும் நெருங்கி இணைந்த குணங்கள்.
வீரம் என்பது வீட்டையும் நாட்டையும்
அக்கம் பக்கம் யாரையும் காக்கும்
அன்போ டியைந்த ஆண்மையே வீரம்.
எதிரி யிடத்திலும் இரக்கமே காட்டும் ;
காதல் என்பதைக் கண்ணெனப் போற்றும் ;
கற்பெனும் சொல்லின் நற்பொருள் நாடும் ;
நட்பெனும் பதத்தின் உட்பொருள் உணரும் ;
துன்பம் என்றால் துணைசெயத் துடிக்கும் ;
வஞ்சனை செய்து வாழ்வதை வெறுக்கும் ;
பொய்யுரை பேசும் புன்மையில் லாதது ;



நடுநிலை விட்ட நலங்களைத் துறக்கும் ;
ஹிம்சையால் வருகிற இன்பம் இகழும் ;
உடலை வளர்க்க ஊறுசெய் யாது ;
உயிரையும் கொடுத்து உதவிகள் புரியும் ;
பிறர்குறை பேசிப் பிழைக்க எண்ணாது ;
சிறுமை எதையும் சீறித் தள்ளும் ;
இனிய சொற்களே இயல்பாய்ப் பேசும் ;
பொன்னே வரினும் புறஞ்சொல் லாது ;
கொள்கை விடாமல் கொடுமை சகிக்கும் ;
தன்னலச் செலவில் பிறநலம் தாங்கும் ;
நீதி இல்லாத வழிகளை நீக்கிய
வெற்றி விருப்பமே வீரம் என்பது.
தீரம் என்பதும் தெய்விக வீரம்.
உலகம் முழுதையும் ஒன்றாய்க் கருதி,
விருப்பு வெறுப்பு விகாரம் விலக்கி,
சாந்தம் என்பதன் சாரம் சேர்ந்து,
கொல்லா விரதமே கொள்கையாய்க் கொண்டு,
கொல்லப் படினும் கொலைபுரி யாத
தெளிந்த வீரமே தீரம் என்பதாம்.
மகாத்து மாக்களே தீர மரபினர்.
விவேகா னந்தரை வீரம் என்றால்
இராம கிருஷ்ணரைத் தீரம் எனலாம்."
இப்படி இருவரும் பேசி இருக்கையில்
சரஸ்வதி யம்மாள் சலித்துப் போனாள்.
தேடித் தேடித் தினமும் ஏங்கிக்
காணாத ஒன்றைக் கண்டு விட்டதாய்ப்
பூரிப் படைந்து, பொங்கிப் பொங்கி,
அந்தக் குழந்தையின் வரலாறு அறிந்திடத்
தவியாய்த் தவிக்கிற சரஸ்வதி யம்மாள்.

வேதாந்தப் பேச்சில் விருப்பம் கொள்ளுமா ?
பொறுத்துப் பொறுத்துப் பொறுக்கமாட்டாமல்
சங்கடம் மிஞ்சிய சரஸ்வதி யம்மாள்
அமைதி யின்மையை அறிவிப் பதுபோல்
குறுக்கே சென்று, குழந்தையை வாங்கி,
அணைத்துக் கொஞ்சி அன்புபா ராட்டிக்
களிப்பது போலப் பேச்சைக் கலைத்தாள்.
வந்த வேலையை மறந்ததில் வருந்திச்
சரஸ்வதி யம்மாள் சலனப் படுவதாய்
அன்பா னந்தர் அனுமா னித்து,
வாத்தியா ரம்மாள் வந்தகா ரியத்தைச்
சுருக்க மாகச் சாமியார் சொன்னார்.
கேட்ட உடனே வீட்டுக் காரர்
ஆயிரம் ரூபாய் பரிசுக் காகவும்,
விழாவை நடத்த வேறு ஐந்நூறும்
தருவதாய்ச் சொல்லிச் சட்டென எழுந்து
ரொக்கம் தரவோ, செக்குப் புத்தக
உண்டியில் எழுதவோ, உள்ளே போனார்.
அதுதான் தகுந்த சமயமென் றறிந்து
சரஸ்வதி யம்மாள், சாமியா ரவர்களைக்
கொஞ்சம் தனியே கூட்டிச் சென்று
குழந்தையைப் பற்றிய குறிகளைச் சொல்லி,
"இந்தக் குழந்தையே என்னுயிர்த் தோழி,
கமலம் பெற்ற கண்மணி யென்று
நிச்சய மாக நினைக்கிறேன் ; நீங்கள்
உடனே கேட்டு உண்மையை அறிந்து
இதுதான் அந்தக் குழந்தை என்றால்,
கூடுமா யிருப்பின் குழந்தையை நம்முடன்
அழைத்துச் செல்லவும் அனுமதி கேட்டுக்



கமலத் துக்குக் காட்டினாற் போதும்.
இதுவே கவலையாய் இளைத்துப் போகிற
கமலம் உயிரைக் காத்தவ ராவோம்.
அதைவிடப் பெரிய ஆனந்தம் உண்டோ ?
அடிகளே, தாங்கள் அருள்செய்ய வேண்டும்.
கேளுங்கள், உடனே கேளுங்கள்" என்று
கண்ணீர் கலங்கக் கைகுவித் திறைஞ்சி
ஆத்திரப் பட்டாள் சரஸ்வதி அம்மாள்.
அன்பா னந்தரும் அவளைப் போலவே
குழந்தையைப் பற்றிக் குதூகல முற்று,
தன்னுடை நிலைமையின் தகுதிக் கேற்ப
அவசரப் படாமல், ஆத்திர மின்றி,
"நல்ல மனிதர் ; நானே கேட்கிறேன்.
உண்மை எதையும் ஒளிக்க மாட்டார் ;
கூடுமா யிருந்தால் குழந்தையை நம்முடன்
கூட்டிச் செல்லவும் அனுமதி கொடுப்பார்.
அமைதியா யிருங்கள் ; அறிவோம்" என்றார்.
அந்தக் கணத்தில் அவர்களைத் தேடி
வீட்டுக் காரர் விரைவாய் வந்து
உறையில் போட்ட உண்டியல் ஒன்றைச்
சரஸ்வதி யம்மாள் கையில் தந்தார்.
வந்தனம் சொல்லி வாங்கிக் கொண்டு
சாமியார் முகத்தைச் சரஸ்வதி பார்த்தாள்.
குறிப்பை அறிந்து கொண்டஅத் துறவியும்
குழந்தையைப் பற்றிக் குறித்த பேச்சை
அங்கே கேட்பது அழகல்ல என்று
அன்பரைத் தனியே அழைத்துச் சென்று
இன்னொரு அறைக்குள் இருந்து பேசினார்.
தனியே இருந்து சரஸ்வதி யம்மாள்,

பகலிர வாகப் பாடம் படித்துப்
பட்டம் வாங்கும் பரிட்சை கொடுத்து
விரும்பத் தக்கன விடைகளும் ஏழுதித்
தேறுமோ என்றே தினமும் தேம்பி
ஏங்கி இருக்கும் இளைஞரைப் போலும்,
வீட்டையும் காட்டையும் விற்றுத் தொலைத்துக்
குஞ்சுக் குழந்தையின் கஞ்சி குறையினும்
கோர்ட்டுச் செலவில் கொண்டுபோய்க் கொட்டி
வக்கீல் வீட்டைக் கோயிலாய் வணங்கிச்
சாட்சிக் காரர் சாமியைத் தொழுது
கச்சேரி வாசலில் கைகட்டி நின்று
குமாஸ்தா வுக்குக் கும்பிடு போட்டுச்
சேவக னுக்குச் செலாமும் செய்து
கொஞ்சமோ கூடவோ லஞ்சம் கொடுத்து
வருஷக் கணக்காய் வழக்கை நடத்தித்
தீர்ப்புச் சொல்லும் தேதியில் ஏங்கிக்
கலங்கி நிற்கும் கட்சிக் காரர்போல்,
இந்தக் குழந்தை அதுவோ, இல்லையோ ?
அதுவா யிருப்பினும் அல்லஎன் றிட்டால்
என்னநாம் செய்வது ? எவரைக் கேட்பது ?
அதுதான் எனினும் அழைத்துப் போகவும்
வீட்டுக் காரர் விடைகொடுப் பாரா ?'
என்பன எண்ணி எதிர்பார்த்து இருந்தாள்.
அன்பா னந்தரும் அவருடை நண்பரும்
வெகுநே ரம்போய் வெளியில் வந்தனர்.
வீட்டுக் காரர் மிகவும் விநயமாய்ச்
சரஸ்வதி யம்மாள் சமீபம் வந்து,
"அன்பா னந்தர் அனைத்தும் சொன்னார் ;
ஆமாம் அம்மா, அந்தக் குழந்தைதான்.



தாய்க்குக் காட்டத் தடைசொல்ல லாமா ?
ஆயினும் சிலநாள் அனுமதி கொடுங்கள்.
என்னுடை மனைவி ஏழெட்டு மாதமாய்ப்
படுத்த படுக்கைதான் ; பாருங்கள் நீங்களே :
செத்துப் பிழைத்தாள். தெய்வச் செயலால்
அபாயம் நீங்கிய அறிகுறி வந்து
இருபது நாள்தான் இன்றோடு ஆயின.
கொஞ்சம் கொஞ்சமாய்க் குணமுற்று வருகிறாள்.
அவளுக்கு உயிரெலாம் அந்தக் குழந்தைதான்.
நிமிஷம் பிரிந்தால் நிலைகொள்ள மாட்டாள்,
இப்பொழுது பிரித்தால் இறந்தே போவாள்.
கொண்டுபோய்க் காட்டிக் கொண்டுவந் திடவும்
நெடுநாள் பிரிந்து நெஞ்சம் குமுறும்
பெற்றவ ளுக்குப் பிள்ளையைக் காட்டி
உடனே மறைப்பதும் ஒழுங்கான தல்ல.
ஆதலால் அம்மா ! அன்புடன் நீங்கள்
கொஞ்சம் பொறுங்கள் ; குணமான உடனே
மனைவியும் நானும் மகிழ்வுடன் வந்து
பெற்றவ ளிடத்தில் பிள்ளையைக் காட்டி
எல்லோரும் சேர்ந்து இன்புற லாமே.
உங்களுக் கதிலே தடையேதும் உண்டா ?
அன்பா னந்தர் ஆமோதிக் கின்றார் ;
நீங்களும் இசைந்தால் நிம்மதி" என்றார்.
இதுதான் அந்தக் குழந்தை என்பதைச்
சொந்தக் காரர் சொன்னதே போதும்.
சரஸ்வதி யம்மாள் சாபல்ய முற்றாள்.
தன்னுடைச் சமுசயம் சரியாய்ப் போனதில்
அளவிலா மகிழ்ச்சி அடைந்தவ ளாகித்
தாயிடம் குழந்தையைத் தருவதைப் பற்றிய

அவசர நினைப்பை அத்துடன் விட்டுக்
கனவான் சொல்லிய காரணம் எல்லாம்
நியாயம் என்பதை நினைத்துப் பார்த்துக்
கமலம் மகளைக் காணும் தினத்தை
ஒத்தி வைப்பதை ஒத்துக் கொண்டாள்.
அநேக விஷயமாய் அதன்மேற் பேசிப்
படுக்கையில் இருந்த மாதையும் பார்த்துச்
சற்றே அவளுடன் சல்லா பித்து,
ஆறுதல் தேறுதல் அன்புரை சொல்லி,
விரைவில் சுகமுறக் கடவுளை வேண்டி
வீட்டுக் காரர் விரும்பிய படிக்குச்
சிற்றுண்டி போஜனம் செய்து முடித்துக்
குழந்தையைப் பலமுறை கொஞ்சிய பின்னர்
புறப்படும் போது பொழுது போய்விட்டது.
சந்திர உதயமும் வந்தது வானில்.
கமலம் மகளைக் கண்ட மகிழ்ச்சியில்
மற்றதை எல்லாம் சரஸ்வதி மறந்தாள்.
வேதாந் தத்தில் விரிந்த பேச்சால்
அறிமுகப் படுத்துதல் அவர்கள் மறந்தனர்.
வண்டியில் திரும்பி வருகின்ற போதுதான்
நன்கொடை தந்தவர் நாம தேயம்
முத்துக் குமார முதலியார் என்பதும்,
பத்தினி யின்பெயர் பார்வதி என்றும்,
சரஸ்வதி கேட்கச் சாமியார் சொன்னார்.
கமலம் மகளைக் கண்டு பிடித்தது
தானே என்கிற இன்பத் தருக்கும்,
விழாவை நடத்த வேறினி யாரையும்
ஆசிக்க வேண்டிய அவசியம் இன்றிக்
கனத்த நன்கொடை கைமேற் கிடைத்த



வெற்றி வெறியின் வேகமும் தூண்ட,
சரஸ்வதி யம்மாள் தன்னையே மறந்து
மோட்டார் வண்டியை முடுக்கச் சொன்னாள்
வேதாந்த மடத்தின் வெளியே நிறுத்தி
அன்பா னந்தரை அங்கே விட்டபின்
சரஸ்வதி யம்மாள் தன்வீடு சேர்ந்தாள்.
அழுகின்ற குழந்தைக்கு அம்புலி யாகி,
விளையாடும் சிறுவரின் வீதி வெளிச்சமாய்,
உலாவு கின்றவர் உல்லாச ஒளியாய்,
தெருக்கூத் துக்குத் திரைவிளக் காகி,
களியாட் டங்களின் காரணக் கருவியாய்,
கள்ளர்கள் அஞ்சும் காவற் காரனாய்,
ஏற்றம் இறைப்பவன் இசைதரும் விசையாய்,
ராட்டை நூற்பவர் பாட்டின் ரசிகனாய்,
தொழில்களுக் கெல்லாம் தோன்றும் துணையாய்,
அலுப்பைத் தீர்க்கும் அருமருந் தாகி,
ஆண்களை யெல்லாம் பெண்போல் அடுத்துப்
பெண்களை யெல்லாம் ஆண்போற் பிணித்துக்
காதல் கண்டவர் அமுதக் கலசமாய்,
காமப் பித்தரைக் கருக்கும் கனலாய்,
கவிஞருக் கெல்லாம் கற்பனை ஊற்றாய்,
கலைகளுக் கெல்லாம் நிலைதரும் கவிதையாய்,
துன்பம் விட்டவர்க் கின்பச் சுடராய்,
இன்பம் கெட்டவர் இடறும் இருட்டாய்,
'நிறைந்தது குறையும், குறைந்தது நிறையும்
வாழ்வும் தாழ்வும் மாறியே வரு'மெனத்
தினமும் தேய்ந்து தினமும் வளர்ந்து
உறங்கும் உலகில் உறங்கா தவர்க்குத்
தெய்வம் காட்டும் திருவிளக் காகிய

பூரணச் சந்திரன் பொழிந்த நிலவில்,
பங்களா முகப்பில் பயிர்செய் திருந்த
செடிகளுக் கிடையில் சிலுசிலுப் பாகிய
காரைத் திண்ணையில் கமலம் அமர்ந்து
வெந்து வெதும்பும் சிந்தை வெறித்து,
கலியா ணத்தையே கருதிடும் முன்னால்
ஏரிக் கரையில் இதயம் குளிரக்
கண்ணைக் காட்டிலும் கருத்தைக் கவர்ந்த
மாதவன் வடிவம் மனக்கண் முன்வர,
குழந்தையை நினைத்துக் கும்பி கொதித்து,
ராகவன் கோரிய ரகசியம் நினைத்து,
கண்ணீர் வடித்துக் கலங்கி யிருந்தாள் ;
வீட்டுக்கு முன்னால் மோட்டார் நின்றதும்
உரத்த குரலாய் உள்ளே யிருந்த
வேலைக் காரனை வேகமாய்க் கூவிச்
சாலைக் கதவைத் திறந்த சத்தமும்
அறியாள் கமலம். அவளைப் பார்க்க
ஆவல் மிகுந்த சரஸ்வதி யம்மாள்
உள்ளே ஓடி, ஒவ்வொரு அறையிலும்
அங்கும் இங்கும் அலைந்து பார்த்து,
இருந்த இடத்தைத் தெரிந்து வந்து,
கமலாம் பாளின் கையைப் பிடித்து
அருகில் அமர்ந்து, மெதுவாய் அணைத்து,
அளவு கடந்த ஆனந் தத்தினால்
பித்தியைப் போலப் பேச்சுக் குளற,
"சந்தோஷ மாகிய சங்கதி ஒன்று
கமலம் ! கமலம் ! கமலம் !" என்றாள்.
"என்ன சங்கதி ?" என்றாள் கமலம்.
"ஒழிந்தது துன்பம், உற்றது இன்பம் :



நல்ல காலம் வந்தது நமக்கு.
கவலையை விட்டொழி கமலம்" என்றாள்.
"சங்கதி என்ன ? சந்தோஷம் எதனால் ?"
"சங்கதி என்னவா ? சந்தோஷம் சொல்லவா ?
என்னென்று சொல்லுவேன் ! என்னரும் கமலம் !
பார்க்கப் பார்க்கப் பரமா னந்தம் !
கேட்கக் கேட்கக் கிளிமொழி இன்பம் !
தொட்டாற் போதும் துயரெலாம் தொலையும் ;
அருகே இருந்தால் அதுவே சொர்க்கம் ;
பண்ணிய உன்றன் புண்ணியம் பலித்தது.
தெய்வம் உண்டெனத் தெரிந்தேன்" என்றாள்.
'என்ன சரஸ்வதி ? இன்னதென் றறிய
விஷயமில் லாமல் விரிக்கின் றாயே,
சங்கதி சொல்லு ; சந்தோஷம் எதனால் ?"
"அன்பா னந்தரின் அன்புதான் அம்மா ;
பள்ளிக் கூடப் பரிசு விஷயமாய்த்
திருவொற்றி யூருக்குத் தெற்கே அவருடை
அன்பரைப் பார்க்க அழைத்துச் சென்றார்.
முத்துக் குமார முதலியார் பெயராம்.
பார்வதி யம்மாள் அவருடைப் பத்தினி.
செல்வம் மிகுந்த சிறந்த குணவான்.
ஆயிரம் ரூபாய் பரிசுக் காகவும்,
விழாவுக்கு ஐந்நூறு வேறே தந்தார்.
அரண்மனை போன்றுள அவர்கள் வீட்டில்
கண்டேன் கமலம் கண்டேன்" என்று
கமலாம் பாளைக் கட்டித் தழுவி,
"எழுந்திரு கமலம், ஏன்அழ வேண்டும் ?
ஆனந்தக் காலம் அடுத்தது நம்மை ;
துன்பங்க ளெல்லாம் தொலைந்தன" என்றாள்.

கருத்தறி யாமல் திகைத்த கமலம்
தன்னையே மறந்து தானும் சிரித்து,
"என்ன சரஸ்வதி ? என்னநீ கண்டாய் ?
களிப்புக் கெல்லாம் காரணம் என்ன ?
அதையறி யாமல் ஆனந் தப்பட
எப்படி முடியும் என்னால் ?" என்றாள்.
"ஆமாம் கமலம், அதைச்சொல மறந்தேன் !
கண்டேன் கண்டேன் இந்தக் கண்களால் !
அங்கே இருக்கிறாள் அருமை உன்மகள் !
நம்முடைக் குழந்தையை நானே பார்த்தேன் !"
கேட்டாள் கமலம் ; கிளர்ச்சிகள் பொங்கி,
தாய்எனும் தன்மை கணத்தில் தளிர்த்து,
உள்ளம் குளிர்ந்து உடலும் வளர்ந்து,
சுண்டிக் கிடந்த சுரணைகள் சுரந்து,
வற்றிப் போன வதனம் மலர்ந்து,
உறங்கி யிருந்த கண்கள் ஒளிர,
ஆனந்த மென்னும் கடலுள் ஆழ்ந்து,
மூச்சு விடுவதும் முடியா தவள்போல்,
களிப்பின் வேகக் களைப்புத் தட்டியோ,
வாய்விட் டுரைக்க வார்த்தை வராமல்
சரஸ்வதி யம்மாள் தோளில் சாய்ந்து
இரண்டொரு நிமிஷம் சும்மா இருந்து,
"நிஜமாய்த் தானா ? நீயே பார்த்ததா ?
நம்முடைக் குழந்தையா ? ராஜந் தானா ?
அனுமா னித்ததா ? அவர்கள் சொன்னதா ?
அவள்தான் என்பதை எப்படி அறிந்தாய் ?
ஐயோ ! பாவிநான், ஆற்றில் வீசினேன் !
எப்படித் தப்பினாள் ? எவரால் பிழைத்தாள் ?
இவரா எடுத்தார் ? இருட்டில் விழுந்ததை



எப்படி அறிந்தார் ? எப்படி எடுத்தார் ?
புறப்படு சரஸ்வதி, போகலாம் அங்கே.
அன்பா னந்தரும் அழைத்தால் வருவார்
கண்டால் அல்லால் கவலை ஒழியுமா ?
மோட்டார் வண்டியைக் கூட்டி வரச்சொல்.
புறப்படு சரசு, போகலாம்" என்றாள்.
"போகலாம் கமலம், கொஞ்சம் பொறுநீ.
உள்ளே போவோம் உணவு கொள்ளுவோம்.
விஷயம் முற்றிலும் விளக்கமாய்ச் சொல்லுவேன்.
எப்படி இஷ்டமோ அப்படிச் செய்வோம்"
என்றாள் சரஸ்வதி. இசைந்தாள் கமலம்.
உள்ளே சென்றனர். உட்கார்ந்து கொண்டபின்
சரஸ்வதி மிகவும் சாவ தானமாய்த்
திருவொற்றி யூரிற் சென்றது முதலாய்
அங்கே நடந்த அனைத்தையும் சொல்லி
பார்வதி யம்மாள் பரிதாப நிலையும்,
முத்துக் குமார முதலியார் சொன்னதும்,
அன்பா னந்தர் ஆமோ தித்ததும்,
தவணை கொடுத்து வாக்குத் தந்ததும்,
எல்லா வற்றையும் எடுத்துச் சொன்னாள்.
கமலம் மிகவும் கவனமாய்க் கேட்டு,
ஆற்றில் வீசிய அருமை மகளை
எடுத்து வளர்த்து இத்தனை நாளாய்ப்
பாதுகாத் திட்டஅப் பார்வதி அம்மாள்
நிலைமையைக் கேட்டு, நெஞ்சம் உருகி,
அன்பா னந்தரும் ஆருயிர்த் தோழியும்
வாக்குக் கொடுத்துள வாய்மையைக் கருதி
மகளைப் பார்த்து மகிழ்ந்திடும் நாளைக்

தள்ளிப் போடவே சம்மதி தந்து,
இதுநாள் வரையில் இல்லாத விதமாய்த்
தானே விரும்பிச் சாப்பிட அமர்ந்து,
வேலைக் காரியும் துணைவியும் வியக்கப்
பசியோடு உண்டு, பாலையும் பருகி,
மடக்கி மடக்கி மகளைப் பற்றியே
கேள்விகள் போட்டுப் பதிலைக் கேட்டு,
கலகலப் பாகக் களித்து நகைத்து,
ஒருமணி வரைக்கும் ஓயாது பேசி,
நிம்மதி யாக நித்திரை போனாள்.

# சந்திர சேகரன்

சரஸ்வதி புருஷன் சந்திர சேகரன்,
நாட்டியக் கலையின் நயங்களிற் சிறந்த
சாரதா கணவன் சங்கர னுடனே
கும்பகோ ணத்திற் கூடப் படித்தவன்.
மற்றவர் யாரையும் மதிக்கா விடினும்
சங்கர னிடத்தில் சந்திர சேகரன்
பாலிய நட்பின் பற்று மிகுந்தவன்.
பள்ளிக் கூடப் படிப்பு விட்டபின்
நெடுநாள் இருவரும் சந்திக்க நேர்ந்திலர்
மனைவி யிடத்தில் மனஸ்தா பித்தபின்
சங்கரன் வீட்டில் சந்துரு தங்கினான்.
சதாகா லமுமே சந்திர சேகரன்
குடித்து வெறித்துக் குணங்கெட் டலைவதை
மற்ற நண்பர்கள் மருட்டி வெருட்டித்
தண்டனை செய்யவும் தலைப்படு வார்கள்.
சங்கரன் மட்டும் சாந்தம் தவறான்.
போதையின் மிகுதியால் வீதியிற் புரளினும்
தோழனை மெதுவாய்த் தூக்கிச் சென்று
படுக்க வைத்துப் பக்கத்தில் இருந்து
சேவைகள் எல்லாம் சங்கரன் செய்வான்.
குடித்த வெறியால் அடித்துவிட் டாலும்
கோபமோ தாபமோ கொள்ளான் சங்கரன்.
குடிப்பதை மாற்றக் கூடிய தெல்லாம்
சங்கரன் செய்து சரிப்பட வில்லை.

சங்கரன் அன்பைச் சந்திர சேகரன்
நன்றாய் அறிவான் ; நன்றியும் பேசுவான் ;
குடிப்பழக் கத்தையே கூண்டோடு விடுவதாய்ப்
பலமுறை சத்தியம் பண்ணுவான் ; பயனிலை.
இப்படிப் பலநாள் அங்கே இருந்தவன்
சந்திர சேகரன் சங்கர னிடத்தும்
விடைகொள் ளாமல் மறைந்து விட்டான் ;
சகவாசம் கெட்டுச் சைகோன் போனான் ;
அங்கே கொஞ்சம் அலைந்து கெட்டபின்
சிங்கப் பூரில் சிலநாள் வசித்தான்.
அங்கே யிருந்து ரங்கூன் அடைந்து
அவ்விடத் திருந்தஓர் அன்பன் உதவியால்
கஷ்ட ஜீவனம் கடத்தி வந்தான்.
அப்படி இருக்கையில் எப்படி யோஅவன்
'கோவா லாட்டரி' குலுக்கும் சீட்டை
வேடிக்கை போல விலைக்கு வாங்கினான் ;
குடிவெறி யாலோ, குருட்டு வாக்கிலோ
அவனுடைப் பேருக்கு அதிர்ஷ்டம் குறைவெனச்
சங்கரன் விலாசம் சீட்டில் தந்தான் ;
(நல்ல நினைவுகள் நழுவிடு முன்னால்)
சங்கர னுக்கும் சங்கதி எழுதிப்
பரிசுச் சீட்டின் ரசீதுப் பகுதியை
அடக்கம் செய்தொரு கடிதம் அனுப்பி,
அந்தக் கடிதத்து அடியில் தனக்குப்
பணமில் லாமல் கஷ்டப் படுவதாய்
விருப்பம் காட்டி விலாசமும் எழுதினான்.
பரிசு வருவதைப் பரிகாசம் பண்ணி
உதவி அனுப்புதல் ஒழுக்கமென் றெண்ணி
ஐந்நூறு ரூபாய் சங்கரன் அனுப்பி,



வந்தனம் கூறிப் பதிலும் வந்தது.
அதன்பின் சங்கரன் அதனை மறந்தான்.
'கொடுக்கும் தெய்வம் கூரையைக் கிழித்துக்
கொட்டும்' என்று கூறுவார், அதுபோல்
சங்கர னுக்கொரு தந்தியும் வந்தது.
ரொக்கம் இரண்டரை லட்சம் ரூபாய்
தனக்குப் பரிசெனத் தந்தியில் இருக்கப்
படித்துப் பார்த்து, பதற்றப் படாமல்
சந்திர சேகரன் முந்தி அனுப்பிய
கடிதம் தேடிக் கண்டு பிடித்துப்
பார்த்தான் சீட்டைப் பரிசு உண்மைதான்
பரிசை வாங்கப் பாத்தியம் காட்டிடும்
சடங்கு சாக்கியம் சகலமும் செய்து,
பணத்தை வாங்கிப் பத்திரப் படுத்தி
ஐந்நூறு ரூபாய் முன்னே அனுப்பின
விலாசத் துக்கே மீண்டும் ஆயிரம்
அவசரத் தந்தியில் பணமும் அனுப்பி,
சீட்டு விழுந்ததன் சேதியும் காட்டி,
தந்தி கிடைத்ததும் வந்திடச் சொல்லி
அவசர அழைப்பும் சங்கரன் அனுப்ப,
பணம்போய்ச் சேர்ந்த பதினைந்து நாளில்
சங்கரன் மனைக்குச் சந்துரு வந்தான்.
குடிக்கிற பழக்கம் குறைந்திருந் தாலும்
சந்திர சேகரன் சுந்தர வடிவம்
முற்றிலும் கெட்டு மூதேவி வழிய,
வயிற்றுக் கில்லா வறியரைப் போலும்
வாடி வதங்கிய வடிவத் தோடும்,
பித்தனைப் போலப் பிதற்றிக் கொண்டு
ஓய்வில் லாமல் உளறும் பேச்சாய்க்

காணச் சகியாக் காட்சி யளித்தான்.
சந்துரு நிலைமையைக் கண்ட சங்கரன்
கலங்கா நெஞ்சம் கலங்கி விட்டது.
பற்பல விதமாய்ப் பரிவுரை பேசி
விருப்புடன் தினமும் விருந்துண வூட்டி,
பாங்கியி லிருந்த பரிசுப் பணத்தை
அவனுக்கு மாற்றிடும் ஆசையும் சொல்லி,
தன்னுடன் கூடவே தங்கிடச் சொன்னான்.
"பணத்தைப் பற்றிய பயமே இல்லை.
உன்னிடம் இருப்பது என்னிடம் இருப்பதே,
இருக்கிற படியே இருக்கட்டும்" என்று
மனைவியைப் பற்றிய நினைவுகள் மட்டும்
அடிக்கடி தோன்றிட, அவளைக் காணும்
ஆசையின் பேச்சே அதிகமாய் உளறி,
சங்கர னிடத்தில் சரஸ்வதி இருக்கும்
விலாசம் கேட்டுப் போக விரும்பினான்.
சரஸ்வதி விஷயம் சங்கரன் அறியான்,
அங்கே உள்ளவர் யாரோ ஒருவர்
சென்னையில் இருப்பதைச் சொன்னது கேட்டு,
அங்கே போய்வர ஆவல் மிகுந்து,
ஆயிரம் ரூபாய் அதற்கெனக் கொண்டு
சென்னை சென்றான் சந்திர சேகரன்.
அலைந்து திரிந்து அவளங் கிருந்த
வீதி விலாசம் விசாரித் தறிந்து
இரவில் ஒருநாள் எட்டு மணிக்குமேல்
பங்களாக் கதவைப் பலமாய்த் தட்டினான்.
வேலைக் காரிதான் வீட்டில் இருந்தாள்.
கதவைத் தட்டின தினுசைக் கண்டு
வேற்றுமை எண்ணிய வேலைக் காரியும்



சந்தே கத்துடன் சாலைக் கதவின்
ஓரமாய் நின்று உள்ளே யிருந்தே
'யார் அது?' என்றாள். அதற்குச் சேகரன்
"என்னுடைக் காதலி சரஸ்வதி என்பவள்
இருக்கிற பங்களா இதுவா ?" என்றான்.
பேச்சைக் கேட்டுப் பித்தனென் றெண்ணிக்
கதவைத் திறக்கிற கருத்தே யின்றி,
"சரஸ்வதி யம்மாள் சாயங் காலம்
வெளியிற் போனார், வீட்டிலே இல்லை ;
வருகிற சமயம் ; வந்தபிற் பாடு
வாரும்" என்று சொல்லி மறைந்தாள்.
"வருகிற சமயமா ? வரட்டும்" என்று
அருகே இருந்த ஆல மரத்தின்
இருட்டில் சேகரன் உட்கார்ந் திருந்த
அதுவே அதுதான் அந்தச் சமயம்
ஹைகோர்ட் ஜட்ஜு அனந்த ராமன்
வீட்டி லிருந்து விடுதலை கிடைத்து
அன்பா னந்தர் அவர்துணை யாகக்
கமலம் வந்தது. அவளைக் கண்டதும்
மங்கின ஒளியில் மனைவியென் றெண்ணிக்
கமலாம் பாளைக் 'காதலி' என்று
கட்டித் தழுவக் கைகளை நீட்டிட,
அன்பா னந்தர் அவனைத் தடுக்க,
போலீஸ் காரர் இடையே புகுந்து
கச்சே ரிக்குக் கடத்திச் சென்றது.
அப்படிச் சென்ற அந்தப் பித்தனைச்
சோதனை செய்த போலீஸ் சூரர்கள்
பணத்தை முற்றிலும் பறித்துக் கொண்டு
பைத்தியக் காரரை வைத்தியம் பார்க்கும்

ஆஸ்பத் திரிக்கு அனுப்பி விட்டனர்.
ஆறேழு மாதம் அங்கே இருந்தான்.
தெய்வச் செயலால் சித்தம் தெளிந்து
முற்றிலும் குணமாய் முன்னால் இருந்த
அசல்சந் திரசே கரனே ஆயினான்.
விடுதலை வேண்டி விண்ணப் பித்தான்.
அவனுக்கு உறவினர் யாரென்று அறிய
ஆஸ்பத் திரியின் அதிகாரி கேட்க,
சங்கரன் விலாசம் தந்தான் சந்துரு.
சங்கர னுக்குத் தந்தி வந்தது.
சென்னைக்கு வந்து சேர்ந்தான் சங்கரன்.
ஆஸ்பத் திரியில் அடைத்தத னாலோ,
ஆண்டவன் என்கிற அருளால் தானோ,
சகல விதத்திலும் சந்திர சேகரன்
குணமடைந் திருந்த குறிகளைக் கண்டு,
சங்கரன் அளவிலாச் சந்தோஷ முற்றான்.
அன்பனைத் தன்னுடன் அழைத்துக் கொண்டு
சந்துரு மனைவியைத் தானே பார்த்து
மனஸ்தா பங்களை மாற்றிட விரும்பி,
சரஸ்வதி விஷயமாய்ச் சங்கரன் அங்குள
நண்பர் ஒருவரை நாடினான். அவரும்
"வேதாந்த மடத்தின் வேலைகள் பார்க்கும்
அன்பா னந்தரை அண்டிக் கேட்டால்
சரஸ்வதி யம்மாள் சங்கதி யெல்லாம்
அறியலாம் ; அன்றியும் அவருடைப் பேச்சு
எதையும் சரஸ்வதி ஏவலாய்ச் செய்வாள்"
என்றார். அதனால் நண்பர்கள் இருவரும்
வேதாந்த மடத்தை விரைவிற் சேர்ந்து
அன்பா னந்தரை அங்கே கண்டனர்.

# கண்ணியில் விழுதல்

பெற்ற மனத்தின் பேரன்பு வெள்ளம்
ஆறாய்ப் பெருகிக் கடலாய் அலைக்க,
'கண்மணி மகளைக் காண்பது நிச்சயம்
என்ற நம்பிக்கை ஏற்பட்ட பின்னர்
கமலம், தன்னுடை வாழ்க்கையைக் கருதி
எட்டிய பற்பல திட்டம் வகுத்து,
சிறுகச் சிறுகத் தெளிந்து தேறிட
நேர்ந்த இன்பமும் நிலைத்திட வில்லை.
விதியோ, கதியோ, வேறுள எதுவோ !
எதிர்பா ராதது இன்னொரு துன்பம்
தோழியைச் சேர்த்துத் தன்னையும் தொடரக்
கமலத் துக்கொரு கவலை வந்தது.
சரஸ்வதி யம்மாள் சம்பளம் வாங்கினால்
பணத்தை யெல்லாம் பாங்கிலே போட்டு
அப்போ தைக்குள் அவசியம் போல
வாங்கிக் கொள்வது வழக்கம். மேலும்
கமலம் முன்னே கையிற் கொணர்ந்த
நகைகளை விற்று நாணய மாக்கிய
பணமும் அந்தப் பாங்கில் இருந்தது.
இருந்திருந் தாற்போல் பாங்கில் என்னவோ
மோசடி நடந்ததாய் மூடிவிட் டார்கள்
வாங்கவோ தரவோ வகையில் லாமல்,
செலவுக் கில்லாச் சிரமம் மட்டுமா ?
முற்றிலும் பாங்கு முழுகிப் போய்விடும்

என்கிற பேச்சும் எழுந்தது. அதனால்
கமலமும் தோழியும் கலங்கிவிட் டார்கள்
தினசரிச் செலவும் திகைத்திட நேர்ந்தது.
சரஸ்வதி மிகவும் சங்கோ சத்துடன்
கண்ட இடங்களில் கைமாற்று வாங்கி
நெஞ்சுபுண் ணாகிற நிலைமையும் நேர்ந்தது.

✤ ✤ ✤

கமலாம் பாளைக் கண்டநாள் தொட்டு
மீனாட்சி சுந்தரம், மிகவும் சமத்தாய்க்
கமலாம் பாளைக் காண்பதற் காகவே
கல்வியைப் பற்றியும், கலைகளைப் பற்றியும்,
சினிமாப் படத்திலே சேர்க்கத் தகுந்த
பள்ளிக் கூடப் பயிற்சிகள் பற்றியும்,
சந்தே கங்களைச் சரஸ்வதி யிடத்தில்
தெரிந்து கொள்ளும் தேவைக் காகவே
நாடி வருவதைப் போலவே நடித்து
அடிக்கடி வருவான்; அமர்ந்து பேசுவான்.
நாளுக்கு நாளாய் நம்பிக்கை வளர்ந்து
கொஞ்சங் கொஞ்சமாய்க் கூச்சமில் லாமல்
பெண்கள் இருவரும் பேசத் தொடங்கினர்.
கமலாம் பாளைக் கண்டால் நடிகன்
பயபக்தி காட்டி அவளுடன் பழகுவான்.
பற்பல கலைகளின் பண்பட்ட நடிகனின்
அறிவை ரஸித்து அவளும் மெச்சுவாள்.
களங்கமில் லாமல் கமலாம் பாளும்
நண்பனாய் விட்டபின், நடிகனுக் கென்று
வெகுநே ரம்வரை வீணைவா சிப்பாள்.
பாங்கை மூடிடப் பணக்குறை வந்ததை
நன்றா யறிந்த நயவஞ் சகனவன்



அதுதான் தகுந்த சமயமென் றறிந்து,
முன்னே பேசி முடித்துள விதமாய்,
பள்ளிக் கூடப் படத்தைப் பிடிக்க
ஏற்பா டுகளை எல்லாம் செய்து,
படமும் பிடித்துப் பணமும் கொடுத்தான்.
அதற்கென ரூபாய் இரண்டே ஆயிரம்
ஒதுக்கி யிருப்பதாய் முன்னே உரைத்தவன்
ஆயிரம் ரூபாய் அதிகமே தந்தான்.
சமயத் துக்கது சஞ்சீவி போலப்
பெண்கள் இருவரும் பெரிதும் மகிழ்ந்தனர்.
நம்பிக்கை என்பது நன்றாய்ப் பதிய
இதைவிட இன்னும் என்னதான் வேண்டும்?
கமலம் சரஸ்வதி இருவரும் களிப்பால்
மீனாட்சி சுந்தரம் மிகவும் உயர்ந்த
நண்பன் என்றே நம்பிவிட் டார்கள்.
காற்றுள்ள போதே தூற்றிக் கொள்ளப்
படித்துப் பழகிய பாதகன் அவனும்,
மறுநாள் மாலையில் தேநீர் மாந்தி
மூவரும் பங்களா முகப்பில் அமர்ந்து
வீணையிற் கமலம் பாடி விட்டபின்
சினிமாத் தொழிலின் சேதிகள் தெரியச்
சந்தோ ஷமாகச் சம்பா ஷிக்கையில்,
கமலாம் பாளைக் கண்ணியில் இழுக்க
அதுதான் தகுந்த தருணமென் றறிந்த
மீனாட்சி சுந்தரம் விநயமாய்க் கூறுவான்:
"சினிமாத் தொழிலும் சிறந்த வேலைதான்.
ஆனால் அதிலே கஷ்டமும் அதிகம்.
வெளிப்பார் வைக்கொரு வேடிக்கை யெனினும்
சிரமம் மிகுந்தது சினிமா வேலை.

உயர்ந்த படமாய் உருப்படி யாக்க
எண்ணிலாத் தொல்லைகள் எங்களுக் குண்டு.
தருணத் திற்குத் தகுந்த நடிகரைத்
தேடிப் பிடித்துச் சேர்ப்பதே கடினம்.
நாடக மேடையில் நாளெலாம் பழகிச்
சினிமாத் தொழிலே ஜீவன மாகிய
நடிகருக் குள்ளும் நாம்கோரு கின்ற
அவசிய மாகிய பொருத்தம் அமைவது
அடிக்கடி மிகவும் அரிதாய்ப் போகும்.
முக்காற் பாகம் முடிந்த படங்களும்
இரண்டொரு காட்சிக்கு ஏற்றஓர் நடிகர்
கிடைக்கா ததனால் சும்மா கிடக்கும்.
அப்படி நடிகர் அகப்படா நிலையில்
பொருந்தா நடிகரைப் புகுத்திட நேர்ந்து
வெகுநல்ல படமும் வீணாய்ப் போகும்.
நாடகப் பாத்திரர் நன்றாய் அமைவதே
சினிமாப் படத்தின் சிறப்பின் காரணம்.
என்னுடை முயற்சியில் எடுக்கும் படங்களில்
நடிகரின் பொருத்தமே நான்பார்ப் பதெல்லாம்
செலவுகள் எத்தனை செய்திட நேரினும்,
நல்ல நடிகரை நாடித் தேடி
அலைந்து திரிந்து அவதிகள் அடையினும்,
சிறப்புள மனிதரைப் படத்தில் சேர்ப்பதே
முக்கிய நோக்கமாய்ப் படத்தை முடிப்பேன்.
சினிமா நடிப்பே தொழிலாய்ச் செய்கிற
நடிகரல் லாமலும், நாட்டு மக்களுள்
பணமும் படிப்பும் குணமும் படிந்த
உயர்ந்த குடும்பத் துள்ளவ ராக
எனக்கு வேண்டிய பொருத்தம் எல்லாம்



நிறைந்தவ ராக நேர்வதும் உண்டு.
அப்படிப் பட்டவர் தயவையும் அடைந்து
சிறந்த படமாய்ச் செய்யவே முயல்வேன்.
உதாரணம் ஒன்று உங்களுக் குரைப்பேன் ;
உத்தமப் பெண்களின் உயர்ந்த குணங்களை
நன்றாய் விளக்கும் நல்லஓர் கதையைச்
சினிமாப் படமாய்ச் செய்து வருகிறோம்.
இதுவரை ரூபாய் இரண்டரை லட்சம்
அதற்குச் செலவுகள் ஆயின. எனினும்,
அந்தப் படத்தில் 'அதுதான்' அழகெனும்,
ஒரேஒரு காட்சி உசிதப் படிக்கு
அமையவே யில்லை ; அவதிப் படுகிறோம்.
காரணம் என்னெனில், காட்சிக்கு வேண்டிய
பாத்திரப் பொருத்தம் படியவே யில்லை.
அந்தக் காட்சி அமைப்பு யாதெனில்,
வீணைவா சிப்பதில் விற்பத்தி யோடும்
பாடத் தெரிந்த பழக்கமும் சேர்ந்து
இளமையும் அழகும் இனிமையும் இணைந்த
உத்தம லட்சணம் உள்ளவ ராகிய
பெண்மணி ஒருவர் பெரிதும் அவசியம்.
அரைமணி நேரம் மேடையில் அமர்ந்து,
வீணையை மீட்டி விருப்புறும் விதமாய்
நாலைந்து பாட்டுகள் நல்லதாய்ப் பாடி,
வார்த்தைகள் கொஞ்சம் வசனமாய்ப் பேசுதல்
அவ்வள வேதான் அவருக்கு வேலை
அப்படிப் பெண்பால் அமையவே இல்லை.
கூலிக்கு நடிக்கும் கூட்டத் தவருள்
இளமை உள்ளவர் அழகா யில்லை.
அழகா யிருப்பவர் வீணையை அறியார்.

அதுவும் இருந்தால் பாட்டு அபஸ்வரம்.
எத்தனை யோமுறை எடுத்துப் பார்த்தும்
பிடித்த படமெலாம் பிழையாய்ப் போயின.
பலமுறை இந்தப் பகுதியைப் பிடிக்க
அநேக நடிகரை அமர்த்திய தாலே
நாற்பதி னாயிரம் ரூபாய் நாசம்.
அரைமணி நேரத்து அந்த வேலைக்கு
ஐந்தாறு ஆயிரம் சம்பளம் அளித்தும்
வீணாய்ப் போனதால், விசனப் படுகிறோம்.
ஐயா யிரத்துக்கு அதிகமாய்க் கோரினும்
நல்ல ஒருவரை நாடிக் கொணர்ந்து
படத்தைச் சிறப்பாய் முடிக்கும் பாரம்
என்றன் தலைமேல் இருக்கின்ற தம்மா !
சினிமாத் தொழிலின் சிரமம் கொஞ்சமா !
நஷ்டமோ கஷ்டமோ நடிகருக் கில்லை.
டைரெக்ட் செய்கிற எனக்கே சங்கடம் !"
நடிகன் இப்படி நயந்து சொன்னதைக்
கேட்ட சரஸ்வதி கிளர்ச்சிகள் பொங்க,
"அரைமணி நேரமா ! ஐந்தே பாட்டா !
கூடவே வீணையா ! கொஞ்சம் பேச்சா !
அதற்கா ரூபாய் ஐந்தாறு ஆயிரம் !
நான்கூட அப்படி நடிக்கலாம் போல
ஆசைப் படுகிறேன் ; ஆனால் எனக்கு
வீணைவா சிக்கிற வித்தை யில்லையே !
'எல்லாப் பொருத்தமும் இசைந்தவள் கமலம்.
கமலம் இதனைக் கருதுவா ளானால்
ஐந்தாறு ஆயிரம் வந்தால் வரட்டுமே'
என்றொரு ஆசை உதிக்கிற தெனினும்"
என்று நிறுத்தி, எதையோ நினைத்து



பின்னும் சரஸ்வதி பேசிடு முன்னால்,
மீனாட்சி சுந்தரம் மீட்டும் பேசுவான்
"ஆமாம் அம்மா ! அற்புத மாகிய
எண்ணம் ! இதைநான் என்னென்று புகழ்வேன் !
உயர்ந்த குணமுள உத்தமி யாகிய
கமலம் அவர்களை நானும் கருதினேன்.
நானதைச் சொல்ல என்நா வெழவில்லை
நீங்களே சொன்னதால் எனக்கு நிம்மதி,
கமலம் அம்மாள் கருணை புரிந்தால்
உத்தமப் பெண்களின் உயர்ந்த குணங்கள்
அந்தப் படத்தில் நன்றாய் அமையும்.
படமும் சிறப்புறும் ; பாக்கியம் எனக்கே.
பேரும் பெருமையும் பெரிதும் பெறுவேன்.
எனக்காக வேனும் இசைந்திடச் சொல்லி
கெஞ்சி அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.
அவருக் கானால் பரிசும் அலாதிதான்.
பத்தா யிரத்தில் குறையாப் பணமும்,
இஷ்டப் பட்டால் இன்னும் அதிகமும்
வாங்கிக் கொடுத்து வாழ்த்தி வணங்குவேன்."
நடிகன் சொன்னதைக் கேட்ட நங்கையர்
ஒருவரை யொருவர் உற்றுப் பார்த்தனர்.
கமலாம் பாளின் கருத்தை அறியச்
சபலம் மிகுந்து சரஸ்வதி துடித்தாள்.
கமலாம் பாளோ கம்மென் றிருந்து
தலையைக் கவிழ்த்துத் தனக்குள் எண்ணுவாள் ;
நகைகளை விற்று நாணய மாக்கிப்
பாங்கியில் போட்ட பணம்வரா தென்று
கலங்கி யிருந்த காரணத் தாலோ,
ஆற்றில் வீசிய அருமை மகளை,

திருவொற்றி யூரின் தெற்கே யிருக்கும்
பங்களா ஒன்றில் தானே பார்த்ததாய்ச்
சரஸ்வதி சொல்லிய சந்தோ ஷத்தால்
கணவனைப் பற்றிய கவலைகள் விட்டுத்
தானும் மகளும் தங்கி வசிக்கத்
தோழியைப் போல்ஒரு தொழிலில் அமர்ந்து
பொருள்தேட எண்ணிய பொறுப்பி னாலோ
வஞ்சக நடிகன் கெஞ்சிய வாசகம்
கமலாம் பாளின் கருணையைத் தூண்டிச்
சினிமாப் படமும் சிறப்பாய் முடிந்து
நடிகனுக் கும்ஒரு நல்லபேர் கிடைக்க
உதவி செய்யவே உதித்த ஆசையோ
இன்பம் போலவே துன்பம் தருகிற
பொல்லாத வேளையின் புத்தியி னாலோ,
கமலம் நடிகன் கண்ணியில் விழுந்தாள்.

# கலைவளர் சங்கம்

மீனாட்சி சுந்தரம் விசேஷ உதவியால்
'கமலாம் பாளைக் கண்டது போல'
அழகான பெண்கள் அநேகம் பேரைப்
பார்க்கலாம் என்றே பட்டணம் வந்த
மாதவன் முன்னே, மதுரையில் எண்ணிய
சினிமாக் காரனாய்ச் சென்னையில் அமர்ந்தான்.
சென்னையி லேவந்து சிலநாள் வரையிலும்
மீனாட்சி சுந்தரம் விருப்பம் போலக்
கூப்பிட்ட இடமெலாம் கூடவே திரிந்து
அவளையும் இவளையும் பார்த்திட அலைந்து,
சினிமா நடிப்பில் ஜீவனம் தேடிட
எங்கெங் கிருந்தோ அங்குவந் தடையும்
பற்பல பெண்களைப் பார்த்தான். ஆனால்
கமலாம் பாளிடம் பழகிய கண்கள்
மற்றப் பெண்களை மதிக்க மறுத்தன.
'கமலம் இப்படிக் கள்ளியா னாளே !
பெண்களை நம்புதல் பெரும்பிழை' என்று
வெறித்த சொற்களால் வெறுத்துப் பேசி
வாயால் அடிக்கடி வைவான், எனினும்
மனமோ அவளை மறக்க மறுத்தது.
மற்றொரு பெண்ணை மணக்க விரும்பித்
தேடித் தேடித் தினமும் அலைந்தும்,
அழகையே நாடும் அவனுடைக் கண்கள்
17 விரும்பத் தகுந்த வேறொரு கன்னிகை

அகப்படவில்லை. அதனால் வருந்தி,
இளமையும் செல்வமும் ஒருபுறம் இழுக்க,
மனத்தின் மாண்பு மறுபுறம் தள்ள,
படித்த படிப்புகள் பழித்துக் காட்ட,
ஒழுக்க நினைவுகள் நெஞ்சை உறுத்த,
மாதவன் மிகவும் மருண்டு விட்டான்.
நாடகப் பெண்களைப் பார்ப்பது நாட்டமாய்ச்
சென்னையி லுள்ள சினிமாச் சாலைகள்
அனைத்தையும் பார்த்த அனுபவம் அதனால்
நாடகக் கலையின் நயங்களில் மயங்கிச்
சினிமாத் தொழிலைச் சிந்திக்க லானான்.
காலம் முழுதும் கலைகளைப் பற்றிய
ஆசையில் ஊறிய அவனுடை உள்ளம்,
'எல்லாக் கலைகளும் சேர்ந்து இணையும்
சினிமா வேலையைச் சீராய்ச் செய்தால்
உலக வாழ்க்கையின் ஒவ்வொரு துறையிலும்
அவசிய மாகிய அறிவைப் புகட்ட
உதவும்' என்கிற ஊக்கம் உதித்தது.
இணைபிரி யாமல் கூடவே இருந்த
சூழ்ச்சியில் தேறிய மீனாட்சி சுந்தரம்
தருணம் பார்த்துத் தட்டிக் கொடுத்தான்.
உடனே மாதவன் ஊருக் குப்போய்
வேண்டிய பணத்தை விரைவில் கொணர்ந்து,
உயர்ந்த அமைப்புகள் எல்லாம் உள்ளதாய்ச்
சொந்தத் தில்ஒரு 'ஸ்டுடியோ' வாங்கி,
டைரக்ட் செய்யவும், தானும் நடிக்கவும்,
நல்ல நடிகரை நாடிக் கொணரவும்,
மிகவும் பழகிட மீனாட்சி சுந்தரன்
தன்னுடன் இருக்கிற தைரி யத்தினால்,



ஆடம் பரத்துடன் ஆரம் பித்தான்.
ஏற்ற கதைகளை எழுதச் செய்வதும்,
கதைகளின் இலக்கியச் சிறப்பைக் காப்பதும்,
பாட்டில் ஆழ்ந்த பொருளைப் பார்ப்பதும்,
காட்சிக்கு வேண்டிய பணத்தைத் தேடலும்,
செலவுக்கு வேண்டிய பணத்தைத் தேடலும்,
மாதவன் வேலைகள். மற்றுள்ள எல்லாம்
மீனாட்சி சுந்தரம் மேற்கொள்ள வேண்டும்
என்னும் முறையில் இருவரும் சேர்ந்து,
மாதவன் தன்னுடைப் பெயரை மறைக்க
வேறொரு பெயரில் விலாசம் வைத்து,
சினிமாப் படங்களைச் செய்யத் தொடங்கினர்.

✤ ✤ ✤

அந்தத் தொழிலுக் கநுகூல மாகக்
கலைகளைப் பற்றிய கவியுள் ளவரும்,
கல்வியை விரும்பும் கலைவல் லாரும்,
இரண்டையும் ரஸிக்கும் இதரரும் கூடி,
பேசியும், எழுதியும், பிறர்சொலக் கேட்டும்.
ஆராய்ச்சி செய்து அறிவன அறிந்து,
நவீனக் கதைகளை நாடக மாக்கி,
நாடகத் தமிழை நலமுறச் செய்தால்
சினிமாப் படங்களும் சிறப்புறும் என்று,
'கலைவளர் சங்கம்' என்றொரு கழகம்
சினிமாத் தொழிலுடன் சேர்த்தான் மாதவன்.
ஆன்றவர் பலரை இதற்கென அழைத்து,
விளம்பரம் செய்து, விருந்துகள் நடத்தி,
ஆரம்ப விழாவை அழகாய்ச் செய்தான்.
ஆரம்ப விழாவில் அவைக்குத் தலைவர்
கலையைப் பற்றிஓர் கட்டுரை பேசினார் :

## கலை

"வியப்புற இன்பம் விருப்புற விளைக்கும்
காரியத் திறமையே 'கலை'எனப் படுவது.
இன்பம் தருகிற எல்லாச் செய்கையும்
கலையின் இனமாய்க் கருதத் தக்கதே.
இன்பம் என்பதில் இரண்டு விதங்கள்.
இயற்கை இன்பமும் செயற்கை இன்பமும்.
இயற்கை இன்பம் ஈடற்ற தெனினும்
செயற்கை இன்பமே சிறப்பென எண்ணி
மகிழ்வது மாநில மக்களின் இயல்பு.
கண்ணாற் காணும் இயற்கைக் காட்சியைச்
சித்திரம் வரைந்து சிறப்பென எண்ணுவர்
உயிருடன் பார்க்கும் ஒருவரின் உருவைச்
சிற்பச் சிலையில் சீராட்டு வார்கள்.
ஊக்கமும் உணர்ச்சியும் ஊட்டும் சொற்களைப்
பாட்டாய்க் கேட்கவே பலரும் விரும்புவர்.
மணமிக்க மலர்கள் மடியில் இருப்பினும்
அவற்றின் அத்தரின் ஆசையே அதிகம்.
எலுமிச் சம்பழம், இளநீர், கரும்பைத்
தனித்தனி அவற்றின் தன்மை கெடினும்
மூன்றும் கலந்தால் முதிர்சுவை என்பர்.
இன்பம் தருகிற இயற்கை நிகழ்ச்சிகள்
அநேகம் உள்ளன. ஆயினும், அவைகள்
வேண்டிய போதுநாம் விரும்பும் விதத்தில்
அகப்பட மாட்டா. அதற்கோர் உதாரணம் :
காதில் விழுந்ததும் களிக்கச் செய்கிற
ஓசைகள் அநேகம் இயற்கையில் உண்டு.
ஆனால் அவைகள் நேர்வது அருமை.
அதனால் அல்லவா அப்படி ஓசையை



வாய்ப்பாட் டென்றும் வாத்திய மாகவும்,
சமைத்துக் கொடுக்கும் சங்கீ தத்தைஓர்
உயர்ந்த கலையென உலகம் கொள்வது ?
இப்படி யேபிற எல்லா இன்பமும்
செய்யத் தெரிந்த திறமையே 'கலை'யாம்.
கலைகளின் இன்பம் புலன்களைக் கவர்ந்து
ஒழுக்கக் கேட்டையும் உண்டாக்கும். அதனால்
தமிழன் கலையெனத் தந்தன யாவும்
அறங்களைப் போற்றும் அறிவையே நாடும்.
வேடிக்கை என்றும், விநோதம் என்றும்,
அநேக கலைகளைத் தமிழன் அறிவான்,
ஆயினும், அவைகளும் அறத்தையே அடுக்கும்,
நூல்களை எழுதும் கலையின் நோக்கமும்,
கற்பனைக் கதையின் கலையும் அறமே,
தருமம் பேசாத் தமிழ்நூல் கலையை
இலக்கிய மாகவே எண்ணான் தமிழன்.
கலைகளின் வழியே கருணையைப் புகட்டல்
எளிதாம் எனநம் முன்னோர் எண்ணியே
கண்ணுங் கருத்துமாய்க் கலைகளைக் காத்து,
இயலென எழுதியும், இசையெனப் பாடியும்,
கற்பனை நிறைந்த கவிதைகள் செய்தும்,
நாட்டியம் பயின்றும், நாடகம் நடித்தும்,
குளங்களை வெட்டியும், கோபுரம் கட்டியும்,
சிலைகளைச் செதுக்கிச் சித்திரம் வரைந்தும்,
மலைகளைக் குடைந்து மண்டபம் ஆக்கியும்
கலைகளை வளர்த்த காரணம் எல்லாம்,
செயற்கை இன்பமும் இயற்கையில் சேர்ந்து
அறிவைத் துலக்கி, அன்பைப் பெருக்கி,
சச்சர வில்லாச் சமுதாய வாழ்வை

உண்டாக்கி வைத்தல் ஒன்றே நோக்கம்.
புலன்களுக் கெட்டாப் பொருளாய் இறைவனைப்
புலன்களுக் கின்பம் புகட்டவே புரியும்
கலைகளின் மூலமாய்க் கருதலாம் என்றே
கடவுளின் நினைப்பே கலைகளில் கலந்திடப்
பழகிய பெருமையே தமிழ்க்கலைப் பண்பு."

✣ ✣ ✣

சங்கத்தின் வேலைகள் சரிவர நடந்து
சிந்தை குளிர்ந்த சந்தோ ஷத்தினால்,
'ராகவ னிடத்தில் ரகசிய நட்பால்
கள்ளியாய்ப் போனாள் கமலம்' என்று
மனத்திற் குமுறி மாச்சரி யத்துடன்
பெண்ணாசை என்னும் பித்தமும் சேர்ந்து,
மானாபி மானப் பெருமை மறந்து,
அங்கும் இங்கும் அலைந்து திரிந்து,
மாதவன் உற்ற மனக்குழப் பங்கள்,
'கலைவளர் சங்கக்' காரியம் பார்ப்பதில்
புத்தி புகுந்து பொழுதும் போனதால்
ஒருவாறு கொஞ்சம் ஓய்ந்தன எனலாம்.
ஞாயிறு தோறும் சங்கம் நடக்கும் ;
அறிஞர்கள் பலபேர் அங்கே கூடுவர்.
கலைஞர்கள் அவரவர் திறமையைக் காட்டுவர்.
ஆடலும் பாடலும் அடிக்கடி நடக்கும்.
சிற்சில சமயம் தேநீர் விருந்தும்
மாதவன் செலவில் நடத்தி மகிழ்வான்.
உயர்ந்த குடும்பத் துள்ளவ ராகிய
பெண்களும் சிலபேர் சபையிற் பேசுவர்.
அவர்களில் ஒருத்தி **அம்புஜம்** என்பவள் ;
'சப்ஜட்ஜு' என்னும் சர்க்கார் வேலையின்



உபகாரச் சம்பள ஓய்வு பெற்றவர்
புருஷோத் தமரின் ஏக புத்திரி.
படிப்பின் ஆசையால், பாலிய வயதில்
வீட்டார் எண்ணிய விவாக முயற்சிகள்
எல்லா வற்றையும் எதிர்த்து விலக்கி,
படித்துப் பி.ஏ. பட்டம் பெற்றபின்,
பாரிஸ்ட ராகிய **பார்த்தசா ரதி**யைக்
காதல் கணவனாய்க் கட்டிக் கொண்டவள்.
இளமையி லேயே தாயை இழந்த
ஏக புத்திரி என்னும் ஆசையால்
புருஷோத் தமரும் புதல்வியின் மனம்போல்
இஷ்டப் பட்டது எதையும் செய்வார்.
இல்லறம் தொடங்கி இரண்டே வருஷம்
கணவனும் அம்புஜம் களித்து வாழ்ந்தபின்,
நாயகன் மிகவும் நோயால் நலிந்து,
படுத்த படுக்கையாய்ப் பலநாள் கிடந்து,
சிறுகச் சிறுகச் சீர்பட் டதுபோல்
வேறொரு விதமாய் வியாதி விரிந்து,
சித்தம் சிதைந்த பித்தனாய் விட்டான்.
அவனுடன் கூடவே அருகில் இருந்து
பணிவிடை பலவும் பண்ணினாள் அம்புஜம்.
பையப் பையப் பைத்தியம் முற்றி
அடிக்கவும் கடிக்கவும் ஆரம் பித்தான் ;
குழவிக் கல்லையும் தூக்கிக் கொண்டு
அம்புஜம் தலையில் அடிக்க வந்தான் ;
அண்டையில் யாரும் அணுகவொண் ணாத
ஆபத்து ஆகிய பாபத்து ஆயினான்.
அதுமுதல் அவனுக்கு அருகிற் போவதும்
விட்டாள் அம்புஜம். விலங்குகள் போட்டு

வீட்டில் ஒருபுறம் பூட்டிவிட்டார்கள்.
இப்படி இல்லற இன்பம் இழந்த
மகளுக்கு நேர்ந்த கவலையை மாற்றவே
புருஷோத் தமர்தாம் போகும் இடமெலாம்
கூடவே மகளையும் கூட்டிக் கொண்டு
காட்சிகள் பார்த்தும் கதைகளைக் கேட்டும்,
நாடகம் சினிமா நடனம் ரஸித்தும்
சற்சனர் கூடும் சங்கங் களிற்போய்
ஞானோப தேச நல்லுரை நாடியும்,
பூராப் பொழுதும் மகளுடன் போக்குவார்,
அம்புஜம் மிகுந்த ஆற்றல் உள்ளவள் ;
கண்ணைக் கவரும் கட்டழ குடையாள்.
கல்வியில் ஆசையும், கலைகளில் ஆர்வமும்,
பாட்டும் பிடிலில் பழக்கமும் உண்டு.
அச்சமோ, பயமோ, அருவருப் பின்றி
எங்கும் போவாள் ; எவரொடும் பழகுவாள் ;
சங்கோஜ மின்றிச் சபைகளிற் பேசுவாள்.
மாதவ னிடத்தில் மிகவும் மதிப்புடன்
தந்தையும் தானும் தங்கிப் பேசுவர்.
பலநாள் பழகிய பழக்கம் போலக்
கொஞ்சிச் சிரித்துக் குழைந்து பேசிக்
கலைவளர் சங்கக் காரியச் சிறப்பின்
மாதவன் முயற்சியைப் புகழ்ந்து மகிழ்வாள்.
மாதவன் அவளிடம் மயக்க முற்றான்.
தனித்துப் பேசத் தருணம் பார்த்து,
ஆசையும் அறிவும் அச்சமும் குழப்பத்
தயங்கித் தயங்கித் தவித்தான் சிலநாள்.
அந்தச் சபையில் அம்புஜம் ஒருநாள்
பெண்களின் உரிமையைப் பற்றிப் பேசினாள்.



பாலிய விவாகப் பழக்கத் தீமையை
அடியோடு ஒழிக்கும் ஆர்வம் காட்டி,
'மறுமண உரிமைகள் மாதருக் குண்டு'
என்னும் கருத்தை ஏந்திப் பேசினாள்.
மாதவன் அந்தப் பேச்சில் மகிழ்ந்து
எளிதில் அம்புஜம் இணங்குவாள் என்று
நிச்சயம் உதித்து அச்சம் நீங்கினான்.
அம்புஜம் பங்களா அருகே உள்ளது.
அடிக்கடி மாதவன் அங்கே போவான்.
மகளும் தந்தையும் மரியாதை செய்து
நல்விருந் தாகவே நயந்து கொள்ளுவர்.

✤ ✤ ✤

சிலநாள் இப்படிச் சென்றபின் ஒருநாள்
அடக்க ஒண்ணாத ஆசை மிகுந்த
மாதவன் அம்புஜம் மனைக்குப் போனான்.
அந்த நேரத்தில் அவளும் தந்தையும்
பங்களா முன்கட்டுப் பலகணி அருகில்
பத்திரி கைகளைப் படிப்பது வழக்கம்.
அங்கே பார்த்தான் அவர்கள் இல்லை.
உள்ளே சென்றான். ஒருவரும் இல்லை.
வேலைக் காரனைத் தேடி வினவினான்.
'ஐயா என்னவோ அவசர வேலையாய்
வெளியே போனார், வீட்டிலே இல்லை.
அம்மாள் மாடியில் அறைக்குள் இருப்பார்.
பாருங்கள்" என்று பதிலுரை வந்தது.
'தந்தையில் லாமல் தனியே இருக்கிறாள்
அம்புஜம்' என்னும் ஆனந் தத்துடன்
கோரின காரியம் கூடிவிட் டதுபோல்,
மட்டில் லாத மகிழ்ச்சியுற் றவனாய்,

மங்கை இருக்கும் மாடியை நாடி,
படிகளின் அமைப்பைப் படிப்பவன் போல
ஒவ்வொரு படியாய் உற்றுப் பார்த்து,
ஓசையில் லாமல் உயரச் சென்று,
அம்புஜம் இருக்கும் அறையைப் பார்த்தான்.
அறையின் கதவு அடைபட் டிருந்தது.
தனியே ஒருபெண் தங்கி யிருக்கும்
அறைக்குள் சட்டென ஆடவன் நுழைவது
சரியல்ல வென்று சற்றே தயங்கி,
'தந்தையார் விரைவில் வந்திடக் கூடும்'
என்றொரு எண்ணம் மனத்தில் எழுந்து
கதவை மெதுவாய்க் கையால் தள்ளினான்.
தாழிட்ட கதவு தள்ளத் திறக்குமா ?
கதவைக் கடந்தொரு ஜன்னலைக் கண்டு
எட்டிப் பார்த்தான் ; அம்புஜம் இருந்தாள்.
உற்றுப் பார்த்து உள்ளம் பதைத்தான்.
அறையின் கோடியில் அப்பால் இருந்த
சாளரக் கதவில் சாய்ந்த வண்ணம்
அம்புஜம் அங்கே அழுதுகொண் டிருந்தாள்.
கண்ணீர் வழிந்த கன்னம் மின்ன,
கையில் பிடித்துள கடிதம் ஒன்றைப்
பலமுறை திருப்பிப் பார்த்துக் கொண்டு
துன்பக் காட்சியாய்த் துவண்டு நின்றாள்.
மாதவன் மிகவும் மலைத்து விட்டான்.
அழுதுகொண் டிருக்கும் அவளைக் கண்டு
'இன்ப ஆசையை எப்படிச் சொல்வது ?'
என்னும் தயக்கம் எழுந்து விழுந்து
நினைத்துப் பார்க்க நேரமில் லாமல்
தன்னையும் மறந்து கதவைத் தட்டினான்.



திடுக்கிட்டு அம்புஜம் திரும்பிப் பார்த்து,
வேலைக் காரனின் வேலையென் றெண்ணி,
"என்னடா கந்தா ?" என்றாள் அம்புஜம்.
"கதவை இடித்தது கந்தன் அல்ல,
நான்தான் மாதவன்" என்றான் நயமாய்.
'மாதவன்' என்றசொல் காதில் பட்டதும்
முன்றா னையினால் முகத்தைத் துடைத்துக்
கண்ணீர் மாற்றிக் கதவைத் திறந்து,
வழக்கம் போல வரவுரை சொல்லி,
உள்ளே வரும்படி ஒதுங்கி நின்றாள்.
அறைக்குட் சென்று அம்புஜம் முகத்தைப்
பரிதா பத்துடன் பலமுறை பார்த்து,
"அம்புஜம், என்னநீ அழுதிருப் பதுபோல்
தோற்றுகின் றாயே, துன்பப் பட்டிட
என்ன காரணம் ?" என்றான் மாதவன்.
"எல்லாம் உங்கள் நட்டை எண்ணியே."
"என்னுடை நட்பை எண்ணியா அழுதாய் ?
என்ன பாக்கியம் எனக்கு !" என்றான்.
"எனக்கும் அதுவொரு பாக்கியம் என்றேன்.
துக்கத் தையெல்லாம் தூர விலக்கி,
கலைகளில் கல்வியில் கவனம் செலுத்தி,
கவலையில் லாமல் காலம் கடத்த
உங்கள் நட்பே உதவுதல் உணர்ந்து
பொன்போல் அதைநான் போற்றி வருகிறேன்.
ஐயோ அதையும்" என்று, அதற்குமேல்
துக்கம் மிகுந்து, தொண்டை அடைத்து,
பேச முயன்றும் பேச்சு வராமல்
கலகல வென்று கண்ணீர் வடிய
கவிழ்ந்த முகமாய், கையில் இருந்த

கடிதத் தின்மேல் கண்செல்ல நின்றாள்.
"அதைப்பற்றி என்ன ? அன்பு கெடும்படி
என்னுடைத் தவறுகள் உண்டோ ?" என்றான்.
"உங்கள் தப்பிதம் ஒன்றுமே இல்லை.
கணவர் பைத்தியம் காரணம்" என்றாள்.
"ஆமாம் அதைநான் முற்றும் அறிவேன்.
இளமையின் இல்லற இன்பம் இழந்து
துன்பப் படுகிற உனக்குத் துணையாய்
என்னா லாகிற எல்லா உதவியும்
செய்வதே எனக்கு ஜென்ம சாபல்யம்.
அதிலே சிறிதும் ஐயுறல் வேண்டா.
அம்புஜம், நீஏன் அழுதிடல் வேண்டும் ?
நானிருக் கின்றேன் நம்புக" என்றான்.
"உங்களை நம்பத் தடையும் உண்டோ ?
ஐந்தாறு மைல்கள் அப்பால் இருக்கும்
வேதாந்த மடத்தில் வேலை பார்க்கும்
அன்பா னந்தர் அருள்சேர் துறவியும்
உங்களைப் பற்றி மிகவும் உயர்வாய்த்
தந்தையி னிடத்தில் தனியே சொன்னார்.
அதனா லாக்கும் அப்படி நெருங்கி
உங்க ளிடத்தில் உறவுகொண் டாடத்
தந்தையும் எனக்கு அனுமதி தந்தார்.
அப்படிப் பட்ட உங்களை, ஐயோ !
பாருங்கள் இதனைப் படித்து" என்று
கையில் இருந்த கடிதம் அதனை
மாதவ னிடத்தில் மங்கை நீட்டினாள்.
ஆசை உந்திய ஆத்திரத் தோடு
வாங்கி விரித்து வாசித் தான்அதை.
"அன்பிற் சிறந்த அம்புஜத் துக்கு,



சுந்தரி எழுதிய சொந்தக் கடிதம்.
அம்புஜம் ! என்னநீ அறிவிலா தவளா ?
உன்னைப் பற்றியும் ஊரா ரெல்லாம்
இப்படிப் பேச இடந்தா லாமா ?
'மனிதருக் கெல்லாம் மானமே பெரிது.
பெண்களுக் கெல்லாம் கற்பே பெருமை.
கல்வியும், பயனும், கலைகளின் நோக்கமும்,
ஒழுக்கம் என்கிற ஒன்றே யாகும்'
என்றுநீ நித்தமும் என்னிடம் சொல்வாய்.
அதையெலாம் இப்படி அடியோடு மறந்து
நிந்தனைக் காளாகி நிற்பது தகுமா ?
சினிமாக் காரனை ஸ்நேகம் செய்து,
'சங்கம்' என்கிற சாக்கு சொல்லி
அடிக்கடி நீபோய் அவனிடம் பேசி,
கூச்சமில் லாமல் கொஞ்சி வருவதும்,
காலம், நேரம் காரணம் இன்றி
அவனும் உன்னிடம் அடிக்கடி வந்து
உங்கள் வீட்டில் தங்கிப் போவதும்,
'மறுமண உரிமை மாதருக் குண்டு'
என்றுநீ என்னவோ பேசினாய் என்றும்,
காமாட்சி எனக்குக் கடிதம் எழுதினாள்
உண்மை என்ன ? உடனே விவரம்
எழுதுவா யென்று எதிர்பார்க் கின்றேன்.
குடும்பப் பெயரைக் கெடுக்கக் கூடிய
எதையும் உன்மனம் எண்ணாது என்றே
நானும் உறுதியாய் நம்பி யிருக்கிறேன்.
இப்படிக் குன்னை என்றும் மறவா
அன்புள்ள உன்றன் அத்தை சுந்தரம்"
என்பது தான்அதில் எழுதி யிருந்தது.

படித்து மாதவன் முடித்த உடனே,
"பாருங்கள் ஐயா, இந்தப் பழியை !
அன்பா யிருப்பது அதுஒரு குற்றமா ?
சிரித்துப் பேசினால் சின்னத் தனமா ?
இனியசொல் கூறுதல் ஏச்சுக் கிடமா ?
நண்பரைக் காண்பது நாணமில் லாததா ?
சபையில் பேசுதல் சன்மார்க்கக் கேடா ?
பாலிய விதவைகள் பரிதா பங்களை
நீக்கிட வேண்டிய நீதியைக் காட்ட
மாதர் விரும்பினால் மறுமண உரிமை
அவருக் களிப்பதே அறிவாகும் என்றால்,
கற்பைக் கருதாக் கள்ளிநான் என்றும்,
கணவரை மறந்த காதகி போலும்
நிந்தனை பேசவும் நினைக்கி றார்களே !
என்ன ஜனங்கள் ! என்ன சமூகம் !
இப்படிப் பட்டஓர் இழிவான எண்ணம்
நீங்களோ நானோ நினைத்திருப் போமா ?"
என்றாள் அம்புஜம். என்ன சொல்லுவான் !
ஆசைகள் முரிந்து, அவதி மிகுந்து,
புலன்கள் ஒடுங்கி, புத்தி கலங்கி,
மாதவன் முற்றும் மரம்போல் நின்றான்.
வெளியே போனவர் வீட்டுக்கு வந்து
மகளை நாடி மாடிக்கு வந்த
புருஷோத் தமரும் அறைக்குட் புகுந்தார்.



## ஸ்டுடியோவிற்குள்

சினிமாப் படத்தில் சேர்ப்பதற் காகிய
கமலம் வீணைக் காட்சிப் பகுதியை
ஒத்திகை பார்க்கும் உத்தே சத்துடன்
அவளைத் தான்வந்து அழைத்துப் போவதாய்ச்
சொல்லி யிருந்த மீனாட்சி சுந்தரன்,
குறிப்பிட்ட நாளில் குறித்த நேரத்தில்
மோட்டார் வண்டியும், முன்பணம் ரூபாய்
ஐயா யிரத்துடன், அழகான உடையில்,
சரஸ்வதி மனைக்குச் சரூராய் வந்தான்.
கமலம், சரஸ்வதி காத்திருந் தார்கள்.
வந்தவன், அவர்கள் வரவேற்கு முன்னால்
பார்த்த உடனே பணத்தை நீட்டினான்.
முன்பணம் வருமென முன்னால் அறியார்.
எதிர்பா ராமல் இப்படித் தொகையை
அனாயா சமாய்அவன் தருவதைக் கண்டு
பெண்கள் இருவரும் பிரமித் திட்டனர்.
அரைகுறை இருந்த பயமும் அகன்றது.

✤ ✤ ✤

சென்னையில் எவரும் தன்னைப் பார்ப்பது
கூடாது என்றே, கூட்டுக் கிளிபோல்
வீட்டை விட்டு வெளியே போகிற
பழக்கமில் லாத கமலாம் பாளை,
தூரத்தி லிருக்கும் 'ஸ்டுடியோ' வுக்குத்
துணையில் லாமல் போகச் சொல்வது

சரியல்ல வென்று சரஸ்வதி எண்ணி,
அவளுடன் தானும் அங்கே போய்வரத்
தானே விரும்பித் தயாரா யிருந்தாள்.
கமலாம் பாளின் கருத்தும் அதுவாய்ச்
சரஸ்வதி வருவதில் சந்தோஷ முற்று,
இருவரும் போகும் ஏற்பா டுகளை
முன்னமே பேசி முடித்தி ருந்தனர்.
'வாத்தியா ரம்மாள் கூடவே வரலாம்'
என்பதை முன்னால் எண்ணிய நடிகன்
சரஸ்வதி யம்மாள் தங்களோ டங்கே
வருவதை விலக்க வழிசெய் திருந்தான்.
நடிகன் களிப்புடன் முன்னால் நடக்க,
சற்றே பின்னால் சரஸ்வதி தொடர,
அடுத்தாற் போல அன்றைக்கு வேண்டிய
வீணையைத் தாங்கிய வேலைக் காரியும்
கடைசி யாகக் கமலாம் பாளும்,
வீட்டை விட்டு வெளியே வந்ததும்,
மோட்டார் வண்டியின் முன்பக் கத்தில்
நடிகன் அமர்ந்தான். நாணம் மிகுந்து
வெளியில் நிற்பதில் வெட்கப் பட்டதால்
கமலமும் பின்புறம் காரில் ஏறினாள்.
வண்டியில் வீணையும் வைக்கப் பட்டது.
வீட்டு விஷயமாய் வேலைக் காரியை
அழைத்து என்னவோ அவளுடன் தனியே
சங்கதி சொல்லத் தங்கிய சரஸ்வதி
மோட்டா ருக்குள் ஏறிடு முன்னால்
அவசர வேகமாய் அங்கொரு சேவகன்
கடிதம் ஒன்றைக் கையில் ஏந்தி
இன்னொரு மோட்டார் வண்டியி லிருந்து



குதித்து வந்து, குறுக்கே புகுந்து,
சரஸ்வதி யிடத்தில் கடிதம் தந்தான்.
'அவசரம்' என்று அதன்மேல் எழுதிய
உறையைக் கிழித்து உள்ளே படித்தாள்.
"அவசரம் மிகுந்த அலுவல் ஒன்று :
நேரிற் பேசி நிச்சயம் செய்து
சர்க்கா ருக்குத் தந்தி மூலமாய்
விடைதர வேண்டிய முக்கிய விஷயம்.
தாமத மின்றித் தாங்கள் உடனே
வந்திட வேண்டும். வண்டியும் கூட
அனுப்பி யிருக்கிறேன். அன்புள்ள உங்கள்
வெங்கட ரமணன்" என்பது விஷயம்.
கடிதம் அதனைக் கண்ணுற்ற உடனே
சரஸ்வதி சற்றே சங்கட முற்றாள்.
வெங்கட ரமணன் வேறாரு மில்லை.
சரஸ்வதி யம்மாள் சம்பளம் வாங்கும்
கல்விச் சாலையின் தர்ம கர்த்தா.
உத்தம குணத்தால் உயர்ந்த மனிதர்.
அவருடை அவசர அழைப்பை உடனே
கவனிக்க வேண்டிய கடமைப் பட்டவள் :
ஆலோ சிக்கவே அவகாச மில்லை.
சரஸ்வதி யம்மாள் சட்டெனத் திரும்பி,
மோட்டார் ஜன்னலுள் முகத்தை நீட்டி,
வண்டியின் கதவில் சாய்ந்த வண்ணம்
கமலாம் பாளிடம் கடிதம் காட்டி,
"முன்னால் போங்கள், பின்னால் வருகிறேன்"
என்றது கேட்டுக் கமலம் ஏங்கினாள்.
மீனாட்சி உள்ளம் மிகவும் குளிர்ந்து,
வாத்தியா ரம்மாள் வரத்தடை வந்ததில்

வருத்தப் படுவதாய் வார்த்தைகள் பேசி,
"அவசர காரியம். அதனைப் பார்க்கும்
கடமை மிகவும் கட்டாய மானதே.
தட்டிக் கழிக்கத் தக்கதா யில்லை.
முன்னால் போகிறோம் ; பின்னால் வந்திட
வேண்டும்" என்று விடைபெற்றுக் கொண்டு
வண்டி ஓட்டியை நிமிண்டினான் மெதுவாய்.
உடனே மோட்டார் இஞ்சின் ஒலிக்க,
கொம்பொலி பூம் ! பூம் ! பூமெனக் குமுற,
கமலம் என்னமோ கசுமுசு என்றதும்
சரஸ்வதி பதிலும் சத்தம் மறைக்க,
வண்டியும் நகர்ந்து வழியைத் தொடர,
கமலம் சற்றே கலங்கினாள் ; எனினும்
சந்தோஷ மாகவே சவாரி போனாள்.
வேதாந்த மடத்தின் வீதி வாசலை
கடந்துதான் அந்தக் 'கார்' போக வேணும்.
மடத்தின் வாசலில் மாடுகள் பூட்டிய
இன்னொரு வண்டி இடைஞ்சலாய் இருக்கச்
சற்றே மோட்டார் தயங்க நேர்ந்தது.
என்னவோ அலுவலாய் எதிரில் வந்த
அன்பா னந்தர் அதனைப் பார்த்தார்.
மோட்டார் வண்டியில் முன்னா லிருந்த
மீனாட்சி சுந்தரம் மிகவும் மெலுக்காய்
உட்கார்ந் திருப்பதை உன்னிப் பார்த்தார்.
வெளியே பார்க்க வெட்கப் பட்டதால்
மோட்டா ருக்குள் மூலையில் ஒடுங்கிக்
கமலம் இருந்தது கண்ணிற் படவில்லை.
வழிமறித் திருந்த மாட்டு வண்டியும்
ஒருபுறம் விலகி ஓரமாய் நின்றபின்



மோட்டார் வண்டி முன்னால் சென்றது.
பாதையை விட்டுப் பக்கமாய் ஒதுங்கி
அருகே இருந்த அன்பா னந்தரை
முன்னால் நகர்ந்த மோட்டார் வண்டி
தாண்டிய பொழுது, தற்செய லாகச்
சாமியார் பார்வை சன்னலுள் நுழைய,
கமலம் இருந்ததைக் கண்டார் துறவி,
கமலம் உருவம் கண்ணிற் பட்டதும்
துறவியும் கூடத் துடித்து விட்டார்.
இப்படி ஒருநாள் நேரலாம் என்பதைச்
சிலநா ளாகச் சிந்தித் திருந்த
அன்பா னந்தர், அவதி யடைந்து,
மடத்து வேலைகள் முற்றும் மறந்து,
துறவு நிலைமையும் துறந்து விட்டு,
சரஸ்வதி மனைக்குச் சாமியார் ஓடினார்.

✤ ✤ ✤

சினிமா 'ஸ்டுடியோ' சிறந்த மாளிகை,
உள்ளே இருப்பது ஒன்றையும் பார்க்க
முடியாத விதமாய் முற்றிலும் மறைக்கும்
உயர்ந்த சுற்றுச் சுவர்கள் உடையது ;
உள்ளே விஸ்தார வெளியிடம் உள்ளது.
கற்கோட்டை போலக் கனத்த சுவர்களும்,
சிறைச்சாலை என்னத் திடமான கதவும்,
நாலு புறத்திலும் நந்தன வனமாய்
அழகென்று சொல்லும் அலுவலுக் காகவே
வளர்க்கப் படுகிற வகைபல வாகிய
மலரிலாச் செடிகள், மணமிலா மலர்கள்,
காய்க்காத மரங்கள், உதவாத காய்கள்,
பழந்தராக் கொட்டை, சுவைதராப் பழங்கள்,

வற்றாத நீர்நிலை, வளராத தொட்டிகள்,
ஓயாத நீர்க்குழாய், உலராத புல்தரை,
இப்படிப் பட்ட எத்தனை யோபல
இயற்கை மறைக்கும் செயற்கை வளங்கள்
நிறைந்த தாகிய சிறந்த இடத்தின்
மத்தியில் இருந்த மாளிகை அதுதான்
சினிமாப் படங்களைச் செய்யும் 'ஸ்டுடியோ'
அதனைச் சுற்றிலும் அங்கங் கேபல
சிறுசிறு மனைகள் திகழ்வன உண்டு.
அவற்றில் மிகவும் அழகான ஒன்று
மீனாட்சி சுந்தரம் மேல்மாடி வீடு,
மனைவியோ, மக்களோ, மற்றாரும் இல்லை.
வேலைக் காரரே வீட்டில் உள்ளவர்.
சினிமா நடிப்பிற் சேர்ப்பதற் கான
பயிற்சி கொடுக்கும் பற்பல பேரையும்
தனித்தனி வைத்துத் தர்ப்பித்துச் செய்ய
அவனுக் கென்றே அமைக்கப் பட்டது.
ஒத்திகை நடத்த உபயோக மாகிய
வசதிகள் யாவும் வாய்ந்தது அவ்விடம்.
'ஸ்டுடியோ' மாளிகைச் சுற்றுச் சுவரைக்
கடந்து சென்றால் கால்மைல் தூரம்
மாதவன் வசிக்கிற மற்றொரு பங்களா.
'கலைவளர் சங்கக்' கழகமும் அதுவே.
வழக்க மாக வாரம் ஒருமுறை
மாளிகைக் குள்ளே மாதவன் வருவான்.
மீதிநா ளெல்லாம் மீனாட்சி சுந்தரம்
'ஸ்டுடியோ' முழுவதும் சுதந்தர புருஷன்.
சகல விதத்திலும் சர்வாதி காரி.
அப்படி நம்பினான் அவனை மாதவன்.

✤ ✤ ✤



கமலம் இருந்த மோட்டார்க் காரும்
மடத்தைத் தாண்டி மளமள வென்று
பத்து மைலைப் பதினைந்து நிமிஷம்
முடிவதற் குள்ளே ஓடி முடித்து,
'சினிமா ஸ்டுடியோ' சென்றுதான் நின்றது.
நடிகனைக் கண்டதும் நமஸ்கரித் தோடிக்
காவற் காரன் கதவைத் திறந்தான்.
உள்ளே ஓட்டி ஒருபுறம் திருப்பி,
அங்கே யிருந்த அழகான பாதையில்
ஸ்டுடியோ வீட்டைச் சுற்றிக் கொண்டு
மீனாட்சி வசிக்கும் மேல்மாடி வீட்டின்
வாசலின் முன்னால் வண்டியும் நின்றது.
மிகவும் விரைவாய் மீனாட்சி இறங்கி,
கமலம் இறங்கக் கதவைத் திறந்து,
இறங்கிய பின்னர் வீணையை எடுத்துத்
தானே அதனைத் தாங்கிக் கொண்டு
முன்னால் போனான், பின்னால் நடந்து
கயவன் வீட்டில் கமலம் நுழைந்தாள்.

✤ ✤ ✤

சிறந்த செல்வச் சீமா னாகிய
மாதவன் மனத்தை முற்றும் மயக்கிச்
சினிமாத் தொழிலில் சிக்க வைத்தவன்
மீனாட்சி சுந்தரம், வீணன் என்பதை
முன்னமே வேறொரு நண்பர் மூலமாய்
அன்பா னந்தர் நன்றாய் அறிவார்.
ஊரான் செலவில் உண்டு கொழுத்துக்
காம வேட்டையில் காலம் கழிக்கும்
மீனாட்சி சுந்தரம், மிகவும் குறிப்பாய்க்
கமலாம் பாளின் மனத்தைக் கவரவே

பள்ளிக் கூடப் பயிற்சி முறைகளைச்
சினிமாப் படத்தில் சேர்ப்பதற் காக,
பணமுடை நேர்ந்த சமயம் பார்த்துப்
படத்தைப் பிடித்துப் பணம்தந் ததையும்
கணவனைப் பிரிந்து, கவலை மிகுந்து,
குழந்தையின் ஆசையால் குற்றுயிர் தாங்கும்
கமலாம் பாளின் மனசையும் கவர்ந்து,
படத்திற் சேர்க்கப் பாட்டும் வீணையும்
இசைக்கக் கமலம் இணங்கிய சேதியும்
அன்பா னந்தர் சிறிதும் அறியார்.
வெகுநா ளாக வேதாந்த மடத்தின்
அங்கத் தினராய் அடிக்கடி வருகிற
புருஷோத் தமரும் புதல்வியும் ஒருநாள்
மடத்திற்கு வந்து வேதாந்த மார்க்கப்
புஸ்தகம் பார்த்துப் பொழுது போக்கையில்
அன்பா னந்தர் அவர்களைக் கண்டு
சல்லா பித்திட நேர்ந்த சமயம்,
'கலைகளின் முடிவும் கடவுளே' என்று
எழுந்த பேச்சின் இடையில், அம்புஜம்
'கலைவளர் சங்கக்' கர்த்தா வாகிய
மாதவன் பெயரையும், மற்றும் அவருடன்
மிகவும் நெருங்கிய மீனாட்சி சுந்தரம்
பெயரையும் குறித்துப் பேச நேர்ந்தது.
சரஸ்வதி யம்மாள் கல்விச் சாலையைச்
சினிமாப் படத்தில் பிடித்த சேதியும்
அம்புஜத் தால்தான் துறவி அறிந்தார்.
அதுமுதற் கொண்டு அன்பா னந்தர்
சரஸ்வதி வீட்டுச் சமீபங் களில்
பலமுறை நடிகனைப் பார்த்தபோ தெல்லாம்



சரஸ்வதி பீடத்தில் சங்கதி சொல்லி
எச்சரித் திடவும் எண்ணினார். ஆனால்
வேதாந்த மடத்தின் வேலை மிகுதியால்
சரஸ்வதி யைஅவர் சந்திக்க வில்லை.

✤ ✤ ✤

அஞ்சா நெஞ்சுள் வஞ்சக னாகிய
நடிகனைக் கமலம் நம்பி, அவனுடன்
வண்டியில் போனதைக் கண்டு வருந்தி,
சரஸ்வதி மனைக்கு ஓடிய சாமியார்,
அங்கே அவளைக் காணார், அங்குள
வேலைக் காரியை வினவினார். அவளோ,
கடிதம் வந்ததை மட்டும் கண்டவள்,
யாருடைக் கடிதம் என்பதை அறியாள்.
சினிமாக் காரனும் கமலமும் சென்றபின்
இன்னொரு மோட்டார் வண்டியில் ஏறிப்
பள்ளிக் கூடப் பக்கம் சரஸ்வதி
போனதை வேலைக் காரி புகன்றாள்.
வேலைக் காரி சொன்ன விதத்தில்
கல்விச் சாலையில் காணலாம் என்று
அன்பா னந்தர் அனுமா னித்தார்.
நடந்து போனால் நாழியாம் என்று
சாலையில் கண்ட ஜட்கா ஒன்றில்
வாடகை கூட வரைபே சாமல்
ஏறிக் கொண்டார் ; இடத்தைச் சொல்லி
வேகமாய் முடுக்கி விரட்டச் செய்து
அங்கே போனார் ; அங்கும் இல்லை.

✤ ✤ ✤

அவசரம் மிகுந்து அழைப்பென வந்த
கடிதம் அதனைக் கண்ணுற்ற உடனே
உத்தியோ கத்தின் கடமை உணர்ந்து

கமலாம் பாளுடன் போய்வரக் கருதிய
ஆசையை விட்டு, அலுவலைப் பார்க்க
வெங்கட ரமணரைச் சந்திக்க விரைந்து,
சரஸ்வதி யம்மாள் கல்விச் சாலையின்
காரியா லயத்தில் அவரைக் காணப்
போனாள். கதவு பூட்டி யிருந்தது.
வேறுள யாரையும் வினவிடக் கூட
ஓய்வுநாள் ஆனதால் ஒருவரும் இல்லை.
வேலை விஷயமாய் வெங்கட ரமணரைச்
சரஸ்வதி யம்மாள் சந்திப்ப தெல்லாம்
கல்விச் சாலையின் காரியா லயத்தில்
பள்ளிக் கூட வேலையைப் பற்றி
வெங்கட ரமணர் வீடு வரும்படி
என்றும் அவளை ஏவின தில்லை.
பள்ளிக் கூடம் வந்துதான் பார்ப்பார்.
ஆதலால் சரஸ்வதி சற்றே அயிர்த்தாள்.
எனினும் மீண்டும் எண்ணிப் பார்த்து,
அவசரம் மிகுந்த காரியம் ஆனதால்
வீட்டில் இருந்தே கடிதம் விடுக்க
நேர்ந்ததோ என்று நினைத்துக் கொண்டு,
வெங்கட ரமணரை வீட்டில் பார்க்கத்
தீர்மா னித்து, தெருவில் இருந்த
மோட்டார் வண்டியை மீண்டும் விரும்பி
வந்தாள் ; ஆனால் வண்டியைக் காணாள்.
வெங்கட ரமணரின் வீடும் மிகவும்
சமீபம் ஆனதால், சரஸ்வதி யம்மாள்
விரைந்து நடந்து வீட்டில் பார்த்தாள்.
வெங்கட ரமணர் வீட்டில் இல்லை.
வெங்கட ரமணர் வெளியூர் சென்று



மூன்றுநாள் ஆனதாய் மொழியக் கேட்டாள்.
முன்விளக் கவிந்த 'மோட்டார்க் கார்' என,
டங்குவார் அறுந்த ஜட்கா வண்டி போல்,
கைத்தடி இழந்த கிழவன் கணக்காய்,
ஊற்றுமை தீர்ந்த பேனாவின் ஒப்பாய்,
தாளம் கெட்ட சங்கீ தம்போல்,
எண்ணமும் தடைப்பட, ஏமாந்து நின்றாள்.
சிறிதே அப்படித் திகைத்து நிற்கையில்
கிள்ளிவிட் டதுபோல் உள்ளம் கிளர்ந்து,
நினைவைக் கொஞ்சம் நிதானப் படுத்தி,
கடிதம் தந்ததைக் கையில் எடுத்து,
ஒவ்வொரு எழுத்தாய் உற்றுப் பார்த்துக்
கையொப் பத்தில் கவனம் செலுத்த,
ஒப்பம் மிகவும் உண்மை யானதாய்
எழுத்தும் மிகவும் சரியாய் இருந்தது.
வெங்கட ரமணரின் வீச்செழுத் தேதான்.
தேதியைப் பார்த்தாள் தெளிவா யில்லை.
மீண்டும் படித்தாள் ; மேல்ஆ ரம்பம்
'அன்புள்ள ஐயா' என்பது கண்டாள் !
'அன்புள்ள அம்மா' அல்லவோ வேணும் ?
கடிதம் தனக்கல்ல என்பதைக் கண்டாள்.
சேவகன் என்னவோ தெரியாத் தனமாய்,
ஆள்மா றாட்டமாய் அவளிடம் தந்ததாய்
எண்ணிக் கொண்டே, எட்டி நடந்து
பள்ளிக் கூடப் பக்கமாய் வந்தாள்.
அன்பா னந்தர் அங்கே நின்றார்.

✤ ✤ ✤

துன்பம் துடைக்கத் தோன்றிய துணைபோல்
அன்பா னந்தரை அங்கே கண்டதும்

சஞ்சலம் குறைந்து சரஸ்வதி யம்மாள்,
அஞ்சலி செய்து அருகில் வந்தாள்.
அன்பா னந்தரும் ஆசி புகன்று,
கமலாம் பாளைக் கண்டதைக் கூறி,
மிகவும் கொடியவன் மீனாட்சி சுந்தரம்
என்பதைப் பற்றிய எல்லாம் சொல்லி,
"ஸ்டுடியோ வுக்குச் சுருக்கமாய்ச் சென்று
கமலம் பெருமையைக் காத்திட வேண்டும் ;
அசட்டை செய்தால் அபாயம்" என்றார்.
இருவரும் உடனே எண்ணி முடித்து
அருகில் வசித்தஓர் அன்பரைக் கண்டு
இரவல் மோட்டார் வண்டியில் ஏறி,
வெகுவெகு வேகமாய் விடும்படி வேண்டி,
ஸ்டுடியோ மாளிகை சுற்றுச் சுவரின்
கதவின் அருகில் 'காரை' நிறுத்தினார்.
காவற் காரன் கதவைத் திறக்க
மறுத்து விட்டான். மன்றாடி மிகவும்
கெஞ்சிக் கெஞ்சிக் கேட்டுக் கொண்டும்,
"இன்றைக்கு மட்டும் எவரா னாலும்
உள்ளே போவது முடியாது, உண்மை.
டைரக்டர் எஜமான் தனியே என்னிடம்
கண்டிப் பாகக் கவனிக்கச் சொன்னார்"
என்றான். அதற்குமேல் என்ன செய்வது ?
அன்பா னந்தர் ஆலோ சித்தர்.
மற்றொரு இடத்தில் மாதவன் வசிக்கும்
வீட்டை நோக்கி வண்டியை விட்டார்.

## வஞ்சகம்

சினிமா ஸ்டுடியோ உட்புறம் சென்று
மீனாட்சி சுந்தரம் வீட்டில் நுழைந்த
கமலம், கதவைக் கடந்த உடனே
சமையற் காரன் கதவைச் சாத்திச்
சத்தமில் லாமல் தாழ்ப்பா ளிட்டான்.
கமலம் அவனைக் கவனிக்க வில்லை.
சமையற் காரப் பையனைத் தவிர
வேறே எவரும் வீட்டில் இல்லை.
சிறுமனை எனினும் சிங்கா ரங்களில்
அரண்மனை கூட அதற்கிணை யல்ல.
பணத்துக் கென்னவோ பஞ்சமே இல்லை.
எந்த நேரத்தில் எவ்வள வாயினும்
கோரிய தொகையை உடனே கொடுக்க
மாதவன் இருக்க மற்றென்ன குறைச்சல் ?
உள்ளே யிருந்த ஒவ்வொரு பொருளும்
மிகவும் உயர்ந்த விலைமதிப் புள்ளது.
பண்டம் பலவும் பளபள பளவெனக்
கண்கள் கூசும் காட்சிக ளாகத்
திரும்பிய திசையெல்லாம் திகழ்வன கண்டாள்,
சித்திரப் படங்களும், சிற்பச் சிலைகளும்,
அங்கங் கேமிக அழகுற அமைந்து
பற்பல நாட்டின் பண்புகள் காட்ட
கலைப்பொருள் சேர்ந்த கண்காட்சி போல
இன்பம் நிறைந்த இடமா யிருந்தது.

பக்கத் துக்கொரு பதுமை யிருந்த
பளிங்கு போன்ற படிகளில் ஏறி,
மாடியை அடைந்த நடிகனும் மங்கையும்
நாதக் கட்டுகள் நன்றாய் அமைந்து,
தனியே நடிகர் தங்கி யிருந்து
கூச்சப் படாமல் பயிற்சி கொள்ள
ஒத்திகைக் கென்றே உபயோ கப்பட
அமைக்கப் பட்டதாய் அடிக்கடி சொல்லி
மீனாட்சி சுந்தரம் மிகவும் மெச்சிய
அழகிய கூடம் அங்கொன் றிருக்க,
அதனுள் சென்றனர். அருகில் ஒருபுறம்
பற்பல தினுசு பழங்களும் பாலும்,
பிஸ்கத் மிட்டாய் ரொட்டியும் பிறவும்
வீட்டிற் சமைத்த வேறுசிற் றுண்டியும்,
வைக்கப் பட்டொரு வட்ட மேஜையும்,
மேஜையைச் சுற்றிலும் மெல்லிய வெல்வெட்
பட்டுப் பஞ்சணை பதித்தன வாகிய
நாற்கா லிகளும் இருந்தன. நடிகன்
அவற்றில் ஒன்றில் அமரும் படிக்குக்
கமலத் துக்குப் பணிவுடன் காட்ட,
அவளும் மிகவும் ஆவலாய் அமர்ந்தாள்.
அமர்ந்த அவளிடம் அன்பு ததும்பிட
மீனாட்சி சுந்தரம் மெல்லிய குரலாய்,
"காப்பியா ? டீயா ? கோக்கோ கலக்கவா ?
எந்தப் பானம் உங்களுக் கிச்சை ?
சமையற் காரன் மிகவும் சமர்த்தன்.
சிற்றுண்டி எதையும் சிறப்புறச் செய்வான்.
கொஞ்சம் உணவு கொள்ளுங்கள்" என்றான்.
"டீயும் காப்பியும் கோக்கோ தினுசும்



விட்டுத் தொலைச்சு வெகுநாள் ஆச்சு.
அவசியம் இல்லை, ஆசையும் இல்லை ;
இப்போது எனக்கு எதுவும் வேண்டா.
தாகமோ பசியோ சற்றேனும் இல்லை.
ஒத்திகை ஆனபின் ஒருகால் பசித்தால்
பழமோ, பாலோ, பின்னால் பார்ப்போம்.
ஒத்திகை பார்ப்பதை உடனே செய்வோம்.
சரஸ்வதி வருவது தவறிப் போச்சே !
அவளும் மிகவும் ஆசையா யிருந்தாள்.
என்னவோ இப்படி இடைஞ்சல் வந்தது
வீணையும் பாட்டும் முடிந்து விட்டபின்,
"எவரோ டேயோ என்னவோ வசனம்
பேச்சாய்க் கொஞ்சம் பேசவேண் டியதை
எழுதி யிருப்பதாய் என்னிடம் சொன்னீர்.
எங்கே அதனை எடுங்கள் பார்ப்போம்.
பத்தே நிமிஷம் பாடம் பண்ணுவேன்.
ஒன்று விடாமல் ஒப்பித் திடுவேன்.
எடுங்கள், என்னிடம் கொடுங்கள்" என்றாள்.
"அப்படி என்ன அவசரம் அம்மா ?
சரஸ்வதி யம்மாள் சடுதியில் பின்னால்
வருவதாய் நமக்கு வாக்களித் தாரே.
வரட்டுமே அவரும். வந்தபிற் பாடே
ஆரம் பிப்போம். அதிலென்ன குற்றம் ?
அவர்களும் பார்த்து அனுபவிக் கட்டுமே !"
என்று நடிகன் இன்புறச் சொன்னான்.
"ஆமாம் எனக்கும் அதுதான் ஆசை.
சரஸ்வதி வருவாள், சந்தேக மில்லை.
என்னைப் பிரிந்து இருக்கவே மாட்டாள்.
அரைக்கண மேனும் அவளைப் பிரிந்தால்

எனக்கும் என்னவோ போலிருக் கின்றது.
அவளும் வரட்டும் ; அதுதான் நல்லது.
ஆனால் அவள்போன அவசர அலுவல்
என்னமா யிருக்குமோ ! எந்நேரம் ஆகுமோ !
வரத்தான் முடியுமோ ! வராது போவளோ !
வந்தால் வரட்டும் ; வருகிற வரைக்கும்
வசனம் பேசிட வேண்டிய வற்றைப்
படித்துப் பார்க்கக் கொடுத்தால் என்ன ?"
"படித்துப் படித்துத்தான் பகலிர வாக
அலுத்துப் போனதாய்ச் சரஸ்வதி யம்மாள்
எத்தனை யோதரம் என்னிடம் சொல்லி
அனுதா பித்ததை அறிவேன்" என்று
மீனாட்சி சுந்தரம் மிடுக்காய்ச் சிரித்தான்.
கரிசனம் என்று கமலமும் சிரித்து,
"ஆமாம், மெய்தான் ; அதைவிட எனக்குப்
பொழுதைப் போக்கப் பொருந்துவ தென்ன ?
ஓய்வுநாள் போக உள்ளநா ளெல்லாம்
பள்ளிக் கூடத் தொழிலைப் பார்க்கச்,
சரஸ்வதி போனால் சாயந் திரம்வரை
தனியே தவிக்கும் தலையெழுத் துடையேன்
பகலைத் தினமும் படித்தே கழிப்பேன்.
விதியை நினைத்து விடிகிற வரைக்கும்
இரவிலும் பலநாள் தூக்கமில் லாமல்
புத்தகம் பார்த்தே இரவைப் போக்குவேன்.
படிப்பதைத் தவிர வேறென்ன பண்ண ?"
என்று நிறுத்தி எதையோ நினைத்துக்
கமலம் சற்றே கலக்க முற்றாள்.
"கல்விக் கடலாய், கலையின் தெய்வமாய்,
வீணை வித்தையின் வெற்றிச் சிகரமாய்,



சங்கீ தத்தின் சாஸ்திரம் போன்ற
நீங்கள், இப்படி நித்தமும் ஏங்கித்
தனியே இருந்து தவிப்பதைப் பார்க்க
எனக்குக் கூட நிம்மதி இல்லை.
தலையெழுத் தாவது, காலெழுத் தாவது ?
நீங்கள் நினைத்தால் நிமிஷம் மாற்றலாம்.
நம்முடை வாழ்க்கை நம்மதி காரம்.
விதியைக் கூட மதியால் வெல்வோம் -
நல்ல யோசனை நானொன்று சொல்வேன் -
சினிமாத் தொழிலில் சேர்ந்தால் என்ன ?
பொழுதும் போகும் ; பொருளும் சேரும்.
லட்சிய மின்றி லட்சக் கணக்கில்
சந்தோஷ மாகவே சம்பா திக்கலாம்.
'காதலின் வெற்றி' என்றொரு கதையை
அடுத்த படமாய் ஆரம் பிக்கிறோம்.
நானே அதற்குச் சுதாநா யகனே.
நீங்களும் சேர்ந்து நடிக்க நினைத்தால்
அதற்கு மட்டிலும் ஐம்பது ஆயிரம்
உங்களுக் கென்று ஒதுக்கித் தருவேன் ;
அதிகம் வேண்டினும் ஆயத்தம்" என்றான்.
"நல்ல வேலைதான் ; நானும் நினைத்தேன்.
ஐம்பது ஆயிரம் என்றால் ஆசைதான்"
என்று கமலம் என்னவோ சிரித்தாள்.
"ஆமாம் கமலம் ! அட்டிசொல் லாமல்
சம்மதி தந்தால் சந்தோ ஷிப்பேன்.
அடிக்கடி உங்கள் அருகில் அமர்ந்து,
கலைகளை ரஸித்துக் காலம் கழிக்கும்
பாக்கியம் கூட எனக்குப் பலிக்கும்.
உங்கள் உறவு ஒப்பிலாச் செல்வம்.

'காதலின் வெற்றி' என்னும் கதையில்
'கதாநா யகிதான்,' கமலம் என்றால்,
அற்புத மாகப் படமும் அமையும்.
இருவரும் நடிப்போம்" என்றான் நடிகன்.
"சினிமா நடிப்பில் சேரா விடினும்
நட்பு குறைந்திட ஞாயம் இல்லை.
எனக்கும் உங்கள் உறவில் இச்சைதான்.
கலைஞரைக் கண்டால் நானும் களிப்பேன்.
அப்படி வாழ்ந்துதான் இப்படி ஆனேன்.
நிர்பாக் கியங்களை நினைத்துப் பயனென் ?"
"நிர்பாக் கியங்களா ? என்னநிர் பாக்கியம் ?
நிர்பாக் கியங்களை நிர்மூல மாக்குவோம்
உங்கள் சரித்திரம் உள்ளதை யெல்லாம்
அறிந்திட மிகவும் ஆசைப் படுகிறேன்.
என்னிடம் நீங்கள் எதையும் சொல்லலாம்.
அதைநான் அறியச் சரஸ்வதி அவர்களைப்
பலமுறை கேட்டும் பயன்பட வில்லை.
வாத்தியா ரம்மாள் வாயே திறந்திலர்
'கேட்பது கூடக் கெடுதல்' என்றார்.
நீங்களே சொன்னால் நிம்மதி யடைவேன் ;
நிர்பாக் கியத்தை நீக்குதற் கான
என்னாற் கூடிய எதையும் செய்வேன் ;
உயிரையும் கூட உதவத் துணிவேன்.
பந்துமித் திரரின் பகைமை உளதா ?
கணவன் கொடுமை காரணம் உண்டா ?"
"ஐயோ ! ஐயோ ! அன்பரே, வேண்டா.
அந்தப் பேச்சை அறவே விடுங்கள்.
நினைப்பு வந்தால் நெஞ்சம் எரியும்
வீணையும் பாட்டும் வேதனை யாகும்.



ஒத்திகை பார்ப்பது ஊனமாய்ப் போகும்.
என்னுடைக் கதைகள் இப்போது எதற்கு ?
நினைப்பு மூட்டிட நினைக்க வேண்டா
மறக்கத் தானே மருந்து வேண்டும் -
வாத்தியா ரம்மாள் வருவதாய்க் காணோம்.
சீக்கிரம் ஒத்திகை செய்து முடித்துப்
போவோம் அங்கே, புறப்ப டுங்கள்"
என்று முடித்து எழுந்தாள் கமலம்.
"மறப்பதே நல்லது, மன்னித் திடுங்கள் ;
அறியாத் தனமாய் அதைநான் கேட்டேன்.
ஒத்திகை பார்ப்போம், உட்கா ருங்கள்"
என்று நடிகனும் எழுந்து, ஒருபுறம்
ரத்தினக் கம்பளம் மெத்தென விரித்துப்
பற்பல வர்ணத் திண்டுகள் பரப்பிய
அரங்கம் போன்றுள அழகிய மேடையில்
கமலம் வீணையைக் கவனமாய் வைத்து,
ஒத்திகை நடத்தும் உத்தே சம்போல்
அருகே யிருந்த அறைக்குட் சென்று,
கமலாம் பாளின் மனத்தைக் கவரவே
வாங்கிவைத் திருந்த வயிர நகைகள்
அடங்கி யிருந்தஓர் அழகான பெட்டியைக்
கொணர்ந்து, கமலம் கையிற் கொடுத்து,
'பாருங்கள்' என்று பரிவுடன் சொல்ல,
கமலம் அதனைக் கனிவுடன் வாங்கித்
திறந்து பார்த்துத் திகைத்து நின்றாள்.
வானவில் போன்ற வர்ணச் சுடர்கள்
தகதக வென்று தணல்போல் வீசச்
சீமை வயிரச் சிறந்த நகைகள்
கண்ணைப் பறிப்பன கண்டாள் கமலம்.

ஆசையி னாலோ, அருவருப் பாலோ,
நகைகளைப் பார்த்து நகைமுகம் காட்டி,
"எதற்காக இந்த நகைகள் ?" என்றாள்.
"இப்படி வயிரம் எங்குமே இல்லை !
கொள்ளை கொள்ளைப் பணங்கொடுத் தாலும்
கடைகளில் இப்படிக் காண்பது கடினம்.
ரத்தினப் பரீட்சை மெத்தவும் தேர்ந்த
நாணயம் மிகுந்த நண்பர் ஒருவர்
எங்கெங் கேயோ எனக்கா கப்போய்த்
தேடிப் பார்த்துத் தெரிந்து வாங்கினார்.
வராத விருந்தாய் என்வீடு வந்துள
கலைத்தே வதைக்கும் காணிக்கை யாக
ஒத்திகை பார்க்க உங்களுக் கிவற்றை
வெகுமதி யாகக் கொடுக்க விருப்பம்.
அன்பின் அறிகுறி ஆசையில் தருவதை
ஏற்க வேண்டும்" என்றான் நடிகன்.
"எனக்கா நகைகள் ! என்னத் திற்கு ?
அணிகளில் எனக்கு ஆசையே யில்லை.
இருந்ததைக் கூட எடுத்துவிட் டேனே.
நகையை விற்ற தொகையைத் தானே
பாங்கியிற் போட்டுப் பறிகொடுத் திட்டோம்.
அதனால் நேர்ந்த அவஸ்தை கொஞ்சமா ?"
"பணமா யிருந்து பறிகொடுத் தீர்கள்,
நகையா யிருந்தால் நம்மோ டிருக்குமே.
ஆபர ணங்கள் ஆபத்தில் உதவும்."
"ஆமாம் நியாயம் ; ஆயினும் எனக்கு
ஆபர ணங்களில் ஆசையே யில்லை ;
வேண்டா, அன்பரே வேண்டா" என்றாள்.
"உங்களுக் கிவைகள் உதவா விடினும், -



சரஸ்வதி யம்மாள் சமையற் காரி
தனியே ஒருநாள் பேசிய தருணம்
பேச்சொடு பேச்சாய் நீங்கள் பெற்ற
குழந்தை இருப்பதாய்க் கூறின ஞாபகம்
குழந்தைக் காவது கொடுக்க உதவும்.
ஏற்றுக் கொள்ளவே வேண்டும்" என்றான்.
"ஆமாம் அன்பரே ! ஆமாம் ! ஆமாம் !
அருமை மகளுக்கு அழகா யிருக்கும்.
ஆமாம் உங்கள் அன்பே அன்பு !
உங்களைப் போன்ற உயர்ந்த துணைவர்
இருக்கும் போதெனக் கென்ன குறைச்சல் ?
கவலையை மறந்து காலம் தள்ளலாம்"
என்று துடித்து எல்லாம் மறந்து
கலகல வென்று கமலம் சிரித்தாள்.
"ஆமாம் எனக்கும் அதுதான் ஆசை.
அருகில் இருந்து ஆனதைச் செய்து,
கமலம் ! உன்னுடைக் கவலைகள் நீங்கத்
துணையா யிருந்து தொண்டு புரிவதே
பாக்கியம் எனக்கு. பலமுறை தொழுவேன்.
இந்த வரத்தைத் தந்திட வேண்டும்.
கமலம் ! உன்னைநான் காதலிக் கின்றேன்"
என்று வணங்கி இருகரம் கூப்பி
மீனாட்சி சுந்தரம் மெல்ல நெருங்கிக்
கமலாம் பாளின் கையைப் பிடித்தான்.
கொள்ளிக் கட்டை குத்தின தென்னத்
தீண்டிய கையைத் தீயென விலக்கி,
நகைகள் பெட்டியை நழுவப் போட்டு,
பின்னாற் சென்று பெருமூச்சு வாங்கி,
பரக்க விழித்து, நடிகனைப் பார்த்து,

கண்கள் இருண்டு, கறகற வென்று
மாடியும் கூடமும் மற்றுள எல்லாம்
சுழல்வது போன்ற மயக்கம் தோன்றி,
விழுந்து விடுவதை விலக்கிக் கொள்ள
அருகில் இருந்த ஆசனம் ஒன்றைக்
கைகளால் பிடித்துக் கவிழ்ந்து நின்றாள்.
எங்கெங் கேயோ எண்ணம் பறந்து
கலியா ணத்தையும் கருதிடும் முன்னால்
ஏரிக் கரையில் எதிரே யிருந்த
மாதவன் வடிவம் மனக்கண் முன்வர,
தன்னிலை யுணர்ந்து, தைரியம் வந்து,
நிமிர்ந்து நின்று, நேரே யிருந்த,
நடிகனைப் பார்த்து "நம்பிக்கை மோசமா ?
இதற்குத் தானா இத்தனை சூதும் ?
போதும், ஒத்திகை போதும்" என்று
வெளியே போய்விட விருப்பங் கொண்டு
கதவின் பக்கமாய்க் கமலம் போனாள்.
நறுக்கென நடிகன் குறுக்கே பாய்ந்து,
"சூதுகள் என்ன சுந்தரக் குயிலே !
கமலம் ! கண்ணே ! மணியே" என்று
பலவந்த மாகக் கையைப் பற்றினான்.

# நேர்ந்த ஆபத்து

மாதவன் வசித்த மனையின் மாடியில்,
அலங்காரம் மிகுந்த அதனுடை அறையில்,
மினுமினுப் பாகிய மேஜையின் அருகில்,
மின்சார விசிறி வேகமாய்ச் சுழல,
சீவி விடாத சிகையின் கற்றை
விசிறியின் போக்கில் விட்டுவிட் டாட,
வேலைக் காரர்கள் விட்டுப் போயின
காலை உணவுகள் காய்ந்து போக,
கோப்பையி லிருந்த காப்பிப் பானம்
ஆடை படர்ந்து ஆறிக் கிடக்க,
கையில் இருந்த கணக்குப் புத்தகம்
மடியில் கவிழ்ந்து கிடந்து மடங்க,
பின்புற மாக விரல்களைப் பின்னித்
தலையைக் கைகளில் தாங்கிக் கொண்டு
முகட்டைப் பார்த்து விழித்த வண்ணம்
சாய்வுநாற் காலியில் சாய்ந்த படியே
பட்டண வாழ்வின் பலன்களை எண்ணி
நெஞ்சு குழம்பிய நிலையில் இருந்தான்.
அம்புஜத் தின்மேல் வைத்த ஆசையும்
பலிக்கா தென்பதைப் பார்த்த பின்னர்,
'ஆசையைக் காட்டி மோசமே செய்து
எல்லாப் பெண்களும் ஏய்க்கி றார்களே !
பெண்களை நம்புதல் பெரும்பிழை யாகும்.
அவர்களைப் பற்றிய ஆசை முற்றும்

தொலைத்து விடுவதே துன்பம் விடுவதாம்'
என்னும் ஒருபுது எண்ணம் உதித்து,
காம விகாரக் கட்டுத் தளர்ந்து,
மாச்சரி யத்தின் முனையும் மழுங்கி,
கணக்குப் பார்க்கக் காரணம் தோன்றி,
சினிமாத் தொழிலின் செலவும் வரவும்
எவ்வள வென்றும் எண்ணமே யின்றி
இதுநாள் வரையிலும் இருந்த மாதவன்,
பெண்களைப் பற்றிய பித்தா சையினால்
நடிகன் சொன்னது எதையும் நம்பிச்
செலவே இதுவரை செய்ததைத் தவிர
வரவுக்கு ஒன்றும் வழியில் லாமல்
ஊரில் இருந்த ரொக்கம் ஒழிந்து,
நிலங்களை விற்கும் நிலைமை நேர்ந்து
பணமும் கிடைப்பது பஞ்சமாய் விடவே
சினிமா வேலையும் சென்னை வாசமும்
புளித்துப் போகிற உணர்ச்சி புகுந்து,
கல்வியில் ஆசையும் கலைகளில் ஆர்வமும்
சாது சங்கமும் சன்மார்க்க வாழ்வும்
சமரச எண்ணமும் சத்திய நோக்கமும்
பொதுஜன சேவையும் புண்ணிய முயற்சியும்
தெய்வ நினைப்பும் தேச பக்தியும்
சுசிகர ஒழுக்கச் சுதந்தர வாஞ்சையும்
ஆண்மையும் வீரமும் அன்பும் அருளுமே
வாழ்வின் நோக்கமாய் வளர்ந்த மாதவன்
ராகவன் இழைத்த ரகசியப் பிழையின்
மாச்சரி யத்தால் மனைவியைத் துறந்து,
வீட்டையும் மறந்து, ஊரையும் விட்டு,
காலித் தனம்போல் கேலிக் கிடமாய்



அலைந்து திரிந்து அவமதிப் புற்று
ஓடிய தெல்லாம் ஓய்ந்தவன் போல,
மாடியில் அப்படி மயங்கி இருக்கையில்
வேலையாள் ஒருவன் வேகமாய் வந்து
கடிதம் ஒன்றைக் கையிற் கொடுத்தான்.
வாங்கிப் பிரித்து வாசிக்க, அதனுள்
"அபாயம் ! அவசரம் ! அபாயம் ! அவசரம் !
மாதவா ! உன்னுடை மானமே போகுது !
ஸ்டுடியோ வுக்குநீ ஓடுவாய் உடனே.
சுருக்காய்ச் சென்று மீனாட்சி சுந்தரன்
என்ன செய்கிறான் என்பதைப் போய்ப்பார்.
நிமிஷம் தவறினால் மரணமும் நேரலாம்.
பழியும் பாவமும் உன்னையே பற்றும்,
புறப்படு மாதவா ! போநீ உடனே.
அடியேன் துறவி அன்பா னந்தன்"
என்பது மட்டும் எழுதி யிருந்தது.
அன்பா னந்தரை மாதவன் அறியான்.
பெயரை மட்டும் பிறர்வாய் மொழியால்
பலமுறை கேட்டுப் பரிச்சயம் உண்டு.
விவரம் ஒன்றும் விளங்க வில்லை.
என்னும் மாதவன் உடனே எழுந்து
துறவியைக் காணத் துடிதுடித் தோடி
மளமள வென்று மாடிவிட் டிறங்கி
வாசல் வரையிலும் வந்தான். ஆனால்
அன்பா னந்தரை அங்கே கண்டிலன்.
"கொண்டுவந் திதனைக் கொடுத்தது யார் ?" என
வேலைக் காரனை வேகமாய்க் கேட்டான்.
"அம்மாள் யாரோ அதனைத் தந்தார்."
"அம்மாள் தந்ததா ! ஆண்பிள்ளை அல்லவா !

எங்கே அம்மாள் ?" என்றான் மாதவன்.
"இங்குதான் இருந்தார். எங்கோ காணோம் ;
போய்விட் டார்கள் போலத் தோன்றுது."
அந்தப் பேச்சை அத்துடன் விட்டு,
ஸ்டுடியோ வுக்குச் சுருக்காய்ப் போகத்
தன்னுடை மோட்டார் தங்கி யிருக்கும்
காடிகா னாவில் கதவைப் பார்க்க
பூட்டி யிருந்தது. ஓட்டுவோன் இல்லை.
தானே ஓட்டச் சாவியும் இல்லை.
'அபாயம் அவசரம்' அவற்றை நினைத்து
நடிகனைப் பார்க்க நடந்தே போனான்.

✣ ✣ ✣

காவற் காரன் கதவைத் திறக்க
மறுத்து விட்டபின், மாதவன் மனைவியை
நாடிப் போன துறவியும் நங்கையும்,
மோட்டார் வண்டியை வேகமாய் முடுக்கி
மாதவன் வசிக்கும் மனையின் அருகில்
சாலையில் அங்கொரு மூலையில் நிறுத்தி
வெளியே போகும் வேளையில் எல்லாம்
சரஸ்வதி அம்மாள் தன்னுடன் கூடவே
கையில் வைத்துள பையில் இருந்த
காகிதம் பேனா 'கவரும்' எடுத்துக்
கடிதம் அதனைக் கவனமாய் எழுதி
சரஸ்வதி யம்மாள் கையில் தந்து,
"நேரிற் கண்டால் நேரம் போகும்.
விவரம் சொல்ல விவாதம் நேரும்.
கடிதம் இதனைக் கண்டாற் போதும்.
உடனே மாதவர் ஓடுவார் அங்கே.
நீங்கள் கொண்டுபோய் நேரில் தராமல்



அங்கே யிருக்கும் யாரிட மாவது
அவசரம் சொல்லி அனுப்பி விட்டால்
காரியம் உடனே கைகூடும்" என்றார்.
உடனே சரஸ்வதி இறங்கி ஓடி
மதிலைக் கடந்து மனையின் வாசலில்
வெளியில் நின்றஒர் வேலைக் காரனை
அவசரம் என்று அழைத்துக் கொடுத்து,
திரும்பி வந்து தெருவில் ஒதுங்கி,
கடிதப் பலனைக் கவனிக்க நின்றாள்.
அன்பா னந்தர் அடிக்கடி சொல்லிய
மாதவன் பெயரை மட்டும் சரஸ்வதி
அறிவாள் ; ஆனால் அவனைப் பார்த்திலள்.
கேள்வியால் அறிந்த கெம்பீர மாகிய
வடிவுள்ள ஒருவர் வாசலில் வந்து
வேலைக் காரனை வினவிய விதத்தில்
அவர்தான் என்பதை அனுமா னித்து,
பார்த்த உடனே பதைபதைத் தோடி
அடையா ளங்கள் அனைத்தும் சொல்லி
அன்பா னந்தருக் கறியப் படுத்தினாள்.
"ஆமாம், ஆமாம் ; அவர்தான் மாதவன்
அழகான மோட்டார் அவரிடம் உண்டு.
வருவார் மாதவன் அவருடை வண்டியில்.
முன்னாற் போவோம் ; பின்னால் வரட்டும்.
கூடவே போனால் குற்றம் நேரலாம்.
காவற் காரன் நம்மைக் கண்டால்
சந்தே கிக்கலாம் சாக்குப் போக்குகள்
சொல்ல நினைத்துச் சூதுகள் நேரலாம்.
முன்னாற் சென்றொரு மூலையில் இருப்போம்.
மற்றவை யெல்லாம் மாதவன் வேலை.

கமலம் பெருமையைக் காத்தால் போதும்"
என்றார் அடிகள் ; இசைந்தாள் சரஸ்வதி.
மாதவன் ஸ்டுடியோ வருவதன் முன்னால்
அங்கே போயினர், வாசலுக் கப்பால்
காவற் காரன் கண்ணிற் படாமல்
மறைவில் நிறுத்தி, மாதவன் வரவை
எதிர்பார்த் தவராய்த் துடிதுடித் திருக்க,
வண்டியில் லாமல் மாதவன் வந்தான்.
பார்த்த சரஸ்வதி பரிதா பித்தாள்.
அதனை அறிந்த அன்பா னந்தர்,
"இங்கே யேநாம் இருந்து பார்ப்போம் ;
வெளியில் இறங்க வேண்டா" என்றார்.
வாசலின் அருகில் வந்தான் மாதவன்.
காவற் காரன் கண்டான் அவனை.
'இன்றைக்கு மட்டும் எவரா னாலும்
உள்ளே போவது ஒண்ணாது' என்பது
மற்றவர்க் காகும், மாதவ னுக்குமா ?
ஸ்டுடியோ விற்கே சொந்தக் காரன்,
முதலாளி யிடத்தில் சொல்ல முடியுமா ?
மாதவன் இப்படி வரலாம் என்பதை
மிகவும் தந்திரன் மீனாட்சி கூட
எள்ளள வேனும் எதிர்பார்க் கவில்லை.
குனிந்து குழைந்து கும்பிடு போட்டுக்
காவற் காரன் கதவைத் திறந்தான்.
உள்ளே போனதும் ஓட்ட மாய் நடந்து,
ஸ்டுடியோ மனையைச் சுற்றிக் கொண்டு
மீனாட்சி வசிக்கும் வீட்டை யடைந்து,
தாழிட் டிருந்த கதவைத் தட்டினான்.
உள்ளே யிருந்து ஓட்ட மாய் வந்த



சமையற் காரன் சன்னலிற் பார்த்து,
எஜமான் என்கிற எண்ணம் வந்து
தடுத்துப் பேசத் தைரிய மின்றி,
மிகவும் கவனிக்க மீனாட்சி சொல்லிய
எச்சரிக் கைகளை எல்லாம் மறந்து,
கதவைத் திறந்து கைகட்டி நின்றான்.
உள்ளே புகுந்து உற்றுப் பார்த்து,
"எங்கே இருக்கிறார் ?" என்றான் மாதவன்.
"மேலே" என்று மெதுவாய்ச் சொன்னான்.
என்றதைக் கேட்டதும் எட்டி நடந்து
மாடிப் படிகளை நாடி விரைந்தான்.
'மாதவா உன்னுடை மானமே போகுது'
என்பதைப் பற்றியே எண்ணிக் கொண்டு
வெறியனைப் போல வந்த வேகத்தில்
மாடிப் படிக்குப் பக்கமாய் வருமுன்,
வழியில் ஒருபுறம் வைக்கப் பட்டுள்ள
சிறியஓர் மேஜைமேல் சிங்கார மாகப்
புதியதாய்ப் பறித்த இலைகளும் புஷ்பமும்
செருகிவைத் திருந்த சுந்தர மாகிய
கண்ணாடி ஜாடிமேல் கைபட, சாய்ந்து
உருண்டு தரையில் விழுந்து உடைந்து,
கேட்டவர் அஞ்சும் ஓசை கேட்டது.

✤ ✤ ✤

வெளியே போய்விட விருப்பம் வந்து
கமலம் கதவைக் கடக்கு முன்னால்
நடிகன் குறுக்கே நறுக்கெனப் பாய்ந்து
பலாத்கா ரமாகக் கைகளைப் பற்றி,
ஆசை மொழிகள் அநேகம் சொல்லி
காம விகாரக் குணமெலாம் காட்டி
கெஞ்சிப் பார்த்து மிஞ்சிய பின்னர்,

கட்டித் தழுவக் கைகளை இழுத்தான்,
கைகளை இழுத்த அந்தக் கணத்தில்
சாடி உடைந்த சத்தம் கேட்டது.
ஓசை கேட்டதும் உள்ளம் திடுக்குறப்
பிடித்த கைகளின் பிடியை விடாமல்
கதவின் பக்கமாய்க் காது கொடுத்து
நடிகன் சற்றே நலிந்து நின்றான்.
அபயம் கொடுக்கும் அறிகுறி போன்று
சத்தம் கேட்டதும் சக்தி மிகுந்து,
காலம் கருதிய கமலாம் பாளும்
பிடிபட்ட கைகளைப் பிடுங்கிக் கொண்டு
பின்னும் அவனிடம் பிடிபடா திருக்க
முன்னால் பார்த்தே பின்னால் ஓடி,
படிகளில் வைத்த பாதம் தவறிப்
பிடிப்பில் லாமல் பின்புறம் சாய்ந்து,
மச்சுப் படிகளில் மலக்க விழுந்து
கடமுட கடவெனக் கமலம் உருண்டாள்.
மங்கை உருளவும் மாதவன் வரவும்,
சமயம் மிகவும் சரியாய் நேர்ந்தது.

✤ ✤ ✤

உருத்தெரி யாமல் உருண்ட உருவம்
பெண்ணெனக் கண்டு துண்ணெனத் துடித்துத்
தாங்கிப் பிடிக்கத் தாவினான் மாதவன்.
மாதவன் தொடுமுன் மச்சுப் படிகளைத்
தாண்டி உருண்டு தரையில் விழுந்து
கமலம் குப்புறக் கவிழ்ந்து விட்டாள்.
கவிழ்ந்த முகத்தை அவிழ்ந்த கூந்தல்
சுற்றிக் கொண்டதால் முற்றிலும் மறைக்க,
ஆட்டமோ அசைவோ அவஸ்தையும் அற்று



மூச்சோ பேச்சோ முணுமுணுப் பின்றி,
மூட்டையைப் போல முன்னாற் கிடந்த
உயிர்போ னதுபோல் உருவம் அதனைப்
பார்த்துப் பதைத்துப் பரிதா பத்துடன்
தூக்கி எடுக்கத் தலையைத் தொட்டான்.
தொட்ட இடத்தில் துருதுரு என்று
பாய்ந்த ரத்தம் கையிற் பட்டது.
தேள்கடித் தாற்போல் திடுக்கிட் டவனாய்த்
தலையை முற்றிலும் தடவிப் பார்த்துக்
காயம் பட்டதைக் கையால் உணர்ந்து,
அதனைப் பலமாய் அழுத்திக் கொண்டு,
சமையற் காரனைச் சத்தமாய் அழைத்து,
அவசர வைத்தியம் அறிந்ததைச் செய்து,
ரத்தம் போவதைச் சுத்தமாய் நிறுத்தி,
வைத்தியர் ஒருவரை வருவிக்க எண்ணி
வருகிற வரைக்கும் படுக்க வைத்திட
மெத்தையை விரிக்க உத்தர விட்டு,
மூச்சைப் பார்க்க முகத்தைத் திருப்ப,
மனக்கண் விட்டு மறையா திருக்கும்
கமலம் முகத்தைக் கண்டதும் மாதவன்,
"கமலமா ! ஐயோ !" என்று கத்தினான்.
மாச்சரி யத்தையும் மறந்தவ னாகி
அணைத்துத் தூக்கி அலுங்கா தெடுத்து,
மெத்தையிற் கொண்டுபோய் மெதுவாய்க் கிடத்தி
குளிர்ந்த நீரில் குட்டையை நனைத்து
முகத்தை நன்றாய் முற்றும் துடைத்து,
உயிர்ப்புத் துடிப்பை உற்றுப் பார்க்க,
சிறுகச் சிறுக, திணறித் திணறி,
முக்கிக் கொண்டு மூச்சு வருவதும்,

நீண்ட நேரம் நின்று விடுவதும்
அபாயக் குறிகளாய் இருப்பதை அறிந்து,
கைகால் பதறக் கவலை மிகுந்து,
விட்டுப் போய்வர வேதனை யுற்று,
பக்கத்தி லிருந்த பையனைப் பார்த்துக்
காவற் காரக் காளியைக் கூப்பிட
உத்தர விட்டான் ஓடினான் பையன்.
காவற் காரக் காளியும் வந்தான்.
"ஸ்டுடியோ காரில் சுருக்காய்ச் சென்று
நம்முடை டாக்டர் நாரா யணரை
நான்சொன் னதாக நன்றாய்ச் சொல்லி
அவசரம் என்று அழைத்துக் கொண்டுவா ;
நிமிஷம் கூட நிற்கத் தகாது."

✤ ✤ ✤

மீனாட்சி சுந்தரன் மிகவும் கோழை
பெண்களை ஏய்ப்பதில் பெரிய சமர்த்தன் ;
ஆண்மை என்பதைச் சிறிதும் அறியான்.
கமலம் விழுந்தபின் கதவின் மறைவில்
மீனாட்சி சுந்தரம் மேலே யிருந்தே
சத்தம் கேட்டதன் சந்தே கத்தால்
வந்தது யாரென மறைந்து பார்த்து,
மாதவன் வந்ததும், விழுந்த மங்கையை
அறிந்தவன் போல அதிசயப் பட்டுக்
'கமலம் ! ஐயோ' என்றதும் கண்டு
பயந்து நடுங்கிப் பதுங்கி ஒடுங்கி,
கமலாம் பாளின் கையி லிருந்து
கீழே விழுந்த அங்கே கிடந்த
வயிர நகைகளை வாரிக் கொண்டு,
மற்றொரு வழியாய் மாடியை விட்டு



இறங்கிச் சென்று, மோட்டாரில் ஏறி
வெளியே எங்கோ வேகமாய் ஓடினான்.
வீதியில், போகிற பாதையில் இருந்த
அன்பா னந்தரும் சரஸ்வதி அவரும்
நடிகன் போவதை நன்றாய்ப் பார்த்து,
தனியே போகிற தன்மையைக் கண்டு,
அவர்கள் இருவரும் அதிசயப் பட்டுச்
சண்டையோ என்றும் சந்தே கித்தனர்.
நடிகன் போனபின், நாலைந்து விநாடி
கழிவதற் குள்ளே காவற் காரனும்
வேகமாய் வந்து வெளியே நின்று
நாலா பக்கமும் நன்றாய்ப் பார்த்து
இவர்கள் மோட்டார் இருந்ததைக் கண்டு
ஓட்டமாய் வந்து உள்ளே பார்த்து,
அன்பா னந்தரை அறிந்து கொண்டு
வணங்கி நின்று வார்த்தை குளற
"அம்மா யாரோ அபாயம் நேர்ந்து
பேச்சுமூச் சில்லை, பிணம்போல் கிடக்குது.
வைத்தியர் வேணுமாம், வண்டியைக் காணோம்
கொஞ்சம் வண்டியைக் கொடுங்கள் சாமி"
என்றான். கேட்ட இருவரும் துடித்து,
"என்ன அபாயம் ?" என்றனர் பயந்து.
"விவரம் அறியேன் ; வேளை போகுதே !
வைத்தியர் வேணுமே ; வண்டி இல்லையே"
என்பதன் முன்னால், ஏறு வண்டியில்,
வைத்தியர் மனைக்கு வருகிறோம் நாங்கள்"
என்றார் துறவி, ஏறினான் அவனும்.
வைத்தியர் மனைக்குப் பறந்தது வண்டி

✤ ✤ ✤

கருணை என்கிற காரணத் தாலும்
யாருக் காயினும் அபாயம் என்றால்
ஓடி உதவும் உயர்குணத் தாலும்,
பற்றற்ற போதும் பழமைபா ராட்டும்
சுற்றம் நெருங்கிய சொந்தத் தாலும்,
அழகையே விரும்பி அவளையே எண்ணி
மயங்கி இருந்த மர்மத் தாலும்,
மற்றதை யெல்லாம் மறந்தவ னாகிக்
கமலாம் பாளின் கதியைக் கண்டு
உள்ளம் வெதும்பி, உணர்வு கலங்கி,
மரணம் நேருமோ என்றும் மருண்டு,
அச்சம் உதித்து, ஆற்றல் தளர்ந்து,
துக்கம் குமுறிக் கண்ணீர் துளித்து,
மாதவன் மிகவும் வேதனை யுற்றான்.
அருகில் போட்டொரு ஆசனத் தமர்ந்து,
கமலாம் பாளையே கண்கொட் டாமல்
பார்த்துப் பார்த்துப் பதைத்தான் எனினும்,
இங்கே எப்படி இவள்வர நேர்ந்தது ?
பெண்கள் சிக்கினால் பேய்போல் பிடித்து
அடுத்துக் கெடுக்கும் ஆசாமி யாகும்
இவனிடம் இவளுக்கு இங்கென்ன வேலை ?
இஷ்டமில் லாமலா இங்கே வருவாள் ?
என்ன நடந்ததோ, எப்படி விழுந்தாள் ?
தவறி விழுந்ததோ, தள்ளி நிகழ்ந்ததோ
ஊரை விட்டே ஓடிப் போனவள்
இப்படி இங்கே எப்படி வந்தாள் ?
குழந்தை எங்கே ? கூட்டிச் சென்றவன்
ராகவன் எங்கே ? நகைகளைக் காணோம் ?
உறிஞ்சிக் கொண்டு ஓட்டிவிட் டானோ ?



சோற்றுக்கு மின்றிச் சுற்றி யலைந்து
சினிமா வேலையில் சேர்ந்துவிட் டாளோ !'
என்றென் றெல்லாம் பலவிதம் எண்ணி,
விருப்பும் வெறுப்பும் வியப்பும் திகைப்பும்
ஒன்றுவிட் டொன்றுவந் துயிரை வதைக்க,
மேலே யிருக்கும் மீனாட்சி சுந்தரன்
நடிகனைக் கேட்க ஞாபகம் வந்தும்
மனைவியென் றெண்ணும் மானம் குத்த
அவனுடன் பேசவும் ஆசையில் லாமல்
வைத்தியர் வரவை வழிபார்த் திருந்தான்.
சரஸ்வதி யம்மாள், டாக்டர், சாமியார்
மூவரும் வந்த மோட்டார் வண்டியும்
வாசலின் முன்னால் வந்து நின்றது.
காவற் காரக் காளியின் பேச்சால்
கமலம் தலையில் காயம் என்பதை
அறிந்த உடனே அவஸ்தை தொடங்கி
வழியில் நெடுகத் தவித்து வந்த
சரஸ்வதி யம்மாள், தாவிக் குதித்து
முதலில் இறங்கி முன்னால் ஓடிக்
கமலம் கிடந்த நிலைமையைக் கண்டு
"ஐயோ ! கமலம் ஐயோ" என்று
வாய்விட் டலறி, கண்ணீர் வடித்து,
அருகிற் பாய்ந்து அரற்றத் தொடங்க,
டாக்டர் அவளைத் தடுத்துப் பேசி
விலகி யிருந்திட வேண்டிக் கொண்டார்.
சகிக்க ஒண்ணாச் சங்கடத் தோடு
அழுவதை நிறுத்தி அப்பாற் சென்று
சரஸ்வதி சுவரில் சாய்ந்து விட்டாள்.
நாரா யணன்வெகு நல்ல வைத்தியர்.

சீமையிற் படித்த சிறந்த நிபுணர்.
கால்மணி நேரம் மிகவும் கவனமாய்ப்
பலவித மாகப் பரிசோ தித்தபின்,
பரபரப் பாகப் பையைத் திறந்து
ஊசி மருந்தை உடலிற் செலுத்தி,
"மண்டையின் அடியால் மூளையில் மப்பு
மூச்சுத் திணறும் முக்கிய காரணம்
அள்ளையில் விழுந்த பலமான அடிதான்.
ஈரற் குலையின் ரணமும் இருக்கலாம்.
அடியின் பலத்தால் அள்ளைப் புறத்தில்
ஒன்றிரண் டெலும்பு ஒடிந்தி ருக்குமோ
என்றும் நினைக்க இடமிருக் கின்றது.
அபாய நிலைதான் ; ஆஸ்பத் திரிக்குக்
கொண்டபோ னால்தான் குறிப்பாய்த் தெரியும்.
'எக்ஸ்ரே' படம்எடுத் தாக வேண்டும்.
உடனே அசைத்தால் உயிருக் கபாயம்.
அரைமணி நேரம் அமைதியா யிருந்தால்
குத்தின மருந்து குணமுண் டாக்கித்
திணறும் மூச்சுத் தெளிவுறு மானால்
அதற்குப் பிறகே அபாயம் குறையும்.
பொறுப்போம், ஒருமணி போகட்டும்" என்றார்.
எட்டவே இருந்து எல்லாம் அறிந்த
அன்பா னந்தர், அதனைக் கேட்டு
விசனம் மிகுந்து, வெளியே சென்று
வாசலில் நின்ற மோட்டார் வண்டியில்
அமைதிக் காக அதனுள் அமர்ந்தார்.
மாதவன் மீண்டும் வேதனை யுற்றான்.
சரஸ்வதி யம்மாள் சாய்ந்த படியே
குமுறிக் கொண்டு குலைந்து நின்றாள்.

✤ ✤ ✤



அரைமணி நேரம் ஆனபிற் பாடு,
கமலாம் பாளின் கைகால் அசைந்து
அழுகை போல அரற்றத் தொடங்கி
முன்னிலும் நன்றாய் மூச்சு வாங்கினாள்.
வைத்தியர் முகத்தில் களிப்பு வந்தது.
மாதவன் வதனம் மலர்ச்சி கொண்டது.
சரஸ்வதி யம்மாள் சங்கடம் குறைந்து
அழுவதை விட்டு ஆவலாய்ப் பார்த்தாள்.
மீண்டும் டாக்டர் மிகவும் கருத்தாய்ப்
பரிசோ தனைகள் மிகவும் பார்த்து,
"அபாய நிலைமை அதிகமா யில்லை.
இன்னும் அரைமணி இளைப்பாறி விட்டால்
பயமில் லாமல் பயணம் போகலாம்.
வேறொரு மோட்டார் வண்டிதான் வேண்டும்.
நாங்கள் வந்ததும் நல்ல வண்டிதான்.
ஆயினும் அதுமிக அகலக் குறைவு ;
படுக்கப் போடப் பத்தாது" என்றார்.
அதனைக் கேட்டு அதிசயப் பட்டு,
"சினிமா வண்டியா சின்னது என்றீர் ?
அதைவிடப் பெரியது யாரிடம் உண்டு ?"
என்றான் மாதவன். இதனைக் கேட்ட
காவற் காரன் கதையைச் சொன்னான்.
மீனாட்சி சுந்தரம் மேலே இருப்பதாய்
இதுநே ரம்வரை எண்ணி யிருந்ததால்,
மற்றொரு வழியாய் மாடிவிட் டிறங்கிச்
சினிமா வண்டியில் தனியே சென்றதை
அறிந்து மாதவன் அதிசய முற்றான்.
என்னுடை வண்டியை எடுத்து வருகிறேன்.
அழகான வண்டி, ஆட்டம் இராது,

படுக்க வைக்கவும் பஞ்சுபோல் இருக்கும்.
கொண்டு வரட்டுமா ?" என்றான் குதித்து.
உடனே டாக்டர் ஒத்துக் கொண்டார்.
வண்டியைக் கொண்டு வருவதற் காக
வேறுள நினைவுகள் எல்லாம் விட்டு
வேகமாய் மாதவன் வெளியே போனான்.
வாசலில் இருந்த வண்டியைப் பார்த்தான்.
அவசர நினைப்பில் அதனுள் ளிருந்த
அன்பா னந்தரை அவன்பார்க்க வில்லை.
வேகமாய் மாதவன் வெளியே போவதைச்
சாமியார் பார்த்துச் சலனம் அடைந்து
உடனே இறங்கி உள்ளே ஓடினார்.
கமலம் நிலைமையைக் கண்டு மகிழ்ந்து
அபாயம் நீங்கின ஆனந்த முற்று,
தனியே அழைத்துச் சரஸ்வதி யிடத்தில்
"அவசர மாகிய மடத்து! அலுவலை
விட்டோடி வந்தேன் ; விரைவிற் சென்று
கவனித்து விட்டுக் கால்மணிக் குள்ளே
ஆஸ்பத் திரிக்கு அவசியம் வருவேன்.
அம்மா ளுக்கினி அபாயம் இல்லை.
ஆஸ்பத் திரிக்கு அவருடன் சென்று
இணைபிரி யாமல் இருந்திட வேண்டும்.
அருகில் நீங்கள் இருப்பதை அறிந்தால்
கமலம் துன்பம் கடுமை குறையும்.
கூடிய சீக்கிரம் குணமடைந் திடுவார்.
மற்றதை யெல்லாம் மாதவன் செய்வார்.
அவசர வேலை அனுமதி கொடுங்கள்.
ஆஸ்பத் திரியில் அப்புறம் பார்ப்போம்"
என்றார். சரஸ்வதி ஏற்றுக் கொண்டாள்.

# இருள் நீங்கியது

ஆஸ்பத் திரியில் அவளைச் சேர்த்துச்
சிறந்த வைத்தியம் செய்தும், சிலநாள்
கமலம் மிகவும் கஷ்டப் பட்டாள்.
மூன்றுநாள் கழித்தே கண்ணை விழித்தாள்.
முழித்துப் பார்ப்பதும் முன்னால் நிற்கும்
ஆள்அடை யாளம் அறிவதா யில்லை.
விழித்துப் பார்ப்பதும், மூடிக் கொள்வதும்,
திருப்பித் திருப்பி அதையே செய்வதும்,
விழிப்பது கொஞ்சம் மூடுதல் அதிகமாய்
இப்படி இரண்டுநாள் முழுவதும் இருந்தாள்.
அதற்குப் பின்னால், அகல விழித்து
அங்கும் இங்கும் அதையும் இதையும்
பார்த்துப் பார்த்துப் பயந்தவள் போலக்
கைகால் நடுங்கக் கண்ணை மூடுவாள்.
பேச்சே யில்லை. பிறர்பே சினாலும்
பார்ப்பதைத் தவிரப் பதிலே யில்லை.
அறிவோ சுரணையோ அரற்றலு மில்லை.
இந்தப் படியாய் ஏழுநாள் இருந்தாள்.
நிபுணர்கள் கூடி நிதான மாகப்
பற்பல விதமாய்ப் பரிசோ தித்து,
பெரிய டாக்டர் பேசிய பேச்சில்,
"மண்டையில் பட்ட மகத்தான அடியால்
மூளை நரம்புகள் முற்றிலும் கலங்கி
அறியும் சக்திகள் அற்றுப் போயின.

சிறுகச் சிறுகச் சித்தம் தெளியும்.
ஈரற் குலையும், இதயத் துடிப்பும்,
நாடியின் ஓட்டமும் நன்றாக உள்ளன.
உயிருக் கபாயம் ஒன்றும் இராது,
அச்சப் படவே அவசியம் இல்லை.
கொஞ்சங் கொஞ்சமாய்க் குணப்படும்" என்றார்.
சரஸ்வதி யம்மாள் சலிப்பில் லாமல்
இரவும் பகலும் அருகில் இருந்து,
ஆஸ்பத் திரியில் அலுவல் பார்க்கும்
தாதிகள் கூடவே தானும் உழைத்து,
உபாத்தினி வேலை உத்தியோ கத்தில்
இரண்டு மாதம் ரஜாதான் எடுத்து,
கமலாம் பாளைக் கட்டிக் காத்தாள்.
அன்பா னந்தரும் அடிக்கடி வந்து
கமலம் நலத்தைக் கண்கா ணித்து,
சரஸ்வதி யிடத்தில் தனியே பேசி,
விருப்பம் எதையும் பொறுப்புடன் செய்வார்.
மாச்சரி யத்தை மறந்தவன் போல
மாதவன் குணத்தில் மாறுதல் தோன்றிக்
கமலம் நலத்தில் கவலை மிகுந்து
ஆஸ்பத் திரிக்கு அடிக்கடி வருவான் ;
வேண்டிய எதையும் விருப்புடன் செய்வான் ;
கமலம் இருந்த கட்டிலின் அருகில்
நின்று நின்று நெடுமூச் செறிவான் ;
கிட்டச் சென்று தொட்டுப் பார்த்து,
முன்னால் குனிந்து முகத்தை நீட்டி,
"கமலம் ! கமலம் ! கமலம் !" என்று
ஆசைக் குரலில் பலமுறை அழைப்பான் ;
தாதிக ளிடத்தில் தனியே பேசிக்



கமலம் நிலையைக் கருதிக் கேட்பான் ;
சேயைக் காக்கும் தாயைப் போலக்
கமலம் சுகத்தைக் கருதி உழைக்கும்
சரஸ்வதி யம்மாள் சற்குணம் கண்டு
மெச்சிப் புகழ்ந்து மிகவும் களிப்பான்.
'இவளும் கமலமும் எப்படி உறவு'
என்பதை மாதவன் இன்னும் அறியான்.
அறிந்து கொள்ளவோ மிகவும் ஆசை.
கேட்கத் தருணம் கிடைக்கவே இல்லை.
சொல்லத் தக்கவர் இல்லை எவரும்.
நடிகன் வீட்டில் சந்தித்த நாளில்,
பழகின மனிதர், பக்கத்தில் அங்கே
வீதியில் நேர்ந்து விஷயம் தெரிந்து
டாக்டரைக் கொணர மோட்டார் தந்தவர்
என்பதைத் தவிர எதையும் அறியான்.
வைத்தியர் வந்த வண்டியில் வந்து
எதிரில் வராமல் எட்டவே நின்று
கமலாம் பாளின் கதியைப் பார்த்து
விசனத் தோடும் வெளியே சென்று
வாசலில் இருந்த வண்டியில் அமர்ந்த
அன்பா னந்தர் அவரையும் கூட
நேரிற் பார்க்க நேராது போனதால்
சரஸ்வதி கமலம் சம்பந் தத்தை
மாதவன் அறிய மார்க்கமே இல்லை.
கமலாம் பாளைக் காத்து வருகிற
அன்பைப் பார்த்து அதிசயப் பட்டு
விசாரித் தறிய விருப்பங் கொண்டான்.
கமலம் நிலைமையில் மாறுதல் கண்டது.
பித்தியைப் போலப் பிதற்றிக் கொண்டு

அழவும் சிரிக்கவும் ஆரம் பித்தாள்.
முன்னால் நிற்பவர் முகமறி யாமல்
அறிவோ தெளிவோ அர்த்தமும் இன்றி
அரைகுறைச் சொற்களை அதிகம் பேசி
உருப்படி யின்றி உளறிக் கொண்டு
அப்படி இரண்டுநாள் அவதிப் பட்டாள்.
மறுநாள் அந்த நிலைமையும் மாறி
முழுதாய்ச் சொற்களை மொழியத் தொடங்கி,
அடையா ளங்கள் அறியா விடினும்
பேரைச் சொல்லிப் பேச லானாள்.
மாதவன் சரஸ்வதி இருவரும் மகிழ்ந்து
நீண்ட நேரம் அருகில் நின்று
உளறும் பேச்சை உற்றுக் கேட்டனர்.
கண்திறக் காமல் கமலம் பேசின
எத்தனை யோபல பேச்சின் இடையில்
"ஐயோ மகளே ! ஆற்றிலா போட்டேன் ?
எப்படிப் பிழைப்பாய் ? எவர்எடுப் பார்கள் ?
மகளே ! மகளே ! மகளே !" மௌனம்.
"நாதா ! நாதா ! நான்பெரும் பாவி !
ஐயோ, நாதா ! ஐயோ" அமைதி.
"காதலர் மனந்தான் கல்லாய்ப் போச்சே !
ராகவ ! உன்னை நான்மறப் பேனா ?
ஐயோ தெய்வமே" அதன்பின் அரற்றல்.
பேச்சுகள் நின்று பெருமூச்சு விட்டு
ஐந்தாறு நிமிஷம் அயர்ந்து விட்டாள்.
அருகில் மாதவன் அசையாது நின்று
கமலம் பேச்சில் கலக்க மடைந்து
இன்னும் கேட்க எதிர்பார்த் திருக்க,
கமலம் சட்டெனக் கண்ணை விழித்து,



முன்னால் நின்ற மாதவன் முகத்தை
உற்றுப் பார்த்து, உருட்டி விழித்து,
அடையா ளத்தை அறிந்தவள் போலச்
சினக்குறிப் போடு சீறிக் கொண்டு,
"இங்கேன் வந்தாய் ? எட்டிப் போநீ.
வேண்டா, வேண்டா, வெளியே போய்விடு.
முகத்திற் கூட முழிக்க மாட்டேன்"
என்று கமலம் இரைந்து, உடனே
கண்ணை மூடிக் களைத்தவள் போலப்
படுக்கையில் திரும்பிப் படுத்துக் கொண்டாள்.
பின்னும் கமலம் பேசுவாள் என்று
மற்றும் அரைமணி மாதவன் நின்றான்.
கமலம் அதன்மேற் கண்ணைத் திறந்திலள்.
உளறலும் கூட ஓய்ந்து விட்டது.
தூக்கம் போலத் தோற்ற மளித்தாள்.
அதற்குப் பிறகு அங்குநிற் காமல்
மாதவன் தன்னுடை மனைக்குச் சென்று
மாடியில் ஏறி மஞ்சத் தின்மேல்
பன்னிரண்டு நாளாய்ப் பட்ட பாட்டின்
அலுப்புத் தோன்றி அயர்ந்தவன் போலப்,
படுத்து விட்டான். பசியோ, தாகமோ,
உணவோ, பானமோ, ஒன்றுமில் லாமல்
கமலம் பேசின பேச்சையே கருதி
விசனத் தோடு விழுந்து கிடந்தான்.

✤ ✤ ✤

போதை குடித்துப் பேசும் போதும்,
தூக்க மயக்கில் சொல்லும் போதும்,
காய்ச்சல் வெறியில் கதறும் போதும்,
உடல்நல மின்றி உளறும் போதும்,

அடிபொறுக் காமல் அலறும் போதும்,
வெளியிற் சொல்ல வெட்கப் பட்டோ
அயலார் அறிவதை அஞ்சின தாலோ
மனிதர் தங்கள் மனதில் நெடுநாள்
மறைத்துக் காத்த மர்மங் களையும்
உளறி விடுவது உலக வழக்கம்.
அப்படிப் போல ஆஸ்பத் திரியில்
கமலம் பேசின கலக்கப் பேச்சில்
உள்ளத்தில் இருந்த உண்மை களையே
சொல்லிவிட் டாளெனச் சூசனை செய்து
'முகத்திற் கூட விழிக்க மாட்டேன்,
காதலர் மனந்தான் கல்லாய்ப் போச்சே
ராகவா ! உன்னை நான்மறப் பேனா'
என்பன வற்றையே பலமுறை எண்ணி
மாதவன் மீண்டும் மனக்கொதிப் புற்றான்.
அடிபட்டு விழுந்த அவளைக் கண்டு
'ராகவ னிடத்தில் ரகசியம் பேசி
ஊரை விட்டே ஓடிப் போனதன்'
மனஸ்தா பத்தையும் மறந்து விட்டு
மன்னித் திடவும் மனதில் நினைத்து
வருந்தி வருந்தி வைத்தியம் பார்த்த
பச்சாத் தாபமும் பறந்து விட்டது.
கமலாம் பாளின் கருத்து முழுவதும்
ராகவ னிடத்தில் லயித்து விட்டதால்
அவளை மீண்டும் அங்கீ கரிப்பதும்
வேதனை தருமென மாதவன் வெறுத்து
ஆஸ்பத் திரிக்கும் அவளைப் பார்க்கப்
போவதை அத்துடன் புறக்க ணித்தான்.
இரண்டுநாள் முழுதும் எட்டிப் பார்த்திலன்.

✤ ✤ ✤



மூன்றாம் நாளில் முதல்நினைப் பாக
'ஐயோ மகளே ஆற்றிலா போட்டேன் ?
எப்படிப் பிழைப்பாய் ? எவரெடுப் பார்கள் ?'
என்று கேட்டது எழுந்தது மனத்தில்.
மகளைப் பற்றிய நினைவே மறந்து
இதுநாள் வரையிலும் இருந்த மாதவன்
புதிதாய் மனதிற் புகுந்த கொதிப்பால்
மற்றவை ஒழிய மகளைப் பற்றியே
அதிகமாய் நினைத்து அவளைப் பற்றிய
விவரத்தை யாவது விசாரித் தறிய
சரஸ்வதி யைப்போய்ச் சந்திக்க எண்ணி
ஆசை உதித்து ஆஸ்பத் திரிக்கு
மோட்டார் வண்டியை ஓட்டச் சொல்லி,
வாசலுக் கருகில் வண்டியை நிறுத்தி
உள்ளே போகிற உத்தேச மின்றித்
தன்னுடை வரவைத் தனியே சொல்லி
சரஸ்வதி யவரைத் தன்னிடம் அழைக்க
வண்டிக் காரனை அனுப்பி வைத்தான்.
வண்டிக் காரனும் திரும்பி வந்து
சரஸ்வதி யம்மாள் சற்றுமுன் னேதான்
வீட்டுக் கென்னவோ வேலையாய்ப் போனதால்
தாதி யம்மாள் தகவல் சொன்னதை
அறியப் படுத்த, அதன்மேல் மாதவன்
வாத்தியா ரம்மாள் வசிக்கும் இடத்தை
அறிய முயன்றான். அறிந்தவர் யாரும்
அகப்பட வில்லை. ஆவோ சித்து
'மாதவா உன்னுடை மானமே போகுது'
என்பதைப் பரிவுடன் எழுதி யனுப்பிய
அன்பா னந்தரை அண்டிக் கேட்டால்

கமலாம் பாளின் கதைகளைப் பற்றியும்
மகளைப் பற்றிய உண்மையும் மற்ற
விவரம் முழுவதும் விளங்கலாம் என்று
அவருடைப் பெயரை அடிக்கடி கேட்டு
வேதாந்த மடத்தில் வேலை பார்ப்பவர்
என்பது ஞாபகம் இருந்தத னாலே
மடத்தின் இருப்பிடம் அறிந்த மாதவன்
இடத்தைச் சொல்லி உத்தர விட்டான்.
விரைவாய் ஓடி வெளியே நின்றது.
மாதவன் இறங்கி மடத்தில் நுழைந்தான்.
அன்பா னந்தர் அங்கே இல்லை.
இன்னொரு துறவி எதிர்ப்பட் டவரை
மாதவன் கேட்க மற்றவர் சொன்னார் :
"அன்பா னந்தரும் அவருடன் கூட
சந்திர சேகரன் சங்கரன் அவரும்
திருவொற்றி யூரின் தெற்கே வசிக்கும்
பழகிய ஒருவரைப் பார்த்து வருவதாய்க்
காலையிற் சென்றனர் மாலையில் வருவார்!"
'சங்கரன்' என்றதும் சங்கடம் உதித்து
சாரதா கணவன் சங்கரன் நினைப்பு
மாதவன் மனத்தில் தோன்றி மலைத்து
"சங்கரன் அவரும் சாமியார் தானா ?"
என்றான் மாதவன். "இல்லை, இல்லை,
வெளியூர்க் காரர் ; விருந்தாய் வந்தவர்.
சற்றுதூ ரத்தில் சாலையில் வசிக்கும்
தலைமை உபாத்தினி சரஸ்வதி யம்மாள்
அவர்க ளிடத்தில் அலுவலாய் வந்துளார்.
அன்பா னந்தரின் அன்பராய் விட்டதால்
இங்கே தங்கினார்" என்றார் துறவியும்.



அதனைக் கேட்டு அரைகுறை யாக
'வெளியூர்க் காரர் விருந்தாக வந்தவர்
'சங்கரன்' என்றதில் சந்தேக முற்று
'சரஸ்வதி யிடத்தில் சங்கர னுக்கு
என்ன அலுவலோ' என்பதை எண்ணி
கொஞ்சம் மாதவன் குழப்ப மடைந்து,
சாலையில் வசிக்கும் சரஸ்வதி என்றதன்
விலாசம் கேட்டு வெளியே சென்றான்.

✤ ✤ ✤

தலைமை உபாத்தினி என்ற தன்மையில்
தன்னுடை வீட்டில் தங்கிப் போயின
கல்விச் சாலையின் காகிதம் சிற்சில,
தஸ்தா வேஜைத் தானே பார்த்து
எடுத்துக் கொடுக்க ஏற்பட்டு விட்ட
அவசிய மாகிய அலுவலைப் பார்க்க
சரஸ்வதி யம்மாள் வைத்திய சாலையை
விட்டுக் கொஞ்சம் வீட்டு வரைக்கும்
போய்வர வேண்டிய கடமையிற் போனாள்.
கமலம் நிலைமை கலக்க மாகவே
அருகில் இருப்பது யாரா னாலும்
தெரிந்து கொள்ளும் தெளிவில் லாததால்
தாதிகள் பார்வையில் தனியே விட்டு
மனைக்கு போன வேளையில் மாதவன்
ஆஸ்பத் திரியில் அவளை அழைக்க
வண்டிக் காரனை அனுப்பி வைத்தது.

✤ ✤ ✤

பித்துப் போலக் கமலம் பேசின
வார்த்தை களினால் வருத்தம் வந்து
மாதவன் போனதன் மர்மம் அறிந்து

சரஸ்வதி மிகவும் சஞ்சல மடைந்து
கமலாம் பாளின் கதியைக் கருதி
இரண்டு நாளாய் மாதவன் இப்படி
வராது போனதில் வருத்தப் பட்டு
எண்ணிக் கொண்டே இருக்கும் பொழுது
மடத்தி லிருந்து வந்த மாதவன்
நேரே சரஸ்வதி முன்னால் நின்றான்.
பார்த்த சரஸ்வதி பரவசப் பட்டாள்.
வணக்கம் செய்து வரவேற் புரைத்து
அன்புகள் பேசி அமரச் சொன்னாள்.
மாதவன், தானும் மகிழ்ச்சி கூறி,
வரவேற் புக்கு வந்தனம் செய்து,
அமர்ந்து பேசும் அமைதியில் லாமல்
நின்ற படியே, நிதான மாகவே
"கமலாம் பாளிடம் இத்துணைக் கருணையாய்
உதவிகள் செய்யும் உங்க ளிடத்தில்
தனித்துப் பேசத் தருணமில் லாமல்
பதினைந்து நாளாய்ப் பதைத்துப் போனேன்.
உமக்குக் கமலம் எப்படி உறவு ?"
"பள்ளித் தோழிகள் ; பாலிய ஸ்நேகம் ;
பி.ஏ. படிப்பிலும் பிரியவே இல்லை.
உயர்தரக் கல்வியும் உபாத்தினிப் பட்டமும்
எனக்கு வந்தது எல்லாம் உங்கள்
கருணையால் எனக்குக் கமலம் தந்தது.
எல்.டி.பட்டம் எப்படி வந்தது ?
உங்கள் பணந்தான் உதவி செய்தது.
மறந்துவிட் டீர்களா ?" என்றாள் மங்கை.
"அந்தச் சரஸ்வதி அம்மாள் நீங்களா !
நேரில் பார்க்க நேரா ததனால்



மறந்து விட்டேன் ; மன்னிக்க வேணும்.
இங்கே கமலம் எப்போது வந்தாள் ?"
"மூன்று வருஷம் முடியப் போகுது."
"எங்கே இருந்து இங்கே வந்தாள் ?"
"ஊரில் இருந்தே வந்ததாய் உரைத்தாள்."
"அவளுடன் வந்த அவனெங்கு போனான் ?"
"வீரனா ? வீரன் விருந்தாளி யாகப்
பத்துநாள் இருந்து பட்டணம் பார்த்து
அதற்குப் பிறகு அவனூர் சென்றான்."
"வீரனா வந்தான் ? வேறாரும் இல்லையா ?
உள்ளதை நீங்கள் ஒளிக்கப் படாது.
இவளுடன் வந்த ராகவன் எங்கே ?"
சரஸ்வதி யம்மாள் சற்றே சிரித்து,
"ஒளிக்கத் தக்கது ஒன்றுமே இல்லை.
ராகவன் யாரோ, நான்பார்க் கவில்லை.
வீரன் என்னும் வேட்டுவக் காரன்
தூரப் பயணத் துணையாக வந்தான்.
அவனைத் தவிர்த்து யாரும் அவளுடன்
வரவே யில்லை, வாஸ்தவம்" என்றாள்.
"குழந்தை எங்கே ?" என்றான் குறிப்பாய்.
"குழந்தை இருக்கிறாள் குறைவில் லாமல்.
முத்துக் குமார முதலியார் வீட்டில்
பார்வதி யம்மாள் பராம ரிப்பில்
வளர்பிறை போல வளர்ந்து வருகிறாள்.
கவலை வேண்டா ; காணலாம்" என்றாள்.
" 'ஐயோ மகளே, ஆற்றிலா போட்டேன்'
என்று சொன்னதன் ரகசியம் என்ன ?"
"அதற்கு விளக்கம் அவள்தான் சொல்லலாம்.
குணப்பட்ட பிறகு கூறுவாள் கேட்போம்."

"ஒருநகை கூட உடம்பில் இல்லையே !
எங்கே நகைகள் ?" என்றான் மாதவன்
"அலங்கா ரங்களில் அருவருப் புற்று
ஆபர ணங்களை அணிய மறுத்தாள் ;
நகைகளை யெல்லாம் நாங்களே விற்றுப்
பணத்தை முழுவதும் பாங்கில் போட்டோம்."
"எல்லா நகையுமா ?" என்றான் மாதவன்.
"பச்சை மோதிரம் ஒன்றுதான் பாக்கி.
கலியா ணத்தில் காதல் பரிசாய்க்
கமலாம் பாளின் கையைப் பிடித்து
விரலில் நீங்களே போட்டு விட்டதாய்த்
தனியே அதனை என்னிடம் தந்து
பத்திர மாக வைக்கும் படியாய்க்
கமலம் எனக்குக் கட்டளை யிட்டாள்.
அடிக்கடி எடுத்து ஆசையாய்ப் பார்த்து
உங்களை நினைத்து உருகுவாள்" என்றாள்.
"எங்கே அந்த மோதிரம் ?" என்றான்.
"இதோ தருகிறேன்" என்று சரஸ்வதி
உடனே அடுத்த அறைக்குள் ஓடி
இரும்புப் பெட்டியை இமைப்பில் திறந்து,
அதனுள் ளிருந்த சிறிய அழகிய
சித்திரம் நிறைந்த சிற்பம் செதுக்கித்
தங்கம் பதித்த தந்தப் பெட்டியைக்
கொணர்ந்து மாதவன் கையிற் கொடுத்தாள்.
பெட்டியைத் திறந்து, பட்டுத் துணியில்
மூடி யிருந்த முடிப்பை எடுத்து
அவிழ்த்துப் பார்க்க, அதிலே அந்தக்
கணையாழி யோடு கடிதம் ஒன்றும்
பத்திரப் படுத்தி இருந்ததைப் பார்த்தான்.



காதல் பரிசாய்க் கருதப் பட்ட
முக்கிய மாகிய மோதிரத் தோடு
சேர்த்து வைக்கும் சிறப்புப் பெற்றுப்
பட்டுத் துணியில் பந்தனம் பண்ணின
அப்படிக் கடிதம் அதுவென்ன என்று
கடிதம் மாதவன் கருத்தைக் கவர,
பழகின எழுத்தாய் இருந்ததைப் பார்த்துப்
பழைய நினைவுகள் மனதிற் பாய்ந்து
பச்சை மோதிர இச்சையும் மறந்து
கடிதம் மட்டும் கையில் எடுத்து,
மற்றவை யெல்லாம் மாதிடம் தந்து,
உள்ளம் பதைக்க உடலம் சிலிர்க்க
வெளிச்சத் திற்போய் விரித்துப் பார்த்தான்.
ஆமாம் ! அதுதான் **அந்தக் கடிதம்.**
கலகம் விளைத்த கடிதம் அதுதான்.
வீட்டை விட்டு வெளியே வருமுன்
கமலம் மிகவும் கவனமாய் எடுத்துச்
சீலையின் முந்தியில் மூலையில் முடிந்து
இடுப்பிற் செருகி இருந்த கடிதம்.
ஆற்றில் விழுந்த அதனால் நனைந்து
வீரன் வீட்டில் வெயிலில் உலர்த்தி
நருவிசாய்க் கழற்றிய நகைகள் முடிப்பில்
பந்தனம் செய்து பட்டணம் வந்தது.
காதலர் கொடுத்த கணையாழி யோடு
பவித்திர மாகப் பத்திரப் படுத்தித்
தந்தப் பெட்டியிற் தங்கி யிருந்த
**ராகவன் எழுதிய ரகசியக் கடிதம்.**
கமலம் தன்னிடம் காட்ட மறுத்தது.
கசங்கி நனைந்து சற்றே கலைந்து

மடங்கின இடங்கள் மங்கி யிருந்தும்
ராகவன் எழுத்து நன்றா யிருந்தது.
படித்தான் மாதவன். படித்ததும் ஐயோ !
நின்ற இடத்தில் நிலைதடு மாறி,
கண்கள் இருண்டு, கைகால் தளர்ந்து,
ஒடிந்த மரம்போல் உட்கார்ந் திட்டான்.
கண்கள் மூடித் தலையும் கவிழ்ந்து,
மனநோய் மிகுந்து மார்பில் தாக்க,
வயிற்றிலும் நெஞ்சிலும் வலிவந் தவன்போல்
தன்னை மறந்து, தரையிற் சாய்ந்தான்.
சரஸ்வதி பயந்து, தலையணை போட்டுப்
படுக்க வைத்துப் பக்கம் இருந்தாள்.
ஐந்து நிமிஷம் அயர்ந்து கிடந்து,
தூங்கி விழித்தவன் போலத் தோன்றக்
களைப்புத் தீர்ந்து, கண்ணைத் திறந்து,
வெட்கப் பட்ட விதமாய்ச் சிரித்து,
தாகத் துக்குத் தண்ணீர் கேட்டான்.
கொடுத்தாள், அதனைக் குடித்து உடனே,
"வீட்டில் இன்னும் வேலைகள் உண்டா ?
அவளைப் பார்த்து மூன்றுநாள் ஆச்சே !
வைத்திய சாலைக்கு வருகின் றீர்களா ?"
என்று மாதவன் எழுந்து நின்றான்.
"இதோ வருகிறேன், கொஞ்சம் இருங்கள்
கல்விச் சாலையின் காகிதம் ஒன்றை
எடுத்து உடனே போவோம்" என்று
வேலைக் காரியை விரைவாய் அழைத்து,
காப்பி போடக் கட்டளை யிட்டு,
காகிதம் தேடும் காரியம் பார்த்தாள்.
காரியம் முடிந்து காப்பியும் அருந்தி



இருவரும் சென்று மோட்டார் ஏறி,
கல்விச் சாலையில் காகிதம் தந்து,
ஆஸ்பத் திரியை அடைந்தனர். அங்கே
கமலாம் பாளின் கலக்கம் சற்றே
தெளிந்தது போலத் தெரிந்தது கண்டார்.
அருகிற் போக அஞ்சினாற் போல
என்னவோ மாதவன் எட்டவே நின்று
கமலம் நிலையைக் கவனிக்க லானான்.
சரஸ்வதி யம்மாள் கட்டிலைச் சார்ந்து
கமலாம் பாளின் கையைத் தொட்டாள்.
கமலம் உடனே கண்ணை விழித்து,
அடையா ளத்தை அறிந்து கொண்டு,
"என்னடி சரசு ! எப்போ வந்தாய் ?
ஒத்திகை கித்திகை ஒன்றும் வேண்டா.
அரைமணி நேரமாம் ! ஐந்தே பாட்டாம் !
கூடவே வீணையாம் ! கொஞ்சம் பேச்சாம் !
கற்றுக் கொடுக்க ஒத்திகைக் காட்சியாம் !
அட்வான்சு ரூபாய் ஐயா யிரமாம் !
தூக்கித் தலையைச் சுற்றி எறிந்திடு.
பணமும் வேண்டா, பாழும் வேண்டா,
ஐயோ சரசு !........................................................
அடடா இதுவென்ன ஆஸ்பத் திரியா ?
இங்கேன் வந்தோம் ? என்ன நடந்தது ?
சொல்லடி சரசு, சொல்லடீ" என்று
கமலம் களைத்துக் கண்ணை மூடினாள்.
சரஸ்வதி அவளைச் சாந்தப் படுத்தி,
"ஆமாம் கமலம் ஆஸ்பத் திரிதான் ;
விழுந்து விட்டாய் வேறொன்று மில்லை.
தலையில் கொஞ்சம் தாக்கி விட்டது ;

அஞ்ச வேண்டா, ஆறிப் போகும்"
என்பன வாகிய இதமொழி சொல்லக்
கமலம் சற்றே கண்ணயர்ந் திட்டாள்.
வழக்கம் போல டாக்டர் வந்தார்.
பரிசோ திக்கக் கையைப் பற்றினார்.
குலுங்கி விழித்துக் கூச்ச மடைந்து
பிடித்த கையைப் பிடுங்கிக் கொண்டு,
தீண்டின மனிதரைத் திரும்பிப் பார்த்து,
டாக்டர் என்பதைத் தானே அறிந்து,
நாணப் பட்டு நகைத்தாள் கமலம்.
உணரும் சக்திகள் மீண்டதை உணர்ந்து
டாக்டர் மிகவும் சந்தோ ஷித்து,
கமலாம் பாளிடம் கனிவாய்ப் பேசி,
மண்டைக் கட்டை மாற்றிக் கட்டி,
செய்யத் தக்க யாவும் செய்து,
சொல்ல வேண்டிய பத்தியம் சொன்னார்.
கமலம் மிகவும் கவனமாய்க் கேட்டு
வைத்திய ருக்கு வந்தனம் செய்தாள்
ஆகா ரங்களை ஆசையாய் அருந்திப்
படுத்துக் கொண்டே, பக்கத்தி லிருந்த
சரஸ்வதி கரத்தைத் தாவிப் பிடித்து
அருகில் கட்டிலில் அமரச் செய்து,
"குழந்தை எங்கே ? கொண்டுவந் தார்களா ?
வருவதாய் உன்னிடம் வாக்களித் தார்களே !
வரவே இல்லையே ! வரமாட் டார்களா ?
அவளைப் பற்றிய ஆசையில் அல்லவா
இத்துணை அவக்கேடு எனக்கு வந்தது ?
ஒருதரம் பார்த்தபின் உயிர்போ னாலும்
சந்தோஷ மாகச் சாவேன்" என்றாள்.



"அழைத்து வரத்தான் அன்பா னந்தர்
போயிருக் கின்றார் பொழுதுக் குள்ளே
வருவாள் குழந்தை. வருத்தப் படாதே,
துன்பப் படாமல் தூங்கு" என்றாள்.
"அன்பா னந்தரா ! அழைக்கப் போனார் ?
அப்படி யானால் அகத்திய மாகக்
குழந்தையை நானும் பார்க்கக் கூடும்.
அன்பா னந்தரின் அன்பே அன்பு !
பார்த்துப் பேசப் பலமுறை எண்ணினேன் ;
நேரவே யில்லை நிச்சயம் சரசு !
இன்றைக்கு அவரை எப்படி யாவது
குழந்தை கூடவே கூட்டிக் கொண்டுவா ;
வந்தனம் சொல்லி வணங்க வேண்டும்"
என்றாள் கமலம். சரஸ்வதி எழுந்து,
"ஆகட் டும்நீ அலுங்கப் படாது,
அதிகம் பேசினால் அலுப்புத் தட்டும்.
தூங்கச் சொல்லி டாக்டர் சொன்னார்.
தூங்கு கமலா, தூங்கு" என்றாள்.
ஒப்புக் கொண்டதாய் உடனே கமலம்
தூங்க முயன்று தூங்கியே விட்டாள்.

✚ ✚ ✚

ரகசியம் என்று ராகவன் எழுதின
கடிதம் அதனைக் கண்டபிற் பாடு
கலக்க வேளையில் கமலம் பேசின
மற்றதை யெல்லாம் மறந்து விட்டு
'முகத்திற் கூட விழிக்க மாட்டேன்'
என்றது மட்டும் தனக்னெ எண்ணி,
அருகிற் செல்லவும் அஞ்சினான் போல
மாதவன் சற்றே மறைவில் இருந்து

எட்ட வே நின்று பார்த்தான் எனினும்,
அவளுடன் பேச ஆசை மட்டும்
நிமிஷத் துக்கு நிமிஷம் வளர்ந்து,
பொறுத்துப் பொறுத்துப் பொறுமை இழந்து,
பயத்தை விட்டுப் பக்கமாய்ச் சென்று
தூங்கும் அவளைத் தொடுவது போலக்
கட்டிலின் மீது கையை வைத்தான்.
'எழுப்ப வேண்டா' என்பது போலச்
சரஸ்வதி யம்மாள் சாடை காட்ட
அதனைப் பார்த்து அப்பால் சென்றான்.

✤ ✤ ✤

நித்திரை செய்யும் நேரத் துக்குள்
உணவுகொள் ளும்படி உபசாரம் செய்து
வாத்தியா ரம்மாள் வற்புறுத் தினதால்
சரஸ்வதி வீட்டுச் சமையற் காரி
கொணர்ந்தி ருந்த உணவிற் கொஞ்சம்
இருவரும் உண்டு இளைப்பா றினார்கள்.
தூக்கம் கலைந்து துணைவியின் பெயரைக்
கமலம் அழைத்தது காதிற் கேட்டு
இருவரும் உடனே எழுந்து சென்றனர்.
அருகில் வந்ததை ஓசையால் அறிந்து
கண்ணை மூடிக் கொண்டே கமலம்
"எங்கே சரசு குழந்தை ?" என்றாள்.
வாத்தியா ரம்மாள் வருவதன் முன்னால்
மனைவியின் அருகில் மாதவன் வந்து
முகத்தின் அருகில் முகத்தை நீட்டி,
"கமலம், கமலம், கமலம்" என்று
துன்பமும் அச்சமும் கலந்த தொனியில்
அழைத்த குரலை அறிந்தவள் போலக்



கண்ணைத் திறந்து பார்த்தாள் கமலம்.
'உண்மை தானா ! உருவெளித் தோற்றமா !
கண்ணின் மயக்கமா ! கணவரே தானா !
காண்பது கனவா ! காதலர் உருவா !
நிஜமாய் அவரா ! நினைவின் தவறா !'
பலமுறை இப்படி முன்னே பார்த்து
ஏமாந் திருக்கும் ஏக்க நினைப்பால்
திகைத்துத் திணறித் திக்குமுக் காடி,
துருவித் துருவிக் கண்ணைத் துடைத்து,
மூடி மூடி விழித்துப் பார்த்து,
கலியா ணத்தைக் கருதிடும் முன்னால்
கண்ணைக் காட்டிலும் கருத்தைக் கவர்ந்த
காதலர் தான்எனக் கண்டு கொண்டதும்
கமலம் தன்னிரு கைகளை விரித்து,
'நாதா நாதா ! நான்பெரும் பாவி !
என்னைப் பார்க்கவும் எண்ணம் வந்ததா !
ஏனோ இப்படி இளைத்துவிட் டீர்களே !
நாதா ! நாதா ! நாதா !" என்று
கணவன் முகத்தைக் கையால் தடவி,
மாதவன் கரத்தை மார்போ டணைத்து,
மகவைத் தீண்டிய மாதா வைப்போல்
தோளையும் முதுகையும் தொட்டுத் தொட்டு
ஆசைப் பட்டதை அடைந்து விட்ட
பச்சைக் குழந்தைபோல் பரவசப் பட்டு,
உள்ளக் களிப்பை உதடுகள் காட்ட
அளவு கடந்த ஆனந் தத்தால்
அமுத முண்டவளாய் அயர்ந்து விட்டாள்.
'முகத்திற் கூட விழிக்க மாட்டேன்'
என்று நினைப்பவள் என்னசொல் வாளோ ?

என்னும் பயத்தால் எதிரில் வரவும்
கமலாம் பாளின் கண்ணிய மாகிய
அன்புரை கேட்டு அதிசயப் பட்டு,
வெட்கம் மிகுந்து, வெகுநே ரம்வரை
நினைத்து, நினைத்து, நெருக்கிப் பொறுக்கி,
"கமலம் ! கமலம் ! நானே காதகன்.
மனமுவந் தென்னை மன்னிப் பாயா ?
கண்ணே ! கமலம் ! கமலம்" என்று
உள்ளம் கசிந்து உரைதடு மாறி,
கண்ணீர் உதிர்த்துக் கலங்கி நின்றான்.
"நானா தங்களை மன்னிக்க ? நாதா !
உங்களைக் கண்டது ஒன்றே போதும் ;
மற்றதை யெல்லாம் மறந்து விட்டேன்."

# மறுமலர்ச்சி

கணவனைக் கண்ட கமலம் நிலைமை,
நினைவை ஒடுக்கி நிஷ்டையில் நின்று
மோனம் பலித்த முத்தரைப் போல
மகளைப் பற்றிய நினைவும் மறந்து
மகிழ்வில் முழுகிய மௌனமாய் விட்டது,
மனைவியை அடைந்த மாதவன் நிலையோ,
மரணதண் டனையில் மன்னிப் படைந்து
விடுதலை பெற்று வீட்டுக்கு வந்த
குற்ற வாளியின் குதூக லத்துடன்
பேரா னந்தப் பித்தாகி விட்டது.
கமலாம் பாளின் கவலைக ளெல்லாம்
ஒழிந்தன வென்று உள்ளம் குளிர்ந்த
சந்தோ ஷத்தால் சரஸ்வதி யம்மாள்,
தாதிக ளிடத்தில் சேதிகள் சொல்லி,
கமலம் மாதவன் கதையைப் பற்றிப்
பேசிப் பேசிப் பெருமிதம் கொண்டாள்.

✤ ✤ ✤

மாலை ஐந்தரை மணிக்குப் பின்னால்
முத்துக் குமார முதலியார் அவர்கள்,
பார்வதி யம்மாள் பத்தினி சகிதம்
பரிசக் காரன் ராமன் பத்தினி
மாரியம் மாள்முன் மறுபெயர் சூட்டிய
'காவேரி' யாகிய கமலம் மகளுடன்
வைத்திய சாலையை நாடி வந்தனர்.

தாதிக ளோடு சேதிகள் பேசி
வாசலில் நின்ற வாத்தியா ரம்மாள்,
எதிர்கொண்டு ஓடி இன்புரை கூறி,
குழந்தையை வாங்கிக் கொஞ்சிக் கொண்டு
கமலாம் பாளின் கட்டிலின் அருகில்
வருவதன் முன்னால் வாய்விட் டிரைந்து
"காவேரி பார்த்தையா கமலம் ?" என்றாள்.
'காவேரி' என்றசொல் காதிற் பட்டதும்
மகளின் நினைப்பு மலைபோல் எழுந்து,
கமலாம் பாளின் மோனம் கலைந்து,
திகிலடைந் ததுபோல் திரும்பிப் பார்த்தாள்.
வரையிலாச் செல்வமும் வண்மையும் உள்ள
முத்துக் குமார முதலியார் வீட்டில்,
பெருங்குண மெல்லாம் ஒருங்குள பெண்மணி
பார்வதி கண்ணின் பாவையைப் போல
மூன்று வருஷம் முடிய வளர்ந்து
தங்கப் பதுமைபோல் தளதளத் திருந்த
மகளைப் பார்த்து, சற்றே மலைத்து,
அடையா ளத்தை அறிந்து கொண்டதும்,
தலையிற் புண்ணும், தனக்குள எல்லா
நோயும் மருந்தும், நொடியில் மறந்து,
தாவி விழுந்து தழுவிக் கொண்டாள்.
இறந்து போனவர் எழுந்தது போல
ஆற்றில் வீசிய அருமை மகளை
நேரிற் பார்க்கும் தாயின் நிலைமை
கற்பனை யெல்லாம் கடந்தது அன்றோ !
விளக்க நினைப்பதும் வீண்மு யற்சியாம்.
கமலம் நினைப்பே கருத்தை நிறைத்து
இன்பக் கனாவில் இருந்த மாதவன்,



புதிதாய் வந்து புகுந்த மனிதரை
வாசலில் ஓடி வரவேற்று வந்து
குழந்தையைச் சரஸ்வதி கொஞ்சக் கண்டும்,
'அறிமுக மானவர் யாரோ வந்துளார்'
என்றே நினைத்துச் சும்மா யிருந்தான்.
கமலம் துடிப்பைக் கண்டபிற் பாடுதான்,
மகளின் ஞாபகம் மனத்தில் பட்டது.
அதற்குப் பிறகே அடுத்தான் எடுத்து
முத்தம் கொடுத்து, முன்னால் ஏந்தி,
'என்னுடைக் குழந்தையா இது'எனச் சொன்ன
நினைப்பு வந்திட நெஞ்சம் உருகினான்.
பெற்றவர் யாரெனப் பிள்ளை அறியுமா ?
மூன்று வருஷமாய் முகம்கோ ணாமல்
இடுப்பை விட்டு இறங்க விடாமல்,
கொஞ்சிக் குலவிக் கொண்டாடி வளர்த்த
பார்வதி யம்மாள் முகத்தையே பார்த்து
அழுதது குழந்தை. அதனைக் கண்டு,
பார்வதி யம்மாள் பரிவுடன் வாங்கித்
தேற்றி ஆற்றித் தெளியச் செய்தாள்.
மகளைப் பார்க்கும் மகிழ்ச்சி யெல்லாம்
அன்பா னந்தரின் அன்பால் வந்ததை
அன்பா னந்தருக் கறியப் படுத்தி
வந்தனம் கூறி வணக்கம் செய்திட
அவரைப் பார்க்கும் ஆவல் மிகுந்து,
"அழைக்க வந்தவர் அன்பா னந்தர்
எங்கே அம்மா ?" என்றாள் கமலம்.
பக்கமாய் நின்ற பார்வதி யம்மாள்
"இன்னொரு அலுவலாய் எங்கோ சென்றுளார்,
வருவதாய்ச் சொன்னார், வருவார்" என்றாள்.

மறுநாள் காலையில் மடத்தி லிருந்து
சரஸ்வதி யவர்களைத் தனியே தம்மிடம்
அழைத்து வரும்படி அன்பா னந்தர்
அனுப்பினார் என்றொரு ஆள்வந்து சொல்ல,
அதனைக் கேட்டதும் சரஸ்வதி அம்மாள்
துறவியைப் பார்க்கத் துரிதமாய்ச் சென்றாள்.
வரவை நோக்கி வாசலில் நின்ற
துறவியைக் கண்டு தொழுதாள். அவரும்
ஆசீர் வதித்து அழைத்துச் சென்று
புத்தக சாலையின் மத்தியில் ஒருபுறம்
ஏகாந்த இடத்தில் இருக்கச் செய்து
கமலம் நலத்தைக் கருதிக் கேட்டார்.
"கமலம் தங்களைக் காணத் துடிக்கிறாள்.
அகத்திய மாக அழைத்து வரும்படி
நேற்று முழுதும் அதுவே நினைப்பு.
கணவனும் மனைவியும் சந்தித்த காட்சியை,
சுவாமீ ! அதைநான் என்னென்று சொல்வேன் !
ஒருவரை ஒருவர் உவந்து கொண்டதை
நீங்கள் பார்த்திட நேராது போச்சே !
நேற்று நடந்ததை எல்லாம் நீங்கள்
அறிந்தால் மிகவும் அதிசயிப் பீர்கள்,
அன்பின் நிலைமையை நேற்றுதான் அறிந்தேன்.
நேற்றைக்கு முன்தினம் நீங்கள் வந்தது,
அதன்முன் நடந்தது அனைத்தும் சொன்னேன்.
நேற்றுதான் கமலம் நல்ல நினைவுடன்
பேசத் தொடங்கின பெருமை" என்று
கமலம் உளறிய கலக்கப் பேச்சில்
'ஐயோ மகளே ஆற்றிலா போட்டேன்'
என்பது முதலிய எல்லாம் சொல்லி,



அருகே யிருந்து அதனைக் கேட்ட
மாதவன் அதனால் மனம்முறிந் தவன்போல்
வீட்டுக்கு உடனே விரைந்து சென்றவன்,
அதற்குப் பின்னால் ஆஸ்பத் திரிக்கு
இரண்டுநாள் முழுதும் வராது இருந்தவன்
வேறொரு வேலையாம் வீட்டுக் குப்போய்க்
கல்விச் சாலையின் காகிதம் ஒன்றைத்
தேடும் போது திடீரெனத் தோன்றி
மாதவன் தன்னுடை மனைவியைப் பற்றி
வீட்டுக்கு வந்து வினாக்கள் போட்டதும்,
'இவளுடன் வந்தவன் ராகவன் எங்கே
உள்ளதைச் சொல்' என உத்தர விட்டதும்
காதல் பரிசெனக் கமலம் சொல்லிய
பச்சை மோதிரம் பார்க்க விரும்பி,
மோதிரத் தோடும் முடிப்பில் இருந்த
'ராகவன் எழுதிய ரகசியம்' என்னும்
கடிதம் ஒன்றைக் கண்டதும், உடனே
மோதிர நினைப்பை முற்றும் மறந்து
கடிதம் படித்துக் கைகால் தளர்ந்து
மார்படைத் ததுபோல் மயக்கம் வந்து
தன்னிலை மறந்து தரையில் சாய்ந்து
கிடந்து தெளிந்து தண்ணீர் கேட்டதும்,
குடித்த உடனே குதிகொண் டெழுந்து
ஆஸ்பத் திரிக்கு அவசரப் பட்டதும்
அங்கே சென்றபின் நடந்த அனைத்தும்,
ஒன்று விடாமல் உரைத்தாள் சரஸ்வதி.
அவற்றைக் கேட்ட அன்பா னந்தர்
தலையை அசைத்துத் தாடியைத் தடவி
"அன்பே தெய்வம் என்பதை அறிந்து

துன்பப் படுவோர் துணையாய் நின்று
தொண்டு செய்யவே துறவறம் பூண்ட
இன்பம் முழுவதும் இன்றுதான் பெற்றேன்.
கமலாம் பாள்தான் கணவரைக் கண்டதும்,
மாதவன் பிரிந்த மனைவியை உற்றதும்,
மகளை இருவரும் கண்டு மகிழ்ந்ததும்,
அதற்குத் துணையாய் ஆனதைச் செய்து
நீங்களும் நானும் உதவிட நேர்ந்த
எல்லாச் செயலும், இறைவன் கருணை.
அதைப்போல் இன்னொரு அன்பின் திருப்பணி
உங்க ளிடத்தில் உரைத்தாக வேண்டும்.
நான்சொல்லும் எதையும் நம்புவீ ரன்றோ ?"
"தங்களை நம்பத் தடைகூட உண்டா ?"
"கோரிக்கை ஒன்று, கொடுக்க வேண்டும்."
"என்ன கோரிக்கை ? என்னால் முடிந்த
எதைக்கேட் டாலும் இல்லையென் பேனா ?
உங்களுக் கென்றன் உயிரையும் தருவேன்,
சுவாமி ! என்னைச் சோதிக்க லாமா ?"
"சோதிக்க நினைத்துச் சொன்னதே அல்ல,
விருப்பம் ஒன்றை வெளியிட வேணும்.
திடீரெனச் சொல்லித் திண்டாட வைப்பது
அழகல்ல என்றே அப்படிக் கேட்டேன்."
"என்ன விருப்பம் ?" என்றாள் சரஸ்வதி.
"கமலாம் பாளும் கணவரும் போல
நீங்கள் உங்கள் கணவரைச் சேர்ந்து
மனஸ்தா பங்களை மறந்திட வேண்டும்
என்பதே என்னுடை விருப்பம்" என்றார்.
"என்னுடைக் கணவரா ! எங்கே இருக்கிறார் ?
இருக்கிற இடமே இன்னதென் றறியேன்.



அவரை மறந்து அதிகநாள் ஆச்சே ;
இந்தப் பேச்சுக்கு என்ன காரணம் ?"
"இருக்கிற இடத்தை அறிவோம் என்றே
வைத்துக் கொண்டு வார்த்தை யாடுவோம் ;
வந்தால் அவரை வரவேற்க லாமா ?"
"அவருடன் வசித்த அவஸ்தையை எல்லாம்
உங்க ளிடத்தில் உரைத்திருக் கின்றேன்.
தேவரீ ருக்குத் தெரிந்தது தானே.
ஆண்டவன் அருளால், உங்கள் அன்பால்,
கண்ணிய மாகக் காலங் கழிக்கின்றேன்.
இங்கே அவர்வர இடம்தந்து விட்டால்
குடித்து வெறித்துக் கொடுமை செய்வார்.
மானங் கெடுவேன், மரியாதை போச்சு,
தொழிலும் கூடத் தொலைந்து போகும்.
வேண்டா ஸ்வாமீ ! வேண்டவே வேண்டா."
"குடிக்கும் பழக்கமும் கொடுமைக் குணமும்
முற்றிலும் விட்டு முழுவதும் திருந்தி
மாறி யிருந்தால் மன்னிக்க லாமா ?"
'அப்படி மாற அவரால் ஆகுமோ ?
குடியரைத் திருத்த முடியுமா சுவாமி ?
வம்பையே மீண்டும் வரவேற்க லாமா ?
இப்படி யேநான் இருப்பது நன்மை.
எங்கே இருக்கிறார் ? எப்படி அறிந்தீர் ?
அவரே விரும்பியா ? அயலார் சொன்னதா ?
வம்பே வேண்டா" என்று வணங்கினாள்.
"சந்திர சேகரன் வந்துள்ளார் இங்கே.
நானும் பழகினேன் நல்ல மனிதர்தான்.
குடிப்பதை மறந்து, குணங்களும் சிறந்து,
எல்லா விதத்திலும் நல்லவ ராகவே

திருந்தி இருப்பதைத் தெரிந்தே சொன்னேன்.
தீர்மா னிப்பது உங்கள் சித்தம்
கசக்கத் தகுந்த காரியம் அல்ல.
அவருடன் படித்த அன்பர் ஒருவர்,
சங்கரன் என்னும் சற்குணச் செல்வர்,
பலநாள் எனக்குப் பழக்கம் ஆனவர்,
சிபாரிசு செய்தார். சீக்கிரம் உங்களைச்
சந்தித்துப் பேசச் சம்மதப் பட்டேன்.
கமலாம் பாளின் கஷ்டங் களினால்
அதைநாம் பேசிட அவகாசம் இல்லை,
சந்திர சேகரர், சங்கரர் இருவரும்
உங்களைப் பார்க்கவே ஒருமாத காலமாய்க்
காத்திருக் கின்றனர் கவலையோ" டென்று
சரஸ்வதி யிடத்தில் சச்சர வாகி
மனைவியும் கணவனும் மனஸ்தா பத்தால்
பிரிந்து விட்டதன் பின்னால் நிகழ்ந்த
சந்திர சேகரன் சரித்திரம் எல்லாம்
அன்று வரைக்கும் ஒன்று விடாமல்
அன்பா னந்தர் அனைத்தும் சொல்லி,
சந்திர சேகரன் சொந்தப் பணமாய்
இரண்டரை லட்சம் ரொக்கம் இருப்பதைச்
சரஸ்வதி பேரால் சாட்டி விடுவதாய்ச்
சொல்லும் படியாய்ச் சொன்னதும் சொன்னார்.
சகலமும் கேட்ட சரஸ்வதி அம்மாள்
மறுமொழி யின்றி மௌனமா யிருக்க,
வேடிக்கை யாக வெளியே சென்று
திடுமென அங்கே திரும்பி வந்தவர்
சந்திர சேகரன் சங்கரன் இருவரும்
உள்ளே நுழைந்தனர். உடனே சரஸ்வதி



கணவரைப் பார்த்துத் தலையைக் கவிழ்த்தாள்
மனைவியைக் கண்டு மகிழ்ச்சி மிகுந்த
சந்திர சேகரன், சரசர வென்று
முன்னால் சென்று, முறுவல் காட்டி,
"சரஸ்வதி என்னை க்ஷமிக்க வேணும்.
தீமையே செய்து தினந்தினம் உன்னைத்
துன்பப் படுத்தித் துக்கமுண் டாக்கினேன்.
அதற்குத் தகுந்த தண்டனை அடைந்து
படாத பாடுகள் பட்டுவிட் டேன்நான்.
தெய்வக் கருணையால் தீவினை தீர்ந்து
உன்னைப் பார்க்கும் ஒன்றே நினைவாய்ச்
சாந்த சற்குண சங்கரன் தயவால்
அன்பா னந்தரின் அருளையும் அடைந்தேன்,
போனதை யெல்லாம் பொறுத்துக் கொண்டு
அன்புரை சொல்லி ஆதரித் திடுவாய்
என்றே மிகவும் எதிர்பார்க் கின்றேன்.
கணவனாய் என்னைக் கருதா விடினும்
அன்பனென் றாவது அனுசரித் திட்டால்
இன்பப் படுவேன்" என்றான் சேகரன்.
நாயகன் சொன்ன நல்லுரை கேட்டு,
சகல விதத்திலும் சந்திர சேகரன்
மாறி யிருப்பதும் கண்டு மகிழ்ந்து,
அன்போ, கருணையோ, ஆசையோ தூண்ட
கமலம் நேற்றுக் கற்றுக் கொடுத்த
பாடம் அதையே தானும் படித்து,
"உங்கள் மாறுதல் ஒன்றே போதும் ;
மற்றதை யெல்லாம் மறந்து விடுவேன்"
என்று சரஸ்வதி இன்னுரை கூறி,
22 துறவியை நோக்கித் தொழுதாள் வணங்கி.

✣ ✣ ✣

கமலாம் பாளை மாதவன் கண்ட
சம்பவ மெல்லாம் கேட்ட சங்கரன்,
அவனுடைச் சுபாவ அருங்குண மாகிய
அமைதியை மீறி ஆனந்த முற்று,
படபட வென்று பாராட்டுப் பேசி,
கலகல வென்று சிரித்துக் களித்து,
காணாமற் போன கமலாம் பாளை
நினைத்து நினைத்து நித்தமும் கேட்கும்
தன்னுடை மனைவி சாரதா வுக்கும்
சங்கதி சொல்லத் தந்தி கொடுத்தான்.

## பிரிந்தவர் கூடுதல்

ஒருநாள் மாலையில் ஒழிந்த வேளையில்
அன்பா னந்தரின் அறைக்குள் இருந்து
சங்கரன் அவருடன் தனித்துப் பேசுகையில்
"விருந்துக்கு வந்தவர் யாவரும் வியக்கத்
திடீரென் றிதுஒரு திகைப்புண் டாக்குமே,"
என்று சங்கரன் என்னவோ சொன்னது
காதில் விழுந்ததைக் கருதிக் கருதிச்
சந்திர சேகரன் சலனப் பட்டான்
தனித்துப் பேசிய தன்மையைக் கண்டு.

✤ ✤ ✤

கணவனை அடைந்த களிப்பி னாலும்,
மகளைக் கண்ட மகிழ்ச்சியி னாலும்,
அத்துடன் தனது ஆருயிர்த் துணைவி
சரஸ்வதி கணவன் சந்திர சேகரன்
குடிப்பது முதலிய கொடுமைகள் நீங்கித்
திருந்திய மனிதனாய்த் திரும்பி வந்து
அன்பா னந்தரின் அனுசரிப் போடு
மடத்தில் கண்டு மன்னிப்புக் கேட்டதைச்
சரஸ்வதி உடனே தன்னிடம் சொல்ல,
பொங்கி வழிந்த பூரிப்பி னாலும்,
விழுந்த புண்களும் விரைவில் ஆறிட,
சகல விதத்திலும் சௌக்கிய மடைந்து,
ஆறேழு நாளில் ஆஸ்பத் திரியினை
விட்டுக் கமலம் வீட்டுக்கு வந்தாள்.

பார்வதி யம்மாள் பர்த்தா சகிதம்
இடுப்பை விட்டு இறங்க மறுத்த
கமலம் குழந்தை 'காவேரி' யோடும்
சொந்தக் 'காரில்' மிகவும் சுலபமாய்த்
தினமும் வந்து தினமும் போவாள்.

## கமலம்

காதலன் வந்த கரையற்ற இன்பம்
மனத்துக் குள்ளே மௌனமாய் மயங்க,
பேச்சுகள் எல்லாம் மகளின் பேச்சாய்க்
கமலம் தினமும் காலம் கழிப்பாள்.
அலைபுரண் டோடிட ஆடிப் பெருக்கில்
ஆற்றில் வீசிய அருமை மகளைப்
படகிலே போட்ட பகவான் அருளை,
அணைத்துக் காத்த ராமன் அன்பை,
மகிழ்ந்து வாங்கிய மாரியின் மனதை,
பார்த்து விரும்பிய பார்வதி யம்மாள்
புருஷ னிடத்தில் புகன்ற ஆசையை,
முத்துக் குமார முதலியார் உடனே
ராமனை அழைத்து நயந்து கேட்டுப்
பணமும் மாடும் பண்ணை நிலங்களும்
கொடுத்துக் குழந்தையை வாங்கிக் கொண்டதை,
சென்னைக்கு வந்து சேர்ந்த கதைகளை,
திருப்பித் திருப்பித் தினமும் அவற்றைக்
கிண்டிக் கிளறிக் கேள்விகள் போட்டுப்
பார்வதி யிடத்தில் பலதரம் வேண்டிச்
சொல்லச் சொல்லிக் கேட்டுச் சுகிப்பாள்.

## சரஸ்வதி

சரஸ்வதி யம்மாள் சந்தோஷ மெல்லாம்
அன்பா னந்தரின் அன்பையே சுற்றி,



சாமியார் செய்த சகாயம் அல்லவா ?
இத்தனை பேரும் இன்புறச் செய்தது ?
என்பதைப் பற்றியே எண்ணிக் கொண்டு
அன்பா னந்தரை அழைத்து வந்து
நல்ல முறையில் நன்றியைச் செலுத்தப்
பற்பல விதமாய் யோசனை பண்ணும்.

## மாதவன்

மாதவன் தன்னுடை மதராஸ் வாழ்வை
ஒடுக்கிச் சீக்கிரம் ஊருக் கேபோய்
வாழ்ந்திடும் ஆசை வலுப்பட் டவனாய்ச்
சென்னையில் வசித்த தன்னுடை வீட்டை,
சினிமாத் தொழிலைச் சேர்ந்ததை எல்லாம்
ஏலம் போடக் காலம் குறித்து
விற்று விடுவதாய் விளம்பரம் செய்தான்.
விற்கும் பணத்தில் விசேஷத் தொகையை
அன்பா னந்தர்க் கர்ப்பணம் செய்து,
அவருடை விருப்பம் எதுவோ அதுபோல்
வேதாந்த மடத்தின் விருத்திக் குகந்த
காரியம் செய்யக் கமலம் பேரால்
திருப்பணிக் குத்தரத் தீர்மா னித்தான்.
அந்தக் கருத்தை அறிந்த கமலம்,
சினிமாக் காட்சியில் சேர்ந்து நடிக்க
முன்பண மாக முன்னே வாங்கின
ஐயா யிரத்தையும் அத்துடன் சேர்த்து
அன்பா னந்தருக் கன்பளிப் பாக்கிட
நாயக னிடத்தில் நயந்து சொன்னாள்.
மாதவன் உடனே மனைவியைப் புகழ்ந்து
"நல்ல யோசனை, நானும் நினைத்தேன்

அந்தப் பணம்நான் தந்த பணந்தான்.
ஆயினும் அதுமிக அருவருப் பானது.
அந்தப் பணந்தான் அடிபடச் செய்தது.
தருமத் துக்கே தந்திடு வோம்அதை
நல்லது கமலம்" என்று நகைத்தான்.

## முத்துக்குமார முதலியார்

அந்த வேளையில், அருகில் இருந்த
முத்துக் குமார முதலியார் அவர்கள்
அன்பா னந்தரின் அருமை பெருமையைப்
பலவித மாகப் பாராட்டி விட்டு,
வேதாந்த மடத்தை வெகுவாய்ப் புகழ்ந்து,
"ஒழுக்கம் சிறந்த உத்தம ராகத்
துறவறம் என்னும் தூய்மை காத்து,
இம்மை மறுமை இரண்டையும் எண்ணி
உரன்எனும் காவலில் ஆசையை ஒடுக்கி,
ஐம்புலன் வென்று, ஆற்றல் மிகுந்து,
செயற்கரி தாகிய சேவைகள் செய்து,
சுவைஒளி ஐந்தன் சூட்சுமம் அறிந்து,
நினைத்தது பலிக்கும் நிறைமொழி மாந்தராய்,
குணமெனும் உயர்ந்த குன்றில் விளங்கி,
செந்தண்மை பூண்ட அந்தண னாகி,
நீத்தார் பெருமை நிறைந்து விளங்கிய
செய்தவம் நிறைந்த ஸ்ரீராம கிருஷ்ண
பரம ஹம்சரின் பக்தர்க ளாக
விவேகா னந்தரின் விதிமுறை போற்றி,
அறிவைத் துலக்கி அன்பை வளர்க்கும்
சேவை புரிவதே தவமெனச் செய்யும்
துறவிகள் தமக்குத் துணைதரத் தகுந்த



வேதாந்த மடத்தை விருத்தி செய்வது
உயர்ந்த புண்ணியம் ; உத்தம தானம்.
கலகமே மிகுந்த காலம் இதனில்
உலகம் விரும்பும் உயர்ந்த அறமாம்.
நானும் அதற்கொரு நன்கொடை தந்து,
அன்பா னந்தரின் ஆதீ னத்தில்
நிரந்தர மாகிய நிதியா கும்படி
குழந்தையின் பேரால் கொடுக்கப் போகிறேன்.
இரண்டொரு நாளில் எளியேன் மனையில்
உங்களுக் காகவும், உத்தமி யாகிய
கமலாம் பாளின் பெருமை கருதியும்,
அன்பா னந்தரின் அன்பை எண்ணியும்,
சரஸ்வதி யம்மாள் சற்குணம் போற்றி,
அருமைக் குழந்தையின் ஆயுளைக் கோரி,
விழாக்கொண் டாடி, விருந்து நடத்தி,
கற்றவர் நிறைந்த கழகம் கூட்டி,
வேதாந்த மடத்து வெகுமதி அதனை
அந்தச் சபையில் தந்திட ஆசை.
தங்களே அதற்குத் தலைமை தாங்கிட
வேண்டும் என்பது விருப்பம்" என்றார்.
கேட்டுக் கொண்டே வீட்டில் நுழைந்த
சரஸ்வதி யம்மாள், சட்டென நின்று,
"கமலாம் பாளின் கஷ்டத்தை யெல்லாம்
நீக்கி எனக்கும் நிம்மதி யளித்த
கடவுளுக்கு என்றன் காணிக்கை யாகப்
பொன்னடி போற்றிப் பூசனை புரிந்து,
விழாக்கொண் டாடி, விருந்து செய்வதை
நான்தான் முதலில் நடத்திட வேண்டும்.
இந்தப் பெருமையை எனக்குத் தரும்படி

முதலியார் அவர்களை மும்முறை வணங்கி
வேண்டிக் கொள்வேன் ; விடை தர வேணும்.
விருந்தைப் பற்றித்தான் வெளியே போனேன்
ஏற்பா டுகளும் எல்லாம் முடிந்தன.
ஞாயிற்றுக் கிழமை விருந்து நடக்கும்.
அழைப்புகள் கூட அச்சா கின்றன.
உங்கள் விருந்தினை ஒத்திப் போட்டிடத்
தயவுடன் அனுமதி தருவீர்" என்றாள்.
முத்துக் குமாரரும் ஒத்துக் கொண்டார்.
மாதவன், கமலம் மறுப்பரோ அதனை ?

## சங்கரன்-சந்திரன்

மனைவி யிடத்தில் மன்னிப் படைந்து
மனஸ்தாப மெல்லாம் மாறிப் போனதால்
சந்திர சேகரன் சரஸ்வதி மனைக்கு
உடனே போவதற் குரிமை பெற்றும்
அன்பா னந்தரின் ஆலோ சனைப்படி
'கமலாம் பாளின் காயங்க ளெல்லாம்
முற்றிலும் ஆறி, முழுவதும் குணமாய்,
ஆஸ்பத் திரியின் அதிகாரி டாக்டர்
வீட்டுக் கனுப்ப விடைதரும் வரையில்
சரஸ்வதி யம்மாள் சாவதா னத்துடன்
வீட்டில் இருக்க விரும்பாள்' என்று,
சந்திர சேகரன் சங்கரன் இருவரும்
மடத்தி லேயே வாசம் செய்தனர்
மனமொத்த நண்பன் மாதவன் என்பதைச்
சங்கரன் என்றும் சந்தே கித்திலன்.
சாரதாம் பாளுடன் சச்சர வானபின்
மாதவன் மிகவும் மாறிப் போனதால்



சங்கரன் அவனைச் சந்திக்க முயன்றும்
குற்றம் செய்த குறுகுறுப் பதனால்
மாதவன் நேராது மறைந்து கொண்டான்.
எனினும் சங்கரன் இத்தனை நாளும்
மாதவன் நட்பை மறந்தவன் அல்ல.
'கமலமும் மகளும் காணாமற் போனார் ;
மாதவன் மிகவும் மதிகெட்டு விட்டான்
சிறந்த குடும்பம் சீர்குலைந் திட்டதே'
என்றே சங்கரன் ஏங்கித் தவித்தான்.
சாரதாம் பாளும் சந்தோஷம் அற்றாள்.
மாதவன் அவளுடன் மனஸ்தா பித்தபின்
ஆடல் பாடலில் ஆசையும் விட்டாள்.
கமலத்தை எண்ணிக் கண்ணீர் வடிப்பாள்.
மாதவன் சிறப்பையும் மறந்தவள் அல்ல !
சங்கரன் தன்னுடைச் சகபாடி நண்பன்
சேகரன் விஷயமாய்ச் சென்னைக்கு வந்து,
அங்கே வசிக்கும் அவனுடை மனைவி
சரஸ்வதி யாரைச் சந்திக்க வேண்டி
அன்பா னந்தரை அறிந்த பிறகுதான்,
சந்திரன் மனைவி சரஸ்வதி வீட்டில்
காணாமற் போன கமலம் இருப்பதும்,
சினிமாத் தொழிலில் சிக்குண்டு மாதவன்
சென்னையில் இருக்கும் சேதியும் அறிந்து,
அவனையும் பார்க்க ஆவல் மிகுந்து,
கமலம் அடைந்த கஷ்டத்தை யெல்லாம்
அன்பா னந்தரின் மூலமாய் அறிந்து,
சங்கரன் அவருடன் தங்கி இருந்தான்.
சரஸ்வதி கணவனைச் சந்தித்த நாளில்
மாதவன் தன்னுடை மனைவியைக் கண்டு

ஆஸ்பத் திரியில் அபயாம் கேட்டதை
சரஸ்வதி சொன்னதைக் கேட்ட சங்கரன்,
அளவுக்கு மீறி ஆனந்தம் அடைந்து
தன்னுடை மனைவி சாரதா வுக்கும்
தந்தி கொடுத்ததை முந்தியே சொன்னோம்.
தந்தியைக் கண்டதும் உந்திய ஆசையால்
படுக்கை, பெட்டி, பணியாள் சகிதம்
தோட்டக் காரனைத் துணைகூட்டிக் கொண்டு
சென்னைக்கு வந்து சேர்ந்தாள் சாரதா.
அப்போது கமலம் ஆஸ்பத் திரியில்
இருந்தாள் ஆனதால், இவர்கள் மூவரும்
சரஸ்வதி மனையில் சாவ தானமாய்க்
கமலாம் பாளைக் காணலாம் என்று
சங்கரன் சொன்னதைச் சரியெனக் கொண்டு,
அன்பா னந்தருக் கன்புள்ள கனவான்
மடத்துக் கருகில் வசித்த மற்றொரு
நண்பர் வீட்டில் நாலைந்து நாளாய்ச்
சாரதாம் பாளுடன் தங்கி யிருந்தனர்.

✤ ✤ ✤

கமலாம் பாளைக் கௌரவப் படுத்தி,
மாதவ னுக்கொரு மரியாதை காட்டி,
அன்பா னந்தரை ஆரா திக்கவே,
கணவன் திருந்திய களிப்பும் கலந்து,
கணவனுக் குதவிய கனவான் ஆகிய
சங்கரன் வந்துள சந்தர்ப் பத்தையும்
பெருமைப் படுத்தவும் பிரியமாய்ச் செய்யும்
சரஸ்வதி விருந்து சாமான்ய மல்ல.
விருந்து மிகவும் விமரிசை யானது.
உயர்ந்த சமையல் ஒப்பற்ற தினுசாய்



இருக்கும் படியாய் ஏற்பாடு செய்தாள்.
சென்னையில் மிகவும் சிறப்புள்ள தென்று
பெருமை வாய்ந்த பெண்பாட சாலையின்
தலைமை உபாத்தினி என்னும் தன்மையில்
பதினோரு வருஷம் பழக்க மாகிய
அத்தனை அன்பரும் அழைக்கப் பட்டனர்.
செலவைப் பற்றிய சிந்தனை எதற்கு ?
பள்ளிக் கூடப் படத்தின் பரிசாய்
முன்னே வாங்கிய மூன்று ஆயிரம்
கையில் இருக்கக் கவலையும் வருமா ?
கமலமும் அவளுடைக் கணவரும் இருக்கத்
தன்னுடைக் கணவனும் தனிகராய் விட்டபின்
பணத்தைப் பற்றிய பஞ்சமும் உண்டா ?
சொல்லும் பொழுதே சுவைதரக் கூடிய
சிறந்த விருந்தாய் ஏற்பாடு செய்தாள்.
சாரதா வந்ததைச் சரஸ்வதி அறியாள்.
சரஸ்வதி யிடத்தில் தனியே உரைக்க
அன்பா னந்தர் அனுப்பிய ஆளால்
சாரதா வந்ததைச் சரஸ்வதி அறிந்து
அவளுக் கும்ஒரு அழைப்பு வந்தது.

✤ ✤ ✤

விருந்துக்கு முன்னே வீட்டுக்குச் சென்று
மனைவியைக் கண்டு மகிழ்ந்திட விரும்பி
சந்திர சேகரன் சபலப் பட்டான்.
சங்கரன் அதற்குச் சம்மதம் சொன்னான்.
கமலாம் பாளைக் காணத் துடித்து
ஐந்தாறு நாளாய் அவசரப் படுத்தும்
சாரதாம் பாளும், சமயம் பார்த்து
அந்தக் கருத்தை ஆமோ தித்தாள்.

சந்திர சேகரன், சங்கரன், சாரதா
மூவரும் விருந்தின் முதல்நாள் காலையில்
கமலாம் பாளைக் காண்பதற் காகவும்,
சரஸ்வதி யாரைச் சந்திப் பதற்கும்,
அங்கே போய்வர ஆசை மிகுந்தனர்.
தாங்களே போகச் சங்கோசப் பட்டு,
அன்பா னந்தரைத் துணையாய் அழைக்க
விருப்பங் கொண்டதால், வேதாந்த மடத்தில்
அன்பா னந்தரும், அவருடை மடத்தின்
நற்பெருந் தலைவர் **ஞானா னந்தரும்**
பெண்களின் கல்வியைப் பற்றிய பேச்சில்
ஈடுபட் டிருந்ததைக் கண்டதும், இவர்கள்
குறுக்கே பேசக் கூச்சப் பட்டதால்
பேசாமல் அமர்ந்து பேச்சை ரஸித்தனர்.

✤ ✤ ✤

அன்பா னந்தர் அழகான மனிதர் ;
முப்பது வயதும் முற்றாத இளைஞர் ;
கட்டான தேகமும் கம்பீரத் தோற்றமும்
இனிய முகமும் இன்சொலும் உடையவர்.
ஸ்ரீராம கிருஷ்ண மடத்தைச் சேர்ந்த
ஆனந் தாக்கள் அத்தனை பேரும்
முற்றிலு மழித்த மொட்டைக ளாகவே
இருப்பது வழக்கம் என்றிட் டாலும்,
அன்பா னந்தர் அதற்கொரு விலக்கு.
பொன்னிற முகத்தில் கன்னங் கரேலென
அழகான தாடியும் மீசையும் அமைந்து,
விவேகா னந்தர் விரும்பிய விதமாய்த்
தலைப்பாக் கட்டும், தாழ்ந்த சட்டையும்
இடையில் கச்சையும், இளங்காவி நிறத்தில்



உள்ளங் குளிரும் பரிசுத்த உடையில்
கண்ணுக் கினிக்கும் காட்சி யானவர் ;
சுறுசுறுப் பான சுபாவ முள்ளவர் ;
ஓயாத உழைப்பும் ஊக்கமும் உடையவர்,
மடத்தின் தலைவர் மற்றொரு துறவி
ஞானா னந்தர் ; மிகவும் நல்லவர் ;
பெண்கல் விக்கே பெரிதும் உழைப்பவர் ;
பெண்குலத் திற்குப் பெருமை கொடுத்து,
சக்தியின் வடிவென நித்தமும் புகழ்ந்து,
சாரளா தேவியாம் தன்னரும் மனைவியைத்
தாய்போற் கருதிய தன்னிக ரில்லான்
காமனைக் கடந்த ராம கிருஷ்ணரின்
கதைகளைச் சொல்லியே கல்வி போதிப்பவர் ;
பெண்மையின் பெருமை பிழைபட நேர்ந்தால்
நாட்டிற் கேஅது கேட்டைத் தருமென
ஓய்வில் லாமல் உபன்யா சிப்பவர்.
அவருடை பார்வையில் ஆறு பள்ளிகள்
மடத்தைச் சேர்ந்தன மகளிர்க் கென்றே
நல்ல புகழுடன் நடந்து வந்தன.
ஆயினும், அவற்றில் அதிகப் படியாய்ப்
பெண்கள் எண்ணிக்கை பெருகி விட்டதால்
இடம்போ தாமல் இடைஞ்சலுண் டாகி,
கட்டடம் கட்டத் திட்டம் நினைத்து,
பணமில் லாததால் பற்பல இடங்களில்
நன்கொடை கேட்க ஞானா னந்தர்
அலைந்தும் பார்த்து அலுத்துப் போனவர்,
சரஸ்வதி வீட்டுச் சாப்பாட் டிற்கு,
அவருக் கும்தனி அழைப்பு வந்தது.
விருந்து நடப்பதன் விசேஷ காரணம்

அன்பா னந்தரின் சேவையென் றறிவார் ;
சேவையின் விவரமும் ஒருவா று தெரிவார்.
பெண்மைக் குதவிய பெருமையை மெச்சி
நன்றி செலுத்தவே நடக்கப் போகிற
விருந்தில், அவர்க்கொரு வெகுமதி யாக
வேதாந்த மடத்தின் விருத்திக் கென்று
அன்பா னந்தரின் ஆதீ னத்தில்
நிதியொன்று கொடுக்க நினைத்தி ருப்பதைக்
கேள்விப் பட்டதால் உள்ளம் கிளர்ந்து,
உடனே அவர்க்கொரு எண்ணம் உதித்து,
அந்தத் தொகையில் ஆனதோர் பகுதியைப்
பெண்பாட சாலையைப் பெரிதாய்க் கட்டிட
ஒதுக்கித் தரும்படி யோசனை சொல்லி
முன்னா லேயே முயற்சி செய்திடும்
நாட்டத் துடனே, ஞானா னந்தர்
அன்பா னந்தரின் அறைக்குள் வந்து,
பெண்களுக் குதவிய பெருமையைப் புகழ்ந்து
அன்பா னந்தரை ஆசீர் வதித்து,
வழக்கம் போலவே பெண்மையை வாழ்த்தி,
"ஆண்களுக் கெல்லாம் ஆசைப் பொருளாய்
பெண்களுக் கெல்லாம் பிறவிக் குணமாய்
உயிர்களை யெல்லாம் ஊக்கும் விசையாய்,
அழகாய் அரும்பி, அன்பாய் மலர்ந்து,
காதலாய்க் கனிந்து, கற்பாய் நிலைத்து,
இன்பம் என்பதன் இலக்கிய மாகி,
கலைகளுக் கெல்லாம் காரணப் பொருளாய்,
சித்திரக் காரனைத் திண்டாடச் செய்து,
சிற்பியின் உளிக்கும் சிக்காத ஒன்றாய்
கவிஞன் கற்பனைக் கெட்டாத கவிதையாய்,



புதல்வியா யிருந்து பெற்றோரைப் புரந்து,
சகோதரி யாகிச் சலிப்பிலா துதவி,
மனைவியா யிருந்து மக்களைப் பெற்று,
தாயாக நின்று குடும்பந் தாங்கி,
சகிப்புத் தன்மையின் சாட் சாத் காரமாய்,
பந்துமித் திரரின் பழைமைபா ராட்டி,
உறவு விடாமல் ஒட்டும் பசையாய்,
வீட்டின் காவலாய், விருந்தின் ஏவலாய்,
பசித்து வந்தவர் பசியைப் போக்கி,
நொந்து வந்தவர் நோவை நீக்கி,
துறவறத் துக்கும் துணையாக நின்று,
இல்லறம் என்னும் நல்லறம் நடத்த
மனையின் மாட்சி மங்கல விளக்காய்,
சக்திக் கடவுளாய், சாஸ்திரம் போற்ற
அம்பிகை என்று அறிஞர்கள் வணங்கும்
பெண்மையைக் காப்பது பெருத்த புண்ணியம்.
ஏனைய நலங்கள் எத்துணை இருப்பினும்
'பெண்மை என்பது பிழைபட்ட நாட்டில்
இன்பக் குடித்தனம் இருப்பது கடினம்'
என்றிடும் பொழுது, எதிரில் இருந்த
சாரதா வுக்கொரு சந்தேகம் தோன்றி,
"சாமீ ! அதிலொரு சந்தேகம் எனக்கு :
பெண்களை மட்டுப் பிரித்துப் பேசிக்
குடும்ப சேவையே கூறிவிட் டீர்களே !
ஆண்களைப் போலவே ஆண்மை செலுத்தி
அரசு நடத்திய ஆற்றலும் மிகுந்து
வீரப் பெண்களும் வேணபேர் உண்டே !
அப்படிப் பெண்மையும் அவசியம் அல்லவா ?"
என்றாள். அதற்கு அடிகள் இசைப்பார் :

"ஆண்களைப் போலவே ஆயுதம் தாங்கிப்
போர்க்களம் சென்று கொலையும் புரிந்த
அவசர நிமித்தம் ஆண்மை காட்டிய
பெண்களின் கதையை, இத்துடன் பிணைத்துப்
'பெண்மை' என்பதைப் பேசப் படாது.
அவர்கள் செய்தது பெண்மையால் அல்ல.
அதற்குத் தத்துவம் அலாதி யானது.
'பெண்மை' என்னும் பேச்சுடன் அதனைக்
கூட்டிப் பார்த்துக் குழப்பிட வேண்டா.
பெண்மைக் குண்டோ ஆண்மையின் பேச்சு ?
அன்பிற்கும் உண்டோ அழிக்கின்ற தன்மை ?
நீருக்கும் உண்டோ நெருப்பின் வெம்மை ?"
ஞானா னந்தரின் நல்லுரை கேட்டுப்
பெண்பாட சாலையைப் பெரிதாய்க் கட்ட
அன்பா னந்தரும் ஆர்வம் காட்டி,
"வெகுமதி வந்தால் வேதாந்த மடத்தின்
தலைவராய் விளங்கும் தங்களை விட்டுச்
செலவுக்ள் எதையும் செய்திடு வேனா ?
எத்தனை வரினும் அத்தனைப் பணமும்
தங்கள் வசமே தந்து விடுகிறேன்.
பிரியம் போலப் பெண்கல் விக்கும்
அவசிய மாகிய அனைத்தும் செய்வோம்.
எனக்கும் அதுமிக இஷ்டம்" என்றார்.
அத்தனைப் பேச்சையும் அமைவுடன் கேட்ட
சந்திர சேகரன், சட்டென எழுந்து,
"பெண்பாட சாலையைப் பெரிதாய்க் கட்ட
வேறெந்த உதவியும் வேண்டிய தில்லை.
அந்தத் திருப்பணி அனைத்தையும் நானே
செய்து கொடுக்கச் சித்தமா யுள்ளேன்.



கவலையே வேண்டா. கட்டடம் கட்ட
இருபது ஆயிரம் ஒன்கொடை யாகச்
சரஸ்வதி பேரால் தருகின்றேன்" என்றான்.
சிறுபிள்ளை போலத் துள்ளிச் சிரித்துக்
கலகல வென்று கைகளைத் தட்டி
ஞானா னந்தர் நன்றிகள் சொல்லி,
வாயாரப் புகழ்ந்து வாழ்த்தி மகிழ்ந்தார்.
அன்பா னந்தரும் ஆனந்த முற்றார்.
சங்கரன் மிகவும் இங்கிதம் அடைந்தான்.
சாரதா உடனே 'சபாஷ்' கூறினாள்.
அன்பா னந்தரை ஆசீர் வதித்து,
மற்றவர்க் கெல்லாம் வாழ்த்துரை சொல்லி
மகிழ்ச்சியில் முழுகிய மடத்துத் தலைவர்
ஞானா னந்தர் போனபிற் பாடு,
சங்கரன் முதலியோர் சரஸ்வதி மனைக்குப்
போய்வர நினைத்ததைச் சந்திரன் புகன்று,
அன்பா னந்தரைக் கூட அழைத்தான்.
அதற்குப் பதிலாய் அன்பா னந்தர்,
"அதற்கென்ன யோசனை ? எனக்கும் கூடக்
கமலாம் பாளையும், கணவர் அவரையும்,
விருந்துக்கு முன்பே சந்திக்க விருப்பம்.
ஐந்தாறு நாளாய் அங்கே போய்வர
ஆசைப் படுகிறேன். மடத்தின் அலுவல்
ஒழியவே இல்லை. உடனே இன்றுநான்
காலையில் வேறொரு காரியம் பார்க்கப்
போய்வர வேண்டும். புறப்படும் போது
தலைவர் வந்ததால் தாமதப் பட்டது.
அதனா லும்ஒரு அனுகூ லந்தான்.
23 பெண்கல் விக்குப் பெருத்த நன்கொடை

சந்திர சேகரர் சன்மா னித்தார்.
தாமதம் ஆயினும் தவறாமல் அங்கே
வருவதாய்ச் சொல்லி வாக்களித் திட்டேன்.
போய்வர வேண்டும் பொறுத்துக் கொண்டு
மூவரும் நீங்கள் முன்னால் போங்கள்.
சரஸ்வதி யம்மாள் சற்குணம் உள்ளவள்.
கண்டாற் போதும் ; மிகவும் கனிவுடன்
வணங்கி வாழ்த்தி வரவேற் றிடுவார்.
சரஸ்வதி கணவர் சந்திர சேகரர்
கூடவே வருகிறார் ; குறைச்சல் என்ன ?
மாதவன் அவர்களின் மனமொத்த நண்பர்
சங்கரன் வருகிறார் ; சந்தேகம் எதற்கு ?
கமலாம் பாளின் கருத்துக் குகந்த
சாரதாம் பாளைச் சந்தித்து விட்டால்
கமலம் உடனே கட்டித் தழுவுவாள்.
அப்படி இருக்க, அங்கே போய்வர
என்னுடைச் சிபாரிசு எதற்காக வேண்டும் ?
சந்தேகம் விட்டு சந்தோஷ மாகப்
போய்வா ருங்கள் ; பொழுதுக் குள்ளே
விரைவாய் என்னுடை வேலைகள் முடித்து,
சரஸ்வதி வீட்டில் சாயங் காலம்
ஆறு மணிக்குமேல் அங்கே வருகிறேன்.
சாவ தானத்துடன் சல்லா பித்துநாம்
அனைவரும் சேர்ந்து ஆனந் திப்போம்
என்பன சொல்லி விடைகொண் டெழுந்து
வேலையைப் பார்க்க வெளியே போனார்.
சங்கரன் முதலியோர் சர்ஸ்வதி யம்மாள்.
நன்மனை நாடி நடந்து சென்றனர்.
இங்கே நடந்தன இவ்வாறு இருக்க ;



அதே காலையில் அந்த நேரத்தில்
சரஸ்வதி வீட்டில் சங்கதி பார்ப்போம் ;
நின்று பேசவும் நேரமில் லாமல்
தனித்தனி எதையும் தானே பார்த்து
விருந்தைப் பற்றிய வேலைகள் முடிய
சரஸ்வதி சிறிதும் சலிப்பில் லாமல்
அதற்கும் இதற்கும் அலைந்துகொண் டிருக்க
வேதாந்த மடத்தின் பெருமையை விளக்கி
அன்பா னந்தரின் அருமையைப் புகழ்ந்து
பத்திரம் அவர்க்குப் படித்துக் கொடுக்க
மாதவன் எழுதினான் ; மனைவி யிடத்தில்
படிக்கக் கொடுத்துப் பக்கத்தில் அமர்ந்து
கூட்டவோ குறைக்கவோ குறிக்கச் சொன்னான்.
பத்திரம் முழுவதும் படித்துப் பார்த்து,
வாசகம் அமைந்த அழகையும் வாழ்த்தி,
கணவனை மெச்சிய கமலம் அத்துடன்,
"நாதா ! அவர்தான் எத்தனை நல்லவர் !
அன்பின் வடிவே அன்பா னந்தர் !
சென்னைக்கு வந்துநான் சேர்ந்தநாள் தொட்டு
இரவில் ஒருநாள் எதிர்ப்பட்ட தன்றி
இன்னமும் அவரைநான் பார்த்ததே இல்லை.
நேரிற் பழகும் நிலையில் லாமலும்
சரஸ்வதி மூலமே சகல விதத்திலும்
எனக்கவர் செய்துள உதவியை எண்ணின்,
உள்ளம் குளிர்ந்து உடலும் சிலிர்க்கும்.
எப்படிப் புகழ்ந்து என்னதந் தாலும்,
அவர்செய்த உதவிக்கு அதுபோ தாது.
உயிரையே கேட்பினும் உடனே தரலாம்.
இன்னும் அவரைநாம் பார்க்கவே இல்லையே !

நீங்களும் சந்திக்க நேரவே இல்லையே !
விருந்திலே தானா சந்திக்க வேணும்.
அப்படிச் செய்வது அழகா யிராது.
இன்றே அவருடை இருப்பிடம் நாடி
நாமே சென்றுநம் நன்றியைக் கூறி,
வந்தனம் செலுத்தி வரவேணும்" என்றாள்.
மனைவியின் உரைகளில் மகிழ்ந்து மாதவன்,
"உண்மைதான் கமலம் ; உத்தமர் அவரை
விருந்துக்கு முன்பே சந்திக்க முயன்றேன் ;
முன்னமே ஒருதரம் சந்திக்க முயன்றேன் ;
அப்போ தவரெனக் ககப்பட வில்லை.
போய்வரு வோமா ? புறப்படு" என்று
உடனே மாதவன் உடைகளை அணிந்து,
மோட்டார் ஓட்டியைக் கூட்டி வரும்படி
வேலைக் காரனை அனுப்ப விரும்பி,
வேலைக் காரன் வீட்டிலில் லாததால்
அவனைத் தேட அங்கும் இங்குமாய்ப்
பங்களா முழுதும் பார்த்துக் கொண்டே
வீதி வாசலின் வெளியே வந்தான்.
நாலா பக்கமும் நாடிப் பார்க்கையில்
பாட்டையில் ஒருபுறம் பகுதூ ரத்தில்
சங்கரன் மனைவி சாரதா போலவே
உருவம் வருவதை உற்றுப் பார்த்தான்.
முன்னால் சாரதா, பின்னால் சங்கரன்,
அவனுடன் தனக்கு அறிமுக மில்லா
இன்னொரு மனிதனும் இருப்பதைக் கண்டு,
சித்தம் திடுக்கிடத் தேகம் வியர்க்க,
அச்சமோ நாணமோ அவதிப் படுத்த,



மாதவன் ஒருகணம் மயங்கி நின்றான்.
மறுகணம் சற்றே மனத்தைத் தேற்றி,
விரைவாய்த் திரும்பி, வீதி வாசலின்
கதவண்டை மறைந்து கவனித்துக் கொண்டு
'என்ன வேலையோ ? எதற்குவந் தார்களோ ?
நாமேன் அதற்கு நடுங்கிட வேண்டும் ?'
என்பதாய் ஒருமுறை எண்ணுவான் ; உடனே,
'நம்மையே ஒருகால் நாடிவந் திட்டால்
என்ன சொல்வது ?' என்றும் பயந்து
பார்த்துக் கொண்டே பதுங்கி நின்றான்.
சரஸ்வதி வீட்டைச் சங்கரன் அறிவான்.
கதவின் சந்திலே கண்ணை வைத்துப்
பார்வையை நேரே பாட்டையில் செலுத்தி
மாதவன் நின்றதால், மற்றொரு ஓரமாய்ச்
சரசர வென்று சங்கரன் நேரே
கதவண்டை வந்தபின் மாதவன் கண்டான்.
ஓடிப் போகவும் ஒருவழி இன்றி,
மறைந்து கொள்ளவும் மார்க்கமில் லாமல்,
மாதவன் தன்னுடை மனுஷத் தனத்தைக்
கணத்தில் அறிந்து, கதவைத் திறந்தான்.
சங்கரன் உடனே தாவிப் பிடித்து
மாதவ னைத்தன் மார்புறத் தழுவி,
"மாதவா, என்னை மறந்துவிட் டாயா ?"
என்றதும் மாதவன் இருகரங் குவித்து
"உத்தமத் தோழனே, உன்னையா மறப்பேன் ?
மூச்சுள்ள மட்டும் மறக்க முடியுமா ?
சாரதா எல்லாம் சௌக்கியந் தானே
மதிகெட்ட என்னைநீ மன்னிக்க வேண்டும்"

என்றான். சாரதா எதிரோடி வந்து,
"அன்பரே ! கொஞ்சமும் ஐயுறல் வேண்டா.
கடந்ததைப் பற்றிய கவலையை விடுங்கள்.
நீங்களும் நானும் நித்தமும் முன்போல்
ஆடியும் பாடியும் ஆனந்த மடைவோம்.
சத்தியம் இதிலொரு சந்தேகம் இல்லை"
என்று சாரதா இனிமையாய்ப் பேசி
நாட்டியம் பழகிய நாள்களில் போலவே
மலர்ந்த முகத்துடன் மாதவன் கைகளைக்
குலுக்கிச் சிரித்துக் குதூகலம் செய்து
"கமலம் எங்கே ? காணத் துடிக்கிறேன்.
அவளைப் பற்றிய சேதி அனைத்தையும்
அன்பா னந்தரால் அறிந்தோம்" என்றாள்.
"அன்பா னந்தரா ! அவரைத் தெரியுமா ?
மடத்தி லிருந்தா வருகின் றீர்கள் ?
சாமியார் அவர்களைச் சந்திக் கத்தான்
மடத்துக் குப்போய் வரலாம் என்று
வண்டிக் காரனைக் கூப்பிட வந்தேன்"
என்றான் மாதவன். சங்கரன் இயம்புவான் ;
அவர்அங் கில்லையே ; அகத்திய மானஓர்
வேலையாய் எங்கோ வெளியே போனார்.
கமலாம் பாளையும் உன்னையும் காண
மாலையில் இவ்விடம் வருவதாய்ச் சொன்னார்.
ஒருமாத காலமாய் உங்களைப் பார்க்கவே
நானும் இந்தஎன் பாலிய நண்பன்
சரஸ்வதி கணவன் சந்திர சேகரன்
இருவரும் இங்கே இருந்து வருகிறோம்.
கமலாம் பாளைக் காண்பதற் கென்றே



தந்தி கொடுத்துச் சாரதா வந்தாள்."
அதனைக் கேட்ட மாதவன், அதுவரை
சரஸ்வதி கணவன் சந்திரன் வந்ததை
அறியான் ஆனதால் அதிசயம் மிகுந்து,
அவனுடன் பேசி அன்புபா ராட்டினான்.
இப்படி அவர்கள் பேசி இருக்கையில்,
விருந்து வேலையாய் வெளியே போனவள்
சரஸ்வதி யம்மாள், சாலைக் கதவைத்
தள்ளிக் கொண்டு உள்ளே வந்தாள்.
விருந்தினர் தம்மை விருப்புடன் வணங்கி,
வந்தவர்க் கெல்லாம் வரவேற்புச் சொல்லி,
சாரதாம் பாளுடன் சரசமாய்ப் பழகி,
சங்கர னிடத்தில் சகஜமாய்ப் பேசி,
கனிந்த பார்வையால் கணவனை உகந்து
உள்ளே போக உபசரித் திட்டாள்.

✤ ✤ ✤

சாரதா கமலம் சந்தித்த உடனே
ஒருவரை முந்திட ஒருவர் ஓடிக்
கட்டித் தழுவிக் களித்து மயங்கி,
ஆனந்த பாஷ்யம் ஆறாய்ப் பெருக,
கொஞ்சிக் குலவிக் குழைந்து போயினர்.
சந்திப்பு வேகம் தணிந்தபிற் பாடு
சேம லாபங்களின் சேதிகள் கேட்டு
இன்பப் பேச்சாய் இருக்கும் வேளையில்,
முத்துக் குமார முதலியா ரவர்கள்
பார்வதி யம்மாள் பத்தினி சகிதம்
கமலாம் பாளின் கண்மணி யாகிய
குழந்தை யிடத்தில் கொஞ்சிக் கொண்டே

உள்ளே வந்தார். உடனே ஓடி
மகளைத் தூக்கிக் கமலம் மகிழ்ந்தாள்.
சாரதா வாங்கினாள் ; சங்கரன் எடுத்தான் ;
சரஸ்வதி ஏந்தினாள் ; சந்துரு கொஞ்சினான்.
பழகாத முகங்களைப் பார்த்துப் பயந்து
அந்தக் குழந்தை அழுகிற வரைக்கும்
மாற்றி மாற்றி எடுத்து மகிழ்ந்தனர்.

# கடிதமும் களிப்பும்

உணவுக் கப்புறம் ஓய்வு கொண்டபின்
சாரதாம் பாளும் கமலமும் தனியே
பிரிந்து விட்ட பின் நடந்ததைப் பேசிச்
சந்தோஷ மாகச் சம்பாஷிக் கையில்,
கமலாம் பாளின் கதைகளை யெல்லாம்
கிண்டிக் கிண்டிச் சாரதா கேட்டாள்.
சொல்லத் தக்கன யாவையும் சொல்லி
நிந்தனை உள்ளதை எல்லாம் நீக்கி
வரிசையாய்ச் சொல்லி வருகிற போது,
ஹைகோர்ட் ஜட்ஜி அனந்த ராமன்
வீட்டுக் குப்போய் வீணைப் பாடம்
சொல்லித் தந்ததைச் சொல்லும் இடத்தில்,
அனந்த ராமன் செய்ததை அகற்றி
'விருப்பமில் லாமல் வேலையை விட்டதாய்ச்
சொல்லும் போது ; சுருக்கெனத் தோன்றி
நெடுநா ளாய்த்தன் நெஞ்சில் இருக்கும்
சந்தேகம் ஒன்றைச் சரஸ்வதி யிடத்தில்
கேட்க நினைத்தும் கேட்க மறந்த
அதனை, மறக்குமுன் அறிய விரும்பி,
உடனே எழுந்து உள்ளே சென்று,
பார்வதி யோடும் பழமைகள் பேசி,
சிற்றுண்டி செய்வதைச் சீர்பார்த் திருந்த
சரஸ்வதி யவளைத் தனியே அழைத்து,
"சரஸ்வதி ! பெருத்த சந்தேகம் ஒன்று,

தெரியு மானால் தீர்த்திட வேண்டும் ;
அனந்த ராமன் அவர்கள் வீட்டில்
வேலையை விட்டுநான் வெறுத்து வந்தநாள்
அவருடன் யாரோ அவசரக் குரலாய்
'டெலிபோன்' பேசினார், தெரியுமா உனக்கு ?
அப்படிப் பேசின, அவர்யார் அம்மா ?
அன்பா னந்தரோ ? என்பது ஐயம் ;
உன்னிடம் ஒருகால் உரைத்திருப் பாரே !
என்றுதான் உன்னிடம் கேட்கிறேன்" என்றாள்
"அன்பா னந்தர்தான் ; அதிலென்ன ஐயம் ?
எனக்குத் தெரியும் ; ஆயினும் எனக்கு
அவர்சொல் லவில்லை. அடுத்த தெருவில்
நாரா யணராவ் நமக்கொரு நண்பர் ;
சிறந்த வக்கீல் ; செல்வச் சீமான்.
அவருடை வீடு அழகான கட்டடம்
உயர்ந்த மாளிகை ; டெலிபோன் உள்ளது.
அவருடை மனைவி என்னிடம் அன்பு.
பெருத்த குடும்பம், இரண்டு பெண்கள் ;
நான்கு ஆண்கள், நல்ல குணவதி.
இரண்டு பெண்களும் படிப்பது என்னிடம்.
அவர்களைப் பற்றிநான் அங்கே ஒருநாள்
'டெலிபோன்' பேசின மறுநாள் சென்றேன்.
என்னவோ எங்கள் பேச்சின் இடையில்
அன்பா னந்தர் அங்கே வந்ததும்,
'டெலிபோன்' மூலமாய்ப் பேசின செய்கையும்
இங்கும் அங்குமாய் இரண்டொரு வார்த்தை
காதில் விழுந்ததைக் கவனிக்க நேர்ந்ததில்
உன்னுடைப் பெயரும் உரைக்கப் பட்டதும்,
அப்படிப் பேசின அந்தச் செயலை



'வெளியே சொல்லிட வேண்டா' என்று
அன்பா னந்தரே அங்கே சொன்னதும்,
நாரா யணராவ் நாயகி என்னிடம்
சொன்னாள்" என்று சரஸ்வதி சொன்னாள்.
சரஸ்வதி சொன்னதில் சந்தேகம் தீர்ந்து,
எண்ணிய படியே இருந்ததைக் கண்டு,
கமலம் மிகவும் களிகொண் டவளாய்
மீண்டும் சென்று, மீதிப் பேச்சையும்
சாரதாம் பாளுடன் சல்லா பித்தாள்.
சிற்றுண்டி வகையும், தேநீர் காப்பியும்,
வந்தன ; அவற்றை வந்தவர் அருந்தச்
சரஸ்வதி மிகவும் சந்தோஷ முற்றாள்.

✤ ✤ ✤

வெப்பம் குறைந்து, வெண்மையும் மாறி,
மஞ்சள் சூரியன் சிவந்து மறைந்தான்.
செந்தணல் காட்டிய அந்தி வானமும்
கொஞ்சம் கொஞ்சமாய்க் குறைந்து விட்டது.
வறுமையில் நொந்து, வர்ணமும் மங்கி,
வெங்கோல் அரசில் வெம்பிய குடிகள்
செங்கோல் நிழலில் செழித்தது போல,
வெயிலில் வதங்கி வெளிராய்த் தோன்றிய
பயிர்செடி மரங்கள், பச்சைப் பசேலெனக்
கண்கள் குளிரும் காட்சி கொடுக்க,
பாடித் திரிந்த பறவைக ளெல்லாம்
தேடித் திரும்பிக் கூட்டைச் சேர்ந்திட,
ஆசைச் சுழலில் அடிபட் டலையும்
உயிர்களுக் கெல்லாம் ஓய்வு கொடுத்துப்
பத்தியம் வைக்கும் பண்டித னைப்போல்
கட்டா யத்தால் களைப்பு நீங்க,

தூங்கச் செய்கிற தோன்றாத் துணைகள்
இன்பத் தூதாம் இருள்வந்து மூட
நாயகன் பிரிந்த ஆகாய நங்கை
பிரிவாற் றாமையின் பித்தம் மேலிட
அணிகளை யெல்லாம் அகற்றிச் சிதைத்து
வாரி இறைத்த வயிரங் களைப்போல்
மின்னி மினுக்கும் மீன்கள் தோன்ற,
பங்களா சுற்றிலும் பயிர்செய் திருந்த
செடிகள் மரங்கள் கொடிகளிற் செறிந்து,
வண்டுகள் மொய்த்து வாசம் கெடாமல்
மாலையில் மலரும் மலர்களின் மணத்தை,
வலியக் கொணர்ந்து மூக்கில் வார்க்கும்
மெல்லிய தென்றல் மேனியைத் தடவ,
மனோகர மாகிய மாலைப் பொழுதில்,
சந்தோஷம் நிறைந்த சரஸ்வதி மனையில்,
திறந்த வெளியில் பரந்த நிலவில்,
செடிகளின் இடைஒரு சிங்கார மேடையில்,
உல்லாச மாக உட்கார்ந்து கொண்டு,
சங்கரன், சாரதா, சந்திர சேகரன்,
மாதவன், கமலம், மகவுடன் பார்வதி,
முத்துக் குமாரர் முதலிய அனைவரும்
வேடிக்கை யாகப் பேசும் வேளையில்,
கலைகளைப் பற்றிய பேச்சுகள் கலந்து
சங்கீ தத்தின் சர்ச்சை வளர்ந்து
வாத்தியக் கருவிகள் வகைகளைப் பேசி,
வீணையின் சிறப்பை விவரிக்க நேர்ந்து,
சாரதா வுக்கொரு சபலம் உதித்து,
"வீணை கேட்டு வெகுநாள் ஆச்சே !
எத்தனை பேர்தான் இசைத்திட் டாலும்



கமலம் வீணைபோல் காதுக் கினிப்பது.
எனக்குத் தெரிய எங்குமே இல்லை.
எண்ணும் பொழுதே இச்சைஉண் டாகுது.
கமலம் எங்கள் காது குளிர்ந்திட
இப்போது கொஞ்சம் இசைக்க முடியுமா ?
எடுத்து வரவா வீணையை ?" என்றாள்.
கமலம் வீணையைக் கேட்கக் கருதி
நெடுநா ளாகவே நினைவுகொண் டிருந்த
முத்துக் குமாரரும் ஒத்துப் பேசினார்.
பார்வதி யம்மாள் பரிவுடன் வேண்ட,
சந்திர சேகரன் சலுகை சொல்ல,
கலைகளைப் பற்றிய கவலை எதிலும்
சலனப் படாத சங்கரன் கூட
அன்றைக்கு என்னவோ அதிசயம் போல
வீணை கேட்க விருப்பம் சொன்னான்.
சம்மதி காட்டத் தலையை அசைத்துக்
கமலம் சிரித்துக் கணவனைப் பார்க்க,
உடனே மாதவன் உள்ளே ஓடிக்
கட்டிவைத் திருந்த கமலம் வீணையைக்
கொணர்ந்து கமலம் கையில் கொடுக்க,
அவளும் அதனை ஆசையால் வாங்கி,
வீணையை எடுத்து வெளியில் வைத்து,
வீணை வாசிக்க விரல்களில் தடவும்
வெண்ணெயோ நெய்யோ வேண்டும் என்பதை
கணவன் மறந்ததைக் கமலம் சொல்லுமுன்,
சரஸ்வதி யம்மாள் சமையலைப் பற்றி
வீட்டுக் குள்ளே வேலையா யிருந்தவள்,
கமலாம் பாளின் கணவரே வந்து
வீணையைக் கொண்டு வெளிவரக் கண்டு,

அனுமா னத்தால் விஷயம் அறிந்து,
நிரடுதற் காக நெய்யைக் கொஞ்சம்
அகலில் வார்த்து அனுப்பி வைத்தாள் -
அடிபட்ட புண்கள் ஆறிவிட் டாலும்
இன்னமும் கமலம் தேகம் இளைத்துப்
பாடத் தகுந்த பலமில் லாதவள்
அப்படி இருந்தும் ஆர்வத் துடிப்பால்
காதலன் குறிப்பும், கானம் கேட்க
மற்றவர் ஆசையும் மனதில் வைத்து,
சந்தர்ப்ப விசேஷ சக்திகள் தூண்டத்
தன்னையே மறந்து, வீணையைத் தடவி
வழக்கம் போல வாயிலும் பாடி
பொன்னுல கத்தவர் பொறாமை கொள்ள,
கந்தர்வ கானமும் கர்வம் குறைய,
இசையின் தெய்வமும் வியந்து இன்புற
நாத பிரம்மமும் நயந்து ரஸிக்க,
மனத்தில் ஊறிய மகிழ்ச்சி முழுவதும்
விரல்களின் வழியே வெளியா வதுபோல்
இசையும் இன்புற இசைத்தாள் கமலம்.
மாதவன் கமலம் மற்றவர் களையும்
சந்திப் பதற்குச் சரஸ்வதி மனைக்கு
மாலையில் வருவதாய்க் காலையில் சொன்ன
அன்பா னந்தர், அந்தப் படியே
சரஸ்வதி பங்களா சாலையின் கதவின்
அருகில் வந்து, அடைபட் டிருந்த
கதவைத் தட்டக் கையை ஓங்குமுன்,
கமலம் பாடுதல் காதில் பட்டது.
கதவைத் தட்டினால் கலையுமென் றஞ்சிச்
சங்கீ தத்தில் சபலம் மிகுந்த



அன்பா னந்தர், அதிலே லயித்து,
பாட்டை ரஸித்துக் கேட்டுக் கொண்டே
நெடுநேரம் அங்கே நின்றுகொண் டிருக்கக்
கடைக்குப் போய்வரும் காரிய மாக
வேலைக் காரனை வெளியே அனுப்பிக்
கதவைச் சாத்தும் கருத்துடன் வந்து
வீதிக் கதவை வெடுக்கெனத் திறந்து,
சாமியார் நிற்பதைப் பார்த்த சரஸ்வதி,
துள்ளிக் களித்துத் தொழுது வணங்கி,
"என்ன ஸ்வாமி இங்கேன் நிற்க ?
ஒவ்வொரு கணமும் உங்கள் வருகையை
எதிர்பார்த் துள்ளோம். ஏன்இந் நேரம் ?
கமலம் தங்களைக் காணத் துடிக்கிறாள்.
ஐந்தாறு நாளாய் அதுவே பேச்சு.
வாருங்கள்" என்று வந்தனை சொல்ல,
அதனைக் கேட்ட அன்பா னந்தர்,
மறுமொழி யின்றி மகிழ்ச்சி காட்டி,
புன்சிரிப் போடு உள்ளே போனார்.
சரஸ்வதி முன்னும், சாமியார் பின்னுமாய்ச்
சங்கீத மேடையைச் சார்ந்த உடனே,
துறவியைக் கண்டதும் துடிதுடிப் படைந்து,
எப்படிப் பட்டவர் எவர்வந் தாலும்
இடையில் நிறுத்த இடங்கொடுக் காத
சங்கீ தத்தையும் சட்டென விட்டு,
மிகவும் உயர்ந்த மெலினக் கருவி -
வீணையைக் கூட வெடுக்கென விலக்கி,
கமலம் எழுந்து கைகூப்பி நின்று,
'நன்றி' என்பதே நங்கையின் வடிவாய்
நின்றதைப் போல வணங்கி நின்று,

"உடல்பொருள் ஆவி உள்ளன எல்லாம்
அடிகளே ! தங்கள் அடிமலர்க் கர்ப்பணம்.
உயிருள்ள மட்டும் உங்களை மறவேன்.
ஆசீர் வதிப்பீர் ஐயனே" என்று
கண்ணீர் ததும்பக் களிப்புடன் சொன்னாள்.
புகழ்ச்சிக் கடங்கா உதவிகள் புரிந்து
மனைவியைக் காத்த மாபெரும் துணைவர்
அன்பா னந்தர் என்பதை அறிந்த
மாதவன் நன்றி மட்டற்ற தாக
வாய்கொண்ட மட்டும் புகழ்ந்து வணங்க,
அன்பா னந்தர் அவைகளை யெல்லாம்
மறுமொழி யின்றி மௌனமாய்க் கேட்டு,
அவர்களை யெல்லாம் ஆசீர் வதித்து
அமரச் சொல்லி, தாமும் அமர்ந்து
வீணை கேட்க விருப்பம் காட்ட,
மீண்டும் கமலம் வீணையை மீட்டி
ஒருமணி நேரம் உருக்கமாய்ப் பாட,
கமலாம் பாளின் கலைத்திறம் மிகுந்த
சங்கீ தத்தின் சக்தியின் வசமாய்
அன்பா னந்தர் அவரையும் மறந்து
தலைப்பாக் கட்டும் தளர்ந்து விழும்படி
தலையை அசைத்துக் கலையை ரஸித்தார்.
உயிரினும் சிறந்த உதவிகள் புரிந்த
அன்பா னந்தர் அப்படி ரஸிப்பதைக்
கமலம் பார்த்துக் களைப்பையும் மறந்து
அளவிடக் கூடா ஆனந்த முற்றாள்.
அப்படி ஒருமணி ஆனபிற் பாடு
எடுத்தஓர் பாட்டை முடித்த பின்னர்,
அடுத்ததை எண்ணி ஆரம் பிக்குமுன்,



வீணையில் என்னவோ விரஸம் ஒலித்து,
அடிக்கடி ஏதோ அபசுரம் கேட்பதை
என்னவென் றறிய எண்ணினாற் போல
அன்பா னந்தர் ஆவலாய்ப் பார்த்து,
கமலம் வீணையைக் கையில் வாங்கி,
வீணையில் தேர்ந்த வித்வா னைப்போல்
தம்முன் வைத்துத் தந்தியைச் சுண்டி,
அங்குள்ள அனைவரும் அதிசயம் கொள்ளச்
சுரஸ்தா னங்களைத் தொட்டுப் பார்த்து,
அபசுரம் இருப்பதை அறியச் செய்தார்.
வீணையை எடுத்த விதத்தி னாலும்,
தந்தியைச் சுண்டிய தன்மையி னாலும்,
சுரங்களைத் தொட்ட சூட்சுமத் தாலும்
சாமியார் உயர்ந்த சங்கீத ஞானமும்
வீணைப் பழக்கமும் மிகுந்தவர் என்று
கமலம் எளிதில் கண்டுகொண் டதனால்
சாமியார் குறிப்பைச் சட்டென அறிந்து
"ஆமாம் ஸ்வாமி, அங்கொரு அபஸ்வரம்.
தந்தியில் என்னவோ தவறிருக் கின்றது.
வீணையை எடுத்து வெகுநாள் ஆச்சு.
தந்தியை மாற்றினால் சரியாய்ப் போகும்.
எல்லோ ருக்கும் எளிதில் புலப்படா
அபசுரம் அதையும் அறிந்துவிட் டீர்களே !
வீணையை மீட்டின விதத்தைப் பார்த்தால்
வாசிக்கக் கூட வருமோ ஸ்வாமீ ?
அப்படி யானால் அதையும் நாங்கள்
கேட்கிற பாக்கியம் கிடைக்க லாமோ ?
அருள்செய்ய வேணும் அடிகளே" என்று
கமலம் மிகவும் கனிவுடன் சொல்லி,

பாலினும் வெளுத்த பல்லின் வரிசை
சந்திரன் ஒளியைச் சிந்திடச் சிரித்து,
கொஞ்சும் குழந்தைபோல் கெஞ்சிக் கேட்டாள்.
மனைவியைப் போலவே மாதவன் வேண்ட,
அங்குள்ள பிறரும் ஆசையாய்ச் சொல்ல,
சாமியார் அவர்கள் சங்கீ தத்திலும்
தேர்ந்தவர் என்பதைத் தெரியாச் சரஸ்வதி
வியந்து பணிந்து விருப்பம் சொல்ல,
அன்பா னந்தரும் அட்டிசொல் லாமல்
அனா யாசமாய் ஆரம் பித்து,
வாய்ப்பாட் டின்றி வாத்தியம் மட்டும்
வாஸ்தவ மாகவே வாசிக்க லானார்,
வியக்கத் தகுந்த விரல்களின் வேகம்,
நயங்கள் மிகுந்த நாதச் சிறப்பு,
அதிசய மாகிய அட்சர சுத்தம்,
கார்வையின் கூர்மை, கமகக் களைகள்,
ராகவிஸ் தாரம், ரவைகளின் ரஞ்சகம்,
பாட்டின் எடுப்பு, பாவக உருக்கம்,
சங்கதி இடங்கள் சஞ்சார மேன்மை,
பிடிகளின் அடுக்கு, பிருக்கா அழகு,
விருவிருப் பான வேலைப் பாடுகள்,
என்பன வாகிய எல்லாச் சிறப்பும்
அடங்கிய தாக, அன்பா னந்தர்
ஒன்றரை மணிவரை ஓய்வில் லாமல்
வீணையில் காட்டிய வித்தையின் பாணி
கமலம் மனதை முற்றிலும் கவர்ந்து,
களிப்பும் வியப்பும் திகைப்பும் கலந்து,
என்னென் னவோபல எண்ணங்கள் தோன்றி
துருவித் துருவித் துறவியைப் பார்த்து,



தாடியை, மீசையை, தலைப்பா, சட்டையை,
நிலவின் ஒளியில் நேர்ந்த மட்டிலும்
பார்த்துப் பார்த்துப் பற்பல கேள்விகள்
அவரிடம் கேட்கும் ஆசையுண் டாகி,
சங்கோ சத்தால் சங்கடப் பட்டு,
கூசிக் கூசிக் குலையும் வேளையில்,
சாப்பிட அவர்களைக் கூப்பிட வந்த
சமையற் காரனைப் பார்த்த சாமியார்
மங்களம் இசைந்து வாசிப்பை முடித்து,
விநயத் தோடு வீணையை எடுத்துக்
கமலாம் பாளின் கையிற் கொடுத்து,
மெள்ள நகர்ந்து மேடையில் ஒருபுறம்
சங்கரன் இருந்த மூலையைச் சார்ந்தார்.
சரஸ்வதி யம்மாள் சாமியார் அவர்களை
பலவித மாகப் பாராட்டி விட்டு,
அங்கே யிருந்த அன்பரை யெல்லாம்
உணவுகொள் ளும்படி உள்ளே அழைக்க,
எல்லோ ருமாக எழுந்து சென்றனர்.
சாமியார் இசைத்த சங்கீ தத்தில்
மயங்கித் தன்னையே மறந்த மாதவன்
துறவியை நெருங்கி அவரைத் தொடரக்
கணவரை அடுத்துக் கமலம் நடக்க,
சற்றே பின்னால் சங்கரன் செல்ல,
பிறிதுள பேர்கள் பின்னால் போக,
வெளியைக் கடந்து வீட்டிற் புகுந்து
மின்சார விளக்கின் மிகுந்த ஒளியில்
வந்ததும் மாதவன் துறவியை வணங்கி,
"சுவாமீ ! உண்மையில் சொக்கியே போனேன்.
எனக்குப் பிடித்தம் இந்தப் பாணிதான்.

இப்படி வீணை எங்கே சிட்சை ?
தங்கள் பயிற்சி தஞ்சா வூரிலோ ?"
என்றதைக் கேட்டு இடியெனச் சிரித்து,
வந்தது முதலாய் வாய்பே சாமல்
மனதை அடக்கி மௌனம் காத்த
அன்பா னந்தர், அவனைப் பார்த்து,
"தஞ்சா வூர்தான். தங்கள் தயவால்,
கமலம் அவர்களின் கருணையால் வளர்ந்த,
வித்தைதான் என்னுடை வீணையின் பாணி.
மறந்திடு வேனா மாதவா !" என்றார்.
குரலைக் கேட்டதும் குபீரெனத் திரும்பி,
திகைத்துத் திணறித் திக்குமுக் காடி
முன்னால் பாய்ந்து முகத்தைப் பார்த்து,
தாடியும் மீசையும் தடைசெய் தாலும்
நெடுநாள் பழகின நேசன் ஆனதால்
அடையா ளத்தை விரைவில் அறிந்து,
"அப்பா நீயா ! அன்பா னந்தர் ?
உன்னால் அல்லவா கமலம் உய்ந்தது,
என்ன பாக்கியம் ராகவா !" என்று
மாதவன் துறவியை மார்புறத் தழுவி,
கரைதெரி யாத இன்பக் கடலில்
முழுகிக் களித்து முயங்கி நின்றான்.

✤ ✤ ✤

வீணை வாசித்த விதத்தி லேயே
அவரைத் தவிர மற்றவர் அறியா
பிடிகள், நிரவல், பிர்க்கா முதலிய
சங்கதி நிறைந்த சங்கீ தத்தின்
பாணியைக் கமலம் பார்த்த போதே
அன்பா னந்தராய் அங்கே உள்ளவர்



ராகவன் என்றொரு ஊகம் உதித்துச்
சந்தே கித்தது சரியாய்ப் போனதில்
எல்லையில் லாத இன்பம் பொங்க
"அன்பா னந்தரே ! அறிந்தேன் அன்பை,
'அன்பே இன்பம் அதுவே தெய்வம்'
என்றதன் உண்மையை இன்றுநான் கண்டேன்.
வாழிய உங்கள் வாய்மை" என்றாள்.
அதனை அறிந்த அன்பா னந்தரும்
"மன்னித் தீர்களா ! மகிழ்ந்தேன்" என்றார்.
"இங்கே நிற்பவர் இராகவர் இல்லை ;
துறவியாய் என்றன் துன்பம் துடைத்த
அன்பா னந்தரின் அன்பே போதும்
உயிருள்ள மட்டும் உங்களை மறவேன்"
என்றாள் கமலம். ஏனையோர் திகைக்க
ராகவன் எழுதிய ரகசியம். அதனை
மாதவன் அறிவான் ; மற்றவர் அறியார்.
கமலம் கொடுத்த கடிதத்தை வாங்கிப்
பத்திரப் படுத்தி வைத்ததைத் தவிரச்
சரஸ்வதி கூடச் சங்கதி அறியாள்.
சென்னைக்கு வந்து சேர்ந்த நாளிலும்,
கற்பை இகழ்ந்து கணவன் வெறுக்க
மனமுடைந் தவளாய் மாளத் துணிந்து
ஆற்றில் விழுந்த அளவே சொல்லி
மற்றதை யெல்லாம் மறைத்து விட்டதால்
சாமியார் தொடர்பைச் சரஸ்வதி அறியாள்
ஆதலால், அவளும், அதிசயப் பட்டாள்.
நெடுநாள் பிரிந்த நேசர்கள் கூடிய
மங்கலம் குலவிய சரஸ்வதி மனையில்
அப்போ திருந்த ஆனந் தத்தைச்

சொல்லவொண் ணாதெனச் சொல்வதே சொல்லும்.
சாப்பிட்டு ஆனபின் சல்லாப வேளையில்
துறவியைப் பார்த்துக் கமலம் சொல்வாள் :
"மூன்று வருஷம். முற்றும் துறந்தும்
வீணையை மட்டும் விடவே யில்லையா ?
வேதாந்த மடத்தில் வீணையும் உண்டா ?
கொஞ்சம் கூடக் குறைவில் லாமல்
இத்தனை நாளும் பழக்கம் இன்றியும்
இப்படி வாசிக்க எப்படி முடியும் ?"
"வேதாந்த மடத்தில் வீணை யிருக்குமா ?
மற்றதை யெல்லாம் முற்றும் துறந்தும்
இசையைப் பற்றிய இச்சை மட்டும்
அடிக்கடி என்னை அவஸ்தை செய்தது.
நாரா யணராவ் எனக்கொரு நண்பர்.
அவருடை மனைவி வீணை அறிந்தவர்.
அன்பர் மனைக்கு அடிக்கடி போவேன்.
குழந்தை களுக்கும் சொல்லிக் கொடுத்து
நாதஇன் பத்தை நானும் அடைவேன்.
மற்றதை யெல்லாம் மறந்தேன் எனினும்,
வீணையை மட்டும் விடவே இல்லை."
என்றார் துறவி. கமலம் இன்புற,
"சென்னைக்கு நான்வந்து சேர்ந்தநாள் தொட்டு
நீங்களும் இங்கே இருப்பதாய் நேர்ந்தது
எப்படி என்பது எனக்கொரு விந்தை.
சத்தமில் லாமல் சரஸ்வதி வீட்டில்
இருந்தேன். நீங்கள் எப்படிக் கண்டீர் ?
அதையும் அறிந்திட ஆசை" என்றாள்.
"அப்படி யானால் அதையும் சொல்வேன் ;



காலையில் அன்றுநான் கடிதம் அனுப்பித்
துறவறம் கொள்ளத் துணிந்து விட்டதால்
ஊரை விட்டு உடனே போய்விட
ஆசை பிறந்து, அன்றைய தினமே
நானும் இன்னொரு நண்பனு மாக
ராத்திரி வண்டியில் ரயிலில் ஏறிச்
சென்னைக்கு வந்து சேர்ந்தோம். மறுநாள்
வேதாந்த மடத்தில் விண்ணப்பம் சொல்ல,
அங்குள்ள தலைவரும் அங்கீ கரித்தார்.
ஊருக்குப் போய்வரும் உத்தே சத்துடன்
அணியூர் சென்று ஆற்றைக் கடக்க
ஓடக் காரனைத் தேடப் போனேன்.
பரிசல் காரரின் குடிசைகள் பக்கம்
உங்கள் குழந்தையின் உருவம் போல
இருந்ததைக் கண்டு, ஏனென்று கேட்கப்
பக்கமாய்ப் போனேன் ; பதுக்கிவிட் டார்கள்.
எவருடைக் குழந்தையோ, என்னவோ என்று
ஆற்றைக் கடந்து வீட்டை அடைந்தேன்
மகளுடன் நீங்கள் மறைந்து விட்டதை
என்னுடைத் தாயார் எனக்குச் சொன்னார்.
துறவறம் பூண்ட துணிவையும் மறந்து,
உங்களைத் தேடவே ஊரை விட்டு,
குழந்தையைப் பார்த்த குடிசையின் அருகில்
அங்கொரு சிறுவனை உளவாய் அடைந்து
வெகுமதி கொடுத்து விநயமாய்க் கேட்டு,
சிசுவைப் பற்றிய சேதி கிடைத்து,
முத்துக் குமார முதலியார் அவர்கள்
குழந்தையைப் பட்டணம் கொண்டுபோய் விட்டதை
அங்கே அறிந்தேன். அதற்குப் பிறகு

உங்களைப் பற்றிய உண்மைகள் அறிய
அக்கரை சென்று, ஐந்தாறு நாள்கள்
ஆற்றங் கரையின் அருகான ஊர்களில்
தேடிக் கேட்டுத் திரிகின்ற போது,
சிறுவன் ஒருவன் சேலூர்க் காரன்
தெரிந்தவ னாகத் தெய்வா தீனமாய்க்
கிடைத்தான் ; அவனைக் கேட்டேன் ; அவனும்
வீரன் வீட்டில் கொண்டுபோய் விட்டான்.
நல்லாள் என்னும் வீரன் நாயகி
உங்கள் பட்டுப் புடைவையை உடுத்தி
அலங்கா ரத்துடன் அங்கே நின்றாள்.
'கமலாம் பாளின் புடைவைபோல் காணுதே
எப்படிக் கிடைத்தது அம்மா' என்றேன்.
நல்லாள் கொஞ்சம் நடுங்கி விட்டாள்.
ஒளிக்கமாட் டாமல் ஒத்துக் கொண்டு.
"திருட்டுப் புரட்டு தெரியாது சாமி,
அம்மாள் அவர்களே அன்பாய்த் தந்தது"
என்றாள். மற்றுள எல்லாம் சொல்லி,
கமலாம் பாளுடன் அவளுடைக் கணவன்
பட்டணம் போனதை நல்லாள் பகர்ந்து,
'எட்டுநாள் ஆச்சு ; இன்றோ நாளையோ
வருவார்' என்று வணக்கமாய்ச் சொல்ல,
அந்தக் கணமே அணியூர் சென்று
இரண்டு தினங்கள் அங்கே இருந்து
ரயில்வே ஸ்டேஷனில் ராப்பக லாக
வருகிற போகிற வண்டியை எல்லாம்
ஒன்று விடாமல் ஓயாது பார்த்து,
வீரன் வரவை விரும்பிக் காத்தேன்.



மூன்றா வதுநாள் காரியம் முடிந்தது.
வீரன் வந்தான். விலாசம் அறிந்து,
அடுத்த வண்டியில் சென்னையை அடைந்து,
உடனே சேவையை ஒத்துக் கொண்டு,
புத்தக சாலையின் பொறுப்பை ஏற்று,
வேதாந்த மடத்தின் வேலையில் அமர்ந்தேன்.
புத்தகம் வாங்கிப் போவதற் காக
அடிக்கடி சரஸ்வதி அங்கே வருவார்.
அதன்மூல மாகவே அன்பு வளர்ந்தது.
ஆற்றிலே போட்ட அருமைக் குழந்தை
இறந்து போனதாய் எண்ணிக் கொண்டு,
நித்தமும் நீங்கள் மகளையே நினைத்து,
அழுது புலம்பி, ஆகார மின்றி
உருகிப் போவதாய்ச் சரஸ்வதி உரைக்க,
குழந்தை உயிருடன் இருப்பதைக் கூறிக்
கவலையை மாற்றவே கடிதம் எழுதினேன்.
இப்படி இருக்க, குழந்தையின் இருப்பிடம்
அறியமாட் டாமல் அவஸ்தைப் பட்டேன்.
சரஸ்வதி கூடச் சலுகை சொன்னார்.
அகஸ்மாத் தாக அதையும் அறிந்தேன்.
வேதாந்த மடத்தின் ஆண்டு விழாவில்
முத்துக் குமார முதலியார் அவர்கள்
குழந்தையைத் தம்முடன் கூட்டிக் கொண்டு
வந்தார். கண்டதும் வலியச் சென்றுநான்
அவருடன் பேசி அன்புகொண் டாடி,
நெருங்கிப் பழகிய நேசனாய் விட்டேன்.
சரஸ்வதி யம்மாள் கல்விச் சாலையின்
ஆண்டு விழாவிற்கு அவரிடம் சென்று

நன்கொடை வாங்க நாங்கள் போனதும்,
சரஸ்வதி சிசுவைச் சந்திப் பதற்கே
என்னுடை முயற்சியில் ஏற்பட்ட விஷயம்"
என்பன போன்ற இன்னும் பற்பல
சந்தே கங்களைச் சாமியார் நீக்க,
கமலம் கேட்டுக் களிப்புறும் போது,
மளமள வென்று மாதவன் சென்று,
அறைக்குட் புகுந்து, அரைநொடிப் பொழுதில்
துறவியின் முன்னால் வந்து தொழுது,
"அன்பா னந்த அடிகளே ! சரணம்.
நாளைக்கு இங்கே நடக்கப் போகிற
விருந்தில் கொடுக்கும் வெகுமதி வேறே ;
இன்றைக்கு வெகுமதி இதுதான்" என்று
பாலிய நட்பின் பண்பு விளங்க
வேடிக்கை பேசும் விளையாட்டுப் போல,
குதுகுதுப் பாகக் குலுங்கச் சிரித்து,
துறவியின் தோளைத் தொட்டுத் தட்டி,
கையைப் பிடித்துக் காதிதம் ஒன்றை
அதனுள் வைத்து அழுத்தி மூடினான்.
பாங்குச் செக்கோ, காகிதப் பணமோ
இருக்கலாம் என்று எண்ணிக் கொண்டே
அன்பா னந்தர், காகிதம் அதனை
விரித்துப் பார்க்க, வேறொன்று இல்லை.
கமலத் துக்குமுன் அனுப்பிய கடிதம்.
பார்த்தார் துறவி ; பலமாய்ச் சிரித்து,
"இத்தனை நாளுமா பத்திர மாக
இருந்தது இந்தக் கடிதம் !" என்று
மௌனமாய்ப் படித்து மடியில் வைத்தார்.



## அந்தக் கடிதம்

"கமலம் அவர்களின் காலில் வணங்கி
ராகவன் அனுப்பும் ரகசியக் கடிதம் ;
கற்பின் அரசியே ! கமலத் தெய்வமே !
அன்பின் வடிவமே ! அறத்தின் திலகமே !
'பெண்மை' என்னும் பெருமையின் ஜோதியே !
தாயே ! உமக்குத் தவறுசெய் திட்டேன்.
நாயினும் கடையேன், நன்றியும் கெட்டேன்.
திடீரென உதித்த காமத் தீமையால்
அறிவை இழந்து அநியாயம் எண்ணிய
மாபாவி என்னை மன்னிக்க வேண்டும்.
காலில் விழுந்து கெஞ்சிக் கதறிக்
கோடி முறைநான் கும்பிடு கின்றேன்.
மனமார என்னை மன்னித்து விட்ட தாய்ச்
சொல்லி யனுப்பினால் சுகிர்தம் அடைவேன்.
இல்லையேல் எனக்கினி வாழ்க்கையே இல்லை.
எண்ணத் தகாத தீமையை எண்ணிய
பாதகம் இதற்கும் பரிகார மாக
இன்று முதல்நான் இல்வாழ்க்கை விட்டேன்.
அன்புரு வாகிய அன்னையே, தாங்கள்
இதோப தேசமாய் எனக்குக் கூறிய
புத்தி மதிகளைப் பொன்னெனப் போற்றிப்
உயிர்களுக் கெல்லாம் ஊழியம் புரிந்து,
அன்புத் திருப்பணி அறமே தவமாய்
துறவறம் பூண்டு, தொண்டுசெய் திடவே
சத்தி விரதச் சபதமும் கொண்டேன்.
ஊரை விட்டே உடனே போகிறேன்.